மண்ணின் மதிப்பு

டாக்டர் மு. வரதராசன்

மண்ணின் மதிப்பு

டாக்டர் மு. வரதராசன்
தமிழ்ப் பேராசிரியர், சென்னை - 30

விற்பனை உரிமை:

பாரி நிலையம்

59, பிராட்வே, சென்னை - 1.

ரூ. 3=00

இரண்டாம் பதிப்பு : 1965
தாயக வெளியீடு

மற்றக் கட்டுரை நூல்கள் :

மொழியியற் கட்டுரைகள்
இலக்கிய ஆராய்ச்சி
உலகப் பேரேடு
அரசியல் அலைகள்
பெண்மை வாழ்க
கல்வி

காக்ஸ்டன் அச்சகம், சென்னை - 1.

35/11

குறிப்புரை

இந் நூலில் உள்ள கட்டுரைகள் சென்ற மூன்று ஆண்டுகளில் (1959-'61) அவ்வப்போது எழுதப்பட்டு, 'ஆனந்த விகடன்' 'கங்கை' 'கிராமராஜ்யம்' முதலான இதழ்களில் வெளியிடப் பட்டவை. அவற்றின் ஆசிரியர்களுக்கு என் நன்றி உரியதாகுக.

30-6-'61 மு. வ.

35/1.

1. மண்ணின் மதிப்பு !

"வீட்டை இரண்டு நாள் பூட்டிவிட்டுப் போக முடிய வில்லை. அதனால்தான் இந்த ஊரில் இவ்வளவு பொல்லாத வெயில் இருந்தும் இங்கேயே இருக்கவேண்டி இருக்கிறது. எங்கள் எதிர்வீட்டுக்காரர் பங்காளியின் திருமணத்திற் காகச் சென்ற மாதத்தில் வெளி ஊருக்குப் போயிருந்தார். நான்கே நான்கு நாள்தான் வீடு பூட்டியிருந்தது. ஐந்தாம் நாள் காலையில் நாங்கள் எழுந்து பார்த்தபோது பூட்டு உடைக்கப்பட்டிருந்தது. சாமான்கள் பல பறிபோயிருந்தன. இப்படிப்பட்ட ஊரில் வீட்டைப் பூட்டிவிட்டு வெளியே போக முடியுமா? பட்டப் பகலிலேயே பூட்டை உடைத்துத் திருட வும் துணிந்துவிட்டார்கள். ஊர் மிகவும் கெட்டுவிட்டது."

சென்னையிலே சொந்த வீடு வைத்துக்கொண்டு வாழ் கிற ஒருவருடைய முறையீடு இது.

வெளி ஊரிலிருந்து நண்பர் ஒருவர் வருகிறார். சென்னை யில் சுற்றிப் பார்த்துச் செலவு செய்வதற்கென்று நூறு இருநூறு கொண்டுவருகிறார். பகல் உணவிற்குப் பிறகு வெளியே கிளம்புகிறார். இரவு நெடுநேரம் கழித்துத் திரும்பு கிறார். முகத்தில் சோர்வும் களைப்பும் காணப்படுகின்றன. காரணம் கேட்டாலும் சொல்லத் தயங்குகிறார். பொறுத்துப் பொறுத்து அவரே மெல்லச் சொல்லிவிடுகிறார். தம்

சட்டைப் பையில் வைத்திருந்த பணப்பை காணுமல் போய் விட்டது என்றும், யாரோ எப்படியோ தமக்குத் தெரியாமல் களவாடிவிட்டார்கள் என்றும் வருத்தத்தோடு கூறுகிருர். நண்பருடைய சோர்வைப் போக்குவதற்காக நான் என னுடைய அனுபவங்களைச் சொல்கிறேன். சட்டைப்பைத் திருடர்கள் சென்னையில் மிகுதி என்றும் இது அன்ருட நிகழ்ச்சியாக இருக்கிறது என்றும் கூறுகிறேன். பஸ் ஏறும் போதும் இறங்கும்போதும் அந்தத் திருடர்கள் விழிப்பாக இருந்து கடமைகளை முடிப்பார்கள் என்றும், நான் விலையுயர்ந்த பேனுக்கள் இரண்டை இழந்துள்ளேன் என்றும் நண்பரின் மனம் தேறும் வகையில் ஆறுதலாகச் சொல்கின்றேன்.

ஆடித் திங்களில் வெளியூர்க் குடும்பத்தார் தம் மகனைச் சென்னைக் கல்லூரி ஒன்றில் படிக்க அனுப்புகின்ருர். "மாதம் மாதம் விடுதிக்குக் கட்டவேண்டிய பணத்தை நானே விடுதியாருக்கு நேரே அனுப்பிவிடுகிறேன். உன்னிடத்தில் பணம் இருந்தால் மற்ற மாணவர்கள் கடன் கேட்பார்கள். கடன் கொடுத்தாலும் கவலையில்லை. நீ இல்லாதபோது அறைக்குள் நுழைந்து திருடிக்கொண்டு போவார்களாம். சம்பளம் கட்ட வரிசையாக நிற்கும்போதும் உன்னை அறியாமல் பணத்தைப் பறித்துக்கொண்டு போகிற பேர்வழிகள் இருக்கிருர்களாம். சென்னையில் விடுதியை விட்டு வெளியே போய் வரும்போது ஒரு ரூபாய் இரண்டு ரூபாய்க்கு மேல் எடுத்துக்கொண்டு போகாதே. அங்கே நடுத்தெருவில் திருடும் திருடர்களும் இருக்கிருர்கள்." — இவ்வாறு அறிவுரை கூறி மகனை வழி அனுப்ப வேண்டி இருக்கிறது.

ஒரு நாள் காலை வெளியூர் உறவினர் ஒருவர் பெட்டி பை ஒன்றும் இல்லாமல் வெறுங்கையுடன் வீட்டுக்கு வருகிருர். எங்கே தங்கிவிட்டு வருகிறீர்கள் என்று கேட்டால், "இப்போதுதான் நேராக ரயிலிலிருந்து வருகிறேன்" எனக்

கூறுகிருர். பெட்டி எப்படியோ திருடு போயிற்று என்றும், அதில் இருநூறு ரூபாயும் ரயில் டிக்கட்டும் இருந்தன என்றும் கூறி, டிக்கட் தணிக்கையாளரிடம் டிக்கட் தர முடியாமல் தாம் திண்டாடியதையும் தெரிவிக்கிருர். டிக் கட்டைச் சட்டைப் பையில் வைத்திருந்தால் மானமாவது மிஞ்சியிருக்கும் என்கிருர். "நல்ல வேளையாக என் சட் டைப் பையில் ஒரு ரூபாய் நோட்டு இருந்தது. அதனல் பஸ் ஏறி வரமுடிந்தது. இல்லையானல் நடந்தே வந்திருக்க வேண்டும். கையில் இருந்த மோதிரத்தைக் கழற்றி டிக்கட் தணிக்கையாளரிடம் பொறுப்புக்காகக் கொடுத்து வந்திருக் கிறேன். உன்னிடம் பணம் கடன் வாங்கிக் கொண்டு போய்க் கொடுத்து மோதிரத்தை மீட்டுவர வேண்டும். நாளை மறுநாள் திரும்பிப் போவதற்கும் நீதான் கடன் கொடுக்க வேண்டும்" என்று வருத்தத்துடன் கூறுகிருர். ஒரு பெருமூச்சு விடுகிருர். மறுபடியும், "பெட்டியும் பண மும் போனது பற்றிக் கவலை இல்லை. என் சட்டைகள் போனது பற்றியும் கவலை இல்லை. நண்பர் ஒருவர் எழுதிக் கொடுத்த புரோநோட்டு ஒன்று அதில் இருந்தது. அது ஆயிரம் ரூபாய்ப் புரோ நோட்டு. அதைவிடப் பெரிய கவலை என் நாட்குறிப்புப் போய்விட்டதுதான். எவ்வளவு பணம் கொடுத்தாலும் அது திரும்ப வருமா?" என்று நண்பர் ஏங்குகிருர்.

ஜப்பானிலிருந்து ஒரு கடிதம் வந்தது. அங்குத் தொழிற் பயிற்சிக்காகச் சென்றுள்ள இளைஞன் ஒருவன் எழுதிய கடிதம் அது. "இங்கே டாக்சிக்காரர்களும் மிக மிக உண்மையானவர்களாக இருக்கிருர்கள். நான் நேற்று ஒரு டாக்சியில் ஏறி ஓர் இடத்திற்குச் சென்றபோது நான் எடுத்துச் சென்ற தோல்பையை டாக்சியிலேயே விட்டு விட்டேன். என்னை இறக்கிவிட்டு டாக்சி சென்ற பிறகு அரைமணி நேரம் கழித்து எனக்குத் தோல்பையின் நினைவு

வந்தது. அதில் என்னுடைய நற்சான்று இதழ்கள் இருந்தன. என் வயிறு 'பகிர்' என்றது. என் முகமாற்றத்தை உணர்ந்து எதிரே இருந்த ஜப்பானியர், என்ன காரணம் என்று கேட்டார். நான் நடந்ததைச் சொன்னேன். அவர் உடனே புன்முறுவல் செய்து, 'எங்கள் நாட்டின்மேல் எத்தனை அணுக்குண்டு போட்டாலும் எங்கள் நல்ல பண்புகளை மாற்றிவிட முடியாது. டாக்சிக்காரன் எவனும் பிறர் பொருளுக்கு ஆசைப்பட மாட்டான். ஜப்பான் மண்ணில் திருடர்கள் இல்லை. உங்கள் தோல்பை உங்களுக்குக் கிடைத்தே தீரும். அந்த டாக்சிக்காரன் உங்கள் தோல் பையைப் பார்த்த உடனே நீங்கள் புறப்பட்ட இடத்திற்கே நேராகப் போயிருப்பான். நீங்கள் புறப்பட்ட வீட்டாரைக் கேட்டறிந்து உங்கள் பையை அவரிடம் சேர்த்திருப்பான். அல்லது, உங்கள் இருப்பிடத்தைக் கண்டுபிடிக்க முடியவில்லையானால் அருகே உள்ள காவல்நிலையத்தில் அதை ஒப்படைத்துவிடுவான். நீங்கள் முதலில் புறப்பட்ட இடத்திற்குப் போய்ப் பாருங்கள். அங்கே இல்லையானால் அடுத்த காவல்நிலையத்தில் உங்கள் பொருள் கட்டாயம் கிடைக்கும்' என்றார். நான் புறப்பட்ட இடத்திற்குப் போய்ப் பார்த்தேன். அது ஓர் உணவுவிடுதி. அங்கே என்னுடைய நிறம், உயரம், சட்டை முதலிய அடையாளங்களும் அந்த டாக்சிக்காரனின் கையெழுத்தும் டாக்சி எண்ணும் குறித்த ஒரு சிட்டுடன் என் பொருள் எனக்காகக் காத்திருந்தது."

என் அலுவலகத்தில் இருக்கும் ஒருவர் ஜெர்மனிக்குச் சென்று எட்டு வாரங்கள் சுற்றிப் பார்த்துத் திரும்பினார். அந்த நாட்டு மக்களின் உழைப்பையும் உண்மையையும் பற்றிப் பலவாறு புகழ்ந்து பேசினார். ஒரு நிலையத்தில் ரயிலைவிட்டு இறங்கியபோது இவரை வரவேற்க வந்திருந்த நண்பர் தேநீர் அருந்துவதற்காக அழைத்தாராம்.

இவர் உடனே குனிந்து தம் பெட்டியை எடுக்க முயன்றாராம். அந்த ஜெர்மனி நண்பர், "பெட்டி முதலானவை இங்கேயே மேடையில் இருக்கலாம். யாரும் எடுத்துக்கொண்டு போக மாட்டார்கள். நாம் போய்த் தேநீர் அருந்திவிட்டு வரலாம்!" என்றாராம். இவர் நம்பிக்கை இல்லாமல் திரும்பித் திரும்பிப் பார்த்தபடியே அவரைத் தொடர்ந்து சென்றாராம். அவர், "ஏன் திரும்பித் திரும்பிப் பார்க்கிறீர்கள்? இன்னும் ஆறு மணி நேரம் கழித்து வந்தாலும் பெட்டி அங்கேயே இருக்கும். உங்களுக்குக் கவலை வேண்டா. மாலை ஆறு மணிக்குமேல்தான் உரியவர்கள் வராவிட்டால் அதைக் காவல்நிலையத்தில் கொண்டுபோய்ச் சேர்ப்பார்கள். வேண்டுமானால் நாம் ஊரைச் சுற்றிப் பார்த்துவிட்டு வந்தும் எடுத்துக் கொண்டு போகலாம்" என்றாராம். தேநீர் அருந்திவிட்டுத் திரும்பிய பொழுது பெட்டி அந்த இடத்தில் இல்லையாம். இவருடைய மனம் திடுக்கென்றதாம். ஆனால் இங்கும் அங்கும் பார்த்தபோது அந்தச் சாமான்கள் சுவர் ஓரமாக எடுத்து வைக்கப்பட்டிருந்ததைக் கண்டாராம். "நாம் விரைவில் வந்துவிடுவோம் என்பது அவர்களுக்குத் தெரியாது. அதனால் வழியில் இடையூறாக இருக்க வேண்டா என்று சுவர்ஓரமாக எடுத்து வைத்துவிட்டார்கள்" என்று ஜெர்மன் நண்பர் விளக்கம் கூறினாராம்.

களவு ஐந்து பெரிய குற்றங்களில் ஒன்று என்பது இந்த நாட்டில் நெடுங்காலமாக இருந்து வரும் முடிவு. "உள்ளத்தால் உள்ளலும் தீதே, பிறன்பொருளைக் கள்ளத்தால் கள்வேம் எனல்" என்று திருவள்ளுவர் வற்புறுத்திக் கூறியிருக்கிறார். களவு கூடாது என்பதை விளக்க எத்தனையோ கதைகள் இந்த நாட்டில் உள்ளன. இவ்வளவு கொள்கைகளும் கதைகளும் ஜப்பான் ஜெர்மனி முதலிய நாடுகளில் இல்லை. ஆனாலும் அங்கெல்லாம் களவு மிகக்

குறைவாக இருக்க, நம் நாட்டில் அது பெருகிவருகிறது. வெளி நாடுகளில் கடைத் தெருக்களில் செய்தித்தாள்கள் ஓர் இடத்தில் அடுக்கப்பட் டிருக்கும். காசு வைத்து விட்டு ஆளுக்கு ஒரு தாளாக மக்கள் எடுத்துச் செல்வார் கள். சில உணவுவிடுதிகளில் தின்பண்டங்கள் இருக்கும். விற்பவர் இருக்கமாட்டார். கோயில் உண்டியில் காசு இடு வது போல் அங்கே குறித்த அளவு பணத்தை வைத்து விட்டுத் தின்பண்டங்களை எடுத்துச் செல்வார்கள். ஆனால் இந்த நாட்டில் தக்க காவல் இல்லையானால் கோயில் உண்டி யையும் உடைத்துக் கோயில் பணத்தையும் எடுத்துச் சென்றுவிடுவார்கள்.

ஆகையால் நாம் ஒன்று உணர வேண்டும். இந்த நாட்டு மண்ணுக்கு மதிப்பு உயர வேண்டுமானால், இங்கே உள்ள அறநூல்களின் பெருமையைச் சொல்லிக்கொண் டிருந்தால் போதாது. இந்த நாட்டு மக்களின் வாழ்க்கை யையே சான்றாக எடுத்துச் சொல்ல வேண்டும். அந்த அளவுக்கு வாழ்க்கை உயர வேண்டும். அறவுரைகள் — உபதேசங்கள்—மட்டுமே போதும் என்று எண்ணிவிடக் கூடாது. அவைகள் ஓர் அளவுக்கு வேண்டும். அவற் றிற்கு அப்பால் குற்றங்களுக்குக் காரணமான குறைகள் இல்லாத வகையில் வாழ்க்கை நிலையை உயர்த்தி அமைக்க வேண்டும். களவு ஒழிய வேண்டுமானால் நாட்டில் வறுமை இல்லாதவாறு செய்ய வேண்டும். ஒருபுறம் முப்பது ரூபாய்ச் சம்பளமும் மற்றொரு புறம் மாதம் முப்பதாயிரம் ரூபாய் வருவாயும் உள்ள மிக இழிவான நிலையைப் போக்க வேண்டும். ஆயிரம் மடங்கு உள்ள வேறுபாட்டை அகற்றி இரண்டு மூன்று பங்கு வேறுபாடுதான் என்ற நிலைக்குக் கொண்டுவர வேண்டும். நாளைக்கு உணவு இல்லாதவர், தொழில் இல்லாதவர், வருவாய் இல்லாதவர் என்ற வகையில் பலரை வைத்திருக்கும் கொடுமை மாறி இந்த

மண்ணில் பிறந்த எல்லோருக்கும் வாழ்வு உண்டு, வளம் உண்டு என்ற நல்ல நிலையை ஏற்படுத்த வேண்டும். இந்த மண்ணின் மதிப்பு உயர்வதற்கு அதுதான் தக்க வழி.

அரசர்க்கும் அறிவுரை கூறும் அளவுக்கு உயர்ந்த வாழ்க்கை வாழ்ந்த மூதாட்டியார் ஒருவர் இந்த நாட்டில் இருந்தார். அவர் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே இந்த உண்மையைச் சொல்லிவிட்டுச் சென்றார். வயலோ, காடோ, பள்ளமோ, மேடோ எப்படியானாலும் எங்கே நல்ல மக்கள் வாழ்கின்றார்களோ அதுதான் நல்ல நிலம் என்றார் ஔவையார் :

நாடா கொன்றோ காடா கொன்றோ
அவலா கொன்றோ மிசையா கொன்றோ
எவ்வழி நல்லவர் ஆடவர்
அவ்வழி நல்லை வாழிய நிலனே !

— புறநானூறு.

2. உழைப்புத் திறன்

தொழிலாளர் சிலர் வெளிநாட்டுக்குச் சென்று வருவதற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். அவர்கள் போய் வருவதற்கு ஆகும் செலவை எல்லாம் தொழிற்சாலையே தர முன்வந்தது. வெளிநாட்டுத் தொழிற்சாலைகளைச் சுற்றிப் பார்த்து அங்குள்ள முன்னேற்றங்களைக் கண்டு வந்தால், அந்த அனுபவம் நாட்டுக்கு நல்ல பயன் தரும் என்பது ஆள்வோரின் கருத்து. ஆறுமாத காலம் அவர்கள் வெளி நாட்டில் தங்கியிருப்பது என்று ஏற்பாடு ஆயிற்று. அவர்கள் போய்க் காண்பதற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட நாடு ஜெர்மனி. பாஸ்போர்ட் முதலான ஏற்பாடுகள் செய்யப் பட்டன. புறப்படுவதற்குச் சில நாட்களுக்கு முன் ஜெர்மனியைப் பற்றி முன்னதாக அறிந்துகொள்ள வேண்டும் என்ற ஆவல் ஏற்பட்டது. தொழிலாளர் சிலர் ஜெர்மனியைப் பற்றிப் புத்தகங்கள் தேடிப் படித்தார்கள். சிலர் ஜெர்மனிக்குப் போய் வந்தவர்கள் யாராவது உண்டா என்று ஆராய்ந்து பார்த்து அவர்களை நாடினார்கள். அப்போதுதான் உள்ளூரிலேயே ஜெர்மானியக் குடும்பம் ஒன்று இருப்பது அவர்களுக்குத் தெரிய வந்தது. அந்த ஜெர்மானியரையே அணுகிக் கேட்டுத் தெரிந்துகொள்ளுதல் நல்லது என்று முடிவு செய்தார்கள். ஒரு நாள் குறித்துச் சென்றார்கள். அந்த

ஜெர்மானியர் அன்போடு அவர்களை வரவேற்றார். அவர்கள் கேட்ட கேள்விகளுக்கெல்லாம் விளக்கமான விடை கூறினார். தொழிலாளர்கள் மகிழ்ச்சி அடைந்தார்கள். முடிவில் ஜெர்மானியர் புன்முறுவலோடு அவர்களைப் பார்த்து, "நான் ஒன்று சொல்ல விரும்புகிறேன். அதைப் பற்றி நீங்கள் யாரும் மனவருத்தம் கொள்ளக் கூடாது. அதையும் நீங்கள் தெரிந்துகொண்டிருந்தால் நல்லது என்ற ஆசையால்தான் சொல்கிறேன். சொல்லட்டுமா" என்று பாயிரத்தோடு தொடங்கினார். "சொல்லுங்கள்" என்று தொழிலாளர்கள் கேட்டுக்கொண்ட பிறகு அவர் அதைச் சொன்னார்:

"நீங்கள் எங்கள் நாட்டு மக்களைப் பற்றியே கேட்டீர்கள். நான் எல்லாம் சொன்னேன். ஆனால் உங்களைப் பற்றி அவர்கள் என்ன கருதுகிறார்கள் தெரியுமா? அதைப் பற்றி நீங்கள் என்னைக் கேள்வி கேட்கவில்லை; நானே சொல்கிறேன். பொதுவாக இந்தியர்களைப் பற்றி எங்கள் நாட்டாரிடத்தில் நல்ல எண்ணம்தான் இருக்கிறது. 'அறிவு உடையவர்கள், அன்பு உடையவர்கள்' என்று இந்தியர்களைப் பற்றி எண்ணுகிறார்கள். 'ஆனால் இந்தியர்கள் சோம்பேறிகள். நன்றாக உழைக்கும் வழக்கம் இல்லாதவர்கள்' என்று எங்கள் நாட்டார் பேசிக்கொள்கிறார்கள். இந்தியன் ஒருவன் சேர்ந்தால் பத்து ஜெர்மானியர் சோம்பேறிகளாகிவிடுவார்கள் என்று பேசிக்கொள்கிறார்கள்."

இதைக் கேட்டவுடன் தொழிலாளர் சிலர், "இல்லை இல்லை; தவறு, தவறு" என்று மறுத்தார்கள். சிலர், "ஓரளவு உண்மையும் இருக்கிறது. உண்மைதான்" என்று உடன்பட்டார்கள்.

ஜெர்மானியர் புன்சிரிப்புச் சிரித்து, "அந்தக் கருத்துத் தவறாகவும் இருக்கலாம். ஆனால் நீங்கள் அந்தக் கருத்தை எதிர்ப்பது மட்டும் போதாது. அது தவறு என்று பிறர் உணருமாறு வாழ்ந்து காட்ட வேண்டும். இந்தியர்கள்

சுறுசுறுப்பானவர்கள் என்று உலகம் நம்புமாறு செய்ய வேண்டும். நீங்கள் போய் அந்தப் பேர் எடுத்துக்கொண்டு திரும்புங்கள்" என்று முடித்தார்.

'குற்றம் உணர்வான் குணவான்.' பிறர் சொல்வதற்கு முன்னே நாம் உணர வேண்டும். அல்லது, பிறர் சொன்ன பிறகாவது உணர்ந்து திருந்த வேண்டும். இந்தியர்கள் பொதுவாக உழைப்புக்குப் பின்வாங்குகின்றவர்கள் என்று பலர் கூறக் கேட்கிறோம். மக்கள் எண்ணிக்கை இங்கே மிகுதியாக இருந்தும், அவர்களின் உழைப்பு குறைவாக இருப்பதனால்தான் உற்பத்திப் பெருக்கம் இங்கே போதிய அளவிற்கு ஏற்படவில்லை.

உணவுப் பஞ்சம் முதலியன ஏற்படும்போது இந்த உண்மை தெளிவாக உணரப்படுகின்றது. பல திட்டங்கள் எதிர்பார்த்த அளவில் நிறைவேறாமல் ஏமாற்றம் விளைவிப்பதும் இதனாலேயே ஆகும்.

இந்தக் குறை தீர்வதற்கு என்ன செய்ய வேண்டும்? "உழைக்கப் பின் வாங்காதீர்கள், நன்றாக உழையுங்கள், மிகுதியாக உழையுங்கள்" என்று சொல்லிக்கொண் டிருந்தால் குறை தீர்ந்துவிடாது. ஒன்று, கடுமையான சட்டங்கள் பிறந்து மக்கள் அஞ்சி நடக்குமாறு செய்ய வேண்டும். அல்லது, மக்களின் சமய நம்பிக்கையில் ஒரு திருத்தம் ஏற்பட வேண்டும்.

கடவுள் தனக்குத் தரும் காணிக்கைகளையும் அருச்சனை முதலியவற்றையும் பொருட்படுத்துவது இல்லை என்றும், கடமையை ஒழுங்காகச் செய்வதையே மிக விரும்புகிறார் என்றும் தெளிவு பெறச் செய்ய வேண்டும். கடமையைச் செய்யாமலே, கடவுளுக்கு ஏதாவது செய்துவிட்டுத் தப்பித்துக்கொள்ளலாம் என்ற மனப்பான்மை தவறானது என்பதை வற்புறுத்தி உணர்த்த வேண்டும். சமயத் துறையில் தொண்டாற்றுகிறவர்கள் எல்லாரும் மக்களுக்கு

இந்தத் தெளிவை உண்டாக்குவார்களானல், அதனல் பெரும் பயன் விளையும்.

நாட்டுக்குத் தொண்டு செய்வதைக் கண்டு கடவுள் மகிழ்வார் என்ற நம்பிக்கை ஐரோப்பிய நாடுகளில் பொதுவாக உள்ளது. ஆகையால் ஜெர்மானியரும் மற்றவர்களும் நன்ருக உழைக்க வேண்டும் என்ற ஆர்வத்தோடு இருக்கிருர்கள்.

நம் நாட்டில் உழைக்காமல் வாழ்வதே உயர்ந்த வாழ்வு என்றும், உழைப்பவன் தாழ்ந்த சாதியான் என்றும், தவருன எண்ணங்கள் இருந்துவந்தமையால் உழைபபைச் சுருக்கிக்கொள்வதிலேயே ஆர்வத்தைக் காட்டுகிருர்கள்.

நோய் உள்ள இடம் எது என்று அறிந்து அதற்கு ஏற்ற மருந்து இட வேண்டும். அவ்வாறு செய்வோமானல் நம் நாட்டில் உழைப்புத்திறன் பெருகும்; பிற நாட்டார் கூறும் குறையும் தீரும்.

வெறுக்கவும் வழியில்லை; விலக்கவும் வழியில்லை. தீமை செய்தவன், தான் செய்யவில்லை என்று வழக்காடுவான்; சான்று தேடுவான். அவனிடம் பணம் பெற்றுக்கொண்டு வழக்கறிஞர் நீதியை விலைக்கு வாங்கித் தருவார். தவிர, நகரத்தின் பரபரப்பும் ஆரவாரமும் மனித உள்ளத்திற்கு ஓய்வு தராத காரணத்தால் நல்லவர் தீயவர் என்ற ஆராய்ச்சியில் பெரும்பாலோர் தலையிடுவதில்லை. அவரவர்கள் தங்கள் தங்கள் வாழ்வைப் பற்றி மட்டுமே கவலைகொள்கிறார்கள். ஊரின் பொது நன்மையைப் பற்றிக் கருத முடியாதவர்களாக இருக்கிறார்கள். குளத்து நீரைக் கெடுத்தவர் யார் என்றும் ஆராய்வதில்லை. குளத்தின் கரையில் நிழல் தரும் மரம் நட்டவர் யார் என்றும் எண்ணிப் பார்ப்பதில்லை. தங்கள் தங்கள் கையிலுள்ள குடம் நிரம்புகிறதா என்று பார்த்து நீர் எடுத்துச் செல்கிறார்கள். இன்று நாம் காணும் சமுதாயத்தின் நிலை இப்படிப்பட்டது.

விதிவிலக்காக ஆயிரத்தில் ஐவர் அறுவர் ஊரின் பொது நன்மையைக் கருதுகிறார்கள். அச்சமோ அவாவோ இல்லாமல் பண்பட்ட மனத்தோடு கடமை என்று கருதிப் பொதுத் தொண்டு செய்கின்றவரின் தொகை மிகக் குறைவு. அவர்கள் சிறுபான்மையோரானாலும் உறுதியானவர்கள். அப்படிப்பட்ட சிலர் பழங்காலச் சமுதாயத்திலும் இருந்தார்கள்; இன்றும் இருக்கிறார்கள். பழைய சமுதாயம் அவர்களின் நல்ல பண்பை அறிந்து போற்றியதால் அவர்களே ஊர்த் தலைவர்களாக விளங்கினார்கள். ஆனால் இன்றைய சமுதாயத்தில் அவர்கள் ஒதுங்கியிருக்கவேண்டி நேர்ந்துள்ளது. பணமும் விளம்பரமும் உள்ளவர்கள் முன்னேறுவதைப் பார்த்துத் தேர்தல் முதலிய துறைகளில் ஒதுங்கி விடுகிறார்கள்.

பணமும் விளம்பரமும் யாருக்கு மிகுதியாகக் கிடைக்கும்? அறநெறியைப் பற்றிக் கவலைப்படாமல், எப்படியாவது

முன்னேற வேண்டும் என்ற விடாமுயற்சி உடையவர்க்கே கிடைக்கும். மனித உள்ளம் இரண்டு கொம்புகளைப் பற்றிப் படர முடிவதில்லை. நெறியைப் போற்றினால், பண ஆசையும் பதவி ஆசையும் குறைகின்றன. பணம் பதவி முதலியவற்றில் ஆசையைப் போற்றினால், நெறியில் உறுதி தளர்கிறது. ஒருவன் இருவர்க்கு ஏவலாளாக இருக்க முடியாது என்றார் ஏசுநாதர். 'இருவேறு உலகத்து இயற்கை' என்றார் திருவள்ளுவரும். ஆகவே அறநெறியைப் போற்றும் நல்லவர்கள் இன்று பணத்தையும் பதவியையும் பெருக்கிக்கொள்ள முடியாமல் ஒதுங்குகிறார்கள். பணமும் பதவியும் நாடுகின்றவர்கள் விளம்பரத்தின் துணையைத் தேடுவதால் அறநெறியைப் போற்ற முடியாமல் தளர்கிறார்கள்.

நல்ல சமுதாய அமைப்பிற்கு அறநெறி வேண்டும். ஆனால் ஒவ்வொருவரும் அறநெறியில்தான் நடக்க வேண்டும் என்று எப்படி வற்புறுத்த முடியும்? திருடனைத் திருடாதே என்றும், பொய்யனைப் பொய் கூறாதே என்றும் இன்று வற்புறுத்த முடியுமா? பழங்காலத்தில் பாவ புண்ணியம் பற்றிய நம்பிக்கைகள் அச்சமும் அவாவும் ஊட்டித் தடுத்துவந்தன. சுற்றுப் புறத்தாரின் வெறுப்பும் போற்றுதலும் ஓரளவு தடுத்துவந்தன. இன்று நம்பிக்கைகள் தளர்கின்றன; சுற்றுப்புறத்தின் ஆற்றலும் குறைகிறது.

ஆகவே இளைஞர்களுக்கு அறத்தின் பெருமையை எடுத்துரைக்கலாம். ஆனால் அறநெறியில் கட்டுப்பட்டு நடக்குமாறு செய்ய இயலவில்லை. வாழ்க்கையின் கவலையால் வாடுகின்றவர்களுக்கு, 'அறம் காப்பாற்றும்' என்று ஆறுதல் கூறலாம். ஆனால் நெறி தவறாமல் வாழும் உறுதியை ஊட்ட முடியவில்லை.

"உன் நிலத்திற்கு வித்தும் இட வேண்டா. நீ பிறர்க்கு உதவியாக வாழ்ந்தால் உனக்கு ஒரு தீங்கும் இல்லை" என்று

சொன்னல் இன்று நம்புகின்றவர் எத்தனே பேர் இருக்கிருர்கள் ?

இந் நிலையில் என்ன செய்வது? எப்படியும் நல்ல சமுதாயம் அமையவில்லையானல் அமைதியான வாழ்க்கை இல்லாமற் போகும். நூற்றுக்கு ஒருவர் இருவரை மட்டும் திருத்தி இனிப் பயன் விளையாது. பெரும்பாலோர் நெறியோடு வாழ்வதற்கு உரிய வழிவகைகளை அமைக்க வேண்டும். இரண்டில் ஒன்று நடக்க வேண்டும். ஒன்று, இன்றைய பெரிய ஊர்களும் பெரிய அமைப்புகளும் குறைந்து பழங்காலம் போல் மனச்சான்று விளங்கும் சிறிய ஊர்களும் சிறிய அமைப்புகளும் ஏற்பட வேண்டும். அதுதான் காந்தியடிகளின் நெறி. மற்ருெரு வழி, பழங்காலத்தில் நம்பிக்கையும் உறுதியும் ஊட்டியதாகிய சமயத்திற்கு ஒப்பாக இக்காலத்தில் வேருென்று ஏற்பட வேண்டும்: எல்லோருடைய நன்மைக்காகவும் எல்லோரும் சேர்ந்து செய்யும் சட்டத்தைக் கடவுளின் ஆணை போல் போற்ற வேண்டும். “ இனி ஒரு விதி செய்வோம், அதை எந்த நாளும் காப்போம் ” என்ற நோன்பு வற்புறுத்தப்பட வேண்டும். இந்த இரண்டில் ஒன்று எவ்வளவு விரைவில் அமைகின்றதோ அவ்வளவும் சமுதாயத்திற்கு நன்மையாகும். அவ்வாறு அமைந்த பிறகுதான் இளைஞர் முதல் முதியோர் வரையில் எல்லோரிடமும் அறம் மதிப்புப் பெறும். இல்லையானல் பொருட்காட்சியில் போற்றப்படும் பழங்காலத்துக் காசுகள் போல அறம் வெறும் பேச்சளவில் மட்டுமே சிறப்புப் பெற்று நிற்கும்.

4. வீணாக்க வேண்டா

மழை பெய்யாமல் இருந்து பெய்தபோது பல ஏர்களை யுடைய உழவன் பரபரப்பு இல்லாமல் வேலையைத் தொடங்கலாம். ஆனால் ஓர் ஏர் மட்டும் உடைய உழவன் சிறிதும் காலத்தை வீணாக்காமல் உழைத்து ஆக வேண்டும். பயிர் செழித்து வளரும்வயலுக்கு உரியவன் செல்வனாக இருந்தால் கவலைப்பட்டுக் காவல் புரிவது இல்லை. வறிஞனாக இருந்தால் அதையே கண்ணும் கருத்துமாகக் காப்பான். மிக்க பொருள் வளம் உடையவர்கள் ஓரளவு பொருளை வீணாக்கலாம். நாட்டில் உணவுப் பொருள் பற்றுக்குறை உள்ள காலத்தில் அவ்வாறு வீணாக்குவது குற்றம் ஆகும். உணவுப் பொருளை வீணாக்காமல் தேவையானதைத் தேவையான அளவிற்கு வைத்துக்கொண்டு எதையும் வீணாக்காமல் உண்ண வேண்டும் என்பது காந்தியடிகளின் நெறி.

ஆற்றல் மிக்கவர் தம் ஆற்றலில் ஒரு பகுதியை வீணாக்கினாலும் கவலையில்லை. ஆனால் ஆற்றல் குறைந்தவர் அவ்வாறு வீணாக்கக் கூடாது; வேடிக்கைப் பொழுது போக்கில் ஆற்றல் சிதறுமாறு செய்தல் கூடாது. ஓய்வு மிகுந்தவர் தம் காலத்தில் ஒரு சிறிது வீணாக்கலாம். ஆனால் ஓய்வு குறைந்தவர் காலத்தை வீணாக்காமல் கடமை ஆற்ற வேண்டும். தனி மனிதர்க்கு உரிய நெறியே சமுதாயத்திற்கும்

பொருந்துவதாகும். நம் நாட்டில் முன்பெல்லாம் திருமணத்தை ஆறு நாள் ஏழு நாள் தொடர்ந்து நடத்திவந்தார்கள். ஆனல் இப்போது அரை நாள் அளவில் நடத்தவேண்டியுள்ளது. அந்த அளவிற்கு ஓய்வு குறைந்து போயிருக்கிறது. ஆறு நாளும் திருமணப்பந்தலில் இருந்து மகிழ்ந்த காலம் போய், அரை மணி கால் மணி நேரம் இருந்து பார்த்து வருவதற்கும் பலர்க்கு வாய்ப்பு இல்லை. இவ்வாறே வேறு பல துறைகளிலும் சமுதாய வாழ்க்கை மாறிவருகின்றது.

ஒரு காலத்தில் தமிழர் ஆற்றலும் ஊக்கமும் ஒற்றுமையும் மிக்கவராக விளங்கினர். இன்று தமிழர்க்கு ஆற்றல் ஊக்கம் ஒற்றுமை என்னும் இம் மூன்றும் ஓரளவு குறைந்து விட்டன போல் தோன்றுகின்றன. இவ்வாறு குறை நேர்ந்துள்ள காலத்தில், உள்ளதை வீணுக்காமல் காப்பது கடமை ஆகும்.

வாழ்க்கைக்கு விழாக்கள் வேண்டும். விழாக்களில் தனி விழாக்களும் உண்டு; பொது விழாக்களும் உண்டு. திருமணம், பிறந்த நாள் விழா, வெள்ளி விழா, பொன் விழா, விடைபெறல் விழா, பாராட்டு விழா முதலியவை தனி விழாக்கள் ஆகும். புத்தாண்டு விழா, பொங்கல் விழா, கலைமகள் விழா, பள்ளி விழா முதலியவை பொது விழாக்கள் ஆகும்.

தனி விழாக்களில், ஒரு சிலரைப் புகழ்தலும், அப் புகழ்ச்சியின் பொருட்டு ஒரு சிலரைப் பழித்தலும் இயல்பாக இடம் பெறும். பொது விழாவில், நாடு, மொழி, சமுதாயம் முதலியன பற்றிய அக்கறை வளரும். தனிவிழாவில் வீர வழிபாடு வளரும்; பொது விழாவில் கொள்கைகள் உணர்ந்து போற்றப்படும். தனி விழாக்கள் சிறு சிறு வளையங்களைப் படைத்து மகிழ்தல் போன்றதாகும். ஒவ்வொரு வளையமும் ஒரு தலைவரையோ தொண்டரையோ புகழ்ந்து

அவரைச் சுற்றிச் சுற்றி அமைவது. பொது விழாக்களில் தனி ஆட்களின் பேரும் புகழும் கரைந்து போகும். நாட்டின் பேரும் புகழும் மட்டுமே நிற்கும்.

ஆனால் தனி விழாக்கள்தான் எளிதில் நிறைவேற்றக் கூடியவை. ஒருவருடைய புகழ்ச்சியை எடுத்துரைப்பதும் கொண்டாடுவதும் மக்களுக்கு எளிய செயல்கள். அவருடைய கருத்துக்களை உணர்ந்து நடப்பதுதான் மக்களுக்கு அரியது ஆகும். ஒருவரை உட்காரவைத்துப் பூசை செய்வது எளிது. அவருடைய கொள்கைகளை மதித்துப் பின்பற்றுதல் அரிது. ஆகவே தனிவிழாக்கள் கவர்ச்சியும் உடனடியாகப் பயனும் உள்ளவை எனலாம். ஆயினும் பொதுவிழாக்கள் பெருகுதலே நாட்டுக்கு நன்மையாகும். அவற்றால்தான் பொதுமக்களின் எண்ணம் தனியாட்களையும் குழுக்களையும் சுற்றிச் சுற்றி வட்டமிடாமல், பரந்த பொதுநல வாழ்க்கைக்கு உரிய வகையில் திரும்பும்.

தமிழ் மக்களுக்கு இன்று ஆற்றலும் ஊக்கமும் ஒற்றுமையும் எவ்வாறோ ஓரளவு குறைந்துள்ள இக் காலத்தில் அவற்றை நிறை செய்யாமல் மேலும் வீணாக்குவது குற்றம் ஆகும். தனி ஆட்களுக்கு நடைபெறும் விழாக்கள், இன்று நாட்டின் முன்னேற்றத்திற்கு மிகத்தேவையாயுள்ள ஆற்றலைக் குறைத்துவருகின்றன. மக்களின் ஊக்கம் சிலரைப் போற்றிப் புகழ்வதிலும் சிலரைத் தூற்றிப் பழிப்பதிலும் செலவாகிவிடுவதால், நிலையான வேறு துறைகளில் ஊக்கம் செலுத்த அவர்களால் முடிவதில்லை. ஒருவர்மேல் சினத்தைக் கொட்டிவிட்ட பிறகு, மற்றொருவர்மேல் சினத்தை அந்த அளவிற்குக் காட்டமுடிவதில்லை. ஊக்கம் முதலியனவும் அவ்வாறு அளவுபட அமைந்தவைகளே. அவை செலவாவதும் அதனால் குறைதலும் இயற்கை. பேரூக்கமும் பேராற்றலும் உள்ள சிலர் விதிவிலக்காக இருக்கலாம். மற்றவர்கள் பொதுவிதிக்கு இயைந்தவர்களே. ஊக்கமும்

ஆற்றலும் செலவாகிவிடுதல் மட்டும் அல்லாமல் போற்றப் படுவோர்க்கும் தூற்றப்படுவோர்க்கும் இடையே வேறு பாட்டை வளர்த்துச் செல்வதால், உள்ள ஒற்றுமையும குறைந்துபோகிறது.

ஆயினும் மக்களை நோக்கி இத்தகைய விழாக்கள் கொண்டாட வேண்டா என்று கேட்டுக்கொள்வதால் பயன் விளையாது. ஏன் என்றால் அந்த விழாக்கள் மக்களுக்குச் சிறந்த பொழுதுபோக்காகப் பயன்படுகின்றன. விழாக் களுக்கு உரியவர்களான தலைவர்களும் அறிஞர்களும் தொண்டர்களுமே நாட்டின் நன்மையைக் கருதி விழாக்களை ஏற்றுக்கொள்ளாமல் ஒதுங்க வேண்டும். 'என் புகழ் வேண் டா. நாட்டின் புகழ் பரவட்டும்' என்று துறக்கும் உயர்ந்த மனப்பான்மை அவர்களுக்கு வேண்டும். 'எனக்கு மதிப்பு வேண்டா, சான்றோர் கொள்கைகளுக்கு மதிப்பு உயரட்டும்' என்னும் தன்னலம் அற்ற சீரிய நெஞ்சம் பெற வேண்டும். 'எனக்கு வழிபாடு வேண்டா, நாட்டையும் மொழியையுமே வழிபடுவோம்' என்னும் திருந்திய அற நெஞ்சம் பெற வேண்டும்.

ஒன்பது நூற்றாண்டுகளுக்கு முன் தமிழ் நாட்டில் செங் கோல் ஓச்சிப் பெரும் புகழ் பெற்ற சோழ வேந்தர்கள் இவ் வகையில் சிறந்த எடுத்துக்காட்டாக விளங்கினார்கள். அரண்மனை வாயிலில் வந்து நின்று, பாணர்களும் மற்றக் கலைஞர்களும் சோழ வேந்தர்களுக்குத் திருப்பள்ளியெழுச்சி பாடிக்கொண் டிருந்த காலம் அது. அரசர்களின் பிறந்த நாள் முதலானவற்றிற்கு நாட்டு மக்கள் எல்லோரும் விழாக் கொண்டாடி மகிழ்ந்த காலம் அது. சோழ வேந்தர்கள் கடவுள்வழிபாட்டில் மிக்க ஈடுபாடு கொண்டு "யான் எனது என்னும் செருக்கு" அறுக்கும் உயர்வு பெற்றதும், அவற் றைப் படிப்படியே மாற்றத் தொடங்கினார்கள். தாம் வாழும் அரண்மனைகளைவிட உயரமான கட்டடங்களைக்

கோயில்களாகக் கட்டித் தந்தார்கள். கோயில் என்ற சொல் அதுவரையில் அரண்மனையைக் குறித்துவந்தது. அந்தச் சொல்லும் இறைவனை வழிபடும் இடத்திற்கே வழங்க வேண்டும் என்று மாற்றினர்கள். "குடிமக்களுக்கும் எனக்கும் கோ—தலைவன்—இறைவனே. அவன் எழுந்தருளும் இடத்தையே கோயில் என்று சொல்ல வேண்டும். என் இருப்பிடத்தைக் கோயில் என்று சொல்ல வேண்டியதில்லை; திருவிழாக்களும் எனக்காக வேண்டா. நானும் ஆண்டவனுடையகுடும்பத்தில் உள்ள ஒருவன். நானும் இறைவனுடைய அடிமையே. திருப்பள்ளியெழுச்சி முதலியவைகளையும் இனிமேல் கோயிலில் கடவுளுக்கே உரியனவாகப் பாடவேண்டும். பலவகைக் கலைகளும் இனிக் கடவுளின் கோயிலிலேயே பயன்பட வேண்டும். நானும் குடிமக்களோடு கலந்து நின்று கடவுளை வழிபட வேண்டும்; அங்கேயே கலைகளைப் போற்றி மகிழ வேண்டும்" என்று சோழ வேந்தன் ஒருவன் பெறற்கரிய தெளிவு பெற்றான். தன் உள்ளம் தெளிந்து உணர்த்திய உண்மையைப் போற்றி நடக்கத் துணிந்தான். அவன் வாழ்ந்து காட்டிய பெரு வழியில் அவனை அடுத்து வந்த பெரு வேந்தர்களும் நடந்தார்கள். அத்தகைய உத்தமர்களால்தான் தமிழகம் அன்று பெருஞ் சிறப்புப் பெற்றது. தனி மனிதரைப் போற்றும் சிறு மனம் மறைந்து, சமுதாயத்தைப் போற்றும் பெருவாழ்வு மலர்ந்திருந்த காரணம் அதுவே.

நம் காலத்தில் காந்தியடிகள் பெரியதோர் எடுத்துக்காட்டாய்த் திகழ்ந்தார். அவர் இசைந்திருந்தால், அவருக்காக ஆயிரக் கணக்கான கோயில்கள் அவருடைய காலத்திலேயே தோன்றியிருக்கும். இரண்டோர் இடங்களில் அவருடைய மனக் கருத்தை அறியாமலே கோயில்கள் எழுப்ப முயன்றனர். அம் முயற்சியை அறிந்த காந்தியடிகள் வன்மையாகத் தடுத்து நிறுத்தினர். அவருடைய பிறந்த நாளை

அவர்பெயரால் கொண்டாடுவதற்கும் அவர் இடம் தர வில்லை. காலில் விழுந்து வழிபட வந்தவர்களையும் அவரு டைய கைகள் தடுத்தன. காந்தியடிகள் வந்து அமர்ந்த மேடையில், அவருடைய புகழைப் பாடும் உரிமைஒருவர்க்கும் கிடைக்கவில்லை. யாரேனும் வரவேற்பு இதழ் படித்துக் கொடுக்க முன்வந்தபோது, அது தமக்கான வரவேற்பு என்று அறிந்ததும், அதைப் படிக்க வொட்டாமல் தடுத்து நிறுத்தி, இரு கைகளையும் நீட்டி வாங்கிக்கொண்டு அவ ரைப் படிக்காமலே அனுப்பிவிட்டார். இவ்வாறெல்லாம் விழிப்போடு இருந்து தொண்டு செய்த காரணத்தால்தான் அவரால் செயற்கரிய செயல் செய்தருள முடிந்தது.

தலைவர்கள் இவ்வாறு நடப்பதால் நாட்டின் பெருமக் கள் இழப்பது ஒன்றும் இல்லை. சிறிது நேரத்திற்குரிய, அல்லது, சில நாளுக்குரிய மகிழ்ச்சியும் ஆரவாரமும் இழக் கப்படலாம். ஆனால் அதற்கு ஈடாக நாட்டில் விளையும் பயன் பெரிதாகும். குறைந்து வரும் ஆற்றலும் ஊக்கமும் ஒற்றுமையும் மேலும் குறையாதவாறு காத்துக்கொள்ள லாம். உள்ள ஆற்றலையும் ஊக்கத்தையும் ஒற்றுமையையும் நாட்டிற்கு உரிய ஆக்கப் பணிகளில் பயன்படுத்தி மகிழ லாம். ஆகவே, நாட்டின் நன்மையைக் கருதுவோர் தாமா கவே தனி விழாக்களுக்கு இடம் தராமல் விலகி நின்று, மக்களின் ஆற்றலையும் ஊக்கத்தையும் ஒற்றுமையையும் வீணாக்காதவாறு காக்கலாம். மற்றப் பொருள்களை வீணாக்கி விட்டால் அவற்றிற்கு ஈடு செய்யக் கடைத்தெருவிற்கோ அயல் நாட்டிற்கோ செல்லலாம். ஆனால் அவரவர்கள் உள் ளங்களில் உள்ள ஆற்றல் முதலியவற்றைச் சிறு சிறு மகிழ்ச்சியில் வீணாக்கிவிட்டால் அவற்றிற்கு ஈடு செய்வது எப்படி ?

அவை அவரவர் உள்ளத்தைத் தவிர வேறு எங்கும் கிடைக்காத அருஞ் செல்வங்கள். ஆகவே, வறியவன்

காக்கும் வயல் போல், நாம் நம் ஊக்கத்தையும் ஆற்றலையும் காத்துப் பயன்படுத்த வேண்டும். அவற்றைச் சிறு செயல்களில் வீணுக்க நமக்கு உரிமை இல்லை என்பதை உணர வேண்டும்.

5. வருமுன் காக்க

காலம் கெட்டுவிட்டது, உலகம் கெட்டுவிட்டது என்று பேசி அமைதியடையும் மனப்பான்மை கொள்ளக் கூடாது. நீதி, இன்றும் ஓரளவு பெருமையோடு உள்ளது. நேர்மையை மதிப்பவர்கள் இன்றும் சிலர் உள்ளனர். இக் காலத்திலும் ஒரு சிலர் மனச்சான்றைப் போற்றி வாழ்கிருர் கள். ஆனல், நீதியும் நேர்மையும் மனச்சான்றும் முன்காலம் போல் பலரிடம் சிறந்து விளங்கவில்லையே என்பதுதான் வருந்தத் தக்கது.

அவ்வாறு குறைந்து போனதற்குக் காரணம் என்ன? யந்திர நாகரிகம் காரணமாக இருக்குமோ என்று கேட்கலாம். அது மறைமுகமான காரணமே. யந்திர நாகரிகத்தால் சமு தாயம் விரிவடைந்தது; வாழ்வின் தேவைகள் பெருகிவிட் டன. அவ் விரிவும் பெருக்கமும்தான் நேர்க் காரணங்கள். எடுத்துக்காட்டாக, இதை எண்ணிப்பார்க்கலாம். மூன்று பேர் வாழும்குடும்பம் ஒன்று. அந்தக் குடும்பத்திற்குக்கிடைப் பவை அரிசி, கம்பு ஆகிய இரண்டு தானியங்களே என்றும் அவற்றைக் கொண்டு நான்கு உணவுவகைகளே செய்யத் தெரியும் என்றும் வைத்துக்கொள்வோம். அந்த நிலையில் அவர்கள் என்ன செய்வார்கள்? அந்த நான்குவகைஉணவுப் பொருள்களையே திரும்பத் திரும்பச் செய்து உண்பார்கள்.

கவலையில்லாமல் கடமையைச் செய்து மகிழ்ச்சியாக உண்டு வாழ்வார்கள். உணவு தேடுவதிலும் சமைப்பதிலும் சிறிது நேரம் செலவிட்டு, மிகுதியான நேரத்தை வேறு நல்ல வழிகளில் செலவிடுவார்கள். இதற்கு மாருக மற்ருெரு குடும்பத்தைக் கற்பனை செய்து பார்க்கலாம். அது முப்பது பேர் உள்ள குடும்பம். பதினைந்து வகையான தானியங்கள் கிடைக்கின்றன. ஒவ்வொரு தானியத்தைக் கொண்டும் பத்துப் பன்னிரண்டு உணவுவகை செய்யத் தெரியும். அந்தக் குடும்பத்தாரின் வாழ்க்கை எப்படி இருக்கும்? ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு வகை உணவு பிடித்திருக்கும். ஒருவர் விரும்புவதை மற்ருெருவர் வெறுப்பார். இது இல்லையே அது இல்லையே என்று இல்லாததைப் பற்றி ஏங்கும் ஏக்கம் மிகுதியாக இருக்கும். பலவகை உணவுகளைச் சமைக்க வேண்டிய காரணத்தால் சிலருக்கு உழைப்பு மிகுதியாகிவிடும். சுவைஆசை மிகுந்தவர்கள் தமக்கு வேண்டியதைப் பெறுவதிலேயே கருத்தாக இருந்து தந்திரமாகவும் நயமாகவும் நடப்பார்கள். அமைதி மனப்பான்மை உடையவர்கள் ஏமாந்து போவார்கள். விருப்புவெறுப்புக்கள் மிகுதியாக வளருவதால் பூசல்கள் ஏற்படும். அவற்ருல் மன அமைதி கெடும். சுவைஆசையோடு விரும்பியதையே தின்று மற்றவற்றை நீக்குவதால், உடம்பின் வளர்ச்சியிலும் குறை ஏற்படும். உடம்பில் சில சத்துப் பொருள்கள் குறைவதால் நோய்கள் ஏற்படும். இவ்வாறு மனநலமும் உடல்நலமும் கெட்டுக் குடும்பத்தாரில் பலர் வருந்தும்போது, மருத்துவரின் உதவியும் மற்றவர்களின் உதவியும் தேவைப்படும். பத்தியம் கட்டாயம் ஆகும். குடும்பத்தாரில் ஒருவர் வல்லமை பெற்று மற்றவர்களை ஆள வேண்டியதும் கட்டாயம் ஆகும்.

மன அமைதியோடு வாழ வேண்டும், உடல்நலத்தோடு வாழ வேண்டும் என்ற ஆவல் சின்ன குடும்பத்தார்க்கும்

உண்டு, பெரிய குடும்பத்தார்க்கும் உண்டு. ஆனால் சின்ன குடும்பத்தார்க்கு அவை இயல்பாக அமைகின்றன. பெரிய குடும்பத்தார் அவற்றைப் பாடுபட்டுப் பெற வேண்டியுள்ளது. பழங்காலச் சமுதாயத்துக்கும் இக்காலச் சமுதாயத்துக்கும் உள்ள வேறுபாடு இதுதான். எடுத்துக்காட்டுக்காக உணவை மட்டும் கண்டோம். உடை முதலிய எல்லாத் துறைகளிலும் இவ் வேறுபாட்டைக் காணலாம்.

யந்திர நாகரிகம் சமுதாயத்தை மிகப் பெரியதாக விரிவுபடுத்திவிட்டது. அதனால் அரசியல் முதலியவற்றில் சிக்கல்கள் பெருகிவிட்டன. வாழ்க்கைத் தேவைகளும் அளவு கடந்து பெருகிவிட்டன. அவற்றால் போட்டியும் பொறாமையும் மிகுந்து அன்பும் அமைதியும் குறைந்துவிட்டன. சுவை ஆசையால் பூசல்கள் மிகுவது போல், பெரிய சமுதாயத்தில் சாதிப்பற்று, சமயப்பற்று, கட்சிப்பற்று முதலியவற்றால் பலவகைப் போராட்டங்கள் ஏற்பட்டுவருகின்றன. ஆகவே, மக்களின் மனத்திற்கு இயல்பாக உள்ள பண்புகள் தலையெடுக்க முடியவில்லை. தீய பண்புகளே ஓங்கியிருக்கின்றன. அதனால் நீதியின் பெருமையும் நேர்மையின் மதிப்பும் மனச்சான்றின் வலிமையும் குறைந்து காணப்படுகின்றன.

நீதி வாழ வேண்டும் என்ற நோக்கம் எல்லோருக்கும் உள்ளது. ஆனால் இன்று உள்ள சாதிப்பற்று அதைக் கெடுக்கின்றது. இவன் நம் சாதியான், ஆகையால் நீதி தவறினாலும் இவனை எப்படியாவது காப்பாற்றியாக வேண்டும் என்ற முயற்சியைச் சாதிப் பற்று ஏற்படுத்துகின்றது. இவன் நம்முடைய சமயத்தான், ஆகையால் நேர்மையில்லா விட்டாலும் இவனைத்தான் உயர்த்த வேண்டும் என்ற ஆர்வத்தைச் சமயப்பற்று ஏற்படுத்துகிறது. இவன் நம்முடைய கட்சியான், ஆகையால் மனச்சான்றுக்கு மாறாக இருந்தாலும் இவனைத்தான் போற்ற வேண்டும் என்ற பிடிவாதத்தைக் கட்சிப் பற்று ஏற்படுத்துகிறது. பல

வகைத் தொழில்கள், பலவகைப் பதவிகள், பலவகை நிலைகள், பலவகை ஆடம்பரங்கள், பலவகை உயர்வுகள் என்று வாழ்க்கையில் எல்லாம் பலவாக இருப்பதனால் போட்டிக்கு உரிய வாய்ப்புக்கள் பெருகியிருக்கின்றன. இன்னது வேண்டும், இன்னது சிறந்தது என்று ஒவ்வொருவரும் ஒவ்வொன்றை நாடி ஓயாமல் முயற்சி செய்தபடியே இருக்க வேண்டியுள்ளது. விரும்பியது கிடைப்பது அரிதாகி விட்டது. உள்ளதைக் கொண்டு அமைதி அடையும் நிலை இல்லை. ஆகவே நீதி நேர்மை மனச்சான்று ஆகியவற்றை நம்பிக் கிடக்க முடியவில்லை. சாதி, சமயம், கட்சி முதலியவற்றில் ஏதேனும் ஒன்றைப் பற்றிக்கொண்டு போட்டியிடுவதில் ஆர்வம் மிகுந்திருக்கிறது. இந்தப் போக்கை மாற்றி அமைக்க வேண்டும். அல்லது, தடுத்து நிறுத்த வேண்டும். இவ்விரண்டில் ஒன்று நடைபெற்றால் தவிர, முன்னேற்றம் ஏற்படாது.

சாதி சமயம் கட்சி முதலிய பற்றுக்களால் விளைந்துள்ள தீமையை இன்னொரு வகையாகவும் விளக்கலாம். கண்ணாடியில் இரண்டு வகை உள்ளன. ஒன்று, சிறியதைப் பெரியதாக்கிக் காட்டும் பூதக்கண்ணாடி (குழி ஆடி). மற்றொன்று, பெரியதைச் சிறியதாக்கிக் காட்டும் நிழற்படக் கண்ணாடி (குவி ஆடி). இந்த இரண்டு கண்ணாடிகளும் பொருள்களை உள்ளவாறே காட்டுவதில்லை. பழங்காலச் சமுதாயத்தில் பலருடைய மனம் நேரான கண்ணாடி (சமதள ஆடி) போல் இருந்தது. ஆகையால் அவர்கள் வாழ்க்கையை நீதியுடனும் நேர்மையுடனும் மனச்சான்றுடனும் உணர்ந்து நடத்தினார்கள். இக் காலத்தில் பலருடைய மனம் பூதக் கண்ணாடி போலவும், நிழற்படக் கண்ணாடி போலவும் உள்ளன. தன் சாதியான் மிகுதியாக லஞ்சம் வாங்கினாலும், அது சிறு குறையாகவே தோன்றுகிறது. வேறு சாதியான் சிறு லஞ்சம் வாங்கினாலும் அது பெரிய குற்றமாகத்

தெரிகிறது. தம் சமயத்தான் மிகமிக ஒழுங்கு தவறி நடந்தாலும் அது சிறு குற்றமாகவே புலப்படுகிறது. பிற சமயத்தான் சிறிது ஒழுங்கு தவறினாலும் அது பெருங்குற்றமாகப்படுகிறது. தம் கட்சியாரின் குற்றமும் குணமாகக் கருதப்படுகிறது. எதிர்க்கட்சியாரின் குணமும் குற்றமாக உணரப்படுகிறது. சாதி, சமயம், கட்சி முதலியவற்றின் வேறுபாடுகளால் மனம் இவ்வளவு கெட்டிருக்கும்போது, நடுநிலையான உண்மை விளங்குவதற்கு இடம் ஏது ?

பழங்காலத்து வாழ்க்கையைக் கற்பனை செய்து உணர்வது அரிதாக இருக்கலாம். ஆகையால் இக்காலத்து வாழ்க்கையிலிருந்தே விளக்கம் காண்போம். நகரத்திலிருந்து நெடுந்தொலைவிலுள்ள சின்ன ஊரில் நல்லவர் யார் கெட்டவர் யார் என்பது எளிதில் விளங்கிவிடுகிறது. நம்பத் தகுந்தவர் யார் நம்பத் தகாதவர் யார் என்று எளிதில் அறிந்துகொள்ளலாம். ஆனால், பெரிய நகரங்களில் அவ்வளவு எளிதாக உணர முடிவதில்லை. ஒழுக்கம் கெட்டவரையும் நல்லவர் என்று புகழ்வதற்குப் பலர் சேர்கிறார்கள். நல்லவரையும் குறை கூறிப் பழிப்பதற்கு ஆட்கள் சேருகிறார்கள். யாரை நம்புவதென்றே தெரியவில்லை. அதனால் பக்கத்து வீட்டுக்காரரோடும் நெருங்கிப் பழக முடியாத வாழ்க்கையே நகரத்தில் உள்ளது. தவிர, எவ்வளவு குற்றங்கள் இருந்தபோதிலும் அவற்றை யெல்லாம் மறைத்துப் புகழ்பெறுவதற்கு வேண்டிய வாய்ப்பும் நகரத்தில் உள்ளது. மேலே குறித்த சாதி சமயம் கட்சி முதலியவைகளும், அவற்றிற்குத் துணையான மேடைகளும் செய்தித்தாள்களும் நேர்மையான மனப்பான்மையைக் கெடுத்துவருகின்றன. சமுதாய வாழ்க்கை விரிவடைவதனால் தீமைகள் எளிதில் பரவுகின்றன.

சமுதாயம் விரிவு பெறாமல் குறுகியே இருக்க வேண்டும் என்பது கருத்து அன்று. அவ்வாறு விரிவடையும் போதும்

அதற்கேற்ற விழிப்புணர்ச்சியோடு பாதுகாப்புத் தேடிக் கொள்ள வேண்டும் என்பதைத்தான் கருத வேண்டும்.

ஒன்று கேட்கலாம். சிறுகூட்டமாக இருந்தும் கிராம மக்களும் கெட்டுவிட்டார்களே என்று கேட்கலாம். கிராமங் களிலும் நீதியும் நேர்மையும் மனச்சான்றும் குறைந்து விட்டனவே என்று தெரிந்த கிராமங்களை எடுத்துக்காட்ட லாம். உண்மைதான். அதற்குக் காரணம் என்ன? இன்று கிராமங்கள் நகரங்களை நம்பி வாழ்கின்றன. நகரங்களைப் பின்பற்றி வாழ்கின்றன. ஆகையால் நகரங்களின் தீமை கள் கிராமங்களில் பரவாமல் இருக்க முடியாது. நகரங் களைப் போல் கிராம மக்களும் தம் தேவைகளைப் பெருக்கிக் கொண்டு வருகிறார்கள். தேவைகள் பெருகப் பெருக, வாழ்க்கைச் சிக்கல்களும் போட்டிகளும் அவற்றால் தீமை களும் பெருகும் அல்லவா?

யந்திர நாகரிகத்தைத் தேவையான ஓர் அளவிற்கு வரையறை செய்து பயன்படுத்திக்கொள்ளலாம். அந்த முயற்சி இன்றுவரை செய்யப்படவில்லை. பெரிய நகரங்கள் எல்லை இல்லாமல் விரிந்து வளர்ந்துகொண்டே போகின் றன. அதனால் போக்குவரத்து நெருக்கடி, தண்ணீர்ப் பஞ்சம், நோய்ச் சிக்கல் முதலியவை பெருகிக்கொண்டே போகின்றன. ஆயினும் அலுவலகங்களையும், கல்விக் கூடங்களையும், தொழிற்சாலைகளையும் நகரங்களிலேயே மேன்மேலும் அமைத்துவருகிறார்கள். பலவகையான கவர்ச்சிகளையும் நகரங்களிலேயே அமைத்துவருகிறார்கள். அதனால் மக்கள் மேன்மேலும் நகரங்களில் குடியேறுகிறார் கள்; குடியேறினவர்கள் திரும்பிச் செல்லாமல் அங்கேயே நிலைத்து வாழ்கிறார்கள். தொழிலுக்கும் வாழ்வுக்கும் வேண் டிய வாய்ப்புக்களை நகரங்களில் குறைத்துக் கிராமங்களில் வளர்த்தால் இந்தப் போக்கைத் தடுக்க முடியும். இதைச் செய்ய யாரும் முன்வரவில்லை. இதையே செய்ய முடியாத

நிலையில் யந்திர நாகரிகத்தை எப்படிக்கட்டுப்படுத்த முடியும்?

தேவைகளைப் பெருக்குவதால் இன்னல் விளைகிறது என்பதை விளக்குவதற்கு மற்றோர் எடுத்துக்காட்டு: திருமணம் செய்துகொண்டு வாழ்வது வாழ்க்கைக்குத் தேவையானது. ஆணும் பெண்ணும் அப்படி வாழும் வாழ்க்கை பழங்காலத்தில் எளிதாக இருந்தது. நூற்றுக்குத் தொண்ணூறு திருமண வாழ்க்கை நன்றாகவே நடைபெற்றன. ஆனால் இப்போது நூற்றுக்குத் தொண்ணூறு தோல்வியாகவே முடிகின்றன. திருமணம் என்பது முன் போல் எளிதாக இல்லை. அதனால் வயதுவந்த பின்னும் திருமணத்திற்கு வழியில்லாமல் வாழ்வோர் பலர் உள்ளனர். மணமக்களைத் தேர்ந்தெடுப்பதும் இப்போது பெருந்தொல்லையாக உள்ளது. நம்பிக்கையோடு தேர்ந்தெடுத்துக் கவலையின்றி வாழ்தல் அரிதாக உள்ளது. வாழ்க்கைத் தேவைகள் பெருகிவிட்டதுதான் அதற்குக் காரணம். ஆணும் பெண்ணும் முன்பெல்லாம் அழகைத் தேடினார்கள்; அன்பைத் தேடினார்கள். இக்காலத்தில் அவர்கள் தேடுவதும் நாடுவதும் அந்த இரண்டோடு நிற்கவில்லை. பட்டம் என்ன, தொழில் என்ன, எதிர்கால உயர்வு எப்படி, பணம் எவ்வளவு, ஆடம்பர வாய்ப்புக்கள் எத்தனை என்று இன்று ஆணும் பெண்ணும் தேடுகின்றவைகளும் நாடுகின்றவைகளும் பெருகிவிட்டன. அதனால் இடையூறுகளும் ஏமாற்றங்களும் வளர்ந்துவிட்டன. இந்தத் துறையிலும், இது போன்றே மற்றத் துறைகளிலும் இன்றைய போக்கு நன்றாக இல்லை.

நாமாகவே உணர்ந்து திருந்தி நடப்பது நல்லது. இல்லையானால் இயற்கை நம்மைக் கடுமையாக ஒறுத்துத் தடுத்துவிடும். 'நீதி நேர்மை மனச்சான்று இவைகள் சிறந்து விளங்கும் என்றும், எங்கும் மனிதன் நல்லவனாய்த் திருந்துவான்' என்றும் காந்தி அடிகள் நம்பினார்; நம்பிக்கையோடு

எதிர்பார்த்தார். இன்றும் அவர்வழி வந்த விநோபா எதிர் பார்க்கிறார். அவர்களின் நம்பிக்கை பழுதாகாமல் சமுதாயம் தாமாகவே திருந்தி நடக்குமா? அப்படித் திருந்தி நடந்தால்தான் மக்களாட்சியும் உரிமை வாழ்வும் விளங்கமுடியும். திருந்தி நடக்கவில்லையானால் இயற்கைத் தாய் சமுதாயத்தை ஒறுக்க முன்வருவாள். எல்லோருக்கும் வழங்கியுள்ள உரிமையைப் பறித்து, அந்த உரிமையை ஒரு சிலரிடத்திலோ, ஒருவரிடத்திலோ கொடுத்துவிடுவாள். அந்த ஒருவர் யாராக இருக்கலாம், எந்தக் கட்சியாக இருக்கலாம் என்பவற்றை அறிய முடியாது. அவர் சூழ்நிலையின் படைப்பாக வந்து அமைவார். அவரைத்தான் சர்வாதிகாரி என்று கூறுவார்கள். பல நாடுகள் இந்த மாறுதலைக் கண்டுவிட்டன. நம் நாடு இதைக் காணாது இருக்க வேண்டும் என்று பலரும் விரும்புகிறார்கள். தக்க முயற்சி இல்லாமல் விருப்பம் மட்டும் கொள்வதால் பயன் இல்லை. தஞ்சைக்குச் செல்ல விரும்பினால் தஞ்சைக்குச் சென்றுவிட முடியாது. செல்ல முயன்றால்தான் செல்லமுடியும். உரிமை வாழ்வை—மக்கள் ஆட்சியை — விரும்பினால் மட்டும் போதாது; காக்க முயன்றால்தான் பயன் உண்டு.

சமுதாய விரிவாலும் தேவைப் பெருக்கத்தாலும் படிப்படியாக மன நிலை குன்றுகிறது. அதனால் நீதிக்கும் நேர்மைக்கும் மனச்சான்றுக்கும் பெருமையும் மதிப்பும் குறைதலைக் காண்கிறோம். சாதி, சமயம், கட்சி முதலியவற்றின் வேறுபாடுகள் சீர்கேட்டுக்குத் துணையாக இருப்பதையும் காண்கிறோம். உலகத்தில் வேறு எந்த நாட்டிலும் இல்லாத அளவிற்கு நம் நாட்டில்தான் இந்த வேறுபாடுகள் மிகுந்திருக்கின்றன. இந்த நாட்டில்தான் சாதிகள் பல; சமயங்கள் பல; மொழிகள் பல; கட்சிகளும் பற்பல. ஆதலால் இந்த நாடு மற்ற நாடுகளைப் பார்த்துக் கண்மூடித் தன்மையோடு பின்பற்றினால் போதாது. இந்த நாட்டுக்கு

என்று தெளிவான புதிய வழிகளை வகுத்துக்கொண்டால் தான் பயன் உண்டாகும்.

இப்போது எண்ணிப் பார்க்கலாம். நான்கு உணவு வகைகளும் மூன்று பேருமாய் வாழும் குடும்பம் இயல்பாகவே அமைதியாய் இன்பமாய் வாழ முடியும். ஆனல் முப்பது பேரும் முந்நூறு உணவுவகைகளுமாய் வாழும் குடும்பம் பாடுபட்டு வழிவகுத்துக்கொண்டால்தான் அமைதியும் இன்பமும் பெற முடியும். இல்லையானல், அந்தக் குடும்பத்தில் மருத்துவரும் வழக்கறிஞரும் செல்வாக்குப் பெறுவார்கள். பத்தியமும் விதிகளும் கட்டாயம் ஆகும். அவர்கள் இட்டது சட்டமாகிவிடும். சமுதாயத்திற்கு அப்படிப்பட்ட நோய் வரும்போதுதான் சர்வாதிகாரியின் இராணுவ ஆட்சியும் தலையிடும். ஆகையால்தான் நீதிக்கும் நேர்மைக்கும் மனச்சான்றுக்கும் சிறப்புத் தரும் வகையில் சமுதாயம் அமையுமாறு காத்துக்கொள்ள வேண்டும். வருமுன் காத்தல் நல்லது.

6. உரிமை வாழ்வு

நாட்டில் இவ்வளவு குறைகள் இருக்கின்றனவே, லஞ்சம் ஒழியவில்லையே, சாதிக்கொடுமை நீங்கவில்லையே, உயர்ந்த நூல்களைப் பற்றிப் பேசிக்கொண்டே இழிந்த செயல்களில் ஈடுபடும் கயமை அழியவில்லையே என்று பலர் ஏங்குகிறார்கள். இவற்றைப் போக்க ஒன்றும் செய்ய முடிய வில்லையே என்று வருத்தப்படுகிறார்கள். ஒன்றும் திருத்த முடியாமல் உலகம் என்றும் இப்படித்தான் இருக்குமோ என்று சோர்வு அடைகிறார்கள சிலர். நல்ல மக்களின் மனத்தில் இந்தச் சோர்வு வளர்ந்துவிட்டால் அது நாட்டின் எதிர்காலத்திற்கே இடையூறாக முடியும். ஒன்றும் செய்ய முடியவில்லையே என்ற சோர்வுமனப்பான்மை எந்த நாட்டில் பரவுகிறதோ, அந்த நாட்டில்தான் சர்வாதிகாரம் என்ற தடி ஆட்சி தோன்றிவிடும். ஒன்றும் முடியவில்லையே என்று நல்லவர்கள் சோர்ந்த வேளையில்தான் எல்லாம் முடியும் என்று கெட்டவர்களில் ஒருவன் சர்வாதிகாரியாய்த் தலையெடுப்பான்; ஆட்சி புரிவான்.

தடியாட்சியுள்ள நாட்டில் சர்வாதிகாரியைக் கொடியவன் என்று பழிக்கின்றார்கள். அதனால் பயன் இல்லை. இந்த நிலைமை தோன்றுவதற்குக் காரணமான சூழ்நிலையை எண்ணி உணர வேண்டும். அதிகாரம் எல்லாம் இப்படி

ஒருவனிடம் போய்ச் சேர்ந்துவிட்டதே என்று வருந்துவ தால் பயன் இல்லை. கடமையையும் உரிமையையும் எல்லோ ருக்கும் அமைத்து நிரவல் செய்யாத சமுதாயத்தையே பழிக்க வேண்டும். அந்தத் தெளிவும் உணர்ச்சியும் பலருக் கும் இருக்குமானால் அத்தகைய நாட்டில் எவரும் சர்வாதி காரியாகத் தோன்றவே முடியாது.

உரிமையைப் பற்றி நாம் எண்ணிக்கொண் டிருக்கும் கருத்தில் தவறு உள்ளது. நாம் விரும்பும் சில படங்களும் சில முழக்கங்களும் ஒரு கொடியும் இடம் பெற்றுவிட்டால் அதுவே உரிமை என்று பலர் எண்ணுகிறோம். ஊமைக் குழந்தைகளும் செவிட்டுச் சிறுவர்களும் பார்ப்பதற்கு மிக அழகாகத் தோன்றுகிறார்கள். தோற்றத்தைக் கொண்டு அவர்களின் உடம்பு குறையற்ற உடம்பு என்று சொல்லி விட முடியாது. இழுப்பு மூச்சு (ஆஸ்த்மா) நோயாளிகளும் புற்றுநோய் வந்தவர்களும் பார்வைக்கு நன்றாகத்தான் தோன்றுகிறார்கள். ஆனால் நோய் அவர்களை வாட்டி வதைக் கின்றது.

ஆகையால் வெளித் தோற்றத்தைக் கண்டு உண்மை நிலையை அளந்தறியக் கூடாது. உரிமையை நினைவூட்டு கின்ற படங்களையும் முழக்கங்களையும் கொடிகளையும் பார்த்து விட்டுச் சமுதாயம் சீர்ப்பட்டுவிட்டது என்று எண்ணுதல் கூடாது. எந்த நாட்டில் முரட்டு உடம்பை விட நீதிக்கு அஞ்சும் மனப்பான்மை இருக்கிறதோ, எந்த நாட்டில் தந்திரத்தைவிட நேர்மைக்கு மதிப்பு மிகுதியாய் இருக் கிறதோ, எந்த நாட்டில் துப்பாக்கி முதலிய கருவிகளைவிடத் தனி மனிதரின் மனச்சான்று வல்லமை உடையதாய் விளங்குகிறதோ அந்த நாட்டில்தான் உரிமை வாழ்வ தாகச் சொல்ல முடியும்.

முரட்டு உடம்பைப் பார்த்து இப்போது யாரும் பயப் படுவது இல்லையே என்று சொல்லலாம். ஆனால், நீதிக்கு

இன்று அஞ்கிறுர்களா என்று எண்ணிப் பார்க்கவேண்டும். சிறப்பாக, தேர்தல்காலத்தில் அந்த அச்சம் இருக்கிறதா என்பதை ஆராய்ந்து பார்க்க வேண்டும். பழங் காலத்தில் முரடன் தன் உடல்வலிமையைக் கொண்டு எல்லோரையும் அச்சுறுத்தியது போல் இக் காலத்தில் ஆள்பலத்தைக் கொண்டு—கட்சிவலிமையைக்கொண்டு—மற்றவர்களை அச்சுறுத்தும் மனப்பான்மை உள்ளது. நான் இன்ன கட்சியில் இவ்வளவு செல்வாக்கு உடையவன் என்று சொல்லி மருட்டுவது, பழங்காலத்தில் முரடன் தன் உடல் வலிமையைக் காட்டிப் பயமூட்டியது போல் உள்ளது. முரட்டு வலிமையால் நீதி ஒதுங்கி இருந்தது போல், இக்காலத்தில் கட்சி வலிமையால் நீதி ஒதுங்கியிருக்கிறது. தேர்தலில் வாக்குரிமை பெற்று ஆள் திரட்டி நின்றுல் நினைத்ததைச் செய்து மற்றவர்களை அடக்கி வாழலாம் என்ற நம்பிக்கையோடு தான் ஒவ்வொரு கட்சியும் முயற்சி செய்கின்றது. இது முரடன் தன் உடல்வலிமையைப் பெருக்குவதற்குக் கொழுமையான உணவுகளை உண்டு தக்க பயிற்சிகளைச் செய்வது போலத்தான் உள்ளது. ஆகவே இந்தக் காலத்திலும் நீதிக்கு அஞ்சாமல் வலிமைக்கு மட்டும் அஞ்சும் மனப்பான்மை உள்ளது என்பதை உணரலாம்.

இரண்டாவதாக, நேர்மையைவிடத் தந்திரத்திற்கு மதிப்பு மிகுந்திருப்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். அலுவலகத்தில் தன் கடமை வரையில் தவருமல் ஒழுங்காகச் செய்து வருபவன் புறக்கணிக்கப் படுவதையும், கடமையை அரைகுறையாய்ச் செய்தாலும் மேலதிகாரியைக் காக்கை (கால்கை) பிடிப்பவன் முன்னேறுவதையும் பற்றி வயிற்றெரிச்சலுடன் பலர் பேசுகிறுர்கள். பிறருடைய குணம்குற்றங்களைப் பற்றி வாய் திறந்து பேசாமல் தன் வரையில் ஒழுங்காக இருந்து கடமையைச் செய்பவன் மதிக்கப்படாததும், ஒழுங்கு இல்லாதவனுக இருந்தும்

மேலோரிடம் சென்று கோள் மூட்டிக்கொண்டு இருப்பவன் மதிக்கப்படுவதும் பலர்க்கு நன்ருகத் தெரியும். இவ்வாறு கோள் மூட்டுபவன்—புறங்கூறுபவன்—நல்லவன் அல்லன். அவன் தந்திரக்காரன். பறவைகள் ஏமாந்து வந்து வலையில் அகப்படும் என்று வேடன் நம்புவது போல் மேலதிகாரிகள் இந்தப் புகழ்பழி வலையில் அகப்படுவார்கள் என்று தந்திரக் காரன் நம்புகிருன். மேலோர் நல்லவர்களாக விளங்கி உண்மை உணரும் திறமையோடு இருந்தால், அவர்கள் இவ்வாறு வலையில் அகப்பட மாட்டார்கள். ஆனுல் அவர் களில் பெரும்பாலோர் அந்தப் பறவைகளைப் போல் ஏமாந்து விடுகிருர்கள். தம்மைப் பற்றிய புகழ்ச்சியை விரும்பி ஏற் கிருர்கள்; தம் எதிரில் மற்றவர்கள் பழிக்கப்படுவதை யும் விரும்பி வரவேற்கிருர்கள். ஆகையால் அவர்கள் நேர்மையை உணர்ந்து மதிக்க முடிவதில்லை.

இந்தப் புகழ்பழி வலை, அலுவலக மேசை அருகே மட்டும் நிற்காமல் பெரிய செல்வர்களின் வீட்டுத்திண்ணை அளவில் மட்டும் நிற்காமல், பொதுமேடையளவிலும் பரவி விட்டது. யாரும் அறியாமல் தந்திரமாகக் கோள் மூட்டிய நிலை போய், பலரும் அறிய மேடை ஏறி ஒருவரைப் புகழ் வதும் அவருக்கு வேண்டாதவரைப் பழிப்பதும் கலையாக வளர்ந்துவருகின்றன. மேடைநிகழ்ச்சிகளில்வரவேற்புரையும் நன்றியுரையும் புகழ்பழி வலையாகப் பயன்படும் இடங்களும் உள்ளன. நூற்றுக் கணக்காகக் கூடியுள்ள மக்களின் முன் னிலையில் மேற்கொண்ட கடமையை மட்டும் செய்துவிட்டுப் போவோம் என்ற அமைதி இல்லாமல், வரவேற்பில் நம்மைப் புகழவில்லையே நன்றியுரையில் நம்மைப் போற்றவில்லையே என்று ஏங்குகின்ற தலைவர்களும் இருக்கிருர்கள். அவர் களிடம் இந்தக் குறை இருப்பதனுல்தான் அவர்களுக்காக வலை விரிக்கும் தந்திரக்காரர்களும் வாழ்ந்துவருகிருர்கள். ஆகவே அலுவலகம் முதல் பொதுமேடை வரையில்

நேர்மையைவிடத் தந்திரம் மிக்கபயன் உள்ளதாக இருக்கிறது.

மூன்ருவதாக, துப்பாக்கி முதலிய கருவிகளைவிட மனச்சான்று வலிமை உடையதாக விளங்க வேண்டும் என்பதைக் கருதுவோம். காந்தியடிகள் அத்தகைய பெருவாழ்வு வாழ்ந்துகாட்டினுர். அவருடைய பயிற்சிக் கூடத்திலிருந்து வெளிவந்த பெருவீரர் வினேபாவிடமும் அத்தகைய மனச்சான்றின் வலிமையை நன்கு காண்கிருேம். கூட்டத்தோடு கூட்டமாய்ச் சென்று போர்க்களத்தில் செத்து மடியும் சிப்பாய்களை வீரர்கள் என்று அறிஞர் மதிப்பதில்லை. சில நொடிப் பொழுது நிற்கும் ஆத்திர உணர்ச்சியால் எண்ணிப் பாராமல் செத்து மடியும் சிலரையும் அவர்கள் வீரர் என்று மதிப்பதில்லை. வாழ்வுக்கு என்று உயர்ந்த கொள்கைகளை வகுத்துக்கொண்டு சாவைப் பற்றிச் சிறிதும் கவலைப் படாமல் எப்போதும் தம்மை இழக்கத் துணியும் பெருந் தொண்டர்களையே வீரர் என்று போற்றுகிருர்கள். நீதியின் செல்வாக்கும் நேர்மையின் மதிப்பும் மிக மிகக் குன்றியிருப்பது போல் இந்த உண்மை வீரமும் மிகக் குறைந்திருக்கக் காண்கிருேம். எல்லோரும் நாவுக்கரசரைப் போல் காந்தியடிகளைப் போல் செயற்கரிய செயல் புரிய முடியாது. அந்தப் பெருமக்களின் மனப்பான்மையை உடையவர்களாகவும் அவர்களின் நெறியைப் போற்றுபவர்களாகவும் பெரும்பாலோர் இருத்தல் வேண்டும். செயல் புரியும் வாய்ப்புச் சிலர்க்குத்தான் கிடைக்கும். மனப்பான்மை பலரும் பெறலாம். மனப்பான்மை பலரிடமும் அமைந்துவிட்டால் துப்பாக்கி முதலிய கருவிகளுக்கு அஞ்சும் அச்சம் குறையும். அவற்றைப் பயன்படுத்தி, தடியாட்சி புரியும் சர்வாதிகாரிகள் தோன்றவும் முடியாது.

இவற்றை எண்ணிப் பார்த்தால் உள்ளத்தில் சோர்வு தோன்றுது. ஒரு சில நாட்களில் சமுதாயத்தைத் திருத்தி அமைத்துவிட வேண்டும் என்ற வேகம் உடையவர்களுக்கே

உள்ளத்தில் இப்படிச் சோர்வு ஏற்படுகிறது. நீதியின் பெருமை நேர்மையின் மதிப்பு மனச்சான்றின் வலிமை ஆகிய மூன்றும் சமுதாயத்தில் விளங்குமாறு நம்மால் இயன்ற தொண்டு செய்ய வேண்டும் என்ற அமைதியான ஆசை கொண்டிருந்தால் அந்தச் சோர்வு ஏற்படாது. சமுதாயம் என்பது தனி மனிதர்களால் ஆனது. அவர்களில் எத்தனை பேருடைய மனப்பான்மையை நம்மால் திருத்த முடியுமோ அவ்வளவும் செய்வோம். இதுவே அடிப்படைத் தொண்டு என்று நம்புவோம்.

இந்தத் தொண்டர் கூட்டம் பெருகினால்தான் உண்மையான உரிமைவாழ்வு விளங்குவதைக் காண முடியும். படங்கள் திறப்பதும் முழக்கங்கள் செய்வதும் கொடி எடுப்பதும் வேண்டா என்று நான் கூறவில்லை. ஆனால் அவை எளியன. புறத்தோற்றத்திற்கு ஆனவை. சமுதாயத்திற்கு அழகு செய்பவை. அவற்றை மட்டும் பார்த்துவிட்டுச் சமுதாயத்தின் இழுப்புமூச்சையும் புற்றுநோயையும் மறந்துவிடலாகாது. நோயைத் தீர்க்க முயல வேண்டும். அதுவே அருஞ்செயல்.

7. எனக்கு நல்லவர்

முழுதும் நல்லவர் முழுதும் கெட்டவர் ஆகிய இரு வகையாரும் உலகத்தில் இல்லாதவர். முழுதும் நல்லவர் இருந்தாலும் இருக்கலாம். முழுதும் கெட்டவர் உலகத்தில் இல்லை. இரக்கம் அற்ற கொலையாளியும் இரண்டொருவரிடத்தில் உள்ளம் கவர்ந்த அன்புடையவனுகப் பழகுகின்ருன். திருடனும் தன் மனைவி மக்களிடத்தில் கனிந்த அன்போடு வாழ்கின்ருன். கொடிய வஞ்சகனும் நெருங்கிப் பழகும் ஒரு சிலரிடத்தில் மிக நல்லவனுகப் பழகுகின்ருன். நெறியற்ற விபசாரியும் ஒரு சிலரிடத்தில் புலனடக்கத்தோடு இருக்கலாம். ஆனல் அந்தச் சிலரிடத்தில் நல்லவராக இருக்கும் காரணத்தால் மட்டும் அவர்களை அறவோர் பட்டியலில் சேர்த்துவிட முடியாது.

கயவருக்கும் ஒவ்வொரு வேளையில் உயர்ந்த எண்ணங்கள் தோன்றுவது உண்டு. எத்தகைய கொடியவருக்கும் எப்போதேனும் ஒரு சமயம் மனம் மிக உயர்ந்து நிற்கும். பற்றுள்ளம் மிகுந்த உலோபிக்கும் என்றேனும் ஒரு நாள் சில நொடிப் பொழுது வண்மைநெஞ்சம் வந்து போகும். அந்தச் சில வேளைகளில் அவர்களுடைய நெஞ்சம் உயர்ந்து நிற்பதைக் கொண்டு, அவர்களை அறவோர் என்று கருதுதல் பொருந்தாது. அது போலவே கெட்டவர்கள் யாரோ

ஒரு சிலரிடத்தில் நல்ல பண்போடு நடப்பதைப் பார்த்து அவர்களை நல்லவர் என்று கொள்ளல் ஆகாது.

நல்லவர் கெட்டவர் என்று ஏன் பிரிக்க வேண்டும் என்று கேட்கலாம். எல்லோருக்கும் ஒத்த வாக்குரிமை உள்ள மக்களாட்சியில், கெட்டவர்க்கும் வாக்குரிமை இருக்கும் போது, அவ்வாறு பிரிப்பது பொருந்துமா என்று கேட்கலாம். சாதி நிறம் முதலிய வேறுபாடுகளைப் புறக்கணிப்பது போல், பண்பு பற்றிய இந்த வேறுபாட்டைப் புறக்கணிக்க முடியாது. சாதிவேறுபாடு பொய் ; நிற வேறுபாடு தேவை இல்லாதது ; சமய வேறுபாடு தனி வாழ்க்கையைப் பற்றியது ; கட்சி வேறுபாடு ஒரு காரணத்திற்காகச் செயற்கையாக ஏற்படுத்திக்கொண்டது. ஆகையால் அவற்றைப் புறக்கணிப்பது எளிது. ஆனால் இந்தப் பண்புவேறுபாடு அவ்வாறு புறக்கணிக்க முடியாதது. கெட்டவர்களின் தீய பண்புகள் தனிப்பட்டவர்களின் வாழ்க்கைக்கும் தீங்கு செய்யும் ; சமுதாய வளர்ச்சிக்கும் இடையூறாகும் ; வளர்ந்து, வருங்காலச் சமுதாயமாக அமைய வேண்டிய இளைஞர்களுக்கும் தீங்கு ஆகும். இன்னொரு வகையாகச் சொன்னால் மக்களாட்சிக்கு இன்றியமையாத உரிமை வாழ்க்கைக்கே நஞ்சு போன்றனவாகும். ஏன் ? மக்களாட்சி வாக்குரிமை என்பவை எல்லாம், சமுதாயம் அமைதியாகவும் இன்பமாகவும் அமைவதற்கே ஏற்படுத்தப்பட்டவை. கொலை களவு பொய் முதலிய குற்றங்கள் அந்தச் சமுதாய அமைதிக்கும் இன்பத்திற்கும் இடையூறு ஆனவை. ஆகவே கொலை களவு பொய் முதலியவற்றைக் கையாளும் கொடியவர்கள், ஒத்த வாக்குரிமை பெற்றிருந்த போதிலும் நல்லவர்களால் ஒதுக்கப்பட வேண்டியவர்கள். முடியுமானால் திருத்தப்பட வேண்டியவர்கள் ; முடியாவிட்டால் சட்டத்தால் தண்டிக்கப்பட வேண்டியவர்கள். எவ்வாறு ஆயினும் பலரும் அந்தக் கொடியவர்களைப் பற்றி விழிப்பாக இருந்து அவர்களின் தீமைக்கு இரை

ஆகாதவாறு தம்மைத் தாம் காத்துக் கொள்ள வேண்டும்.

ஆகையால் நல்லவர் கெட்டவர் என்று பிரித்து அறிவது தேவையாக உள்ளது. தனி மனிதர் தமக்குத் தீமை இல்லாமல் தற்காப்புத் தேடிக்கொள்வதற்கும் அது தேவை. சமுதாயத்தை நல்லபடி அமைப்பதற்கும் அது தேவை. பயிர் நன்றாக வாழ வேண்டுமானால் களை பறிப்பது எவ்வளவு முக்கியமோ அவ்வளவு முக்கியமானது இது. பழங்காலத்துச் சமுதாயத்தை ஆராய்ந்து அரசியல் முறைகளை எழுதிய திருவள்ளுவரும் இதை வற்புறுத்தியுள்ளார். கொடியவர்களைக் கொன்று ஒழிப்பது பயிர் செழித்து வளர்வதற்காகக் களையைப் பறிப்பது போன்றது என்கின்றார்.

> கொலையிற் கொடியாரை வேந்துஒறுத்தல் பைங்கூழ்
> களைகட் டதனொடு நேர்.

கொடியவர்களைக் கொன்று ஒழித்துவிடுவது பழங் காலத்துக்குப் பொருந்தும். இந்தக் காலத்தில் கொலைத் தண்டனை அரிதில் கொடுக்கப் படுவதாகும். பிற நாடுகளில் கொலைத் தண்டனை ஒழிக்கப்பட்டும் வருகிறது. தவிர ஆட்சிப் பொறுப்பில் உள்ளவர்கள் சட்டப்படி அகப்படும் குற்றவாளிகளை நீதிமன்றத்திற்கு அனுப்பலாம். வழக்கறிஞர்களின் வல்லமைகளுக்குத் தப்பிய குற்றவாளிகளை மட்டுமே நீதிமன்றம் தண்டிக்கலாம். இந்நிலையில் தனிப்பட்டவர்கள் தம்மைத் தாம் காத்துக்கொள்ள வேண்டுமானால்,கொடியவர்களைக் கொன்றொழிக்க முடியாது. கொல்லாமல் ஒதுக்கவே முடியும்.

இன்று இருக்கும் சட்டங்களோ மனச்சான்றை மயக்கக் கூடியவைகளாக உள்ளன. நல்லவர்களுக்குத் துணை புரிவது போல் கெட்டவர்களுக்கும் துணை புரிகின்றன. வழக்கறிஞர்களும் இரு சாரார்க்காகவும் நீதிமன்றத்தில் மன்றாட முன் வருகின்றார்கள். ஆகவே அரசாங்கத்தின் பொறுப்பை விடக் குடிமக்களின் பொறுப்புத்தான்மிகுதியாக உள்ளது.

சட்டப்படி கொடியவர்கள் சிலரைக் குற்றவாளியாக்க முடியவில்லை. ஆனாலும் மக்கள் அவர்களைக் கொடியவர்கள் என்று உணர்ந்து ஒதுக்கி வாழ வேண்டியுள்ளது.

உடம்பைக் கொல்லும் கொலை, சட்டத்திற்கு அகப்பட்டுக் குற்றம் ஆகிறது. இன்று உடம்பைக் கொல்லும் கொலையாளிகளைவிட, நல்லவர்களின் மனத்தைப் புண்படுத்திக் கொல்லும் கொடியவர்கள் — வாழ்வின் நம்பிக்கையைக் கொல்லும் கொலையாளிகள்—மிகுந்திருக்கின்றார்கள். வீட்டில் உள்ளதையும் கையில் உள்ளதையும் திருடிச் செல்லும் வெளிப்படையான திருடர்களின் தொகை மிகக் குறைந்துவருகிறது. ஆனால் உழைப்பால் உரிமை பெற்றவர்களுக்குக் கிடைக்க வேண்டியவற்றை அவர்களுக்குச் சேராமல் தடுத்து உழைக்காமலே தாம் பெற்றுக்கொள்ளும் தந்திரத் திருடர்கள் மிகுந்துவருகின்றார்கள். உண்டு இல்லை என்று மாற்றிப் பொய் கூறும் வெளிப்படையான பொய்யர்களின் தொகை குறைவு. மேடை, பத்திரிகை, விளம்பரம் முதலிய நாகரிகக் கருவிகளைப் பயன்படுத்தும் தந்திரப் பொய்யர்கள் மிகுந்துவருகின்றனர். இத்தகைய கொலை களவு பொய் முதலிய குற்றம் செய்கின்றவர்களைச் சட்டம் ஒன்றும் செய்ய முடிவதில்லை. அதனால்தான் கள்ள வாணிகம், லஞ்சம், பித்தலாட்டம் முதலியவை எல்லோர்க்கும் தெரிந்த நிலையில் எங்கும் பரவி வல்லமையுடன் இருக்கின்றன.

முற்காலத்தில் படிக்காத மக்களே அறியாமையால் களவு முதலான தவறான வழிகளை மேற்கொண்டார்கள். ஆனால் இந்தக் காலத்திலோ இந்தப் புதிய களவு, புதிய பொய் முதலியவற்றைப் படித்த மக்கள் மேற்கொள்கின்றார்கள். அறியாமையால் அல்லாமல், அறியும் திறமையால் கையாள்கின்றார்கள். ஆகையால் சட்டத்தின் வலிமையைவிட மனச்சான்றின் வலிமை மிகுதியாக ஆனால்தான் இந்த

நிலைமையை மாற்றித் திருத்த முடியும் என்று தோன்று கிறது.

கொடியவர்களை ஒதுக்குவது எளியது அன்று. அவர்களின் நடை உடையிலோ பேச்சிலோ வேறுபாடு தோன்றுவதில்லை. எண்ணத்தில்தான் வேறுபாடு உள்ளது. அவர்கள் செய்யும் செயலில் உள்ள வேறுபாட்டை மறைத்துச் செய்வதால் பிறர் கண்டுகொள்ள முடிவதில்லை. அந்தக் காலத்திலேயே திருவள்ளுவர் இதைப் பற்றி வியப்போடு குறிப்பிட்டுள்ளார். கயவர்கள் மக்களைப் போலவே உள்ளனர் என்றும், வேறுபட்ட இரண்டு கூட்டத்தாரிடையே உள்ள இந்த ஒப்புமையைப் போல வேறு எங்கும் இல்லை என்றும் மிகத் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார்:

> மக்களே போல்வர் கயவர் அவரன்ன
> ஒப்பாரி யாம்கண்ட தில்.

மக்களே போன்ற ஒப்புமை கயவர்களுக்கு அமைந்திருப்பதே ஒரு வகையில் ஆபத்தானதுதான். ஆட்டைப் போலவே புலியும் சிறுத்தையும் (வடிவத்தால் ஒத்திருக்குமாறு) படைக்கப்பட்டிருந்தால் அது ஒரு மந்தைக்கு எவ்வளவு தீமையோ, சமுதாயத்திற்கு அவ்வளவு தீமை இது. இது போதாதென்று இந்த நாகரிக உலகம் இன்னொரு தீமையையும் ஏற்படுத்தி உள்ளது.

அது என்ன ?

ஒருவனைக் கெட்டவன் என்று சிலர் ஒதுக்குகின்றார்கள். அவனையே நல்லவன் என்று வேறு சிலர் அணைத்துக்கொள்கின்றார்கள். கெட்டவர்களுக்கும் வாக்குரிமை இருப்பதனால், அது தவிர்க்க முடியாதது. ஆகையால், தேர்தல் காலங்களில் இந்த நிலைமை மேலோங்கி நிற்கின்றது. சிலரால் கயவர் என்று ஒதுக்கப்படுவோரே வேறு சிலரால் மக்கள் என்று அணைக்கப்படுகின்றார்கள். நம் தேர்தல் வரைக்குமாவது பயன்படட்டும் என்று வேண்டுமென்றே கயவர்களைச்

சேர்த்துக்கொள்கின்றார்கள். மனச்சான்று அவர்களைக் கெட்டவர்கள் என்று தள்ளினாலும், கட்சிமாறுபாடு அவர்களை நல்லவர்கள் என்று அணைத்துக்கொள்ளச் செய்கிறது. மனச்சான்றுக்குக் கட்டுப்பட்டு அறத்தைக் காப்பதைவிடத் தேர்தல் நெருக்கடிக்கு ஆட்பட்டுக் கட்சியைக் காப்பது அவர்களுக்கு முக்கியமானது. ஆகையால் கெட்டவர்களுக்கும் நல்ல இடம் கிடைக்கிறது. அவர்களும் சமுதாயத்திற்குத் தேவையானவர்களாக இடம் பெற்றுவிடுகின்றார்கள்.

திருவள்ளுவர் சொன்ன வடிவ ஒப்புமை, கட்சி மாறுபாடு கயவர்க்குத் தரும் உயர்வு இந்த இரண்டோடு நிற்கவில்லை; பரந்த உலகத்தின் வாழ்க்கைவேகம் மற்றொரு மயக்கத்திற்கும் இடம் கொடுக்கிறது. ஓர் ஊரில் கொடியவராக வாழும் ஒருவர் வெளியூரில் சென்று பேசும்போது மிக மிக நல்லவராக நடித்துவிட்டு வரலாம். சுற்றுப்புறத்தார்க்குக் கெட்டவராக உள்ள ஒருவர் அறத்தை எழுதிப்பரப்பித் தொலைவில் உள்ளவர்களுக்கு நல்லவராக விளங்கலாம். ஒழுக்க வகையால் நாத்திகராக உள்ள ஒருவர் நெருங்கிப் பழகாதவர்களுக்கு நல்ல ஆத்திகராகவே காட்சி அளிக்கலாம். போக்குவரத்தும் பரந்த பழக்கமும் பெருகப் பெருக அண்மைப் புகழைவிடச் சேய்மைப் புகழ் வளர்கிறது. மக்கள் அந்தச் சேய்மைப் புகழையே பெரிதும் நம்புகின்றனர். அதனால் வடிவத்தால் மட்டும் அல்லாமல் புகழாலும் கெட்டவர்கள் பலரும் நல்லவர்கள் போல் வாழ்ந்து மயக்க முடியும்.

பெரிய நகரங்களில் மற்றொரு தீமையும் உள்ளது. கொடியவன் ஒருவன், பதவியில் உள்ள ஒரு சிலரிடம் மட்டும் நல்லவன் போல் நடித்து, பலரிடமும் தன் உண்மை வடிவத்தைக் காட்டித் தீமை செய்யலாம். ஓய்வு இல்லாத நகர வாழ்க்கையின் வேகத்தில், ஒருவனுடைய சொல்லையும் செயலையும் முற்றிலும் ஆராய்ந்து பார்க்க யாருக்கும் நேரம்

இல்லை. ஆகவே பதவியில் உள்ளவர்கள் தம்மளவில் ஒருவன் நல்லவனாக நடக்கின்றானா என்று பார்த்து அமைதி அடைகின்றார்கள். பிறரிடம் அவன் எப்படி நடக்கின்றான் என்று ஆராய்வதில்லை. ஆராய்ந்தவர்கள் முன்வந்து சான்றுகள் காட்டி அவனைக் கொடியவன் என்று குறை கூறினாலும் ஒப்புக்கொள்வதில்லை, "அதெல்லாம் எனக்குத் தெரியாது. எனக்கு நல்லவனாக இருக்கின்றான். அதுதான் எனக்குத் தெரியும். மற்றதை என்னிடம் சொல்ல வேண்டா" என்று தள்ளிவிடுகின்றார்கள். செல்வாக்காக உள்ள மற்றவர்களும் இவ்வாறே கவலையற்று நம்புகின்றார்கள். செல்வர்களும் இவ்வாறே ஆராயாமல் நம்புகின்றார்கள். ஆகையால் கெட்டவர்கள் தம்மை நல்லவர்களாகக் காட்டி ஏமாற்றிக்கொண்டு வாழ இடம் இருக்கிறது. பதவியாளர், செல்வாக்கினர், செல்வர் ஆகிய மூன்று வகையாரிடத்திலும் நல்லவர்கள் போல் நடிக்கக் கற்றுக்கொண்டவர்கள், எவ்வளவு கெட்டவர்களாக இருந்தாலும் வாழ்க்கையில் முன்னேற்றம் பெறுகிறார்கள். இந்த மூன்று திறத்தாரும் அவர்களை ஒறுக்காமல் "எனக்கு நல்லவர் எனக்கு நல்லவர்" என்று பாராட்டி அந்தக் கொடியவர்களுக்கு உதவி செய்கின்றார்கள். பொது மக்கள் அவர்களை எவ்வளவு ஒதுக்கினாலும் வெறுத்தாலும் பயன் இல்லை.

பதவியாளர் செல்வாக்கினர் செல்வர் ஆகியோருடைய ஆதரவு அவர்களுக்கு நிலையாகக் கிடைக்கின்றது. கள்ள வாணிகம் செய்வோர் பெரிய பதவியில் உள்ள ஒருவரை அணுகி மிக நல்லவராக நடித்து "எனக்கு நல்லவர்" என்ற நற்சான்று பெற்றுக்கொண்டு சுற்றுப்புறத்தை ஏய்க்க முடிகிறது. வஞ்சகர், செல்வாக்கான ஒருவரைப் போற்றி அதே முறையில் நற்சான்று பெற்றுச் சுற்றுப் புறத்திற்குத் தீமை செய்து நன்றாக வாழ முடிகிறது. லஞ்சம் வாங்குவோர் செல்வர் சிலர்க்கு அரிய உதவிகளைச்

செய்து அதே முறையில் அந்த நற்சான்று பெற்றுச் சமுதாயத்தை ஏய்த்து அமைதியாக வாழ முடிகின்றது.

மக்களாட்சியில் சமுதாயத்தைக் காக்கும் வகையில் சட்டத்தைவிட மனச்சான்றுக்கு வலிமை மிகுதியாக வேண்டும் என்பதை மேலே கண்டோம். இல்லையானல் மக்களாட்சியில் ஊழல்களே பெருகும். ஆகையால் மக்களாட்சியில் நம்பிக்கை கொண்டு சமுதாயத்திற்குத் தொண்டு செய்ய விரும்பும் தலைவர்கள், "எனக்கு நல்லவர்" என்று எண்ணுவதையும் பேசுவதையும் வெறுக்க வேண்டும். சமுதாயத்திற்கு நல்லவரா என்று எண்ணிப்பார்க்க வேண்டும். திருடனுடைய மனைவி அந்தத் திருடனைப் பற்றி "எனக்கு நல்லவர்" என்று எண்ணி மகிழலாம். ஆனல் சமுதாயத்திற்குத் தொண்டு செய்ய விரும்புகின்றவர்கள் — பொறுப்பான கடமைகளை மேற்கொண்டவர்கள் — அவ்வாறு எண்ணுதல் கூடாது.

"எனக்கு நல்லவனக இருந்தாலும் பிறர்க்குத் தீங்கு செய்வதால் கெட்டவனே" என்று தெளிவு பெற வேண்டும். இந்தத் தெளிவு பெற்றல்தான் களைபோன்ற சிலரைக் கெட்டவர்கள் என்று ஒதுக்கும் அஞ்சாமை பிறக்கும். அவர்கள் நல்லவர்களாகநடித்தாலும் அந்தநடிப்புக்குஏமாறத வன்மை பிறக்கும். உலகம் ஏமாறுகிறவரையில் கெட்டவர்கள் ஏமாற்றிக்கொண்டே திரிவார்கள். இனி உலகத்தை ஏமாற்ற முடியாது என்று தெரிந்தால்தான் கெட்டவர்கள் திருந்த முற்படுவார்கள். நடிப்புக் கலையில் நம்பிக்கையை விட்டு அற நெறியில் நம்பிக்கை கொள்வார்கள். ஆகவே தற்காப்புக்கு மட்டும் அல்லாமல், சமுதாய நன்மைக்கு மட்டும் அல்லாமல், கெட்டவர்களைத் திருத்துவதற்காகவும் இந்தப் புதிய தெளிவு பெற வேண்டும். "எனக்கு நல்லவர், நல்லவர் அல்லர்; சமுதாயத்திற்கு நல்லவரே எனக்கும் நல்லவர்" என்ற மனத் தெளிவு கட்டாயம் ஏற்பட வேண்டும்.

3. போக்கிரிப் பண்ணைகள்

குழந்தைகள் தவறு செய்வது இயற்கை. அந்தத் தவறுகளுக்காகப் பெற்றோர்கள் தண்டனை விதிப்பது எளிது. முதலில் ஏதேனும் தவறு நேர்ந்தால் அது குழந்தை செய்த தவறா, வேறு யாரோ செய்த தவறா என்று எண்ணிப் பார்க்க வேண்டும். எண்ணிப் பார்க்காமலே குழந்தை செய்யாத தவற்றிற்காக அதை அடித்துத் துன்புறுத்தும் பெற்றோர்கள் உண்டு. திருட்டுக் குற்றம் செய்யாதவனைச் சிறைக்கு அனுப்பும் நீதிபதியைவிட இந்தப் பெற்றோர்கள் பொல்லாதவர்கள்.

குழந்தையே செய்த தவறாக இருந்தாலும், அது வேண்டும் என்றே செய்த தவறா, கைதவறி நேர்ந்த தவறா என்று எண்ணிப் பார்க்க வேண்டும். கை தவறி நேர்ந்த தவறாக இருந்தால், குழந்தைக்கு அறிவுரை கூறித் திருத்த வேண்டுமே அல்லாமல் அடித்து ஒறுத்தல் கூடாது. குவளையில் உள்ள பாலையோ தண்ணீரையோ குழந்தை கால் பட்டுக் கவிழ்த்துவிட்டது என்றால் உடனே விலங்குத் தன்மையோடு குழந்தையின் கன்னத்தில் ஓங்கி அறையும கைகள் உண்டு.

இப்படி அடித்து ஒறுப்பதால் குழந்தை அடங்கிப் பணிந்துவிட்டதாக எண்ணி மகிழக் கூடாது. அதன் தூய

நெஞ்சில் பொல்லாத விதைகளை விதைப்பதாக எண்ணி வருந்த வேண்டும். அப்படி அஞ்சி அடங்கும் குழந்தை எதிர் காலத்தில் பொல்லாத அடங்காப்பிடாரியாய்த் திரிய நேரும். ஊரார்க்கும் உறவினருக்கும் இடையில் ஒரு முரடனாக வாழ நேரும். ஆகவே இன்று பொறுமை இல்லாமல் நடக்கும் பெற்றோர்களின் வீட்டில் எதிர்காலப் போக்கிரிகள் வளர்கிறார்கள் என்று எண்ண வேண்டும்.

பெற்றோர்களின் முரட்டுக் கை வீச்சுப்போலவே அவர்களின் ஒளிப்புமறைப்புக்களும் குழந்தைகளின் உள்ளத்தில் கள்ளங் கரவுகளை விதைத்து வைக்கும். குழந்தைகளின் பிஞ்சுமனத்தில் வன்சொல் விதைக்கும் பெற்றோர்களும், வஞ்சகம் விதைக்கும் பெற்றோர்களும் எதிர்கால உலகத்திற்கு இடர் விளைப்பவர்கள் என்றே கருதப்பட வேண்டும்.

வீடு போலவே கல்விக்கூடமும் போக்கிரிப் பண்ணையாக ஆவது உண்டு. சிறுவர்களின் உள்ளத்தில் அன்பை வளர்த்து அறிவொளி பரப்ப வந்த ஆசிரியர்கள் எல்லா மாணவரிடத்திலும் நடுநிலையாக இருந்து அன்பு செலுத்த வேண்டும். சாதி, மதம், ஊர் முதலிய பற்றுக்களின் காரணமாகச் சில மாணவர்களை விரும்பி நடத்தலும் கூடாது; வேறு சில மாணவர்களை வெறுத்து நடத்தலும் கூடாது. தவறான விருப்பும் வெறுப்பும் ஆசிரியர்களிடத்தில் இருக்குமானல் மாணவர்களின் நெஞ்சில் அந்தத் தவறான பண்புகள் ஊறிவிடும். நல்லது பதிவதற்கு நாள் ஆகும். தீயது உடனே பதிந்துவிடும்.

ஆகையால் ஆசிரியர்கள் ஒழுக்க நெறிகளைப் பற்றியும், சமய உண்மைகளைப் பற்றியும் எவ்வளவு விரிவாகப் பேசினாலும் பயன் குறைவே. நடக்கும் முறையில் நல்ல பண்புகள் விளங்குமாறு வாழ்ந்து காட்டினால் அப்படிப்பட்ட ஆசிரியர்களைப் பார்த்து மாணவர்கள் நன்னெறியைக் கற்றுக் கொள்ள முடியும். நூல்களைப் படித்துக் கற்றுக்

கொள்வதைவிட ஆசிரியரைப் பார்த்துக் கற்றுக்கொள்ள வாய்ப்பு வேண்டும். அந்த வாய்ப்பு இல்லையானால் மாண வர்கள் கெடுவது எளிது.

மாணவர் சிலர் மிக மிகப் பணிந்து நடக்க முடியும்; சிலர் அவ்வளவு பணிவோடு நடக்க முடியாமல் உரிமையோடு நடப்பார்கள். ஆசிரியர்கள் அவர்களின் மனப்பான்மையை உணர்ந்துகொள்ள வேண்டும். மிகப் பணிந்து நடக்கும் மாணவர்களுக்கு உதவி செய்துவிட்டு, உரிமை விரும்பும் மாணவர்க்கு உதவி செய்யாமல் விடுவது கூடாது. எதிர் காலத்தில் உரிமை யாட்சி நிலவ வேண்டுமானால், இன்று இளைஞர்கள் — மாணவர்கள் — உரிமையோடு நடப்பதைக் கண்டு மகிழ வேண்டும். இல்லையானால் அந்த நல்ல மாண வரின் மனத்தில் ஏமாற்றம் ஏற்பட்டு அவர்களில் சிலர் தீயவர்கள் ஆவார்கள். இன்று மிகப் பணிந்து நடக்கும் மாணவர்களில் சிலர் எதிர்காலத்தில் எல்லோரையும் பணிய வைத்து அடக்கும் கொடியவர்கள் ஆவார்கள்.

ஆகவே கல்விக்கூடம் சில போக்கிரிகளை வளர்க்கும் பண்ணையாக அமைவதைத் தடுக்க வேண்டும்.

தொழில் துறையிலும் ஆள்வோரிடம் நடுநிலைமை வேண்டும். சிலருக்கு மிகுதியான சலுகைகளும் உரிமையல் லாத உயர்வுகளும் கொடுத்து ஆதரவு தருதலும் கூடாது. அவ்வாறு சிலர்க்குச் சலுகையும் உதவியும் தந்து வேறு சிலர்க்குத் தராமல் விடுவதால் அவர்களின் நெஞ்சில் கொடுமையின் வித்துக்கள் விதைக்கப்படுகின்றன. அந்த வித்துக்கள் முளைத்துத் தோன்றி வளரும்போதுதான் ஆங்காங்கே தொழில்துறைகளில் போக்கிரிகள் காணப்படு கிறார்கள்.

எல்லோரிடத்திலும் அன்புசெலுத்திப் படைப்பு முழு வதையுமே ஒரு குடும்பமாகக் காண வேண்டிய நெறியை வகுப்பது சமயம். ஆதலால் கடவுளின் அருள் தமக்கு

மிகுதியாகக் கிடைக்கும் என்றும், தாம் மட்டுமே கடவுளை நெருங்கியவர்கள் என்றும் செருக்குடன் எண்ணிக்கொண்டு மற்றவர்களை ஒதுக்குவதும் கூடாது; துரத்துவதும் கூடாது. ஒழுக்கத்தின் சிறப்புப் பற்றித் தம்மைத் தாமே மிகுதியாக மதித்துக்கொண்டு குறை உடையவர்களை விலக்குவதும் கூடாது. அவ்வாறு செய்தால் துரத்தப் பட்டோரிடையிலும் ஒதுக்கப்பட்டோரிடையிலும் விலக்கப் பட்டோரிடையிலும் முரடர்கள் தோன்றுவார்கள். அவர்கள் அந்தச் சமயத்திற்குள் இருந்தாலும் பொல்லாதவர்களாக இருப்பார்கள். அதை விட்டு வெளியேறி வேறு சமயம் வகுத்துக்கொண்டாலும் பொல்லாதவர்களாக இருப்பார் கள். ஒதுக்குவதும் துரத்துவதும் விலக்குவதும் இன்று அமைதிக்கு வழிகளாக இருக்கலாம். ஆனால் சமயத்தையும் போக்கிரிப் பண்ணையாக மாற்றுகின்றவை அவைதான் என்று உணர வேண்டும்.

ஒரு நாட்டின் ஆட்சியில் கூடியவரையில் எல்லோர்க் கும் ஒத்த உரிமை வேண்டும். செல்வாக்குப் பெற்ற ஒரு குழுவோ கட்சியோ செல்வாக்குக் குறைந்த குழுவையும் கட்சியையும் எந்தக் காரணத்தாலும் ஏய்க்கக் கூடாது. வல்லமை மிகுந்த ஒரு மாநிலத்தார் தம் கொள்கையையோ மொழியையோ மற்ற மாநிலத்தார்மீது திணிக்கக் கூடாது. படை பணம் முதலியவற்றின் வலிமையைக் கொண்டு மத்திய அரசு தன் உறுப்புக்களான பகுதிகளை மெலிவித் தல் கூடாது. ஏய்ப்பதும் திணிப்பதும் மெலிவிப்பதும் இன்றைய அமைதியான ஆட்சிக்குத் துணையாக இருக்க லாம். எதிர்காலத்து எதிர்ப்புக்கும் குழப்பத்திற்கும் புரட்சிக் கும் அவைகளே வித்தாக அமைகின்றன. ஒரு நாட்டின் அரசியலில் போக்கிரிப் பண்ணையை வளர்க்கும் வகை இது.

வீடு முதல் நாடு வரையில் அமைதியான நல்வாழ்வை விரும்புகின்றவர்கள் இதை உணர்ந்து நடப்பார்களானல்

இதுவே பெரிய சிறந்த தொண்டாகும்.

போக்கிரிகள் சிலரை விடப் போக்கிரிப்பண்ணைகளே பொல்லாதவை. இன்னார் போக்கிரிகள் என்று சிலரைக் கண்டு வெறுத்துவந்த காலம் மலையேறிவிட்டது. அவர்களை வெறுத்தால் அவர்கள் ஒரு குழுவாகத் திரண்டு வலிமை பெற்றுவிடுகிறார்கள். ஆகவே போக்கிரிகள் தோன்றுவதற்குக் காரணங்கள் என்ன என்று அறிந்து அவற்றை வெறுக்க வேண்டும். வீடு முதல் நாடு வரையில் எங்கும் போக்கிரிப் பண்ணை அமையாமல் காத்து வருதலைத் தலையாய கடமையாகக் கொள்ள வேண்டும்.

9. சமுதாய நோய்கள்

"அந்த மதத்தார்க்குள் நல்ல ஒற்றுமை இருக்கிறது. அவர்கள் ஒருவர்க்கு ஒருவர் நன்ருக உதவிசெய்து முன்னேறுகிருர்கள். அவர்கள் நம்மவர்களுக்கு உதவி செய்வதில்லே. இனிமேல் நாம் நமக்குள் கட்டுப்பாடாக இருந்து நம்மவர்களுக்கே உதவி செய்து முன்னேற வேண்டும்."

இது ஒரு மதத்தைச் சார்ந்தவர்கள் அந்த மதத்தை ஒட்டிப் பேசும் பேச்சு.

"அந்தச் சாதியார் எப்படி வாழ்கிருர்கள் பார்த்தீர்களா? அவர்களேப் பார்த்தும் நம்மவர்களுக்கு இன்னும் அறிவு வரவில்லே. தங்கள் சாதி என்று தெரிந்தால் போதும். திறமை இல்லாதவனுக்கும் திறமை இருக்கிறது என்று பெரிய வேலே வாங்கித்தரப் பாடுபடுகிருர்கள். ஒற்றுமையாய் இருந்து முன்னேறுகிருர்கள். இனியேனும் நம்மவர்களுக்கு சாதி உணர்ச்சி வந்தால்தான் வாழ முடியும்." இது சாதியை ஒட்டிப் பேசப்படும் பேச்சு.

"அந்த மாவட்டத்தார் வாழத் தெரிந்தவர்கள். அவர்களுக்குள் எப்படிப்பட்ட ஒற்றுமை இருக்கிறது. ஒருவரிடம் குற்றம்குறை இருந்தாலும் மறைத்துக் காப்பாற்றப் பாடுபடுகிருர்கள். ஒருவர்மேல் குற்றச்சாட்டு ஏற்பட்டுத் தொழிலுக்கு இடையூறு வந்தாலும் அவரைக் காப்பாற்ற

எல்லாரும் ஒரே முயற்சியாக முன்நிற்கிருர்கள். வேலை வாங்கித் தருவது, தேர்வில் எண்கள் வாங்கித் தருவது முதலான எல்லாவற்றிலும் கட்டுப்பாடாக உதவி செய்வதால்தான் முன்னேற முடிகிறது. நாமும் அவர்களைப் போல் ஆனுல்தான் முன்னேற முடியும்."

இது மாவட்டங்களையும் மற்ற இடங்களையும் ஒட்டி மக்கள் போட்டியுணர்ச்சியோடு பேசி, நடுநிலைமையையும் நேர்மையையும் துறக்க முயலும் நிலைமை.

"அந்த மொழி பேசும் மக்களுக்கு இருக்கும் இன உணர்ச்சி நம்மவர்களுக்கு இல்லவே இல்லை. தங்கள் மொழி பேசும் ஆட்கள் என்று தெரிந்தால் போதும். படிப்புக்கோ வியாபாரத்துக்கோ எல்லா உதவியும் செய்கிருர்கள். நம்மவர்கள் என்ருல், அவர்கள் வாயாரப் பேசி அனுப்பிவிடுகிருர்கள். மனத்திற்குள் வைத்துக்கொண்டே கழுத்தறுக்கிருர்கள். அந்த டாக்டர்கள் நம்மவர்களான நோயாளிகளுக்கும் சரியாக உதவி செய்வதில்லை. தங்கள் மொழியார் என்ருல், மேல் விழுந்து கவனித்து உதவி செய்கிருர்கள். அவர்களின் நாட்டில் நம்மவர்களுக்கு சிறுபதவியும் கிடைப்பதில்லை. ஆனுல் நம் நாட்டில் பெரிய பதவிகளை எல்லாம் அவர்களுக்குத் தருகிருேம். பிறகு நாம் வாழ வழி இல்லாமல், இஞ்சி தின்ற குரங்குகளாய்த் திண்டாடுகிருேம். இனி வாழ முடியாது. அழியத்தான் போகிருேம்."

இது மொழியுணர்ச்சியால் ஒற்றுமை பெற்று முன்னேறும் கூட்டத்தாரைப் பார்த்து, அந்த ஒற்றுமை இல்லாமல் நடுநிலைமையை மட்டும் போற்றி ஏமாந்த மக்கள் சோர்ந்து பேசும் பேச்சு.

இவைகள் எல்லாம் சமுதாய நோய்கள்; இந்த நூற்ருண்டில் வேகமாகப் பரவி வரும் தொத்துநோய்கள்.

சில நாடுகளில் மதம் சாதி என்ற வேறுபாடுகள் இல்லாததால், அவை பற்றிய சமுதாய நோய்கள் இல்லை.

சில நாடுகளில் மொழிவேறுபாடும் இல்லாமையால், அந்தத் தொத்துநோயும் இல்லை. ஆனால் இந்தியாவில் எல்லாச் சமுதாய நோய்களும் உண்டு; சிறப்பாக, தமிழ் நாட்டில் எல்லா மதங்களும் சாதிகளும் மொழிகளும் இருப்பதால், எல்லாத் தொல்லைகளும் உண்டு.

எந்த நாட்டில் மனித இனம் மனிதர் என்ற ஒரே உணர்ச்சியோடு ஒன்றுபட முடியுமோ, அந்த நாட்டில் சமுதாய முன்னேற்றம் விரைவில் ஏற்பட முடியும். காந்தியடிகள் முதலான மிகப் பெருஞ் சான்றோர்களின் தலைமையில் அவர்களின் அருளுரையின் பெருமையால், சிற்சில காலம் இந்த நாட்டில் ஒற்றுமை காணப்பட்டதே அல்லாமல், பொதுவாக நோக்கினால், இந்த நாடு ஒற்றுமைபெற வழியற்றது என்று கூறத்தோன்றுகிறது. அவ்வளவு சமுதாயநோய்கள் இங்கே உள்ளன. அதனால்தான், லஞ்சம் முதலான ஊழல்களை ஒழிக்க முடியவில்லை ; மக்கள் எண்ணிக்கை மிகுதியாக இருந்தும், உழைப்புச் சக்தி மிகுதியாகவில்லை ; உழைப்புத் திறன் பெருகவில்லை. குறை உணர்ந்து திருந்தி ஒன்றுபட்டு முன்னேற முடியவில்லை. அதற்கு மாறாக, "அவர்கள் லஞ்சம் வாங்கவில்லையா?" "இவர்கள் உழைக்காமலே ஊதியம் பெறவில்லையா?" "அவர்கள் கள்ள வாணிகம் செய்து பணம் சேர்க்கவில்லையா?" "இவர்களின் வீட்டுப் பிள்ளைகள் படிக்காமலே பட்டம் பெறவில்லையா?" "அந்தக் கூட்டத்தாரில் இளைஞர்கள் தகுதி குறைவாக இருந்தும் சிபாரிசு காரணமாகப் பெரிய வேலைகள் பெறவில்லையா?" "அவர்கள் கடமையுணர்ச்சி இல்லாமல் அகப்பட்ட வரையில் சுருட்ட வில்லையா?" "இவர்கள் இன்ன இன்ன லைசென்சுகள் பெற்றுப் பணக்காரர் ஆகவில்லையா?" "நாம் செய்தால் என்ன?" என்று தவறான முறையில் போட்டியிட்டு முன்னேறி, திறமையையும் உண்மையையும் பொதுநலத்தையும் தாழ்படுத்துவதற்கு, சாதி மதம் முதலான சமுதாய

வேறுபாடுகள் காரணமாக உள்ளன. நடுநிலைமையோடு உழைத்து வந்த சில நல்ல கூட்டங்களிலும் இன்று இந்த நோய்கள் தொத்திக்கொண்டுள்ளன.

கல்வியாலும் அறவுரைகளாலும் இந்த நோய்களைத் தீர்த்துச் சமுதாயத்தைத் திருத்திவிட முடியும் என்று சிலர் கனவு காண்கிறார்கள். கல்லாதவர்களை விடக் கற்றவர்களிடமே இந்த நோய்கள் மிகுதியாகப் பரவியுள்ளன என்பதை அவர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். அறவுரைகள், நூற்றுக்கு இருவர் மூவர் விழுக்காடுதான் திருத்த முடியும் என்பதை, புத்தர் ஏசு முதலானவர்களின் அறவுரைகளால் உணரலாம்.

போட்டி யுணர்ச்சியை வளர்க்காத நல்ல கல்வி பரவினால், சாதி மதம் பற்றிய சமுதாய நோய்களைத் தீர்க்க முடியும். ஆனால், இன்றைய கல்வி, உயர்ந்த அறிவுவளர்ச்சியை நோக்கமாகக் கொள்ளாமல், வருவாய் தரும் தொழில்களைப் பெறுவதே நோக்கமாகக் கொண்டுள்ளது. கல்வி, வாழ்க்கைப் போட்டிக்கு ஒரு கருவியாகப் பயன்படுகிறது. கற்றவர்கள் நேரே தொழில் பெற்று வாழ முடியாதபோது, சாதியின் பெயரையும் மதத்தின் பெயரையும் பயன்படுத்தி ஆள் திரட்டிச் செல்வாக்குப் பெற்றுத் தொழில்களுக்குப் போட்டியிடுகிறார்கள். அரசியல்கட்சிகளில் தேர்தல்களில் பதவி தேடும் வேட்டைகளுக்கும் இந்தச் சாதி மதங்களைப் பயன்படுத்தும் போக்கு இந்த நாட்டின் மூலைமுடுக்குகளிலும் இடம் பெற்றுவிட்டது. ஆகவே, கல்வியால் தொலையும் என்று நாம் நம்பிய சாதிமத வெறி பற்றிய நோய்களையே, கற்றவர்கள் தம் தொழில் பதவி வேட்டைகளுக்குப் பயன்படுத்துவதைக் காண்கிறோம்.

ஆயினும், சாதிமத உணர்ச்சிகள் செயற்கையானவை; விழுமிய கல்வி அவற்றை ஒரு நாள் போக்கிவிட முடியும்.

ஆனால், மொழி நாடு பற்றிய உணர்ச்சிகள் இயற்கை

யானவை. அறிவியல் எவ்வளவு முன்னேறினாலும், மொழியின் பெயராலும் நாட்டின் பெயராலும் மக்கள் கூடி வாழ்வதைத் தடுக்க முடியாது. உலகம் ஓர் ஆட்சியின் கீழ் அமைந்து, நாட்டுப் பற்று என்பது ஒரு குற்றமாக உணரப் படும் அளவிற்கு நாகரிகம் வளர்ந்துவிடும் காலம் வந்தால், அன்று நாட்டுப் பற்று என்பது தணியக் கூடும். ஆனால் அப்போதும் மொழி பற்றிய வேறுபாடு உலகில் இருந்தே வரும். உலகத்துக் கல்விநிலையங்கள் எல்லாவற்றிலும் ஒரே மொழி கற்பிக்கப்படும் காலம் வரையில் மொழிவேறு பாடு இருப்பதை யாரும் தடுத்தல் இயலாது.

ஆகவே, இன்றைய நிலையில், சாதிமதம் பற்றிய சமுதாய நோய்களை வெறுக்கக் கற்று, மொழி நாடு பற்றிய வேறுபாடுகளைப் பொறுக்கக் கற்க வேண்டும்.

ஆனால், இது இந்த நோய்களுக்கு நிலையான மருந்து அன்று; நெருக்கடியைத் தீர்க்கும் தணிவான மருந்தே ஆகும்.

நிலையான மருந்து எது?

தொழில் போட்டியும் பதவிவேட்டையும் இல்லாத நல்ல சமுதாயம் அமைப்பதே இந்த நோய்களுக்கு மருந்து ஆகும்.

தொழிலுக்காகப் போட்டியிடுவது ஏன்? பதவிக்காகப் போட்டியிடுவது ஏன்? எதிர்காலம் பற்றிய கவலை இல்லாத வாறு வாழ்க்கையை வளம்படுத்திக்கொள்வதற்காக, தனக்கும் தன்னைச் சார்ந்தவர்களுக்கும் தேவையான பொருள் தேடிக்கொள்ள. இந்த விடைகளை நன்கு உணர்தல் வேண்டும். எல்லார்க்கும் வாழ்க்கைக்குத் தேவையான பொருள் உண்டு, ஏதேனும் ஒரு தொழில் உண்டு, எதிர் காலக் கவலைக்கு இடம் இல்லை என்று நம்பிக்கை பெறக் கூடிய நல்ல சமுதாயம்—பொருளாதார வேறுபாடு இல்லாத சமுதாயம்—'வண்மை இல்லை ஓர் வறுமை இன்மையால்' என்ற சமுதாயம்—அமைப்பதே நிலையான மருந்து ஆகும்.

அவ்வாறு அமைப்பதைப் பற்றிக் கவலைப்படாமல், "சாதி சமயம் மொழி முதலான குறுகிய நோக்கங்களுக்கு இடம் கொடுக்காதீர்கள், இடம் கொடுக்காதீர்கள்" என்று நீண்ட பல அறவுரைகள் மட்டும் வழங்குவது வீண் முயற்சி ஆகும். அது தொத்து நோய் பரவியபிறகு, "நோய் இல்லாமல் வாழுங்கள், நோய் இல்லாமல் வாழுங்கள்" என்று எடுத்துரைப்பது போன்றதே ஆகும்.

10. நல்ல சமுதாயம்

சாதி வேறுபாடு ஒழிய வேண்டும் என்ற குரல் இன்று மிகுதியாகக் கேட்கிறது. இது புதிய குரல் அன்று.

சமயத்துறையில் தொண்டாற்றிய சான்றோர் பலர் சாதி ஒழிய வேண்டும் என்று பாடுபட்டார்கள்; ஒன்றுபட்டுக் கடவுள் வழிபாடு செய்வதற்கும் சமயத்தைப் பரப்புவதற்கும் சாதிவேறுபாடு இடையூறாக இருப்பதை உணர்ந்து அவர்கள் அம் முயற்சியை மேற்கொண்டார்கள்.

சென்ற நூற்றாண்டிலிருந்து சமுதாயச் சீர்திருத்த அறிஞர்கள் சாதிவேறுபாடு ஒழிய வேண்டும் என்று முழங்கி வந்தார்கள். பிற நாட்டிலிருந்து வந்த மக்களிடையே ஒற்றுமையும் முன்னேற்றமும் மகிழ்ச்சியான வாழ்வும் இருப்பதை அவர்கள் கண்டார்கள்; அவர்களைப் போலவே இந்த நாட்டின் மக்களும் ஒற்றுமையாகவும் முன்னேற்றமாகவும் வாழ்வதற்குச் சாதிகள் தடையாக இருப்பதை உணர்ந்தார்கள். அதனால் சாதிவேறுபாடு தொலைய வேண்டும் என்று அச் சீர்திருத்தக்காரர் முயன்றார்கள்.

இப்போது அரசியல் தலைவர்களின் வாயில் இந்த முழக்கம் கேட்கிறோம். சாதிகள் ஒழிய வேண்டும் என்று அவர்களில் பலர் பேசி வருகிறார்கள். காரணம் என்ன? ஒரு நாடு ஓர் இனம் என்ற மனப்பான்மை இருந்தால்தான்,

ஒரு நாட்டின் மக்கள் ஒன்றுபட முடியும்; ஒன்றுபட்டு நாட்டு முன்னேற்றத்துக்காகப் பாடுபட முடியும். இந்த நாட்டில் மக்களின் ஆற்றலுக்குக் குறைவு இல்லை; ஆயினும் உணவுக் குறை முதலிய பலவகைக் குறைகளைப் போக்க முடியாமல் திணறுகிறார்கள். உள்ள ஆற்றல் எல்லாம் தக்க வழியில் திரண்டு பயன்படவில்லை. வீணான பிரிவுகளிலும் பூசல்களிலும் பெரும் பங்கான ஆற்றல் செலவாகிவிடுகிறது. ஆகையால் நாட்டுக்குப் பயன் குறைந்துபோகிறது.

சாதிகள் வீடுகளிலும் தெருக்களிலும் இருந்தன. இப்போதும் ஓரளவு இருக்கின்றன. ஒவ்வொரு சாதியாருக்கும் சமைக்கும் முறை, உண்ணும் முறை, உடுக்கும் முறை, சடங்குகள் செய்யும் முறை முதலியன வெவ்வேறாக இருந்தன. அதனால் சாதிக்குச் சாதி பழக்க வழக்கங்கள் சில வேறுபட்டு இருந்தன. ஆகவே, ஒரே வகையான பழக்க வழக்கங்கள் உடைய சாதியார் எல்லாரும் ஒரே தெருவில் குடியிருப்பது நன்மையாக இருந்தது. சில பழைய தெருக்கள் சாதியின் பெயரால் (செட்டித்தெரு, வேளாளர் தெரு, வாணிகர் தெரு என) அமைந்திருப்பதை இன்றும் பெரும்பாலான ஊர்களில் காணலாம்.

ஜப்பான் சீனா முதலான நாடுகளில் உணவு உண்ணும் முறை ஒருவகை; இங்கிலாந்து, பிரான்சு, ஜெர்மனி முதலான நாடுகளில் உணவு உண்ணும் முறை மற்றொரு வகை. அரேபியா, பாரசிகம் முதலான நாடுகளில் உண்ணும் முறை இன்னொரு வகை, இப்படி நாட்டுக்கு நாடு உண்ணும் முறையில் வேறுபாடு உண்டு. ஆனால் நம் நாட்டில், சாதிக்குச் சாதி உண்ணும் முறையில் வேறுபாடு உண்டு. ஆகையால், பலர் கூடிப் பொதுவாக அமர்ந்து உண்பதிலும் ஒற்றுமை இல்லாத நிலைமை இருந்தது. நகரங்களில் ஏற்பட்ட உணவு விடுதிகள் இந்த நிலைமையை எவ்வளவோ மாற்றிவிட்டன எனலாம். பள்ளி மாணவர்களுக்கும் கல்லூரி மாணவர்களுக்கும்

அமைந்துள்ள உணவுவிடுதிகளும் இந்த வேறுபாடுகளைத் தேய்த்துவந்தன எனலாம். இன்று, பலர் கூடிப் பொதுவாக உண்ணும் விழாக்களிலும் மற்ற நிகழ்ச்சிகளிலும், சாதி வேறுபாடு குறைந்துவிட்டது.

சாதி வேறுபாடு உண்ணும் முறையில் இருந்தது போலவே, உடுக்கும் முறையிலும் இருந்துவந்தது. வெவ்வேறு சாதியார் சேர்ந்து தொழில் செய்யும் அமைப்புக்களும் தொழிற்சாலைகளும் ஏற்பட்டபின், இந்த வேறுபாடும் குறையத் தொடங்கியது. பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் இளமையில் பல சாதியார் சேர்ந்து பயின்று, பொதுவான உடை நாகரிகத்தைக் கற்பதாலும் இந்த வேறுபாடு குறைந்தது. போக்குவரத்துப் பெருகிப் பெருகிப் பலரைப் பார்த்துப் பழகுவதும் இந்த வகையில் உதவியாக அமைந்தது. சினிமா முதலான பொது இடங்களில் பலர் கூடிப் பழகுவதும், உடைவேறுபாட்டைக் குறைப்பதற்குக் காரணம் ஆயிற்று. பொதுவான உடை நாகரிகம் வளரவும் உதவிற்று.

ஆயினும், பழைய சாதிவேறுபாடு இன்னும் சில இடங்களில் போகவில்லை. சுடுகாட்டில் சாதிவேறுபாடு உள்ளது. கோயில் விழாக்களில் சாதி வேறுபாடு உள்ளது. ஆயினும் இவை மக்களின் உள்ளத்தில் பதிந்து நிற்காமல், என்றோ ஒருநாள் தோன்றி மறைந்துவிடுகின்றன. இவைகளும் ஒழியும் காலம் வரும்.

இவ்வாறு சமையல் அறை முதல் கோயில் வரையில் வளர்ந்து வந்த சாதிவேறுபாடு, இந்தக் காலத்து முற்போக்கான வசதிகளாலும் கல்வி முதலியவற்றாலும் படிப்படியாக மறைந்து குறைந்துவரக் காண்கிறோம். இது மகிழத் தக்கது.

இந்நிலையில், சாதி புதிய சில துறைகளைக் கைப்பற்றி வருவதுதான் வருந்தத் தக்கதாக உள்ளது.

சாதி கைப்பற்றி வரும் புதிய துறைகளுள் ஒன்று அரசியல். நம் சாதிக்குள் ஓர் அரசியல் தலைவர் வேண்டும் என்றும், நம் சாதியார் ஒருவர் இந்தப் பதவி பெற வேண்டும் என்றும் எண்ணங்கள் வளர்ந்துவிட்டன. அதனால் தேர்தல் காலத்தில், நம் சாதியார்க்கே ஓட்டுப் போடவேண்டும் என்ற முயற்சியும் ஆர்வமும் உள்ளன. இதற்குக் காரணம், சில பதவிகளில் குறிப்பிட்ட சில சாதியாரே நெடுங் காலமாக விடாமல் ஒட்டிக்கொண் டிருந்ததே ஆகும். அவர்கள் ஒட்டிக்கொண் டிருக்கும் பதவிகளை நாம் ஏன் கைப்பற்றிப் பயன்பெறக் கூடாது என்ற எண்ணம் மற்றவர்களுக்கு ஏற்படுகிறது. இது இயற்கை. தகுதி உள்ளவர்களுக்குப் பதவி மாறி மாறி வர வேண்டும் என்றும், ஒரு சாராரே ஒரு பதவியில் நெடுங்காலம் ஒட்டிக்கொண் டிருக்கக் கூடாது என்றும், ஒருமுறை ஒரு பதவியில் இருந்தவர் மறுமுறை பெருந்தன்மையோடு விட்டுக்கொடுக்க வேண்டும் என்றும், பதவியில் இருப்பவர் தம் சாதியார்க்கு மட்டும் உதவி செய்யும் கெட்ட வழக்கம் இல்லாமல் பரந்த நோக்கம் கொள்ள வேண்டும் என்றும் இத்தகைய நல்ல கொள்கைகள் வளர்ந்தால்தான் தேர்தலில் சாதி இடம் பெறுமல் செய்யலாம்.

சமையல் அறையிலும் திண்ணையிலும் தெருவிலும் கோயிலிலும் சாதி இருந்தபோது, அது நாட்டுக்குத் தீமையாகுமே என்பது உணரப்படவில்லை. நேரே அரசியலில் சாதி புகுந்துள்ள இப்போது அது உணரப்படுகிறது.

ஆனால், அரசியலில் உள்ள சாதிவேறுபாட்டை எப்படி எது மாற்ற முடியும் என்று பலரும் ஏங்குகிறார்கள்.

அறிவியல் வளர்ச்சியும் சமுதாயக் கூட்டுறவும் பெருகப் பெருக, மனிதரிடையே இரத்தத்தால் வேறுபாடு இல்லை என்ற தெளிவு பலர்க்கு வந்துவிட்டது. பிறப்பால் வேறுபாடு இல்லை என்ற திருவள்ளுவரின் அறிவுரை இன்று பெரும்பாலோர் நம்பத்தக்கதாக ஆகிவிட்டது.

கற்றவர்களிடையே இந்தப் பிறப்புச் சாதி பற்றிய நம்பிக்கையே இல்லை எனலாம்.

ஆனாலும், கற்றுத் தெளிந்த அவர்களே, அரசியலில் இந்தச் சாதி வேறுபாட்டைப் புகுத்திப் பதவிகள் பெற முயல்கிறார்கள் ; கல்லாத மக்களுக்குத் தீவிரமாகச் சொல்லி நம்பச் செய்கிறார்கள்.

இவ்வாறு தாம் நம்பாத ஒன்றைக் கொண்டுவந்து அரசியலில் புகுத்தக் காரணம் என்ன ? பிறப்புச் சாதியைப் பற்றிய நம்பிக்கை மீண்டும் தோன்றிவிட்டதா ? இல்லை. எப்படியோ மக்களிடையே சிலரைப் பிரித்து ஒதுக்கியும் சிலரைக் கூட்டிச் சேர்த்தும் பதவி பெறுவதற்குச் சாதி உதவியாக இருப்பதே காரணம் ஆகும். சாதி ஒரு கட்சி போல் பயன்படுகிறது. கட்சியை வளர்க்கப் பெருமுயற்சி வேண்டும். அந்தப் பெருமுயற்சி இல்லாமலே, மக்களில் ஒரு பகுதியாரைத் தம்பக்கமாகச் சேர்க்க முடிகிறது ; அதற்குச் சாதி உதவியாக இருக்கிறது என்றால் யார் விடுவார்கள் ? இறந்து போன கன்றின் உடம்பு, பசுவினிடம் பால் கறப்பதற்கு உதவியாக இருப்பது போல், நம்பாத இந்தச் சாதி, மக்களின் ஒட்டுப் பெறுவதற்கு உதவியாக இருக்கிறது. பயன்படும் ஒன்று இறந்துபோனதாக இருந்தால் என்ன ? நம்பாத ஒன்றாக இருந்தால் என்ன ? அதைக் காட்டிப் பெற வேண்டிய பயனைப் பெற்றால் போதும். சாதியால் பயன் உள்ளது ; ஆகவே, சாதியும் நீங்காமல் உள்ளது எனலாம்.

தொடக்கத்தில் சாதி ஏற்பட்டதும் பயன் கருதியே ஆகும். அப்போது சாதி தொழிலின் காரணமாக ஏற்பட்டது. பிறப்பின் காரணமாக அமைந்தது அன்று. தச்சுத் தொழில் செய்தவன் தச்சன் ; உழவுத் தொழில் செய்தவன் உழவன் ; மண்குடம் முதலியன செய்தவன் குயவன் ; வாணிகம் செய்தவன் வணிகன், இவ்வாறே தொழிலை

ஒட்டி மக்களுக்குள் பாகுபாடு இருந்து வந்தது.

தச்சன்மகன் தொழிலால் மட்டும் தச்சன் ஆகாமல், பிறப்பாலும் தச்சன் ஆனன். வணிகன்மகன் பிறப்பாலும் வாணிகம் செய்வதற்கு உரியவன் ஆனன். குயவன்மகன் பிறப்பாலும் குயவன் ஆனன். ஆகவே, தொழிலால் அமைந்த பாகுபாடு, பிறப்பை ஒட்டிய பாகுபாடு ஆயிற்று. தொழிலால் ஏற்பட்ட சாதி பிறப்பால் அமைந்த சாதி ஆயிற்று.

இந்தச் சாதி முறை, பற்பல நூற்ருண்டுகள் வரையில் சமுதாயத்தில் பயன்பட்டது; பிள்ளைகளைப் பற்றிய கவலை, தொழில்போட்டி, வேலையில்லாத் திண்டாட்டம் ஆகிய இந்தத் தொல்லைகளுக்கு இடம் தராமல் குடும்பங்களைக் காப்பாற்றிவந்த படியால், எல்லாரும் உடன்பட்டு அந்தச் சாதி முறையைப் போற்றிவந்தார்கள். அதுவோ, தொழில் அளவில் நிற்காமல், மெல்ல மெல்ல வளர்ந்து, சமையல் அறை முதல் கோயில் வரையில் பல இடங்களைக் கைப் பற்றிக்கொண்டது. மேலை நாட்டு அறிவியலும் நாகரிகமும் பரவிய பிறகு, மெல்ல மெல்ல அந்த இடங்களில் செல் வாக்கு இழந்துவருகிறது. இன்று, அரசியலையும் மற்றப் பதவித் துறைகளையும் பற்றிக்கொண்டுள்ளது. ஆகவே, அதன் வரலாற்றை ஆராய்ந்தால், எங்கெங்கே பயன் உண்டோ அங்கங்கே வாழ்வேன் என்று சொல்கிறது; எதுவரையில் பயன் உண்டோ அதுவரையில் வாழ்வேன் என்றும் சொல்கிறது.

அத்தகைய சாதிவேறுபாட்டை ஒழிக்க வேண்டுமானல், அதனல் பயன் இல்லாமல் செய்வது ஒன்றுதான் வழி.

அறிவு வளர்ந்தால், மனித இனம் ஒன்றே என்ற தெளிவு பிறந்தால், சாதி ஒழிந்துவிடும் என்று எண்ணுவது வீண். அறிவும் தெளிவும் உடையவர்களே இன்று

சாதியைப் பயன்படுத்திப் பதவி பெற முயல்வதைக் காண்கிறோம். ஆகவே, சாதியால் இந்த நாட்டில் யார்க்கும் ஒரு பயனும் இல்லை என்று செய்தால்தான், அது இந்த நாட்டைவிட்டு ஒழியும்.

எடுத்துக்காட்டாக, இளைஞன் ஒருவன் வேலை தேடுவதாக வைத்துக்கொள்வோம். அவன் யார்யாரிடமோ சென்று வேலை கேட்கிறான். இல்லை இல்லை என்ற மறுமொழியே கிடைக்கிறது. வேலையில்லாத் திண்டாட்டம் மிகுந்துள்ள இக்காலத்தில், எப்படியேனும் ஒரு வேலை பெற முயல்கிறான். செல்வாக்குள்ள தன் சாதியார் ஒருவரிடம் செல்கிறான். சாதியைச் சொல்லிக் கேட்கிறான். அவரும் எண்ணிப்பார்க்கிறார். உள்ள ஒரு வேலைக்குப் பலர் வந்து முயல்கிறார்களே, யாருக்குத் தருவது என்று கலங்குகிறார். கடைசியில், இவனுக்குத் தரலாம் என்றும், சாதி என்ற காரணத்திற்காக இவன் நன்றியோடு இருப்பான் என்றும், இவனுக்கு உதவி செய்த காரணத்தால் சாதியைச் சார்ந்தவர்கள் எல்லாரும் தம்மைப் புகழ்ந்து போற்றுவார்கள் என்றும் பலவாறு எண்ணித் துணிகிறார். அவனுக்கு வேலை தருகிறார். இவ்வாறு வேலையில்லாத் திண்டாட்டமும் போட்டியும் உள்ள வரையில் சாதி வாழும் என்று விளங்குகிறது.

ஓர் அலுவலகத்தில் ஒரே நிலையில் இருவர் தொழில் செய்கின்றனர். உயர்ந்த தொழில் ஒன்று காலியாகும் நிலைமை உள்ளது. இந்த இருவரில் ஒருவனுக்குத்தான் அது கிடைக்கும். அப்போது இருவரும் போட்டியிடும் நெருக்கடி ஏற்படுகிறது. ஒருவன், மற்றவனைக் கவிழ்க்கத் திட்டம் வகுக்கிறான். திட்டம் வகுப்பவன் திறமை குறைந்தவனாக இருக்கலாம். மற்றவன் திறமை மிகுந்தவனாகவும் இருக்கலாம். ஆனாலும் அவனை வென்று மேலே வருவதற்குச் சாதி பயன்படுமானால், அந்தச் சாதியைப்

பயன்படுத்துகிறான். தன் சாதியைச் சேர்ந்தவர்களிடம் நெருங்கிப் பழகுகிறான்; கோள் சொல்கிறான்; அவர்களைத் துணையாகச் சேர்க்கிறான்; பொய் சொல்லியேனும் மற்றவனைப் பற்றிக் குறையாக எண்ணுமாறு செய்கிறான்; சாதியாரின் உதவியும், சாதியைச் சார்ந்த ஒருவரின் செல்வாக்கும் பெற்று மேலுக்கு வருகிறான். இவ்வாறு முன்னேறிய பிறகு தனக்குச் சாதி செய்த உதவியை மறவாமல், அந்தச் சாதியைப் போற்றுகிறான்.

இவ்வாறு சமுதாயத்தில் பொருளாதார நெருக்கடியும் போட்டி மனப்பான்மையும் மிகுந்துள்ள வரையில். சாதி பயன்பட முடிகிறது; வாழ முடிகிறது.

ஒரு குடும்பத்தில் மகனுக்கோ மகளுக்கோ திருமணம் செய்ய முயல்கிறார்கள். சாதி அல்லாத வேறு குடும்பத்தில் நல்ல துணை கிடைக்கிறது. ஆயினும் அந்தப் பெண்ணையோ பிள்ளையையோ மணம் செய்து வைப்பதில்லை. வேறு சாதிப் பெண் அல்லது பிள்ளையின் அழகிலோ பண்பிலோ அறிவிலோ குறை இல்லை. ஆயினும் விரும்பவில்லை. தம் சாதி உயர்ந்தது என்ற நம்பிக்கை இல்லாதவர்களாக, படித்த பெற்றோர்களாக இருந்தாலும் விரும்புவதில்லை. தம் சாதிப் பெண்ணாக, பிள்ளையாகப் பார்த்து மணம் முடிக்கிறார்கள்; அழகு அறிவு பண்பு முதலியவற்றில் சிறிது குறைவாக இருந்தாலும், சாதியிலேயே தேடி மணம் முடிக்கிறார்கள். ஏன்? தம் வயிற்றில் பிறந்தவர்கள் எதிர்காலத்தில் கவலை இல்லாமல் வாழ வேண்டுமே என்ற நல்லெண்ணம் காரணம். புது வழியில் செல்வதால், சமுதாயம்—சுற்றுப்புறம்—கைவிட்டுவிட்டால், வாழ்க்கையில் ஏதாவது இடையூறு ஏற்படுமோ என்ற பயம் காரணம். எப்படியும் வாழ முடியும் என்ற நம்பிக்கையைச்][சமுதாயம் தரவில்லை; பழைய வழியை விட்டுச் சிறிது தவறினாலும் வாழ்க்கையில் என்ன ஆகுமோ என்ற கவலை காரணம். வாழ்க்கை பற்றிய

நிலையான நம்பிக்கை இல்லாத அளவிற்குச் சமுதாயத்தில் பொருட்கவலை உள்ளது. இந்தக் கவலையும் அச்சமும் உள்ள நெஞ்சத்திற்குச் சாதி பொய்யான நம்பிக்கை ஊட்டுகிறது. இதனால் அது வாழ்கிறது.

ஆகவே, வேலையில்லாத் திண்டாட்டத்தையும், எதிர்காலம் பற்றிய அச்சத்தையும். பொருள் பற்றிய கவலையையும் ஒழித்து நம்பிக்கையான சமுதாயத்தை உருவாக்க வேண்டும். சாதியை ஒழிக்க விரும்புவோர் இதை முதலில் செய்ய வேண்டும். சுருங்கச் சொன்னால், பொருட்கவலை இல்லாத பொதுவுடைமைச் சமுதாயத்தில்தான் சாதி ஒழிய முடியும்.

தீராத வயிற்றுவலி அறுவைச் சிகிச்சையால்தான் நீங்கும். அதற்கோ இரண்டு மூன்று வாரங்கள் ஆகும். ஆனால், உடனடியாகத் துன்பத்தைச் சிறிது தணிப்பதற்குச் சில மருந்துகள் தரக் கூடாதா?

அது போல், அடியோடு சாதி வேறுபாடு ஒழிவதற்கு முன், அதன் பேயாட்டத்தை அடக்கி வைக்கச் சில வழிகள் வகுக்கக் கூடாதா என்று கேட்கலாம்.

அந்தச் சில வழிகள் வருமாறு:—

நாட்டில் தீண்டாமை குற்றமாக்கப்பட்டதுபோல், சாதிப் பெயர்கள் சட்டப்படி குற்றமாக்கப்பட வேண்டும். ஆட்களின் பெயர்களில் வால் போல் சாதி அடை இருந்து வந்ததைப் பலர் நீக்கிவருகிறார்கள். அதுபோலவே, சாதியால் ஏற்பட்டுள்ள தெருப் பெயர்கள் (வேளாளர் தெரு, செட்டித்தெரு முதலியவை) மாற வேண்டும். தொழில் நிலையங்கள், கல்விக் கூடங்கள் முதலியவற்றிற்குச் சாதிப்பெயர்கள் இருந்தால் அவை மாற வேண்டும்.

சாதியை இன்று எந்த ஏட்டிலும் குறிக்காதவாறு தடுக்க வேண்டும். பள்ளி, அலுவலகம் முதலியவற்றின் ஏடுகளில் அவை இடம் பெறக் கூடாது.

பழைய வரலாற்று நூல்களில் சாதிபற்றிய குறிப்புக்கள் இருந்தால், புதிய நூல்களில் அவை நீக்கப்பட வேண்டும். பழைய இலக்கியங்களில் வரும் சாதி பற்றிய செய்திகளுக்கு மதிப்புத் தராமல் ஒதுக்க வேண்டும்.

சாதியின் பெயரால் பதிவு செய்யப்பட்ட சங்கங்கள் முதலியன பதிவுப்பட்டியிலிருந்து நீக்கப்பட வேண்டும். சாதித் தொடர்பு உடைய எந்தப் புதிய பதிவுக்கும் இடந் தரக் கூடாது.

சாதியின் பெயரால் மக்கள் கூடுவது குற்றமாக்கப்பட வேண்டும்.

இப்படிப்பட்ட முறைகள் சாதிநோயை அடியோடு தீர்ப்பன அல்ல; இவை எல்லாம் அப்போதைக்கு உரிய தணிப்பு மருந்துகளே. இந்த உண்மையை மறவாமல், தொழில் கவலையும் பொருட் கவலையும் இல்லாத நல்ல சமுதாயத்தை உருவாக்கும் கடமையில் கருத்தாக இருக்க வேண்டும்.

11. போட்டி ஒழிக

ஒரு காலத்தில் நல்லவை ஆக இருந்தவை இன்று சமுதாய வாழ்வுக்குத் தீமையானவை என ஒதுக்கப்படு கின்றன.

நிலம் எல்லாம் சில குடும்பத்துக்குச் சொந்தமாக இருந்தன. மற்றவர்கள் அந்தக் குடும்பத்தார்க்குக் குற்றே வல் செய்து அமைதியாக வாழ்ந்துவந்தனர். அந்த முறை இன்றைய சமுதாய வாழ்வுக்கு இடையூருகக் கருதப் படுகிறது ஒவ்வொருவர்க்கும் இவ்வளவு நிலத்துக்குமேல் இருக்கக்கூடாது என்று சட்டம் செய்யவேண்டி ஏற்படு கிறது.

மேல்குலத்தில் பிறப்பதற்குப் புண்ணியம் செய்திருக்க வேண்டும் என்றும், அவ்வாறு நல்வினை செய்யாதவர்களே கிழ்க்குலத்தில் பிறக்கிருர்கள் என்றும், கிழ்க்குலத்தில் பிறந்தவர்கள் குற்றேவல் செய்து புண்ணியம் தேடிக்கொண் டால் மறுமையில் மேல்குலத்தில் பிறக்கலாம் என்றும் முன் நம்பினர்கள். இன்று, சாதி வேறுபாடு கூடாது என்றும், சாதிப் பாகுபாட்டை அடிப்படையாகக் கொண்ட எதுவும் நாட்டுக்கு ஆகாது என்றும் எல்லோரும் வற்புறுத்திவரு கிருர்கள்.

சிலரைத் திண்டாதவர்களாக வைத்திருப்பது சமுதா யத்தின் நன்மைக்காகவே என்று முன்னேர்கள் நம்பினர்கள்

இன்றைய சமுதாயம் அதை ஒரு குற்றமாகச் செய்து தண்டனை விதிக்கிறது.

பெண்களுக்கு இளமையிலேயே பதினன்கு பதினைந்து வயதுக்குள்ளாகவே திருமணம் செய்வது கடமை என்று பழைய சமுதாயம் கருதியது. இன்றைய சமுதாயம் அதை நாகரிகக் குறைவு என்று கருதுகிறது.

ஒரு நாட்டு மக்கள் தங்கள் நாட்டு எல்லையை விரிவு படுத்துவதற்காக அடுத்த நாட்டின்மேல் படையெடுப்பது கடமை என்று பழங்காலத்தார் கருதினர்கள். இன்றும் அது செயல்முறையில் ஓரளவு நடைபெற்ற போதிலும் அதைத் தவறு என்றே பலரும் கருதுகிருர்கள்.

இவ்வாறு ஒரு காலத்தில் நல்லவை என்றும் கடமை என்றும், கருதப்பட்டவை, இக்காலத்தில் தீமை என்றும் தவறு என்றும் கருதப்படுகின்றன. பெரும்பாலும் வாழ்க்கையின் நெருக்கடியாலேயே இந்தச் சீர்திருத்தம் ஏற்படுகிறது. இந்தச் சீர்திருத்தம் பல துறையிலும் ஏற்படுமானல், உலக அமைதியும் முன்னேற்றமும் விரைவில் ஏற்படும்.

எடுத்துக்காட்டாக, ஒன்றை எண்ணிப் பார்ப்போம். பழங்காலம் முதல், விளையாட்டில் போட்டி இருந்து வருகிறது. திருவிழா முதலியவற்றில் ஆடம்பரமாகச் செலவு செய்வதில் போட்டி இருந்துவருகிறது. இன்று திருமணச் செலவிலும் ஆடம்பரப் போட்டி இருந்துவருகிறது. ஒருவரைப் பார்த்து மற்ருெருவர் போட்டியிட்டு முன்னேற முயல்கிருர். கல்வித்துறையில், பேச்சுப் போட்டி, எழுத்துப் போட்டி, பாட்டுப் போட்டி, ஓவியப் போட்டி முதலியவை இருந்துவருகின்றன. இவைகளில் சில நெடுங்காலமாகவே இருந்துவருபவை. இன்றைய கல்விக் கூடங்களில், தேர்வு என்ற பெயரால் போட்டி ஒரு வலிய முறையாக ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது.

ஆனல், கவிஞர் தாகூர், காந்தியடிகள், பெர்னர்ட்ஷா, டால்ஸ்டாய், வினேபா முதலான பெருமக்கள், இந்தப் போட்டிமுயற்சிகளை, வெறுத்துக் கூறியிருக்கிருர்கள். உலகம கேட்கவில்லை.

சாதி வேறுபாடு, தீண்டாமை முதலிய மாசுகளை இது வரையில் இயற்கை என்று தவருக எண்ணிவந்தது போலவே, இன்றைய சமுதாயம் போட்டியையும் இயற்கை என்று எண்ணிவருகிறது.

அதனல் கல்விக்கூடம், விளையாட்டுக்கூடம் முதலிய வற்றில் குறுக்குவழிகளையும் பகையுணர்ச்சிகளையும் மன வேற்றுமைகளையும் போட்டி வளர்த்து வருகிறது.

அறிஞர்கள் எவ்வளவோ சொல்லியும் கேட்கவில்லை. கல்வி, விளையாட்டு, திருவிழா, திருமணம் முதலிய துறை களில் வளரும் போட்டிமுயற்சி எவ்வளவு கெட்ட வழியில் மனப்பான்மையை வளர்த்துவருகிறது என்பதை உலகம் எண்ணிப் பார்க்கவில்லை. கள் சாராயம் முதலியவற்ருல் சுறுசுறுப்பு ஏற்படுகிறது என்று சொல்லி அவற்றைப் போற்றுவதில்லை. ஆனல் போட்டியால் முயற்சி வளர் கிறது என்று சொல்லி அதைப் போற்றிவருகிருர்கள்.

நஞ்சிலும் ஒரு நன்மை உண்டு. போட்டியிலும் ஒரு நன்மை உண்டு. ஆனல், அதனல் விளையும் தீமையை மறந்துவிடக் கூடாது. போட்டியால் ஊக்கம் மிகுதியாக லாம். ஆனல் அன்பையும் ஒற்றுமையையும் குலைப்பதில் அதற்கு நிகரானது ஒன்று இல்லை என்பதை நன்ருக எண்ணிப்பார்த்தால் உணரலாம்.

எப்படியோ நெருக்கடி ஏற்பட்டது. இன்று சிலர் சிறிது சிறிதாக எண்ணிப்பார்க்கத் தொடங்கிவிட்டார்கள்.

கிராமங்களின் அமைதிக்கு — பஞ்சாயத்துக்களின் வளர்ச்சிக்கு — போட்டியில்லாமல் தேர்தல் நடத்த வேண் டும் என்று சொல்லிவருகிருர்கள்.

இந்தப் புத்துணர்ச்சி ஏற்பட்டதை எண்ணி மகிழ வேண்டும்.

கல்விக்கூடத்தில் போட்டி என்பது தேர்வு (பரீட்சை) என்ற பெயரால் நிலைத்து வாழ்வது போல், அரசியலில் போட்டி என்பது தேர்தல் (எலெக்ஷன்) என்ற பெயரால் நல்ல இடம் பெற்று வாழ்கிறது. எல்லையற்ற அளவில் அது எங்கெங்கோ அழிவு வேலை செய்தபோது அதன் தீமை கண்ணுக்குப் புலனாகவில்லை.

சின்ன கிராமங்களில் புதிய பஞ்சாயத்து அமைப்பு முறையில் இந்தத் தேர்தல் போட்டி, கிராமத்தில் நிலவி வந்த அமைதியைக் குலைக்கும்போது அதன் தீமை நன்றாகப் புலனாகிறது. அதனால், போட்டி இல்லாமலே, உறுப்பினர்களும் தலைவர்களும் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்று அறிவுரை கூறும் முயற்சி தோன்றியுள்ளது.

வீட்டுக்கு விருந்தினர் வரும்போது மட்டும், குழந்தை நல்ல சொற்கள் பேச வேண்டும் என்று பெற்றோர் ஆசைப்படுவதால் பயன் இல்லை. என்றுமே குழந்தைக்கு நல்ல சொற்களைப் பேசிப் பழக்கியிருந்தால்தான, விருந்தினர் வரும்போதும் அப்படிப் பேசுவது இயற்கையாக வரும். நாட்டிலும் இதுதான் உண்மை. குதிரைப் பந்தயம், பெரிய பெரிய விளையாட்டுப் பந்தயங்கள், ஆடம்பரச் செலவுப் போட்டிகள் முதலியன ஒழிந்த சமுதாயத்தில்தான் போட்டி இல்லாத தேர்தலும் இயற்கையாக நடைபெற முடியும்.

12. நேர்மை

“ நாங்கள் வைத்த தேர்வில் உங்கள் பையன் நன்ருக எழுதவில்லை. அவனைவிட மற்றவர்கள் நன்ருக எழுதியிருக்கிருர்கள். அதனுல் அவர்களை மட்டும் ஐந்தாம் வகுப்பில் சேர்த்துக் கொண்டோம். என்ன செய்வது ?”

“எப்படியாவது சேர்த்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன். நீங்கள் மனம் வைத்தால் முடியும். எங்கள் பையன் இனிமேல் நன்ருகப் படிப்பான். ஆகையால் எப்படியாவது அவனைச் சேர்த்துக் கொள்ள வேண்டும்.”

* * *

“330 எண்களுக்குமேல் பெற்றுப் பத்தாவது தேர்வில் தேறிய மாணவர்களை மட்டும்தான் எங்கள் கல்லூரியில் சேர்த்துக்கொள்வோம். அதற்குக் குறைவாக எண்கள் வாங்கிய மாணவர்களுக்கு இங்கே இடம் இல்லை. நீங்கள் வேறு முயற்சி செய்யலாம். உங்கள் பையன் 270 எண்கள் வாங்கியிருப்பதால் நாங்கள் ஒன்றும் செய்ய இயலாது.”

“எங்கள் பையனை இனிமேல் நன்ருகப் படிக்கச் சொல்வோம். இப்போது நீங்கள்தான் உதவி செய்ய வேண்டும் நீங்கள் எப்படியாவது மனம்வைத்து அவனைச் சேர்த்துக் கொண்டால் எங்கள் குடும்பத்துக்குச் செய்த பெரிய உதவி ஆகும். நீங்கள் மனம் வைத்தால் முடியும்.”

* * *

"இரண்டு பாடங்களில் முதல் தரம் பெற்றிருந்தால் தான் பொறியியல் (எஞ்சினீயரிங்) கல்லூரியில் சேர்த்துக் கொள்வார்களாம். உங்கள்மகன் முதல் தரம் பெறவில்லை. நான் போய்ப் பெரிய இடத்தில் சொல்லியும் பயன்படாது. ஆகையால் வேறு படிப்புக்கு ஏற்பாடு செய்யுங்கள். அது தான் நல்லது."

"முதல் தரம் பெருத மாணவர்களுக்கும் சென்ற ஆண்டில் இடம் கிடைத்திருக்கிறது. எங்கள் ஊர் செ. ப. மகன் இப்போது பொறியியல் படிக்கிருன். அவன் முதல் தரம் பெருதவன். ஆகையால் நீங்கள் சிபாரிசு செய்தால் கட்டாயம் நடக்கும். அவர் உங்கள் நண்பர் தானே ? நீங்கள் சொன்னுல் உங்கள் பேச்சைத் தட்ட மாட்டார். எங்கள் குடும்பமே முன்னேறிவிடும். நீங்கள் எப்படியாவது ஒரு சொல் சொல்ல வேண்டும். நம் ஊரில் நம் இனத்தாரில் யாருக்கும் பொறியியல் படிப்புக்கு வாய்ப்புக் கிடைக்கவில்லையே. நீங்கள் இந்த இனத்தவர். ஆகையால் நம் பையனுக்கு எப்படியாவது கட்டாயம் கல்லூரியில் இடம் பெற்றுத் தர வேண்டும்."

* * *

"எங்கள் பையன் படித்து முடித்து இரண்டு ஆண்டுகள் ஆன பிறகும் இன்னும் நல்ல வேலை கிடைக்கவில்லை. இப்போது காலியாகும் அந்த மேல் பதவிக்கு அவனை உயர்த்திவிட்டால் அது பெரிய உதவியாக இருக்கும். நீங்கள் எங்கள் மாவட்டத்தைச் சார்ந்தவர்கள். நீங்கள் உதவி செய்யாவிட்டால் யார் செய்வார்கள் ? எப்படியாவது மனம் வைத்து இவனுக்குப் பதவி உயர்வு தர வேண்டும்."

"அந்த மேல் பதவிக்கு மிகுதியான போட்டி உள்ளது. உங்கள் மகனைவிடத் தகுதி உள்ளவர்கள் சிலர் இருக்கிருர்கள். அவர்கள் இவனுக்கு முன் தொழிலில் சேர்ந்த

வர்கள். அவர்களை விட்டுவிட்டு இவனுக்குக் கொடுப்பது நேர்மை ஆகுமா? நான் என் கடமையில் தவற முடியுமா? என்ன செய்வது என்று எனக்கு வழி தெரியவில்லையே!"

* * *

இப்படி நாட்டில் நடக்கும் நிகழ்ச்சிகள் கணக்கற்றவை. பொறுப்பான பதவிகளில் உள்ளவர்கள் கூடியவரையில் நேர்மையாகக் கடமைகளை ஆற்ற வேண்டும் என்று முயல்கிறார்கள். தம்தம் குடும்பங்களை முன்னேற்ற வேண்டும் என்ற ஆர்வம் உடையவர்கள் எதிலும் எப்படியேனும் இடம் பெற வேண்டும் என்று முயல்கிறார்கள்.

எந்த அமைப்பிலும் ஒழுங்குமுறை இல்லையானால் ஊழல் பெருகிவிடும். எல்லோருக்கும் வாய்ப்புகள் உள்ள நாட்டிலும் ஒழுங்குமுறை கட்டாயம் வேண்டியதாக இருக்கிறது. நம் நாடு படிப்புக்கும் தொழிலுக்கும் — பொதுவாக வாழ்க்கைக்கு—வாய்ப்புகள் குறைந்த நாடு. இது போன்ற நாடுகளில் ஒழுங்குமுறை இல்லையானால் சமுதாயமே சீர் கெட்டுவிடும்.

நேர்மை என்பது என்ன? எல்லோருடைய பொது நன்மைக்காகவும் எல்லோரும் உடன்பட்டுப் போற்றும் ஒரு முறை அது. நீட்டல் அளவையில் அடி முழம் அல்லது மீட்டர் என்று ஒரு முறை வைத்து அதை எல்லோரும் போற்றுகிறோம். முகத்தல், நிறுத்தல் முதலிய அளவைகளிலும் ஒரே வகையான அளவுகருவிகளை எல்லோரும் உடன்பட்டுப் போற்றுகிறோம். அதனால்தான் வாணிகத்துறையில் எல்லா ஊர்களிலும் 'எல்லாக் கடைகளிலும் ஒழுங்கும் அமைதியும் காண முடிகிறது. என் சாதியைச் சார்ந்தவர் சாராதவர் என் ஊரைச் சார்ந்தவர் சாராதவர் என்றெல்லாம் விருப்புவெறுப்புக் கொண்டு அளவுகருவிகளை அவ்வப்போது மாற்ற முயன்றால் என்ன ஆகும்? ஒரு பெருங் குழப்பமாகிவிடும். கல்வி தொழில் முதலியவற்றிலும்

அளவுகருவிகளே நேர்மையாகக் கையாளாவிட்டால் சமுதாயம் சீர்குலேயும். நேர்மை தவறுவதற்கு என்று ஒரு சிறு விழுக்காடு வகுத்துச் சிலர்க்கு உதவி செய்தாலும் கவலே இல்லே. அப்படி ஒரு விழுக்காடும் காணேம்.

'மகன் செய்த குற்றத்திற்காக அவனேயே தேர்க்காலில் கொல்லத் துணிந்தான் மன்னன் ஒருவன்' என்று கதை படிக்கிறேம். ஆனுல், மகன் முன்னேற்றத்துக்காக எந்த விதியையும் மீறி உதவி செய்யுமாறு வேண்டுகின்ற மனப்பான்மை நாட்டில் உள்ளது.

இந்த நாட்டில் உள்ளது போல் ஊழ்வினேயின் நம்பிக்கை வேறு நாட்டில் இல்லே. அவரவர்க்கு இட்டபடியே எதுவும் நடக்கும் என்பது இந்த நாட்டுக் கிழவிகளும் உணர்ந்த ஞானம். ஆனுல் நடைமுறையில் காண்பது என்ன? தன்னலம் என்று வந்துவிட்டபோது பொது நன்மையைக் காற்றில் விட்டுவிட்டுப் பொதுவிதிகளேப் பற்றிக் கவலேப்படாமல் தான் மட்டும் எப்படியாவது எந்தக் குறுக்கு வழியிலாவது நன்மை பெற முயலும் முயற்சியையே காண்கிறேம்.

நேர்மையைக் கைவிட்டு உதவி செய்ய வேண்டும் என்று தயங்காமல் கேட்கப்படுகிறது. அந்த உதவி ஏற்றுக்கொள்ளவும் படுகிறது. உதவி செய்தவர் போற்றவும் படுகிருர். நிலேமை இது. இந்தக் குறைக்குக் காரணம் உதவி கேட்பவர் மட்டும் அல்லர்; உதவி செய்பவரும் காரணமே. நாட்டில் நேர்மை கடந்து உதவி செய்பவர் கல்வி நிலேயங்களிலும், தொழிலகங்களிலும அங்கங்கே இருக்கிருர்கள், அந்த உதவிகளேப் பெற்று முன்னேறுகிறவர்களேப் பலரும் பார்க்கிருர்கள். ஆகையால்தான் நேர்மையைக் கடந்தும் உதவி பெறும் ஆசை பலருக்கு இயல்பாகிவிட்டது. ஏதோ நம் முயற்சியைச் செய்தோம், கிடைப்பது கிடைக்கட்டும் என்று யாரும் இருப்பதில்லே. எதற்கும் சிபாரிசு தேடித் திரியும்

வழக்கமும், எப்படியாவது உதவி பெற முயலும் முயற்சியும் பெருகிவிட்டன.

நேர்மை கடந்தும் உதவி செய்யத் தெரியாதவர்கள், வாழத் தெரியாதவர்கள் என்று கருதப்படுகிருர்கள்; சில பல தொல்லேகளுக்கும் ஆளாகிருர்கள். காரணம் என்ன? பல அமைப்புக்கள் தேர்தல்முறையால் தேர்ந்தெடுக்கப் பட்டவர்களின் ஆட்சியின் கீழ் அமைந்தவை. எப்படியோ பல நடைய வாக்குகளேப் பெற்றுப் பதவி பெற்றவர்கள், மேலும் மேலும் அந்த வாக்குகளேப் பெறுவதில் கருத்தாக இருக்கிருர்கள். தேர்தலுக்கும் நேர்மைக்கும் நெடுந் தொலேவு ஆகையால் அடிப்படையிலேயே நேர்மை ஒதுங்கி வாழ வேண்டிய நெருக்கடி உள்ளது.

தவிர, இந்த நாடு பொதுவான மனித சமுதாயமாக இல்லே. மொழியால் சில வேறுபாடுகள்; மதத்தால் சில வேறுபாடுகள்; சாதியால் பற்பல வேறுபாடுகள் என்று பல வேறு பிளவுகளோடு காணப்படும் சமுதாயம் இது. சாதிகளே வளர்த்தவர்களே இன்று அவற்றின் தீமைகளுக்கு ஆளாகி வருந்துகிருர்கள். போதாக் குறைக்கு அரசியல் கட்சிகளும் இரண்டு மூன்ருய் நிற்காமல் பலவாய் வளர்ந்து மக்களேப் பிரிக்கின்றன. இந்த நிலேயில் அவரவர்களேச் சார்ந்தவர்களுக்கு மட்டுமே உதவி செய்து முன்னேறுவது கடமையாகக் கருதப்படுகிறது. சமுதாய அமைதிக்குத் தேவையான நேர்மை கைவிடப்படுகிறது. எதிர்காலத்தில் இதன் விளேவு எண்ணி வருந்தத்தக்கதாகும். ஆதலின் இக் குறையைப் போக்கி நேர்மை வாழவல்ல வழியை வகுத்தல் கடமையாகும்.

13. ஊழல் ஒழியுமா ?

நாட்டில் நேர்மை குறைந்துவிட்டது; எதற்கும் லஞ்சம் வாங்கும் தீய பழக்கம் மிகுந்துவிட்டது; பல துறைகளிலும் ஊழல் மிகுந்துவிட்டது; இந்தப் பேச்சு எங்கும் உள்ளது. லஞ்சம் வாங்குகின்றவர்களும் இதைப் பேசுகின்றார்கள். ஊழல் உடையவர்களும் மற்றவர்களின் ஊழலைப் பற்றி இவ்வாறு பேசுகின்றார்கள். ஆளும் தலைவர்களும் நாட்டின் நன்மைக்காக அடிக்கடி அறவுரை கூறுகிறார்கள். ஆனால் வெறும் பேச்சால் பயன் ஏற்படும் என்று நம்புவதற்கில்லை. ஆட்சிமுறையிலோ சமுதாய அமைப்பிலோ பெரிய மாறுதல் ஏற்பட்டால் தவிர ஊழல்கள் குறையும் என்று நம்புவதற்கில்லை.

ஊழல்கள் எங்கேனும் ஒரு மூலையில் இருக்குமானால் அந்த மூலை மட்டும் வெறுக்கப்படும். ஒரு சிலர் மட்டும் ஒழுங்கற்றவர்களாக இருந்தால் மற்றவர்களின் நன்மதிப்பைக் கருதியாவது அந்த ஒரு சிலர் நாளடைவில் திருந்தக் கூடும். வீடு முழுவதுமே குப்பைக் கூளமாகி விட்டால், தூய்மையைப் பற்றிய அக்கறையே இல்லாமல் போய்விடும். அதுபோல் இன்று நாடு முழுதும் பல துறைகளிலும் ஊழல்கள் மலிந்துவருவதால் இந்த நிலைமையை இயற்கை என்று எண்ணிப் பலரும் அமைதி

அடைகின்றார்கள். உலகம் இப்படித்தான் இருக்கும் என்றும், நாம் நினைப்பது போல் உலகத்தைத் திருத்திவிட முடியாது என்றும் பலரும் அமைதி அடைவதாகத் தோன்றுகிறது.

ஊழல் அற்றவர்கள்—லஞ்சம் முதலிய மாசு இல்லாதவர்கள்—நாட்டில் இன்றும் உள்ளனர். ஆனால் அவர்கள் சிறுபான்மையோர். செல்வாக்கு இல்லாமல் அவர்கள் வாழ்கின்றார்கள். ஆகையால் அவர்களால் மற்றவர்களைத் திருத்த முடியவில்லை. மற்றவர்கள் அவர்களைப் பார்த்துத் திருந்துவதற்கும் வழி இல்லை.

அதற்கு மாறாக ஊழல் உடையவர்கள் ஆறுதல் பெறுவதற்கு வழி உள்ளது. "நாம் மட்டுமா லஞ்சம் வாங்குகிறோம்? நாம் மட்டுமா நெறி தவறி நடக்கிறோம்? நம்மை விடப் பெரிய பதவியில் உள்ள அவர் லஞ்சம் வாங்கவில்லையா? இவர் நெறி தவறி நடக்க வில்லையா? எல்லாவற்றையும் கண்டும் காணாமல் விட வேண்டும். காற்றுள்ள போதே தூற்றிக்கொள்ள வேண்டும். இல்லையானால் இந்த உலகத்தில் பிழைக்க முடியாது" என்று மற்றவர்களைப் பார்த்து ஆறுதல் பெறுதற்கு வழி உள்ளது. ஒவ்வொருவரும் தமக்கு மேற்படியில் அல்லது தமக்கு ஒத்த பதவியில் உள்ள மற்றவர்களைப் பார்த்து, அவர்களிடம் ஊழல் இருப்பதால் நம்மிடமும் இருக்கலாம் என்று அமைதி அடைகிறார்கள். சமுதாயம இந்த நிலைக்கு வந்திருப்பது பெரிய தீமையே ஆகும்.

நாட்டில் உள்ள மக்கள் எல்லாரும் தமக்குள் வேறுபாடு இல்லாமல் ஓர் இனமாக வாழ்ந்தால், அவர்களைத் திருத்துவது எளிது. அந்நிலையில் ஒழுங்குமுறையை அவர் இவர் என்று வேறுபாடு இல்லாமல் எல்லோர்க்கும் பொதுவாக வற்புறுத்த முடியும். நல்லவர் வாழ்வைப் பார்த்துப் பிறரும் அதுபோல் வாழ வேண்டும் என்று ஆர்வம் கொள்ள முடியும். அவரும் மனிதர், நாமும் மனிதர், ஆகையால்

அவர்க்கு உரியது நமக்கும் பொருந்தும் என்று எல்லோரும் உண்மை உணர்வதற்கு வழி உண்டு. ஆனால் சமய வேறுபாடுகளும், சாதி வேறுபாடுகளும், மொழிவேறுபாடுகளும் மிகுந்த நாட்டில் மக்கள் ஓர் இனமாய் வாழ்வது அரிது. நான் இன்ன சமயத்தான் அவன் இந்தச் சாதியான் என்று பிரித்து நோக்கும் நோக்கமே மேலோங்கி நிற்கும். அனைவரும் ஓர் இனம் ஆகையால் ஒருவருக்கொருவர் உதவியாக வாழ வேண்டும் என்ற மனப்பான்மை ஓங்கி நிற்காது. நான் இந்தச் சாதியான் ஆகையால் இன்னாருக்கு மட்டும் எப்படியாவது உதவி செய்ய வேண்டும் என்ற மனப்பான்மை மிகுதியாகும். அவ்வாறு சாதி சமயம் முதலிய பற்றுக் காரணமாகத் தன்னைச் சார்ந்தவர்களுக்கு உதவி செய்யும் போது நீதியின் எல்லையைக் கடப்பதற்குத் துணிவு பிறக்கும். நீதி என்பது மனிதத் தன்மையை மதிக்கும் சமுதாயத்தில் மட்டுமே உயர்ந்து விளங்கும். ஆனால் சாதி சமயம் முதலிய வேறுபாடுகள் மிகுந்த நாட்டில் மனிதத் தன்மைக்கு அவ்வளவு மதிப்பு இல்லை. குழுப்பற்றுக்கு மட்டுமே மதிப்பு வளரும். ஆகையால் நீதியின் வரம்புகளை எளிதில் கடப்பதற்குச் சாதி சமயம் முதலிய குறுகிய பற்றுக்கள் உதவி புரியும். ஒழுங்குமுறையை மீறியும் சட்டத்தைக் கடந்தும் தன் சாதியாருக்கும் தன் சமயத்தாருக்கும் உதவி செய்கின்றவனை மட்டுமே அந்தச் சாதியாரும் சமயத்தாரும் போற்றுவார்கள் ; பாராட்டுவார்கள். அதுமட்டும் அல்லாமல், ஒருவன் ஊழல் உடையவனாகத் தெரிந்தபோதும் அந்தச் சாதியாரும் சமயத்தாரும் அவனுடைய ஊழலை மறைப்பதற்கே முயல்வார்கள்.

நீதி என்பது எல்லோருக்கும் பொதுவாக விளங்கினால் தான் அதற்கு வல்லமை ஏற்படும். தவறு செய்தவன் தன்னைச் சேர்ந்தவன் என்ற காரணத்தால் அவனைப் போற்றக் கூடாது. நன்மை செய்தவன் தனக்கு ஆகாதவன்

என்ற காரணத்தால் அவனைப் பற்றிப் பழி தூற்றவும் கூடாது. நீதியின் முன்னிலையில் தம்மவர் பிறர் என்று வேறுபாடு இருத்தல்கூடாது. அவ்வாறு அமைந்தால் தான் சமுதாயத்தில் நீதி நிலைக்கும். தம்மவர் குறைகளை மறைத்துப் பிறருடைய குறைகளைப் பெரிதாகத் தூற்றுவது நீதிக்கு மாறானபோக்கு ஆகும். சாதி சமயம் முதலிய வேறுபாடுகள் அந்தப் போக்கைத்தான் இன்று வளர்த்து வருகின்றன.

இன்று அலுவலகத்தில் ஒருவன் நடுநிலையாக இருந்து தன் கடமையை மட்டும் ஒழுங்காகச் செய்துகொண் டிருந்தால் அவனை ஒருவரும் மதிப்பதில்லை. அவனுக்கு எந்த முன்னேற்றமும் வாய்ப்பதில்லை. அவனுக்குப் பலரும் பகை யாவதும் உண்டு. அவனுடைய உண்மையான உழைப்பையும் நடுநிலைமையையும் தெய்வம்தான் போற்ற வேண்டும். அவனைச் சார்ந்தவர்கள் யாரும் போற்றுவதில்லை. நேர்மாறாக அதே அலுவலகத்தில் மற்றொருவன் ஊழல் உடையவனாக இருப்பவனாக வைத்துக்கொள்வோம். அவன் தன்னைச் சார்ந்தவர்களுக்கும் தன் சாதியார் முதலானவர் களுக்கும் வலியச் சென்று முனைந்து உதவி செய்வதாக வைத்துக்கொள்வோம். நியாயத்தைப் பொருட்படுத்தாமல் அவன் குறுக்கு வழிகளை நாடித் தன் கூட்டத்தார்க்கு உதவுகின்றான். யாருக்கோ வர வேண்டிய நன்மையை அவருக்கு வராமல் செய்து தன்னைச் சார்ந்தவர்களுக்கு வருமாறு செய்கிறான். அதற்காக முறை தவறி நடப்பதற் குத் தயங்குவதே இல்லை. அவனுடைய வாழ்க்கை என்ன ஆகும்? திருவள்ளுவர் கூறுவதுபோல் அவன் தாழ்வுற்று அழிவதில்லை. அதற்கு மாறாக அவன் வாழ்க்கையில் வளம் பெறுகிறான். அவனால் உதவி பெற்ற அவனுடைய கூட்டத்தார் அவனுக்கு அரணாக நிற்கிறார்கள். அவனுக்குச் சிறு தீமை வந்தாலும் பண உதவி முதலியன செய்து

அவனைக் காப்பாற்றுகிறார்கள். அவனுடைய பெயருக்கு மாசு ஏற்பட்டாலும் அவர்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்து அதை மறைக்கிறார்கள். அவன் ஏதேனும் குற்றம் செய்தாலும் அவன் குற்றம் அற்றவன் என்று முன்வந்து உறுதி கூறுகிறார்கள். அவனுக்குமேல் உள்ளவர்களை யெல்லாம் புறக்கணித்தாவது அவனுக்குப் பதவி உயர்வு கிடைக்குமாறு அவர்கள் எல்லோரும் கை கொடுத்து உதவுகிறார்கள். ஆகையால் நடுநிலைமையும் உண்மையும் போற்றிக் கடமையைச் செய்கின்றவன் மூலையில் மங்கிக் கிடக்க, நேர்மையைத் துறந்து குறுக்குவழிகளால் தன்னைச் சார்ந்தவர்களுக்கு உதவி செய்கின்றவன் ஊழல் மலிந்தாலும் உயர்வு பெற்று விளங்குகின்றான். சாதி சமயம் முதலிய வேறுபாடுகளால் பிளவுபட்ட சமுதாயத்தில் இது இயல்பாக உள்ளது.

லஞ்சம் வாங்கியாவது பிறர் கேட்பதைச் செய்து முடிக்கின்றவன் இன்று அலுவலகங்களில் திறமை உடையவனாகப் போற்றப்படுகின்றான். லஞ்சம் வாங்காமல் நடுநிலைமையாகக் கடமையைச் செய்கின்றவனைக் குறித்துப் பலரும் புறக்கணித்துப் பேசும் காலம் இது. உதவாக்கரை என்று அவன் பழிக்கப்படுகின்றான். "நான் இவ்வளவு பணம் கொடுத்தேன். உடனே அவர் அந்தக்காரியத்தை முடித்துக் கொடுத்தார். அவர் இல்லையானால் அது முடிந்திருக்காது. அவரைத்தான் தெய்வமாகப் போற்ற வேண்டும்" என்று லஞ்சம் கொடுத்தவர்கள் நேர்மை யற்றவனைப் போற்றும் காலம் இது. எவ்வளவு நன்மை விளைவதானாலும் நடுநிலைமை கடந்து கிடைக்கும் பயனை விலக்கிவிட வேண்டும் என்று திருவள்ளுவர் கூறுகிறார். ஆனால் இன்று தலைகீழான முறையே செல்வாக்காக உள்ளது. தன்னலத்திற்காக நீதியையும் நேர்மையையும் எந்த அளவிற்கும் கைவிட்டு எப்படியாவது பயன் பெறுவதிலேயே இப்போது பலரும் கண்ணும் கருத்துமாக இருக்கின்றார்கள்.

அவர்கள் தான் வாழத் தெரிந்தவர்களாகக் கருதிப் பலரா லும் போற்றப்படுதலைக் காண்கிறோம்.

தொடக்கத்தில் தொழிலை ஒட்டி அமைந்த பிரிவுகள் நாளடைவில் பிறப்பை ஒட்டி மக்களைப் பிரிக்கும் சாதிக ளாக வளர்ந்தன. அன்றே இந்த நாட்டின் சீரழிவு தொடங் கியது என்று சொல்லலாம். காலப் போக்கில் ஒரு குலத் துக்கு ஒரு நீதி என்ற முறை வளர்ந்து சமுதாயத்தில் வடுக் கள் ஏற்படுத்திவிட்டது. நீதி என்ற பெயரால் அநீதி வளர்ந்தது. அதன் பயனை இந்த நூற்றாண்டிலும் பலரும் அனுபவிக்க நேர்ந்துள்ளது. "இன்ன சாதியில் பிறந்த காரணத்தால் என் நிலைமை இப்படி இருக்கிறது" என்று கலங்குவோர் பலரைக் காண நேர்ந்துள்ளது. தாழ்ந்த சாதி உயர்ந்த சாதி என்ற வேறுபாடு இல்லாமல் எல்லாச் சாதி யாருமே இன்று துன்பப்பட வேண்டிய நிலை உள்ளது. சாதிக்கு ஒரு நீதி என்று நீதியைப் பறிகொடுத்த காரணத் தால், இன்று ஒவ்வொரு சாதிக்கும் ஒவ்வொரு வகைத் துன்பம் உள்ளது. எல்லோரும் சேர்ந்து ஊழலைப் போக்கும் முயற்சி இல்லாமல் கூட்டம் கூட்டமாகப் பிளந்து ஊழலை மறைக்கும் முயற்சி உள்ளது. பொதுவான மருந்து தேடி னால் அல்லாமல் நோய் தீரப் போவதில்லை.

உயர்ந்த நோக்கத்தோடு சான்றோர்கள் ஏற்படுத்திய சமயங்களும் ஊழல்மலிந்த இந்தச் சமுதாயத்தைத் திருத்த முடியவில்லை. அறிவியல் வளர்வதற்கு முன்னே பலருக்கும் தெய்வ பயம் இருந்தது. நேர்மைதவறினால் தெய்வம் தண் டிக்குமே என்ற அச்சத்தால் ஒழுங்காக நடக்கும் முயற்சி ஓரளவு இருந்துவந்தது. அறிவியல் வளர்ந்த பிறகு அந்த அச்சம் குறைந்துவருகின்றது. அதுவும் அல்லாமல் என்ன தவறு செய்தாலும் சில அருச்சனை அபிசேகங்கள் செய்துவிட்டால் தெய்வத்தின் தண்டனையிலிருந்து தப் பித்துக்கொள்ளலாம் என்ற மூட நம்பிக்கை வளர்ந்து

விட்டது. ஒருவன் செய்த குற்றத்தினால் விளையும் மாசு தெய்வத்திடம் கசிந்துவிடும் கண்ணீரால்தான் கழுவப்படும் என்று முன்னோர்கள் நம்பினார்கள். தெய்வத்தின் பேரால் கொஞ்சம் பணம் செலவு செய்வதாலேயே அந்த மாசு நீங்கி விடும் என்று இக்காலத்தவர் பலர் நம்புகிறார்கள். அலுவலருக்கு (ஆபீசருக்கு) லஞ்சம் கொடுத்து உதவி பெறுவது போலவே, தெய்வத்துக்கும் லஞ்சம் கொடுத்து உதவி பெற முடியும் என்ற மூட நம்பிக்கை பரவியுள்ளது. அறத்தையே தெய்வம் என்று வழிபட்ட உயர்ந்த நிலை மாறி, பணம்கொடுத்துத் தெய்வத்தின் உதவியை விலைக்கு வாங்க முயலும் இழிநிலைவந்துள்ளது. ஊழல்மிகுந்தவர்க்குஎல்லாம் இது நல்ல துணை போல் உதவுகின்றது. திரும்பத் திரும்பக் குற்றங்களையே செய்துவிட்டு லஞ்சம் கள்ள வாணிகம் முதலியன மேற்கொண்டு. தெய்வத்தின் பெயரைப் பயன்படுத்தி ஊழல்களை மறைக்க முயல்கின்றார்கள். ஊழல்களைப் போக்கத் தோன்றிய சமயங்களை அவர்கள் தங்கள் ஊழல்களை மறைப்பதற்கே பயன்படுத்துகின்றார்கள். அவர்களின் போக்குக்குச் சமயம் ஒரு கருவியாகிவிட்ட காரணத்தால், சாதி கட்சி முதலிய பெயர்களால் குழு அமைத்துக் கொள்வது போலவே, சமயத்தின் பேராலும் குழு அமைத்து அதையே அரணாகக் கொண்டு வாழ்கின்றார்கள். அவ்வாறு அரண் அமைந்த பிறகு ஒரு சமயத்தார் தம்மைச் சார்ந்தவர்களின் குற்றத்தையும் ஊழலையும் மறைத்துக் காப்பாற்ற முயலுகிறார்கள். இவ்வாறு மற்றச் சமயத்தாரும் அவரவர் குற்றங்களையும் ஊழல்களையும் மறைப்பதையே கடமையாகக் கொள்வதால் ஊழல்கள் நன்றாக வேரூன்றி வாழ்கின்றன.

கீழ் மக்கள் ஒழுங்காக வாழ வேண்டுமானால் பெரும்பாலும் அச்சத்தால்தான் அது முடியும் என்றும், சிறுபான்மை ஆசையினாலும் முடியும் என்றும் திருவள்ளுவர் கூறுகின்றார். ஊழல் மலிந்த சமுதாயம் திருந்துவதற்கும் அந்த

இரண்டுமே உதவும் என்று கூறலாம்.

அச்சம் எப்படி உதவும்? நேர்மையும் உண்மையும் வடிவான தலைவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்க வேண்டும். அவர்கள் வலிமையான சட்டங்களால் ஆளத் தொடங்க வேண்டும். மக்களாட்சி என்றும் ஒத்த உரிமை என்றும் வழங்கும் உயர்ந்த கொள்கைகளைச் சிறிது காலத்திற்கு ஒத்திவைக்க வேண்டும். அடுத்த முறையும் தேர்தலில் வெற்றிபெற வேண்டும் என்ற ஆசை சிறிதும் இல்லாமல் இந்த ஒரு முறையிலே இயன்றவரையில் பெருந் தொண்டு செய்து விட்டுப் போய்விட வேண்டும் என்ற துணிவுடன் ஆட்சிப் பொறுப்பை ஏற்க வேண்டும். ஐந்தாண்டுக் காலம் முழுவதும் பதவி நீடிக்கா விட்டாலும் உள்ள சில ஆண்டுகளில் நேர்மையை நிலைநிறுத்துவோம் என்ற ஆர்வம் வேண்டும். அத்தகைய தலைவர்கள் ஊழல் உடையவர்களைக் கடுமையாகத் தண்டிக்க வேண்டும். லஞ்சம் கள்ள வியாபாரம் ஒழுங்குமீறல் முதலிய எதற்கும் கடுந்தண்டனை விதிக்க வேண்டும். அந்தக் கடுமைக்கு அஞ்சும் அச்சத்தால் சமுதாயம் கட்டாயம் திருந்தும்.

ஆசை எப்படி உதவும்? சொர்க்கம் இந்திர போகம் முதலியவைகளைப் பற்றிய ஆசைகளை ஊட்டுவதனால் இன்றைய மக்களின் நெஞ்சத்தில் நேர்மையை நிலைநிறுத்த முடியாது. சமயச் சடங்குகளைப் போற்றிக் கூறுமல், உண்மையான சமயக் கொள்கைகளை மட்டும் தெளிவாக உணரச் செய்வதால் ஓரளவு பயன் விளையும். ஆனல் சமய உண்மையைத் தெளிவதற்கு வேண்டிய மனநிலை எல்லோர்க்கும் ஏற்பட முடியாது. ஆயிரத்தில் ஒருவருக்குத்தான் அது அமையும். மற்றவர்களைத் திருத்த வழி என்ன? ஆசை காட்டிக் கீழ் மக்களைத் திருத்தலாம் என்றுர் திருவள்ளுவர். ஆசைகளைக் குறைத்து, பல ஆசைகளுக்கு இடம் இல்லாமல் செய்து சமுதாயத்தைத் திருத்த முடியும். இது

இன்றைய சான்றோர்கள் பெற்ற தெளிவு. தனி மனிதர் ஆசைகளைத் துறப்பதால் பயன் உண்டு என்பது திருவள்ளுவர் கொள்கை. ஆசைகள் பெருகுவதற்கு வழி இல்லாமல் சமுதாயத்தை அமைத்தால் பயன் உண்டு என்பது இன்றைய சான்றோர்களின் நம்பிக்கை. நான் நீ என்று முந்திக் கொண்டு பொருள் தேடிப் பிழைக்க வேண்டிய நெருக்கடி உள்ள காலம் இது. அதனால் லஞ்சமாகப் பெறும் பணத்திற்கும் குறுக்குவழிகளால் அடையும் உதவிக்கும் மதிப்பு உள்ளது. அந்த மதிப்பை அகற்றிவிட வேண்டும். மிகுதியாகப் பொருள் (பணம்) சேர்க்க இடம் இருக்கக் கூடாது. சேர்த்த பணத்திற்குப் பயனும் இருக்கக்கூடாது. நாட்டில் அப்படிப்பட்ட பொருளாதார நிலை அமைந்துவிட்டால் லஞ்ச ஆசை ஒழியும். குறுக்கு வழிகளை ஒழிக்கவும் முடியும். பிறந்தவர்கள் எல்லோர்க்கும் வாழ்வு உண்டு; தொழில் செய்வோர் எல்லோர்க்கும் உணவு முதலியன உண்டு; ஆனால் தேவைக்கு ஏற்ற அளவே உண்டு; ஆசைக்கு ஏற்ற அளவு இல்லை என்று சமுதாயம் அமைந்துவிட்டால், சாதி முதலிய அரண்களைத் தேடுவோர் இருக்க மாட்டார்கள். அந்த அரண்களில் மறைந்து வாழும் ஊழல்களும் இல்லாமல் போகும். ஊழல்களை ஒழிப்பதற்கு இவைகளே சிறந்த வழிகள் ஆகும்.

14. புகழ்தலும் பழித்தலும்

இது பயனுள்ள செயல், இது பயனில்லாத செயல் என்று செயலைப் புகழ்வதும் பழிப்பதும் ஒருவகை. நீ பய னுள்ளவன், நீ பயனில்லாதவன் என்று ஆளைப் புகழ்வதும் பழிப்பதும் மற்றொரு வகை. இந்த இருவகையும் வேறு பாடு இல்லாதவை போலவே தோன்றும்; ஒரே அடிப் படையும் ஒரே நோக்கமும் ஒரே பயனும் உள்ளவை போலவே தோன்றும். ஆனால் இரண்டும் நுட்பமான வேறுபாடு உள் ளவை. அடிப்படை வேறு; நோக்கம் வேறு; பயனும் வேறே. இரண்டிற்கும் ஒற்றுமை இல்லையா எனின், ஒன்று உண்டு; அது என்ன? இரண்டும் ஒரே காரணத்தால் எழுந் தவை; குணம் அல்லது குற்றம் கண்டு எழுந்தவை.

செயலைப்புகழும் நெஞ்சத்திலும் பழிக்கும் நெஞ்சத்திலும் அடிப்படையில் பொதுநலம் வாழும். ஆளைப் புகழும் நெஞ்ச மும் பழிக்கும் நெஞ்சமும் தன்னலம் மிகுந்திருக்கும். செயலைப் புகழ்வோர்க்கும் பழிப்போர்க்கும் எதையோ வளர்க்க வேண் டும் திருத்த வேண்டும் என்ற நோக்கம் உண்டு. ஆளைப் புகழ்வோர்க்கும்பழிப்போர்க்கும்தன்னைவளர்த்துக்கொண்டு பிறரைப் புறக்கணிக்கும் நோக்கம் உண்டு. செயலைப் புகழ்வ தால் செய்தவர்க்கு மேன்மேலும் ஊக்கமும் முயற்சியும் பிறக்கும். செயலைப் பழித்தாலும் குற்றம் உணர்ந்து திருந்தும் ஆர்வமும் அடக்கமும் வளரும். ஆளைப் புகழ்வதால், புகழப் பட்டவர்க்குச் செருக்கு வளரும்; மற்றவர்க்குப் பொறாமை

வளரும். ஆளைப் பழித்தால், பகையும் கேடும் பெருகும்.

இந்த உண்மையை வேறுபட்ட இரண்டு குடும்பங்களில் வைத்து உணரலாம்; வேறுபட்ட இரண்டு கூட்டங்களில் வைத்து உணரலாம்; வேறுபட்ட இரண்டு நாடுகளின் வரலாற்றிலும் வைத்துக் காணலாம்.

முன்னேறுகின்ற குடும்பத்தில் ஒருவரையொருவர் பழித்துக்கொண் டிருக்க மாட்டார்கள்; புகழ்ந்துகொண்டும் இருக்க மாட்டார்கள். அவரவர் கடமைகளைச் செய்து முடிப்பார்கள்; செயல்களின் குணம் குறைகளைச் சீர்தூக்குவார்கள். அந்தக் குடும்பம் நாளுக்கு நாள் உயர்ந்து விளங்கும். அங்கு முயற்சியும் பெருகும்; ஒற்றுமையும் நிலவும்.

ஒருவரை ஒருவர் பழித்துவாழும் குடும்பத்தில், வெளியாருக்குப் பழிப்புரையும் குற்றமுமே கேட்டுக் கேட்டு, குடும்பத்தைப் பற்றிய நல்லெண்ணம் போய்விட்டிருக்கும். இவன் இன்ன காரணத்தால் இழிந்தவன், இவள் இன்ன காரணத்தால் தாழ்ந்தவள் என்ற செய்திகள் மட்டும் எட்டி, வெளியார் அந்தக் குடும்பத்தையே மதிக்காமல் புறக்கணிப்பார்கள். குடும்பத்திற்குள் பொதுவான குறிக்கோள் போய்விட்டிருக்கும். இவரை ஒழித்து அவர் வாழ்வதற்கும், அவரைத் தாழ்த்தி இவர் உயர்வதற்கும் உரிய தன்னல முயற்சிகள் தலையெடுக்கும். என்னைப் புகழவில்லையே என்ற பொறுமை சிலரிடமும், என்னைப் பழித்தானே என்ற பகைமை சிலரிடமும் வளர்ந்து, அவற்றால் குடும்ப ஒற்றுமை சிதையும்.

முன்னைய குடும்பத்தில் உள்ளவர்கள் அளவான அறிவும் ,ஆற்றலும் உடையவர்களாக இருக்கலாம். இருந்தாலும் அதுதான் அன்பால் பிணைப்புண்டு ஒற்றுமையாய் முன்னேறும்.

பின்னைய குடும்பத்தில் சிலர் பேரறிவும் பேராற்றலும் வியக்கத்தக்க கலைத்திறனும் உடையவர்களாக இருக்கலாம்.

இருந்தாலும், வெளியுலகம் அவர்களை மதிக்காது; அந்தக் குடும்பம் பொறாமைக்கும் பகைமைக்கும் இரையாகி ஆற்றலையும் திறனையும் வீணாக்கி அல்லலுறும்.

இந்த வேறுபட்ட நிலையையும் போக்கையும் இருவகைக் குழுவினர்க்குள் வைத்து உணரலாம்; கூட்டுறவு நிலையம், கல்விநிலையம், நிதிநிலையம், நகர்மன்றம் முதலான அமைப்புகளிலும் வைத்து உணரலாம்.

அறிவும் ஆற்றலும் திறனும் குறைந்தவர்களின் அமைப்புகள் ஒற்றுமையாய் முன்னேறுவதையும், மிக்க அறிவும் திறனும் பெற்றவர்களின் அமைப்புகள் கலங்கி அழிவதையும் ஆங்காங்கே கண்டு மேற்கூறிய நிலையையும் போக்கையும் வேறுபடுத்தி அறியலாம்.

ஒரு நகர்மன்றத்தில் தலைவர் துணைத்தலைவரைப் பழிக்க, உறுப்பினர் சிலர் இவரைப் பழிக்க, சிலர் அவரைப் பழிக்க, உறுப்பினரே அவர்களுக்குள் ஒருவரை ஒருவர் பழிக்க, ஆணையாளர் அனைவரையும் சேர்த்துப் பழிக்க, மன்ற அலுவலகத்தார் சமயம் போல் விருப்பம் போல் சிலரைப் பழிக்கச் சிலரைப் புகழ இவ்வாறு நகராட்சி நடைபெறுமானால், அந் நகர மக்கள் என்ன எண்ணுவார்கள்? பலருடைய குறையும் பழியும் பலமுறை கேட்டிருப்பதால், தலைவரும் தகுதியற்றவர், துணைத்தலைவரும் தகுதியற்றவர், உறுப்பினர்களிலும் பலர் தகுதியற்றவர் என்றெல்லாம் எண்ணங்கள் ஏற்பட்டுவிடும். பொதுவாக ஊரே மட்டமான ஊர் என்ற கருத்து ஏற்படும். நாளடைவில் நகர்மன்ற உறுப்பினர்களே தம்முடைய மன்றம் மட்டமானது என்ற தாழ்வுமனப்பான்மை கொள்வார்கள். எவ்வளவோ திறனும் ஆற்றலும் அறிவும் பெற்ற உறுப்பினர்கள் இருந்தபோதிலும், அந்த இழிநிலையே ஏற்படும். அவ்வளவு திறனும் ஆற்றலும் அறிவும் இல்லாத மன்றங்கள் வேறு சில ஊர்களில் பயனுள்ள வகையில் செயலாற்றி நற்பெயர் பெற்று

வாழ்தலும் உண்டு. இந் நிலைகளுக்குக் காரணங்கள் என்ன என்று ஆராய்ந்தால், மேற் கூறிய உண்மை தெளிவாக விளங்கும்.

தமிழ்நாடு அறிவும் ஆற்றலும் திறனும் மிகுந்த நாடு; மற்ற நாடுகளை விடப் பல வகையில் உயர்ந்த நாடு. ஆயினும் இன்று மதிக்கத்தக்க சிறப்பு உள்ள நாடாக இல்லை; பிறர் மதிப்பதும் அவ்வளவாக இல்லை. ஒற்றுமை இல்லை; உரிமையுணர்வு இல்லை; ஊக்கமும் விழிப்பும் இல்லை; ஆக்கப் பணிகள் குறைவு; ஏதோ வாழ்ந்துவருகிறது இந்த நாடு.

வரலாறு இதன் உயர்வை எடுத்துச்சொல்கிறது; இலக்கியம் இதன் பண்பாட்டைப் பறைசாற்றுகிறது; கலைகள் இதன் மேம்பாட்டை விளக்கிநிற்கின்றன; இயற்கையமைப்பும் இதற்கு நன்சான்று கூறி உறுதுணை புரிகிறது. ஆயினும் இந் நாடு போதிய முன்னேற்றம் பெறவில்லை. தாய் மொழியிலே அறிவுப் பயிற்சி பெற முடியாது என்பது முதல், எதிர்காலத்தில் எடுப்பான வாழ்வுக்கு வழி இல்லை என்பது வரையில் பலவகையான தாழ்வுமனப்பான்மைகள் இங்கே குடிகொண்டுள்ளன. நாடு உருப்படுவது எப்படி என்ற ஏக்கத்திற்கு இடையில், உருப்படுவது அரிது என்ற நம்பிக்கையில்லாத் தன்மையும் உள்ளது. சோர்ந்த ஒவ்வொரு வேளையில் தொண்டர்கள் முதல் தலைவர்கள் வரையில் பலருக்கு இந்த எண்ணம் வந்து செல்கிறது; சிலர் இதை வாய்விட்டும் சொல்கின்றனர். தமிழ்ச் சாதியின் கதி என்ன என்று பாரதியார் ஏங்கிய ஏக்கமும் இதனை ஒருவாறு புலப்படுத்துகிறது.

செயலைப் புகழ்ந்து ஊக்கம் ஊட்டுவதும், குறை கூறிச் சீர்திருத்துவதும், இந்த நாட்டு அரசியலில் குறைவு. ஆளைப் புகழ்ந்து செருக்கு ஊட்டுவதும், பழித்துக் கேடு சூழ்வதும் மிகுதி. அதன் பயனாக முயற்சியும் ஆர்வமும் குன்றின; பொறாமையும் பகைமையும் வளர்ந்தன.

செயலைச் சீர்தூக்கிப் பாராட்டுவதிலும் குறை கூறுவதிலும் சுவை இல்லை; விறுவிறுப்பு இல்லை. ஆளைப் புகழ்வதிலும் பழிப்பதிலும் சுவை உண்டு; விறுவிறுப்பு உண்டு; உணர்ச்சி உடனே கிளர்ந்தெழ முடிகிறது; உடனே பயன் காண முடிகிறது. செயலைச் சீர்தூக்க அடக்கமும் அமைதியும் தேவை. ஆளைப் புகழவும் பழிக்கவும் உணர்ச்சியும் வேகமும் தேவை. தமிழ்நாடு புகழையும் பழியையும் ஒரு கலை போல் வளர்த்துவந்துவிட்டது. மூவேந்தர்கள் ஆண்ட காலம் முதலாகவே இந்தக் கலையில் நல்ல வளர்ச்சி ஏற்பட்டுவிட்டது. இன்று அந்த வளர்ச்சியும் நல்ல வளமும் காணப்படுகின்றன. வட நாட்டுத் தலைவர்கள் இங்கே வரும்போது அது நன்கு புலப்படுகிறது. இங்குத்தான் பதினாயிரக் கணக்காக, நூறாயிரக் கணக்காக மக்கள் திரண்டுகூடி வரவேற்கின்றனர்; மணிக் கணக்காகக் காத்திருந்து போற்றுகின்றனர்.

எதனாலும் நன்மை தீமை இருப்பது போல், வீர வழிபாட்டாலும் நன்மையும் உண்டு; தீமையும் உண்டு. ஆனால் ஒரு நாட்டின் மக்கள் ஆளும் குடியாட்சி முறைக்கு வீர வழிபாடு நல்லது ஆகாது. தலைவன் மக்களின் விருப்பத்திற்கு ஓர் அறிகுறியாக இருத்தல் வேண்டுமே தவிர, மக்களின் வழிபாட்டுக்கு இலக்காக இருத்தல் ஆகாது. இன்று தலைமை தாங்குபவனை மதித்தால்; அந்தப் பதவிக்காக மதித்தல் வேண்டும்; ஆளுக்காக மதித்தல் கூடாது; இவ்வாறு அமையும் மதிப்பே குடியாட்சி முறைக்குப் பொருந்துவது. முடிமன்னர் ஆள்வதாகக் கூறப்படும் பிரிட்டனிலும் இத்தகைய மதிப்பே இருத்தல் காணலாம்.

இந்தியாவிலேயே மற்ற நாடுகள் (மாநிலங்கள்) இவ்வளவு வீர வழிபாடு செய்வதில்லை; இவ்வளவு பெருந்திரளாகச் சேர்வதில்லை. இவ்வளவு புகழ்ச்சியும் இல்லை; இவ்வளவு பழிப்புரையும் இல்லை; தமிழ்நாட்டு மேடை

களும் செய்தித்தாள்களுமே புகழுரையும் பழிப்புரையும் மலிந்துள்ளன என்பர்.

அண்ணனும் தம்பியும் தந்தையும் மக்களும் தமக்கையும் தங்கையும் கணவனும் மனைவியும் ஒற்றுமையின்றிப் பொறுமையும் பகைமையும் கொண்டு வாழும் குடும்பத்தில் என்ன காணப்படும்? கணவன் தொடங்கியது நல்ல கடமையே ஆனாலும், நமக்கு என்ன என்று மனைவி ஒதுங்குவாள். மக்கள் தொடங்கிய கடமையில் தந்தை வெறுப்புக் காட்டுவார். தமக்கையின் செயலைத் தங்கை ஆதரிக்க மாட்டாள்; அண்ணன் முன்வந்த செயலுக்குத் தம்பி இடையூறு செய்வான். இவ்வாறே ஒவ்வொரு கடமையும் இடர்ப்பட்டு இடர்ப்பட்டுக் குடும்பம் சீர்கேடு எய்தும். புகழும் பழியும் பொறுமையும் பகைமையும் மலிந்த நாட்டிலும் நல்ல முற்போக்கான கடமைகளும் கருத்துக்களும் இவ்வாறே இடர்ப்பட்டு நலியும். தமிழ்நாட்டின் நிலை இதுவே. அரசியல் கட்சிப் பிணக்குகளும் போர்களும் தேர்தல்முறைகளும் இந்த நிலையை வளர்க்கவே பயன்படுகின்றன.

தமிழ்நாட்டின் அறிவுக்கோ ஆற்றலுக்கோ திறனுக்கோ என்றும் பஞ்சம் நேர்ந்ததில்லை. சென்ற தலைமுறையிலும் நுண்ணறிவு மிக்கவர் பலர் இருந்தனர்; எழுத்து வன்மை வாய்ந்தவர் பலர் இருந்தனர்; பேச்சாற்றல் மிக்கவர் பலர் இருந்தனர்; செயல்திறன் உடையவர் பலர் திகழ்ந்தனர். இந்தத் தலைமுறையிலும் அத்தகையோர் பலர் உள்ளனர். ஆயினும் "நாடு உருப்படுவது எப்படி?" என்ற ஏக்கம் பலருடைய உள்ளத்தில் உள்ளது; சிலருடைய வாயிலும் வெளிப்படுகிறது. ஆகவே, அறிவும் ஆற்றலும் திறனும் மிகுந்திருந்தும் முன்னேறாமல் இடர்ப்படுவதற்குக் காரணம், ஒன்றுபட்டுச் செயலாற்ற முடியாத குறையே ஆகும். மேற்கூறியவாறு அடிப்படையும் நோக்கமும் திருந்தினால் அன்றி ஒன்றுபடுவது இயலாதது ஆகும்.

15. புகழும் பாராட்டும்!

பழங்காலத்தில் கிராமங்களில் பள்ளிக்கூடத்து ஆசிரியர்க்கு மாணவர்கள் குற்றேவல் செய்தார்கள்; மாணவர்களின் பெற்றோர்கள் உணவுப் பொருள்களைக் கொடுத்து உதவினார்கள். கிராமத்துக் கணக்குப் பிள்ளை முதலியவர்களுக்கும் ஊரார் பொருளுதவி செய்துவந்தார்கள்.

இந்தக் காலத்தில் அவ்வாறு உதவி செய்வது தவறாகக் கருதப்படுகிறது. ஓர் அலுவலகத்தில் உள்ள ஊர்க்குக்கோ மற்றவர்களுக்கோ பணம் கொடுத்தால், அது லஞ்சம் (கையூட்டு) என்று கருதப்பட்டுக் குற்றம் ஆகிறது.

காரணம் என்ன?

இந்தக் காலத்தில் ஆசிரியர் முதலானவர்களுக்கு ஓர் அமைப்பிலிருந்து சம்பளம் கிடைக்கிறது. மாதச் செலவுக்குப் போதுமானதாகக் கருதப்படும் சம்பளம் தரப்படுகிறது. ஆகையால், ஊராரிடமிருந்து நேரே பண உதவியோ பொருள் உதவியோ பெறுவது லஞ்சம் (கையூட்டு) என்று குற்றமாகக் கொள்ளப்படுகிறது. பழங்காலத்தில் ஊராரின் உதவியைக் கொண்டே ஆசிரியர் முதலானவர்கள் வாழ வேண்டியிருந்தது. ஆதலால் அது குற்றமாகக் கருதப்படவில்லை.

இந்தக் காலத்திலும் பொருள் பெற்றால் என்ன, அது எப்படிக் குற்றம் ஆகும் என்று கேட்கலாம்?

பொருள் அல்லது பணம் (லஞ்சமாகப்) பெற்றுக் கொள்பவர், இருவகையில் குற்றம்செய்தவராகிருர். ஒன்று: அவர்க்கு வரையறுத்த சம்பளத்துக்குமேல் பிறர் அறியாமல் பணம் பெறுவதால், களவு ஆகிறது. மற்ருென்று, சட்டப்படி, முறையாகச் செய்யும் உதவியாக இருந்தால், யாரும் அதற்காகப் பணம் தர மாட்டார்கள். மற்றவர்களை விட முந்தியோ, அல்லது சட்டத்தை மீறியோ செய்யும் உதவியாக இருந்தால்தான் யாரும் பணம் தருவார்கள். ஆகையால் அது முறை மீறிய குற்றம் ஆகிறது.

பணம் தருபவரும் இருவகையில் குற்றம் செய்கிருர். ஒன்று, தரும் பணம் நன்கொடை அன்று; பிறர் அறியாமல் தருவதால், தன்னலம் கருதிப் பொதுநலத்துக்கு மாருகத் தருவதால் குற்றம் ஆகிறது. மற்ருென்று, சட்டப்படி கிடைக்கும் நன்மைக்குக் காத்திராமல், மற்றவர்களைவிட முந்தியோ அல்லது சட்டத்தை மீறியோ உதவி பெற முயல்வதால், முறை மீறிய குற்றம் ஆகிறது.

பொருள் தருவது அல்லது பணம் தருவது மட்டுமே லஞ்சம் என்று எல்லாரும் கருதுகிருர்கள். பொருள் அல்லது பணம் செய்யும் அதே குற்றத்தை மற்ருென்று செய்யுமானல், அதுவும் லஞ்சம் என்றே கருதப்பட வேண்டும்.

சிலர் பொருள் பெற்றுக்கொள்ள மாட்டார்கள்; பணம் பெற்றுக்கொள்ள மறுப்பார்கள்; ஆனல் புகழ் அல்லது பாராட்டுப் பெற்றுக்கொள்வார்கள். அதுவும் மேற்சொன்ன குற்றங்களுக்கு இடம் தருமானல், அதையும் லஞ்சம் என்றே கொள்ள வெண்டும்.

பொருள் தேடுவதும் பெறுவதும் மனிதர்க்கு இயல்பான ஆசையாக இருப்பது போலவே, புகழ் அல்லது பாராட்டுத் தேடுவதும் பெறுவதும் மனிதர்க்கு இயல்பான ஆசையாகும். ஆனல் பொதுநலத்துக்கும் முறைக்கும் மாருகப் பொருளாசை ஏற்பட்டால் அதை லஞ்சம் என்று

பழிப்பது போலவே, பொதுநலத்துக்கும் முறைக்கும் மீறிச் செல்லும் புகழாசையையும் லஞ்சம் என்று பழித்து ஒதுக்க வேண்டும்.

புகழ் அல்லது பாராட்டு என்று தொடங்கிவிட்டால், அது ஒரு வரம்போடு நிற்பது அரிதாகிறது. உரிமை எங்கே, உரிமை மீறுவது எங்கே என்பது புகழிலும் பாராட்டிலும் தெரிவதில்லை. பொருள் அல்லது பணமாக இருந்தால், கொடுப்பவர்க்கும் அளவு தெரிகிறது; பெறுபவர்க்கும் அளவு தெரிகிறது. அளவுக்குமேல் யாரும் தருவதில்லை. புகழ் பாராட்டு என்றால், பெரும்பாலும் நாவின் அளவில் சொல்வடிவாக இருப்பதால், கொடுப்பவர்க்கும் குறைவதில்லை. பெறுபவர்க்கும் மிகுவதில்லை. மற்றும் ஒன்று: பணம் அல்லது பொருள் லஞ்சமாகக் கொடுக்கும் போது, பிறர் அறியாமல் மறைத்துத் தருவதும் பெறுவதும் உள்ளன; புகழ் அல்லது பாராட்டு என்றால் அச்சம் இல்லாமல் வெளிப்படையாகப் பிறர் அறிய நடைபெறுகிறது. ஆகவே, மற்ற லஞ்சத்தைவிட இது பொல்லாதது என்றும் கருத வேண்டியுள்ளது.

இன்று பலர் இதை உணரவில்லை என்பதாலேயே, உண்மை பொய்யாகிவிடாது. இப்பொழுது விளங்காத சில உண்மைகள் காலப்போக்கில் மட்டுமே விளங்கும்; இளமையில் விளங்காத உண்மைகள் சில முதுமையில் விளங்குவது போல.

மேல் நிலையில் உள்ளவர்களைப் புகழ்ந்தும் பாராட்டியும் அவர்களின் மனத்தை நெகிழச் செய்வது எளிது. அதனால் சட்டத்தைச் சிறிது மீறி மற்றவர்களை விட முந்திக்கொள்ள உதவி செய்வதும் உதவி பெறுவதும் கைகூடுகின்றன. முறை மீறி உதவி பெறுவதால், பொதுநலத்துக்கு இடையூறான குற்றம் ஆகிறது.

உண்மையான ஆத்திகராயின், இறைவனைப் புகழாமல்

பாராட்டாமல், மனிதரைப் புகழ்வது குற்றம் ஆகிறது. ஆத்திகர் அல்லாவிட்டாலும், குடியாட்சி நடைபெறும் நாட்டில் மக்கள் எல்லாரும் சமம் என்னும் ஒத்த உரிமைக் கொள்கைக்கும் புகழ் மாறுபட்டது ஆகிறது.

ஆகவே, புகழ் அல்லது பாராட்டு என்னும் லஞ்சமும் மேற்கூறியவாறு பெறுபவர்க்கும் இருவகைக் குற்றமாகி, தருபவர்க்கும் இருவகைக் குற்றமாகிறது.

இதை உணரும் காலம் நெருங்கிவருகிறது. அமைச்சர் முதலானவர்களைப் பாராட்டும் வகையில் மாலை அணிவிப்பது கூடாது என்று சில மாநிலங்களில் சட்டம் செய்திருக்கிறார்கள். தமிழ்நாட்டில் சட்டம் செய்யாமலே, மாலை வேண்டா என்று அமைச்சர்களே கூறத் தலைப்பட்டிருக்கிறார்கள். இன்று மாலை பற்றி ஏற்பட்ட தெளிவு, மற்றப் பாராட்டு வகைகளுக்கும் புகழ் வகைகளுக்கும் படிப்படியாக ஏற்படும். விருந்து, சொற்பொழிவு, வரவேற்பிதழ், பாராட்டு நூல் வெளியீடு, படத்திறப்பு விழா, பிறந்த நாள் விழாச் சொற்பொழிவு முதலியனவும் தேவையற்றவை என்றும், லஞ்சம் என்னும் குடும்பத்தைச் சார்ந்தவைகளே என்றும், எதிர்காலம் உணர்த்தக் கூடும். மக்களாட்சியில், உயர்வு தாழ்வு அற்ற நிலையும், பெரியோரை வியத்தலும் இலமே சிறியோரை இகழ்தலும் இலமே என்ற நிலையும் அன்று உறுதியாகும்.

16. புகழ் ஆசை

புகழ்ந்தால் உள்ளம் மலர்கிறது; பழித்தால் உள்ளம் வாடுகிறது. பிறர் புகழும்போது அதைக் கேட்டு மகிழ விரும்புகிறது மனிதனுடைய மனம். இது இயற்கையாக அமைந்திருப்பதால் நன்மை செய்தவர்களைப் பாராட்டிப் புகழும் வழக்கம் சமுதாயத்தில் தொன்றுதொட்டு இருந்து வருகிறது. உலகமெங்கும் இந்தப் புகழ் வேட்கை இருந்த போதிலும் இதை ஒரு தனிக் கலையாக வளர்த்த பெருமை தமிழினத்துக்கு உண்டு எனலாம். பாடுவதற்கு உரிய அகம் புறம் என்னும் இரு பொருளில் புறத்திணையில் பாடாண்திணை என்பது இந்தப் புகழ் பற்றியதே ஆகும். புகழ் பெறுவதே வாழ்வின் சிறப்பு என்று முன்னோர் கருதினர். "தோன்றின் புகழொடு தோன்றுக" என்பது அவர்களின் குறிக்கோள். ஈதலும் இசைபட வாழ்தலும் ஆகிய இரண்டுமே உயிர்வாழ்க்கையின் ஊதியம் என்று திருவள்ளுவர் எடுத்துரைக்கின்றார். தமிழ்வேந்தர்களின் வரலாறு முழுவதும் புகழ் மணமே கமழ்கிறது. புகழுக்காகப் பொன்னையும் பொருளையும் மட்டும் அல்லாமல் உயிரையும் கொடுக்கத் துணிந்த பெருவாழ்வு தமிழ்வேந்தர்களின் வாழ்வு. புகழெனின் உயிரும் கொடுப்பர் என்று புறநானூறு போற்றிக் கூறுகிறது.

புகழ் வருவதால் நன்மை பல விளைதல் உண்டு. நன்மை செய்கின்றவர்கள் தம் புகழ் பரவுவதை அறிந்தால் மேலும் ஊக்கம் கொண்டு நன்மை பல செய்வார்கள். செயற்கு அரிய செயல் செய்ய வல்லவர்களுக்கு எல்லாம் புகழ் தூண்டு கோல் ஆகிறது. பழங்காலத்தில் நாட்டை ஆண்ட முடி மன்னன் தலைவனாக இருந்தும் தொண்டனாக உழைத்த தற்கும் புகழே காரணமாக இருந்தது.

காலப் போக்கில் ஆட்சிமுறையும் மாறியது. வாழ்க்கை அமைப்பும் மாறியது. மாசற்றதாக விளங்கிய புகழ், பொய்யும் நடிப்பும் கலந்து மாசுபட்டுவருகிறது. நன்மை செய்த தலைவனுடைய புகழ் தானாகவே பழங்காலத்தில் நாடெங்கும் பரவியது. அவ்வாறு இயல்பாகப் பரவிய புகழைப் புலவர் ஒருவர் இருவர் பாட்டாகப் பாடினர். ஆகவே பழங்காலத்தில் பரவிய புகழிலும் மாசு இல்லை; பாடிய பாட்டிலும் மாசு இல்லை. நாட்டு மக்கள் உண்மையை மட்டும் உணர்ந்தனர். தரகர் இல்லாமல் புகழ் பரவிய நிலை அது.

இன்று நிலைமை மாறிவிட்டது. தரகர் வாயிலாகவே புகழ் பரவுகிறது. புகழுக்கும் விளம்பரத்திற்கும் வேறு பாடு இல்லாத நிலை வளர்ந்துவருகிறது. செய்தித்தாள்கள் தரகுவேலையை நன்றாகச் செய்கின்றன. கட்சி முதலிய அமைப்புகளும் அதற்குப் பயன்படுகின்றன. போதாக் குறைக்கு நூல்களின் வடிவாகவும் விளம்பரம் செய்யப் படுகின்றது. ஆகவே மக்களிடையே பரவுவது உண்மைப் புகழே என்று கூறுவதற்கு இடம் இல்லை. பொய்யான விளம்பரமும் உண்மைப் புகழ் போல வேகமாகப் பரவ முடி கின்றது. அதனால் புகழ் தன் மாசற்ற தன்மையை இழந்து விட்டது.

கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டில் சுந்தரமூர்த்தி நாயனார் காலத்திலேயே அந்த மாசு மெல்லப் புகுந்திருக்கும் என்று

தோன்றுகிறது. ஆனால் அந்தக் காலத்தில் அந்த மாசு வளர்வதற்கு வேண்டிய கருவிகள் இல்லை. கொடுக்காத உலோபியைப் பாரி போன்ற கொடையாளி என்று புகழ்கின்றீர்களே என்றும், வலிமை இல்லாதவனை வீமனே விசயனே என்று புகழ்கின்றீர்களே என்றும் அவர் தம் காலத்தில் பரவிய பொய்ப் புகழை மிக வெறுத்தார். நம்மாழ்வார் என்ற பெரியவர் புலவர்களைப் பார்த்து அறிவுரை கூறத் தொடங்கினார். "புலவர்களே! நான் சொல்வதைக் கேளுங்கள். உங்களுடைய கவி இனிய கவி. அதைப் பொய்யான புகழுக்குப் பயன்படுத்தாதீர்கள். குப்பை போன்ற செல்வத்திற்காக உங்கள் உண்மையை இழந்துவிடாதீர்கள். மிக மிக நல்ல வான்கவி கொண்டு இழிவான நிலையில் மனிதரைப் பாடாதீர்கள். மழை போன்ற கை உடையவன், மலைபோன்ற தோள் உடையவன் என்று பச்சைப் பசும்பொய்கள் பேசாதீர்கள். நான் சொன்னால் இது விரோதமாகத் தோன்றலாம். ஆனாலும் சொல்லுகின்றேன், கேளுங்கள்" என்று நம்மாழ்வார் பத்துப் பாடல்கள் பாடினார்.

இவ்வாறு அந்தக் காலத்தில் தலையெடுத்த மாசு, இந்தக் காலத்தில் அச்சுக் கருவிகள் வந்த பிறகு, அரசியலில் ஐரோப்பியத் தேர்தல்முறை புகுந்த பிறகு மிக வேகமாக வளர்ந்துவிட்டது. அதன் பயனாக, தம் புகழைக் கேட்டால் அடக்க உணர்ச்சியுடன் தலை சாய்த்து நிற்கும் தமிழ்ப் பண்பாடும் போய்விட்டது. 'தம் புகழ் கேட்டார் போல் தலை சாய்த்து' என்ற பாட்டின் வரி பொருளற்றது ஆகிவிட்டது. தம்முடைய புகழைப் பரப்பும் விழாக்களுக்குத் தாமே நேரில் சென்றிருந்து தம்மைப் புகழ்கின்றவர் யார் யார் என்றும், எந்த எந்த அளவிற்குப் புகழ்கின்றார்கள் என்றும் கணக்கெடுக்கும் மனப்பான்மை வளர்ந்துவருகிறது. சில கூட்டங்களில் வரவேற்புரையும்

நன்றியுரையும் புகழ் விளம்பரத்திற்காகவே நிகழ்கின்றன. பேச்சிற்கு என்று வேறு பொருள்கள் — தலைப்புக்கள் அமைந்த கூட்டங்களிலும் ஒருவருக்கொருவர் புகழ் பாடிக் கொள்வதற்காகவே பெரும் பங்கான நேரம் செலவாகிறது. வாழ்வெல்லாம் திமை பல செய்தவரானாலும், நூறு இரு நூறு கொடுத்துவிட்டால் அவர்களை ஆயிரம் ஈராயிரம் சொற்களால் புகழ்ந்து விளம்பரப்படுத்துகிறார்கள்.

நம் காலத்தில் வாழ்ந்த பெருமகனார் காந்தி அடிகள். அவர் சென்ற கூட்டங்களில் வரவேற்புரைகளையும் பாராட்டுரைகளையும் படிக்க நேரம் தராமல்போதும்போதும் என்று கூறி வாங்கிவைத்து அனுப்பிவிட்டார். அவர் வாய் திறந்து கேட்ட போதும் கேளாத போதும் பிர்லா முதலான செல்வர்கள் நூறாயிரக்கணக்காக வாரிக் கொடுத்தார்கள். அந்தச் செல்வர்களுக்கு நன்றி கூறுவதற்காகவும் அவர் தம் வாய்ச் சொல்லையும் பயன்படுத்தவில்லை; எழுது கோலையும் பயன்படுத்தவில்லை. அத்தகைய பெரு வாழ்வைப் பார்த்தும் நாம் இத்துறையில் ஒன்றும் கற்றுக் கொள்ளவில்லை; காலம் மாறி வந்திருப்பதையும் உணர்ந்து கொள்ளவில்லை.

ஆள்வோர் ஆளப்படுவோர் என்று இருந்த காலம் மாறிவிட்டது. தலைவர் தொண்டர் என்ற பேச்சுக்கும் இனி இடம் குறைந்துபோகும். எல்லோரும் இந்நாட்டு மன்னர், எல்லோருக்கும் ஒத்த உரிமை உண்டு என்பதே எதிர் காலத்தின் போக்கு. ஆள்வோர் ஆளப்படுவோர் என்ற நிலை இருந்த காலத்தில் புகழ்வோர் புகழப்படுவோர் என்ற நிலையும் இருந்தது இயற்கை ஆகும். ஒத்த உரிமை பற்றிய உணர்ச்சி மிகுந்த காலத்தில் புகழ்வோர்க்கும் இடம் இல்லை; புகழப் படுவோர்க்கும் இடம் இல்லை. இந்த உண்மையை உணர்ந்துகொண்டால் கால வேகத்தை ஒட்டி வளர முடியும். இல்லையானால் வெள்ளத்தின் போக்கை

உணராமல் படகைச் செலுத்தித் தட்டுப்படுதலாக முடியும்.

கூட்டங்களில் ஒருவர் தலைமை தாங்குவதும் முனனுரை கூறுவதும் தேவை அற்றவை என்று மேற்குநாட்டார் பலர் உணர்ந்துவருகிறார்கள். வரவேற்புரையும் நன்றி யுரையும் இல்லாமலே பல கூட்டங்கள் அங்கு நடைபெறு கின்றன. இப்போது நாம் அவற்றைத் தனிக் கலையாக வளர்த்துப் போற்றிவருவதில் பயன் இல்லை. பலர்க்கும் உரிய அரிய காலத்தைப் புகழ் விளம்பரத்திற்காகச் செலவு செய்தல் குற்றம் என்று உணர்ந்தால்தான் சமுதாயத்திற் குச் சேவை செய்தவர்கள் ஆவோம்.

புகழ் மாசற்றதாக விளங்கிய காலத்தில் நல்லவர் களுக்கும் வல்லவர்களுக்கும் அது ஊக்கம் அளித்தது; பயன்பட்டது. மாசு கலந்து வளர்ந்த நிலையில் அதனால் விளையும் நன்மையைவிடத் தீமையே மிகுதியாகிவருகின்றது. இன்று பொறாமையும் பிளவும் நாட்டில் பெருகிவருவதற்குப் புகழுரையே பெருங் காரணம் எனலாம்.

முடிமன்னன் காலத்தில் புலவர் மன்னனைப் புகழ்ந் தால் எனக்கு அது போன்ற புகழ் இல்லையே என்று அமைச்சனும் சேனைத் தலைவனும் ஏங்குவதற்கு வழி இல்லை. இன்று ஆட்சி ஒருவன் கையில் இல்லை. தலைமை பலர்க்கு உரியதாகி வருகிறது. தலைவராக இருந்துவந்தவர் தொண்டராகவும் வாழவேண்டி உள்ளது. தொண்டர் தலைமைப் பொறுப்பையும் தாங்க வேண்டியுள்ளது. ஆகவே புகழ் ஒருவனுக்கு உரிய தனி உடைமை அன்று. பலர்க் கும் உரிய பொதுச் சொத்தாகும். இந்நிலையில் சமுதாயத் தின் புகழ், இனத்தின் புகழ், நாட்டின் புகழ் என்று வளர வேண்டுமே அல்லாமல் ஒரு சிலரின் புகழ் என்று குவிதல் கூடாது. இதை உணராமல் யாரேனும் ஒருவரைப் புகழ்ந் தால் அது மற்றவர்களின் உள்ளத்தில் பொறாமையையும் பிரிவுணர்ச்சியையும் உண்டாக்கும் என்பது திண்ணம்.

ஒருவனுடைய குடைநிழலின் கீழே பலரைப் பிணித்து வைக்கும் ஆற்றல் பழங்காலத்தில் புகழுக்கு இருந்தது. ஓர் இனத்தையோ சமுதாயத்தையோ ஒன்றுபடாமல் பிரித்துவைக்கும் சக்தியே இன்று புகழுக்கு உள்ளது. அவரைப் புகழ்ந்தார் நம்மைப் புகழவில்லை என்று ஒதுங்கு வோர் சிலர். அவரைப் போல் புகழ்பெற நமக்கு ஒரு கூட் டம் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்று போட்டி இடு வோர் சிலர். பிறர் புகழைக்கேட்டுப் பொறுமையால் பகைத்து நிற்போர் சிலர். இந்த விளைவுகளைத்தான் இந்தக் காலத் துப் புகழில் காண்கிறோம். அதனால்தான் நாட்டில் கட்சி கள் பல, கட்சிகளுக்குள் குழுக்கள் பல, அவற்றிடையே பிணக்கங்கள் பல என்று பிளவு மிகுந்து ஒற்றுமை குறையும் நிலைகளைக் காண்கிறோம்.

பழங்காலத்திலும் தமிழ் நாட்டில் மூன்று வேந்தர் களுக்கு இடையே ஒற்றுமை இல்லாமல் இருந்ததற்கும் இந்தப் புகழ்தான் காரணமோ என்று எண்ண வேண்டி யுள்ளது. ஒருவர் புகழை மற்றவர் அளவுகருவியாக வைத்துக்கொண்டு ஒருவரின் ஒருவர் மேம்பட்டு விளங்கு வதற்காகப் போரும் பூசலும் விளைத்து ஒன்றுபடாமல் இருந்த நிலையைப் பழைய பாடல்களில் காண்கிறோம். அக்காலத்துக் குறுநில மன்னர்களும் அவ்வாறே ஒன்று படாமல் பூசல் விளைத்துக்கொண் டிருந்தனர். புகழ் மாசற்ற தாக விளங்கிய அந்தக் காலத்திலும்—ஆள்வோர் அளப் படுவோர் என்ற நிலை இருந்த அந்தக் காலத்திலும் — புகழ் பிரிவினையை வளர்த்தது; பொறுமையையும் பகைமை யையும் வளரச் செய்தது. இந்தக் காலத்தில்—விளம் பரத்திற்கும் புகழிற்கும் வேறுபாடு குன்றிவரும் இந்த நிலையில் — வேறு என்ன எதிர்பார்க்க முடியும்?

இது வரையில் கண்டது, புகழ் நேரே பிரிவினையை வளர்க்கும் தன்மை பற்றியே ஆகும். மறைமுகமாகவும்

பிரிவினையை வளர்க்கும் இயல்பு அந்தப் புகழுக்கு உண்டு. எவ்வாறு என்று காண்போம்.

புகழ்தல் எல்லோருக்கும் எளிதாக வருவது அன்று. அன்றாடம் பழகும் குடும்பத்தார் ஒருவரை ஒருவர் புகழ்வது எளிது அன்று. என்றேனும் ஒரு நாள் வந்து போகும் விருந்தினர் வீட்டாரைப் புகழலாம்; வீட்டாரும் விருந்தினரைப் புகழலாம். ஆகவே உரிமை மிகுந்தவர்களுக்கு எளிதில் புகழ் பாடுதல் வராது. உரிமை குறைந்தவர்களுக்கு — அந்நியர்களுக்கு மட்டுமே—புகழ்தல் எளிதாக வரும். ஆகவே, நாட்டின் தலைவர்களிடத்தில் அந்நியர் புகழ்ந்து செல்வாக்குப் பெறுமளவிற்கு, உறவினர் புகழ்ந்து பயன்பெற முடியாது. அதனால் பழங்காலத்தில் தமிழ் மன்னர்களை அந்நியர்கள் மிகப் புகழ்ந்து செல்வாக்குப் பெற்றார்கள்; நாட்டில் வாழ்ந்த தமிழர்கள் அந்த அளவுக்குச் செல்வாக்குப் பெற முடியாமல் போயிற்று. அந்நியர் வளர்ச்சிக்கு இடம் ஆயிற்று. இந்த நிலை தொடர்ந்து பல நூற்றாண்டுகளாக வரலாற்றில் இருந்துவந்தது. இன்றும் தமிழரைவிட இந்த நாட்டில் பிறர் செல்வாக்காக வாழ்ந்து வருவதற்குக் காரணம் இதுவே.

இரண்டாவதாக: கடமையை ஒழுங்காகச் செய்கின்றவன் கால்கை (காக்கா) பிடித்து வாழ மாட்டான். கடமையைச் செம்மையாகச் செய்யத் தவறுவோனும் செய்ய முடியாதவனுமே கால்கை பிடித்துத் தலைவர்களை வழிபடுவார்கள்; எதிரே நின்று வாயாரப் புகழ்ந்துகொண்டிருப்பார்கள். அதனால் என்ன ஆகும்? நாட்டின் முன்னேற்றம் தடைப்படும். கடமையை ஒழுங்காகச் செய்கின்றவர்களுக்கு மனச் சோர்வு ஏற்பட்டுவிடும்; நாட்டுப் பற்று முதலிய பொதுவுணர்ச்சிகளும் குறைந்துவிடும். அதனால்தான் தமிழ் நாட்டைப் பிறர் கைப்பற்றி எளிதில் ஆண்ட நிகழ்ச்சிகளை வரலாற்றில் தொடர்ந்து காண்கிறோம். இன்றைய நிலையிலும் காண்கிறோம்.

மூன்ருவதாக: மனம் தூய்மையாக உள்ள நல்லவர்களுக்குப் பிறவியிலேயே உரிமையுணர்ச்சி மிகுதி; அதனுல் எளிதில் பிறர்க்கு அடிபணிந்து புகழ மாட்டார்கள். மனத்தில் அழுக்குப் படிந்துள்ள கெட்டவர்கள் அச்சத்தின் காரணமாக எளிதில் பிறர்க்கு அடிபணிவார்கள்; வாயாரப் புகழ்ந்து பல்லே இளிப்பார்கள். 'அச்சமே கீழ்களது ஆசாரம்.' தலைவர்கள் புகழாசை கொண்டவர்களாக இருப்பதைக் கெட்டவர்கள் பயன்படுத்திக்கொள்வார்கள்; நல்லவர்கள் பேசாமல் ஒதுங்கி நிற்பார்கள். அதன் பயனுக நாட்டில் கெட்டவர்களின் கை ஓங்கிவிடும்; ஊழல்கள் மலிந்துவிடும். அந்நிலையில் நாட்டை ஆளும் தலைவன் தன்னை அறியாமலே நாடு கெடுவதற்கு இடம் தருவான்; ஊழல் மலிந்த நாட்டில் இறுதியில் அவனுடைய ஆட்சிக்கே இடர்ப்பாடு ஏற்படும். தமிழ் நாட்டு வரலாற்றில் இடைக்காலத்து வீழ்ச்சிக்கான காரணங்களுள் இதையும் காணலாம். இன்றும் நாட்டில் நேர்மை குன்றி ஊழலும் லஞ்சமும் பெருகியிருப்பதை ஆராய்ந்தால் இக் காரணத்தைக் காணலாம்.

நான்காவதாக: உள்ளத்தில் உண்மை நிறைந்தவர்கள், உதட்டால் வேறுவகையாகப் பேசமுடியாது. ஒருதலைவனின் முன்னிலையில் அவனைப் பற்றி வானளாவப் புகழ்ந்து பேச உண்மையாளர்க்கு வாய்வராது. ஆனுல் உள்ளத்தில் உண்மைஇல்லாமல்நடிக்க வல்லவர்களுக்குஇது எளிதாக வரும். உள்ளத்தில் ஒன்றும், உதட்டில் மற்ருென்றுமாகப் பேசிப் பேசி நடித்துப் பழகிவிட்டால், அதுவே ஒருகலையாகிவிடும். அந்த நடிப்புக் கலைத்திறன் பெற்றவர்கள், யாரையும் எந்த நிலையிலும் எந்த அளவிற்கும் புகழ்ந்து பேசி நல்ல செல்வாக்குப் பெற முடியும். உள்ளத்தால் வெறுக்கும் பகைவர்களையும், வெளியே தூற்றிப் பழித்துவிட்டு, எதிரே வந்து புகழ்ந்து உயர்த்த முடியும். அந் நிலையில் நாட்டை ஆளும் தலைவர்கள், நாட்டன்பை விடப் புகழாசை மிகுந்தவர்களாக

இருந்தால், அவர்கள் எளிதில் ஏமாந்துபோக முடியும். உண்மையாளர்கள் புகழ முடியாமல் ஒதுங்கியிருக்க, நடிக்க வல்லவர்கள் அதைத் திறமையாகச் செய்து நல்ல பெயர் எடுத்து முன்னேறுவார்கள். அத்தகைய பொய்யர்களை நம்பும் தலைவர்கள் நாட்டில் நிலையான ஆற்றலோடு விளங்குதல் அரிது. தமிழ்நாட்டின் வரலாற்றில் நம் அறிவுக்கு எட்டாத செய்திகள் பல இருந்து மறைந்திருக்கும். அவற்றினுள் இந்தப் பொய் நடிப்பாளரின் புகழுரைகள் செய்த தீமைகள் பல இருந்திருக்கும். ஒரு புலவரின் அறிவுரை மட்டும் நமக்கு ஒரு சான்றாகக் கிடைத்துள்ளது. பொய்யாக நடிப்பவர்கள் கையாளும் இரண்டு முறைகளைப் பற்றி விழிப்பாக இருக்குமாறு அந்தப் புலவர் கூறியுள்ளார்.

அவை என்ன?

புகழ் விரும்பும் தலைவர், தமக்குப் பிறர் பணிய வேண்டும் என்று (கால்கை பிடிக்க வேண்டும் என்று) விரும்புவார். அவ்வாறு வழிபடுவோரை நம்பக் கூடாது என்றார். ஏன் என்றால், அது பொய்யர்கள் மிக எளிதாகச் செய்யும் செயல்; அதிகாரத்தில் உள்ளவர்களை வசப்படுத்தி ஏமாற்றுவதற்காக—தம் வலையில் சிக்கவைப்பதற்காகச்—செய்யும் செயல்.

மற்றொன்று: புகழ் விரும்பும் தலைவர், மற்றவர்களுக்குப் பழி வந்தால் விரும்புவார்—செல்வர் பிறர் ஏழையாவதை விரும்புவதைப் போல. அதைப் பொய்யர்கள் உணர்ந்துகொண்டு, அந்த வலையும் வீசுவார்கள்; மற்றவர்களின் பழியை எல்லாம் எடுத்துச் சொல்லிச் சொல்லித் தலைவரின் மனம் குளிருமாறு செய்வார்கள். ஆகையால் புகழாசை கொண்டு, அவர்கள் சொல்லும் பிறர்பழியைக் கேட்டு அவர்களின் மொழியை நம்பக் கூடாது என்றார்.

வழிபடு வோரை வல்லறி தீயே
பிறர்பழி கூறுவோர் மொழிதேறலையே

என ஈராயிரம் ஆண்டுகளுக்குமுன் அவர் கூறிய அறிவுரை இன்றும் பயன் தருவதாக உள்ளது. புகழாசை மிக்கவர்களைப் பிறர் ஏமாற்றுவது எளிது என்பதைத் தமிழ் நாட்டின் பழைய வரலாறு உணர்த்துதல் போதாது என்றால், இன்றைய நிலையும் கண்கூடாக உள்ளது. ஆகவே, காலம் மாறிவிட்டது என உணர்ந்து, நாட்டுக்கு வேண்டாத புகழாசையைத் துறப்பது நல்லது ; அது இக்காலத்திற்கு ஏற்ற ஒருவகைத் தொண்டு என்று கூறலாம்.

17. இதையாவது செய்யுங்கள்

செல்வர்களுக்கு வரிச்சுமை மிகுதியாகி வருகிறது. தாங்கமுடியாததாகி வருகிறது. வருமானவரி சொத்துவரி மரணவரி முதலிய பலவும் செல்வத்தின் அளவுக்கு ஏற்ப மிகுதியாகிக்கொண்டே வருகிறது. ஆகையால் அறிஞர் சிலர் உண்மையாகவே செல்வரிடம் இரக்கம் கொள்ள வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அந்த அறிஞர்கள், "இவ்வாறு செல்வர்க்கு வரி விதித்து அவர்களைக் கொடுமைப் படுத்திக் கவலையும் சோர்வும் பெருக்குவதைவிட வேறு ஒரு வழி வகுக்கலாம். அது அரசாங்கத்தின் கையில் இல்லை. செல்வர்களின் கையில் உள்ளது. செல்வம் அளவு கடந்து சேராதபடி தங்கள் செல்வத்தில் ஒரு பகுதியைத் தாங்களே ஏழைகளுக்கு உதவியான வழிகளில் செலவு செய்யலாம். அதனால் ஏழைகளுக்கு உதவினோம் என்ற மனமகிழ்ச்சியும் ஏற்படும். அரசாங்கத்தின் வரித் தொல்லையும் குறையும். அரசாங்கம் வரிகள் விதித்து, அந்த வரிப் பணத்தைக் கொண்டு ஏழைகளுக்கு உதவி செய்வதைவிட, செல்வர்களே நேராக ஏழைகளுக்கு உதவி செய்வது நல்லது. அரசாங்கத்திடம் கொடுக்கும் வரிப்பணத்தில் கால் பகுதியும் ஏழைகளுக்குப் போய்ச் சேருவதில்லை. செல்வர்கள் நேரே உதவி செய்தால் முழுமையும் ஏழைகளுக்குப்

போய்ச் சேரும். ஆகையால் அரசாங்கம் வற்புறுத்தி வரி விதிப்பதைவிட ஏழைகளுக்கு உதவுமாறு விட்டுவிடுதல் நல்லது" என்று அறிவுரை கூறுகிருர்கள்.

இந்த அறிவுரை நல்லதுதான். ஆனல் இதில் புதுமை ஒன்றும் இல்லை.

ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது
ஊதியம் இல்லை உயிர்க்கு

ஈத்துவக்கும் இன்பம் அறியார்கொல் தாமுடைமை
வைத்திழக்கும் வன்க ணவர்

என்று மிகப் பழங்காலத்திலேயே திருவள்ளுவர் அறிவுரை வழங்கியுள்ளார்.

அவர்க்குப்பின் வந்த சான்ருேர்களும் திரும்பத் திரும்ப ஈதலின் சிறப்பை விளக்கியுள்ளார்கள். அந்த அறவுரைகள் பயன்பட் டிருக்குமானல் நாட்டில் செல்வமும் வறுமையும் அடுத்தடுத்து நிற்கும் காட்சியைக் கண்டிருக்க முடியாது. பெரிய மாடி வீடுகளை அடுத்துச் சிறிய பொத்தல் குடிசைகள் நிற்க முடியாது. பட்டாடையும் பொன்னுடையும் இருக்கும் இடங்களை அடுத்துக் கந்தலும் கிழிசலும் இருக்கமுடியாது. விருந்துகளை அடுத்துக் குப்பைத்தொட்டிப் போட்டியைக் காண முடியாது. இவைகளையெல்லாம் இந்த நாட்டில் காண்கிருேம் என்ருல், திருவள்ளுவர் முதலான சான்ருேர்களின் அறிவுரைகள் அவ்வளவாகப் பயன்படவில்லை என்பதுதான் பொருள். இங்கும் அங்கும் எவரோ செல்வர் சிலர், தம் செல்வத்தில் ஒரு பகுதியை ஏழைகளுக்குப் பயன்படுத்துகிருர்கள். பெரும்பாலோரின் செல்வம் அவ்வாறு பயன்படுவதில்லை. அதனல்தான் செல்வமும் வறுமையும் அடுத்தடுத்து நின்று சமுதாயத்தைச் சீர்குலைக்கிறது.

அறவுரைகளை அவ்வப்போது மக்கள் போற்றி நடந்திருப்பார்களானல் ஆட்சி முறையில் கடுமை ஏற்பட்டிருக்கக்

காரணம் இல்லை. அறவுரைகளுக்கு ஏற்ற செவிகளும் மனங்களும் இருக்குமானால் ஆட்சிமுறை என்பது ஒன்று தேவை இல்லை. ஆகவே மக்கள் நல்வழியில் நடப்பதற்கு அன்பு மொழிகள் போதவில்லை. ஒருவகை வற்புறுத்தலும் தேவையாயிற்று. மூன்று நான்கு குழந்தைகள் உள்ள வீட்டிலேயே சில நாட்களில் பெற்றோரின் அன்புமொழிகள் பயன்படுவதில்லை. வற்புறுத்தல் தேவைப்படுகிறது. கோடிக்கணக்கான மக்கள் கூடி வாழும் குடும்பமாகிய நாட்டில் எந்தச் சான்றோர் என்ன செய்ய முடியும்? காந்தியடிகள் போன்றவர்களும் நாட்டில் ஒரு சிலரைத்தான் திருத்த முடிந்தது. ஆனால் அவர்கள் காட்டிய வழியில் இயற்றப்பட்ட சட்டங்களால் பலருடைய வாழ்வை மாற்றி அமைக்க முடிகிறது. சான்றோர்கள் வழிகாட்டுவார்கள். சட்டங்கள்தான் வழி நடத்த முடியும்.

புத்தர் போன்ற பெருமக்கள் வாழ்ந்த காலத்தைவிட நம்முடைய காலத்தில் வாழ்க்கைமுறை பெரிதும் மாறியுள்ளது. அவர்கள் காலத்தில் எல்லா மக்களுக்கும் பொதுவான மின்விளக்கு, குழாய்த் தண்ணீர், புகை வண்டி, தபால் முறை, காவல் (போலீஸ்) முறை, கல்வி அமைப்புக்கள், அலுவலகங்கள், உலகப் போக்குவரத்து, நாணய மாற்று முதலியவை இல்லை. நம் காலத்தில் இவை மிகப் பெரிய அளவில் அமைந்துள்ளன. ஆகையால் பழங்காலத்தில் மனிதன் தான் உண்டு தன் வீடு உண்டு தன் வயல் உண்டு என்று ஒரு மூலையில் வாழ்ந்ததுபோல் இக்காலத்தில் வாழ முடியவில்லை. பழங்கால மனிதரின் வாழ்வு, ஒரு மூட்டையில் கிடந்தாலும் தனித்தனியே அமைந்து கிடக்கும் அரிசி மணிகளைப் போன்றது. இக்காலச் சமுதாய வாழ்வு, மாவாக அரைப்புண்டு கலந்து கிடக்கும் மூட்டை போன்றது. பழங்காலத்தில் அரசாங்க ஆட்சி முறை மனிதரின் வாழ்வில் மிகச்சிறிய அளவில் தொடர்புற்றிருந்தது. இந்தக்

காலத்தில் பல்வேறு வழிகளில் அத்தொடர்பு மிக வன்மையாகப் பிணித்துள்ளது. ஆகையால் சட்டத்தின் தேவை இக்காலத்தில் மிகுதியாகியுள்ளது.

பழங்காலத்தில் கிராமங்களில் வாழ்ந்த செல்வர்க்கும் ஏழைகளுக்கும் உணவு உடை முதலியவற்றில் பெரிய வேறுபாடு இருந்ததில்லை. களஞ்சியம், வீட்டின் பரப்பு, செல்வாக்கு, புகழ் முதலிய சிலவற்றில் வேறுபாடு இருந்தது. ஆனல் ஏறக்குறைய ஏழைகளைப் போலவே செல்வர்களும் உணவு உடை முதலியவற்றில் ஆடம்பரம் இல்லாமல் வாழ்ந்தார்கள். இக்காலத்தில் வாழ்க்கைக்கு உரிய பொருள்கள் பலவாகப் பெருகியுள்ளபடியால் ஒவ்வொரு வகையிலும் செல்வர்களுக்கும் ஏழைகளுக்கும் வேறுபாடு மிகுந்துவருகிறது. நகரத்தின் தொடர்பு மிகுந்துவிட்டமையால் கிராமத்துச் செல்வர்கள் நகரத்துச்செல்வர்களைப் போலவே ஆடம்பரத்தைப் பெருக்கிக்கொண்டார்கள். ஆகவே உடை, உணவு, நகை, கைக்கடிகாரம், மிதியடி, ஊர்ந்து செல்லும் கார்கள், பார்த்து மகிழும் காட்சிகள், அவ்வப்போது நடத்தும் விருந்துகள் முதலிய எல்லாவற்றிலும் செல்வர்களின் ஆடம்பரம் பெருகிவிட்டது. அதற்கு ஏற்ருற் போல் ஏழைகளின் ஏக்கமும் பெருகிவிட்டது. போதாக் குறைக்குத் தேர்தல்களும் நீதிமன்றங்களும் செல்வர்களால் எல்லாம் செய்யமுடியும் என்பதையும், ஏழைகளால் ஒன்றும் முடியாது என்பதையும் மீண்டும் மீண்டும் விளக்கிக் காட்டிவருகின்றன. ஆகையால் செல்வரின் செல்வம் குறைய வேண்டும் என்ற கருத்து, பெரும்பாலோருடைய கருத்தாக வளர்ந்து, அரசாங்கத்தின் சட்டமாக உருக்கொள்கிறது.

மற்ருென்றும் கருதத்தக்கது. பழங்காலத்தில் செல்வர்களின் செல்வம், அவர்களின் செல்வாக்கைப் போல் புகழுக்குப் பயன்பட்டதே தவிர வாழ்க்கை வசதிகளுக்கு இன்று போல் அவ்வளவாகப் பயன்படவில்லை. அதனுல்,

அவர்களைப் பார்த்து ஏழைகள் பொறுமை கொள்ள இடம் இல்லை. தப்பித்தவறி ஒரு சிலர்க்குப் பொறுமை ஏற்பட்டாலும் ஊழ்வினையில் அவர்களுக்கு இருந்த நம்பிக்கை அந்தப் பொறுமையை மாய்த்துவிட்டது. "அவருடைய நல்வினையால் அவர் செல்வராகப் பிறந்தார். அவரைப் பார்த்து நாம் ஏன் பொறுமைப்பட வேண்டும்? நமக்கு நல்வினை இல்லை. அதனால் ஏழைகளாகப் பிறந்தோம். நாம் கேட்டு வந்தது இவ்வளவு தான்" என்று ஏழைகள் அமைதி அடைந்தார்கள். இக் காலத்தில் ஊழ்வினை பற்றிப் பேசுவோர் பலர் இருந்தாலும் உண்மையாக நம்புவோர் சிலர்தான். ஏழைகளாகப் பிறந்த சிலர் எதிர்பாராமல் சில வாய்ப்புப் பெற்றுச் செல்வராகி விடுவதால், அவர்களுக்குச் செல்வம் சேர்ந்த வழிவகைகளைப் பற்றி மக்கள் எண்ணிப் பார்க்கிறார்கள். இவ்வாறு காரண ஆராய்ச்சி வளரும் காலத்தில் ஊழ்வினையின்மேல் மக்களுக்கு இருந்து வந்த நம்பிக்கைக் குறைவது இயற்கை. ஆகையால் கேட்டு வந்தது இவ்வளவுதான் என்று மக்கள் அமைதி அடைவது இன்று அரிதாகிவிட்டது.

இத்தகைய நிலையில் வரிவிதிப்புக்கான சட்டங்களைத் தடுக்க வழி இல்லை. ஒரு பக்கம் சட்டங்களையும் ஏற்றுக் கொண்டு மற்றொரு பக்கம் அறிஞர்களின் அறிவுரைகளையும் ஏற்று நடப்பதுதான் கடமை.

அறிஞர்கள் கூறுவதற்கு ஏற்ப ஏழைகளுக்கு உதவியாக வாழ்வது எப்படி? தம் வருவாயில் இத்தனையில் ஒரு பங்கு என்று எடுத்து ஏழைகளின் உதவிக்காக ஒதுக்கி விடலாம்.

அந்த அறத்தையும் செல்வர் தம் பெயரால் செய்வாரானால் அதைக் கடைநிலை என்றே சொல்ல வேண்டும். பழங் காலத்துப் புலவர் ஒருவர் பயன் கருதிச் செய்யும் அறத்தை 'அறவிலை வாணிகம்' என்றார். அந்தச் செல்வத்தால் புகழும் வேண்டா என்று அறம் செய்வதே தலையான

அறமாகும். ஒரு கையால் கொடுப்பதை மற்ருெரு கைக்கும் தெரியாமல் கொடுக்க வேண்டும் என்று சான்ருேர் வற்புறுத்தியது அதனுலேயேயாகும். இந்த உயர்ந்த கருத்தை எண்ணிப் பார்க்கும்போது, இக்காலத்தில் ஒரு விழா ஏற்படுத்தி அதற்கு ஒரு விளம்பரமும் செய்து நன்கொடை வழங்கும் முறையில் சிறப்பு இல்லை என்பது புலப்படும். அதைவிட ஊரும் பேரும் தெரிவிக்காமல் ஒருவகை விளம்பரமும் செய்யாமல் கோயில் உண்டியில் இட்டுவந்த பழைய முறையே மேலானது எனலாம்.

உண்டியில் இடும் செல்வம் நாம் விரும்பும் நல்வழியில் செலவாகவில்லையே என்ற காரணத்தால்தான் அதைவிட்டு வேறு வழிதேட வேண்டி வந்தது.

உங்களால் பிறருக்கு நன்மை செய்ய முடியாவிட்டாலும் தீமையாவது செய்யாதிருங்கள் என்று நம்முடைய சான்ருேர் ஒருவர் எடுத்துரைத்தார்.

> நல்லது செய்தல் ஆற்றீ ராயினும்
> அல்லது செய்தல் ஓம்புமின். (புறநானூறு)

ஆதலின், கடமை என்று உணர்ந்து பிறர்க்கு உதவி செய்து வாழ முடியாவிட்டாலும், பிறர் பார்த்து ஏங்கிப் புழுங்குவதற்குக் காரணமான ஆடம்பரச் செலவுகளையாவது செய்யாதிருத்தல் கடமையாகும்; புகழ் விரும்பாமல் ஏழைகளுக்கு உதவி செய்ய முடியாவிட்டாலும், ஏழைகளுக்கு ஏக்கம் உண்டாக்கும் வகையில் வாழும் ஆடம்பர வாழ்வையாவது விடுங்கள். அது சிறந்த அறம் என்று செல்வர்க்கு அறிவுறுத்துவது கடமையாகும்.

ஆகவே, சமுதாயமும் அரசாங்கமும், ஆடம்பரமான விழாக்கள் ஆடம்பரமான திருமணம் விருந்து முதலியவற்றைத் தடுத்து நிறுத்த முடியாவிட்டாலும், அவற்றை நடத்துவோரைப் பாராட்டிப் போற்ருமல் ஒதுக்குவது முக்கிய கடமையாகும்.

18. அடிகள் காட்டிய வழி

இருபதாம் நூற்றாண்டில் எளிய வாழ்க்கைக்குப் பெருமை கொடுத்துச் சென்றவர் காந்தியடிகள். இன்று பெரிய பதவியில் உள்ளவர் பலர் எளிய உடைகளோடு இருக்கிறார்கள் என்றால் அதற்கு வழிகாட்டியாக இருந்தவர் அவரே. உரிமைப் போராட்டம் நடந்த காலத்தில் பள்ளிக்கூடத்துப் பிள்ளைகளும் கல்லூரி மாணவர்களும் கோட்டும் தொப்பியுமாக, அல்லது, கோட்டும் தலைப்பாகையுமாக வர வேண்டும் என்ற கட்டாயம் இருந்தது. இப்போதோ பெரிய அதிகாரிகளும் எளிய உடையில் வரக்கூடிய நிலைமையைக் காண்கிறோம். இந்த மாறுதல் காந்தியடிகள் ஒருவருடைய வாழ்க்கையால் ஏற்பட்ட மாறுதல் ஆகும்.

இன்று இந்த நாட்டு மக்கள் தொகையில் ஏறக்குறைய பாதி அளவினர் — ஆண்கள் — உடம்பில் ஒரு நகையும் அணியாமல் விளங்குவதைக் காண்கிறோம். சென்ற நூற்றாண்டில் இந்த நிலைமையைக் கனவு கண்டிருக்க முடியாது. பெண்கள் அணிவதைப் போலவே ஆண்களும் முன்பெல்லாம் நகை பல அணிந்தார்கள். இன்று பெண்களுக்கு மட்டுமே நகைப் பித்து உள்ளது. அவர்களிலும் முற்போக்கான பெண்மணிகள் சிலர் பலவகை நகைகளை நாடாமல் இரண்டு மூன்று நகைகளை மட்டும் அணிந்து அமைதி

அடைகிறார்கள். எவ்வாறோ ஆடம்பர அலங்காரங்களை விட்டு எளிமை நோக்கி ஒரு மாறுதல் ஏற்பட்டு வளர்ந்து வந்துள்ளது.

ஆனால் ஆடம்பரப் பித்து வேறு வகையில் வளர்ந்து விடுமோ என்று அஞ்சவேண்டி யுள்ளது. இன்று வெளி நாடுகளிலிருந்து இந்தியாவுக்கு வருகின்ற அரசியல் தலைவர்களுக்கெல்லாம் ஆடம்பரமான வரவேற்பு நடைபெறுகிறது. தோரணங்கள் கட்டுவது முதல் விருந்துகள் நடத்துவது வரையில் ஆடம்பரம் தலைவிரித்தாடுகிறது. வரவேற்பு வளைவுகள் ஒவ்வொன்றுக்கும் பெருந்தொகை செலவிடப் படுகிறது. வெளி நாட்டிலிருந்து வந்து பார்ப்பவர்கள் இந்தியா செல்வம் கொழிக்கும் நாடு என்று எண்ணக் கூடிய வகையில் எல்லாம் ஆடம்பரமாக நடைபெறுகின்றன. இந்திய அரசாங்கத்தின் சார்பாக வெளி நாடுகளுக்குச் செல்லும் தூதர் நிலையங்களுக்காகக் கோடிக்கணக்கான ரூபாய் செலவாகிறது.

வெளி நாட்டாரை நாம் வரவேற்பது கடமையாகும். வெளி நாடுகளுக்கு நாம் செல்வதும் கடமையாகும். ஆனால் அவற்றிற்காக மிக மிக ஆடம்பரமான வரவேற்புகளும் விருந்துகளும் தேவையில்லை. நம் நாடு ஏழை நாடு என்றும் எளிய நாடு என்றும் மற்றவர்கள் உணர்வதில் தீங்கு ஒன்றும் இல்லை. அதுதான் உண்மை. உண்மையை மறைப்பதில் பயன் இல்லை. இது குடிசைகள் மிகுந்த நாடு. கஞ்சிக்கும் கந்தைக்கும் ஏங்கும் மக்கள் பலர் உள்ள நாடு. பொருளாதாரத் துறையில் வளர வேண்டிய நாடு. இந்த உண்மையைப் பிற நாட்டார் தெரிந்துகொள்வதே நல்லது. என்றும் உண்மைதான் விளங்கும். உண்மைதான் வெல்லும். ஏழையாக இருப்பதும் எளிமையாக இருப்பதும் குற்றங்கள் அல்ல. பிறரைச் சுரண்டுவதும் ஏமாற்றுவதும் உழைக்காமல் கிடைத்த செல்வத்தால் ஆடம்பரமாக வாழ்வதும்

குற்றம் ஆகும். காந்தியடிகளின் வாழ்வு இந்த உண்மையை உலகமெல்லாம் உணருமாறு செய்த வாழ்வாகும்.

அவர் விரும்பியிருந்தால் எளிய வாழ்க்கையிலேயே இன்னும் சிறிது நன்ருக உடுத்திருக்கலாம். முழங்கால் அளவு வேட்டி உடுத்தாமல் கணைக்கால் அளவு உடுத்திருக்கலாம். எளிய மேற்சட்டை அணிந்திருக்கலாம். அவைகளும் வேண்டா என்று அவர் ஒதுக்கினர். காரணம் என்ன? இந்த நாட்டில் கிராமத்து மக்களே பெரும்பாலோர். அவர்களிலும் உழவர்களே பெரும்பான்மையோர். உழவரான கிராமத்துக் குடியானவன்தான் இந்தியாவின் உண்மை நிலைமையை எடுத்துக் காட்டுகிறவன். அந்தக் குடியானவனின் உண்மை நிலைமையை உலகம் உணர்ந்துகொள்ள வேண்டும் என்றுதான் காந்தியடிகள் கிராமத்துக் குடியானவனைப் போல உடை உடுத்தினர்.

இந்த நாட்டிற்குஉரிமை பெற்றுத்தந்த பெருமகன் அவ்வாறு எளிய உடை உடுத்தி உண்மையை உணர்த்த விரும்பினர். கிராமக் குடியானவனுக்கு எட்டாத உடை தமக்கு வேண்டா என்று துறந்துவிட்டவர் அவர். அவருடைய அருள் நெஞ்சமே அதற்குக் காரணம். ஆனல் இன்று நம் அரசாங்கம் கிராமங்களின் உண்மைநிலையை மற்றவர்களுக்கு உணர்த்த முயலாமல், உலகத்தில் உள்ள ஆடம்பரங்களையெல்லாம் கிராமக் குடியானவனுக்கு உணர்த்திவருகிறது; சுமை தாங்க முடியாத ஆடம்பரச் செலவுகளை மேற்கொள்கிறது. ஆடம்பரமாகச் செலவு செய்வதில் இந்த நாடு அமெரிக்காவுக்கும் பின்வாங்காது பிரிட்டனுக்கும் இளைக்காது என்று காட்டிக்கொள்ள முயலுகிறது.

காந்தியடிகளின் உள்ளம் இப்படிப்பட்ட ஆடம்பரங்களை அடியோடு வெறுக்கும். அவருடைய அறநெறியை உணர்ந்தவர்களின் நெஞ்சமும் இந்த ஆடம்பரப் போட்டியை வெறுத்தே திரும்.

உலக நாடுகளின் நல்ல எண்ணத்தைப் பெறுவதற்கு இந்தியா முயல வேண்டும். அதற்கு இந்த ஆடம்பர வரவேற்புகளும் விருந்துகளும் உதவியாகும் என்று சிலர் கருதுகின்றார்கள். இந்த ஆடம்பரங்களால் மற்ற நாடுகளின் நல்லெண்ணத்தைப் பெற முடியுமா? அப்படிப் பெறும் நல்ல எண்ணம் நீடித்து நிற்குமா? ஆடம்பர விருந்துகளின் மணம் மறைவதற்கு முன்னமே அந்த விருந்துகள் பெற்ற சில நாடுகள் நமக்கே இடையூறு செய்வதைக் காண்கிறோம். நேற்றுவரை நெருங்கிய உறவாக இருந்தாற் போல் தோன்றிய நாடுகள் இன்று பகைமுழக்கம் செய்வதையும் காண்கிறோம். ஆடம்பரமாகத் திருமணம் நடத்துவதால் மணமக்கள் நடத்தும் இல்லறம் இன்பமாக இருக்கும் என்று எதிர்பார்க்க முடியுமா? இல்லற அமைதிக்கு அன்புநெஞ்சம் வேண்டும். திருமணத்தில் நடத்தும் ஆடம்பர விருந்தும் கச்சேரியும் பார்ப்பவர்களை மயக்க முடியுமே தவிர, மணமக்களின் உள்ளத்தில் அன்பை வளர்க்க முடியாது. அதுபோலவே அரசாங்கம் நடத்தும் ஆடம்பர வரவேற்புகளும் விருந்துகளும் உலகத்தைச் சில காலம் மயக்கி வைத்திருக்கலாம். அதனாலேயே மற்ற நாடுகளுக்கும் நம் நாட்டுக்கும் இடையே நல்ல உறவு வளர்ந்துவிடும் என்று எதிர்பார்க்க முடியாது.

உண்மையின் அடிப்படையில் நமக்கு உள்ள தகுதியால் நாம் உரிமைபெற வேண்டும் என்று காந்தியடிகள் விரும்பினார். இந்தியா வேறு நாட்டினிடம் பிச்சை கேட்பது போல் கேட்டுச் சுயஆட்சி பெறக் கூடாது என்று அவர் விரும்பினார். அவர் இன்று நம்மிடையே இருப்பாரானால் ஆடம்பரச் செலவுகளால் நமக்குக் கிடைக்கும் உலக உறவு வேண்டவே வேண்டா என்று மறுப்பார்; பிற நாடுகளுக்குச் செய்யும் உதவிகளாலும் மறந்தும் தீங்கு செய்யாத உண்மை அன்பாலுமே அந்த நாடுகளின் உறவைப் பேற வேண்டும்

என்று மிகத்தெளிவாக அறிவுறுத்துவார்.

இந்திய அரசாங்கம் மற்ற நாடுகளுக்கு உதவும் மனப் பான்மை கொண்டிருக்கிறது. எந்த வல்லரசோடும் சேர்ந்து போர் வெறி மூட்டாமல் நடுநிலைக் கொள்கை மேற்கொண்டு தனியே இருப்பது ஒரு பெரிய சிறப்பாகும். உதவிமனப் பான்மையும் நடுநிலைக் கொள்கையுமாகிய இந்த இரண்டுமே இந்தியாவுக்குப் பெருமை தேடித்தர வல்லவை. ஆகையால் இவை போதும் என்று அமைதி அடைந்து, ஆடம்பர வர வேற்புகளையும், விருந்துகளையும் குறைத்துக்கொள்வது நல்லது. அந்த ஆடம்பரங்களுக்கு மயக்கும் ஆற்றல் இருப் பதால் அவைகள் உடனடியாகப் பயன்படுவன போல் தோன்றும். ஆனால் காலப்போக்கில் பயங்கர ஏமாற்றத் தையே விளைக்கும். உண்மை இல்லாத எதுவுமே அப்படித் தான் முடியும். ஆடம்பரங்களால் நன்மை இல்லாமல் போவது ஒருபுறம் இருக்க, தீமையும் விளையக் கூடும் என்று அஞ்ச வேண்டும்.

அரசன் எவ்வழி, குடிகள் அவ்வழி என்பது பழமொழி. அரசாங்கம் செய்வதைப் பார்த்து மக்களும் ஒவ்வோர் அமைப்பிலும் மன்றத்திலும் கூட்டத்திலும் ஆடம்பரத் தையே மேற்கொள்வார்கள். அங்கெல்லாம் உண்மையான உழைப்பும் தொண்டும் குறைந்து ஆடம்பர வேட்டையும் போட்டியும் பெருகிவிடுமோ என்று அஞ்சவேண்டி யுள்ளது. இப்போதே பல அமைப்புகளும் மன்றங்களும் அந்தப் போக் கில் மாறிவருகின்றன. ஆண்டு முழுவதும் ஒரு தொண்டும் செய்யாமல் ஆண்டு விழாவை மட்டும் ஆடம்பரமாக நடத்தி வெளியார்கண்களை மயக்கும் முயற்சி பல சங்கங்களில் இருந்துவருகிறது. நகரங்களிலிருந்து கிராமங்களுக்கும் இந்த நோய் பரவிவருகிறது. மரம் நடு விழா முதலானவை பல ஊர்களில் வெளி மயக்காகவே முடிகின்றன. எல்லாம் இப்படித்தான் என்றும், நாமும் காலத்தோடு ஒட்டி

இப்படிப்பட்ட விழாக்களை நடத்த வேண்டும் என்றும் அலுவலர் முதல் ஆசிரியர் வரை பலரும் பேசிவருகிறார்கள். உண்மையாக ஒன்றும் செய்யாவிட்டாலும் என்னென்னவோ செய்திருப்பதாக ஆண்டறிக்கை எழுதி வெளியிட்டு, பார்த்தவர்கள் அதை நம்பும் வகையில் ஆடம்பர ஏற்பாடுகளால் மயக்க வேண்டும் என்றும், அதுதான் செயலாளரின் சரியான திறமை என்றும் தவறான எண்ணங்கள் ஏற்பட்டு வருகின்றன. இந்தப் போக்கு நாட்டின் முன்னேற்றத்திற்கே பெரிய இடையூறு ஆகும். ஒவ்வொருவரும் மற்றவரை மயக்க முயன்று கடைசியில் எல்லோரும் சேர்ந்து ஏமாற வேண்டி வரும்.

ஒரு கோயிலில் ஊரார் எல்லாரும் பங்கு போட்டுப் பால் வார்க்கும் திருநாள் வந்ததாம். தந்திரம் மிகுந்த ஒருவன் யாருக்கும் தெரியாமல் ஒன்று செய்ய எண்ணினான். மூடிய குடங்களைக் கொண்டுபோய் எல்லோரும் ஒரு பெரிய தொட்டியில் வார்த்துவந்தார்கள். எல்லோரும் பால் வார்க்கும்போது நான் ஒரு குடம் தண்ணீர் வார்த்தால் யாருக்கும் தெரியப் போவதில்லை என்று எண்ணினான். குடம் நிறையத் தண்ணீரை எடுத்து மூடிக்கொண்டு போய்க் கோயில்தொட்டியில் வார்த்துவிட்டுத் திரும்பினான். எல்லோரையும் ஏமாற்றிவிட்டதாகத் தன் திறமையைப் பெருமையாகஎண்ணிக்கொண்டான். ஆனால் அந்த ஊரார் எல்லோருமே இந்தக் கலையில் கைதேர்ந்தவர்கள். பலரும் அவனைப் போலவே தனித் தனியாக எண்ணிக் குடங்களில் தண்ணீரைக் கொண்டுபோய் வார்த்துவந்தார்கள். யாருக்கும் தெரியாது, யாருக்கும் தெரியாது என்று ஒவ்வொருவரும் எண்ணி எல்லோரையும் ஏமாற்றப் பார்த்தார்கள். இறுதியில் கோயில்தொட்டியைத் திறந்து பார்த்த போது அதில் பால் இல்லாமல் நீர் நிறைந்திருந்ததாம். அந்நிலையில் ஏமாந்தது யார்? அந்த ஊர் முழுவதுமே தன்னை

ஏமாற்றிக்கொண்டு கெட்டது என்று சொல்லலாம்.

நம் நாட்டில், அரசாங்கத்தைப் பார்த்து ஊர்தோறும் உள்ள அமைப்புகளும் மன்றங்களும் கூட்டங்களும் ஆடம்பர ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளன. வெளிமயக்காய் மருட்டும் கலையில் தேர்ச்சி பெற்று விளங்கினால், அவற்றால் நம் நாட்டின் முன்னேற்றம் அந்த ஊர்க் கோயில் பால்தொட்டி போல் ஆகிவிடக் கூடாது என்பதுதான் கவலை.

உண்மையும் எளிமையும் உறவு உடையவை. ஆடம்பரமும் வெளி மயக்கமும் தொடர்பு உடையவை. இதை உணர்ந்த காரணத்தால்தான் காந்தியடிகள் பாழ்பட்ட ஒரு நாட்டை முன்னேற்றுவதற்குத் தம் வாழ்வையே எடுத்துக் காட்டாகத் தந்து விளக்கினார். தனி ஒருவருடைய வாழ்வால் எவ்வளவோ விளக்கம் பெற்றோம். சில படிகள் முன்னேறினோம். ஆடம்பர மயக்கத்தைவிட்டு உண்மை எளிமையை நோக்கி நடந்தோம். ஆனால் இன்று அரசாங்கத்தின் ஆடம்பரப் போக்கால் பின்னோக்கிச் செல்கின்றோமோ என்று எண்ணி வருந்த வேண்டியுள்ளது.

19. புதுவகைத் துறவிகள்

நம் நாட்டுக்குப் பழம் பெருமைகள் பல உண்டு. நெடுங்காலம் நாகரிகமாக வாழ்ந்து வந்த நாடு ஆகையால் பழம் பெருமை பேசும் வாய்ப்பு நமக்கு மிகுதி. ஆனாலும் பழம் பெருமையைப் பேசிக்கொண்டு அதிலேயே மகிழ்ச்சி அடைவதில் பயன் இல்லை. இன்றைய நிலையில் பெருமைக்கும் சிறப்புக்கும் உரிய வகையில் நாம் வாழ்க்கை நடத்துகிறோமா என்று எண்ணிப் பார்க்க வேண்டும். சிறுமையிலே இருந்துவிட்டுப் பெருமையைப் பேசுவதால் ஒரு நன்மையும் இல்லை. இன்று உணவுக்கு வழியற்ற வறுமையில் வாழும் நாம் நான்கு தலைமுறைக்கு முன் தன் பாட்டனுக்குப் பாட்டன் பெருஞ் செல்வனாக வாழ்ந்தான் என்று பழம் பெருமை பேசுவது போல் அது பயன் இல்லாமல் போகும்.

பொதுப் பணத்தைக் கையாளுதல், நிதிநிலையம் (பாங்கி) முதலியவற்றையும் சுரண்டிக் கெடுத்தல், போதுமான அளவுக்கு உழைக்காமலே சம்பளமும் கூலியும் வாங்குதல், சம்பளத்தோடு நிற்காமல் கிம்பளம் (லஞ்சம்) வாங்கிப் பணம் சேர்த்தல், நடுநிலைமையாகக் கடமையைச் செய்யாமல் வேண்டியவர்க்கு உதவியாகவும், வேண்டாதவர்க்குப் புறக்கணிப்பாகவும் நடந்துகொள்ளுதல், உள்ளத்தில் உள்ளதைப்

பேசாமல் மறைத்துப் பொய் சொல்லி ஏமாற்றுதல் முதலிய குற்றங்கள் இன்று நாட்டில் பெருகியுள்ளன. இது எல்லோருக்கும் தெரிந்த நிலைமையே. நாட்டில் உள்ள எல்லோரும் உழைத்து முன்னேற வேண்டிய பொறுப்பு மிகுந்த காலம் இது. இந்தக் காலத்தில் இப்படிப்பட்ட குற்றங்கள் நீங்காமல் இருப்பது நாட்டு முன்னேற்றத் திற்கே தடையாகும்.

முன்காலத்தில் குற்றவாளிகள் மற்றவர்களைக் கண்டு அஞ்சுவார்கள்; ஒதுங்குவார்கள். ஆனால் இந்தக் காலத்தில் அவர்கள் அஞ்சாமல் ஒதுங்காமல் திரிகிறார்கள். குற்ற மான வழியில் செல்வம் சேர்ப்பவனுக்குப் பழைய சமுதா யத்தில் மதிப்பு இல்லை. இன்றைய சமுதாயத்தில் நல்லவர் கெட்டவர் என்ற ஆராய்ச்சி இல்லை. நல்லவர்களுக்கு மிகுதியான மதிப்பும் இல்லை; கெட்டவர்களை ஒதுக்கித் தள்ளுவதும் இல்லை; செல்வம் சேர்ந்துவிட்டால் எப்படிப் பட்டவர்களும் மதிக்கப்படுகிறார்கள். சமுதாயத்தில் ஊழல் கள் குறையாமல் பெருகுவதற்கு இதுவும் ஒரு காரணமாக உள்ளது.

இந்த நிலையில் சீர்திருத்தம் செய்ய வேண்டுமானால் என்ன செய்வது? ஏழை எளியவர்களுக்கு அறநெறியைப் பற்றி உபதேசம் செய்யலாம். கல்வி பயிலும் மாணவர் களுக்கு அறத்தின் சிறப்பைஎடுத்துரைக்கலாம். ஆங்காங்கே பொது மேடைகளிலும் கல்வி நிலையங்களின் பேச்சுக்களிலும் இவை நடைபெறுகின்றன. ஏழை எளியவர்களுக்கு நல் லெண்ணம் இல்லாமல் போகவில்லை. மாணவர்களுக்கு அற நெறியில் ஆர்வம் இல்லாமல் போகவில்லை. அவர்களுக்கு மட்டும் மேலும் மேலும் உபதேசம் செய்துவந்தால் போதுமா என்று எண்ணிப் பார்க்க வேண்டும். போதுமான அளவிற்கு உணவு கிடைக்காத வறியவர்களிடம் போய், "பட்டினி கிடப்பது உடம்புக்கு நல்லது" என்று பட்டினியின்

பெருமையைப் பற்றிப் பேசிப் பயன் என்ன? நிறைய உணவு கிடைக்கும் வாய்ப்பு நேரும்போது அவர்கள் அளவு மீறி உண்ண ஆசைப்படுவார்கள். அதுபோலவே மாணவர்களும் மற்றவர்களும் வளர்ந்த பிறகு, வாய்ப்புக் கிடைத்த பிறகு, ஊழலான வழிகளைக் கற்றுக்கொள்கிறார்கள்; நேர்மை தவறுகிறார்கள்; லஞ்சம் வாங்குகிறார்கள்; பொய்ம்மை வளர்க்கிறார்கள். அவர்களுக்குச் செய்த உபதேசம் பயன் இல்லாமல் போகிறது. இந்த நிலையில் ஒருவர் இருவர் தோன்றி, இன்னும் சிறந்த முறையில் மாணவர்களுக்கு நீதிகளைக் கற்பிக்க வேண்டும் என்று வற்புறுத்துகிறார்கள். வறியவர்களுக்குப் பட்டினியின் பெருமையை அழுத்தம் திருத்தமாகச் சொல்வது போன்ற முயற்சிதான் அது.

பட்டினியின் பெருமையை வயிறு கொழுத்தவர்களுக்கும் வயிறு கெட்டவர்களுக்கும் எடுத்துச் சொல்ல வேண்டும். ஒழுங்கைப் பற்றியும் நேர்மையைப் பற்றியும் இன்று உபதேசம் செய்ய வேண்டுமானால் செல்வர்களிடத்திலும் பதவியில் உள்ளவர்களிடத்திலும் சென்று சொல்ல வேண்டும். அவர்களே நேர்முகமாகவும் மறைமுகமாகவும் ஊழல் பெருகுவதற்கு இடம் தருகிறார்கள். அவர்களுக்கு உபதேசம் செய்தால் அல்லாமல் சமுதாயத்தைத் திருத்த முடியாது. லஞ்சம் கொடுப்பதையும் லஞ்சம் வாங்குவதையும் அவர்கள் நிறுத்த வேண்டும். நேர்மையற்ற முறையில் சிபாரிசு செய்வதையும் நடுநிலைமை இல்லாமல் உதவி செய்வதையும் அவர்கள் விலக்க வேண்டும். தன்னலத்தைவிட நாட்டு நலம் சிறந்தது என்று அவர்கள் உணர வேண்டும். அப்படி அவர்கள் உணர்ந்து திருந்தாவிட்டால் ஊழல்களை ஒருநாளும் அகற்ற முடியாது.

நாட்டை ஆளும் தலைவன் அங்கங்கே பொறுப்பான அதிகாரிகளை வேலையில் வைத்துவிட்டு, ஆட்சி நன்றாக

நடக்கும் என்று அமைதியாக இருப்பது போதாது. அவ ரவர்கள் அந்தந்தக் கடமைகளைச் செம்மையாகச் செய்கின் றுர்களா என்று அடிக்கடி ஆராய்ந்து பார்க்க வேண்டும். ஆட்சித் தலைவனுக்கு உரிய முதன்மையான கடமை இது. இந்தக் கருத்தைத் திருவள்ளுவர் 'தெரிந்து வினையாடல்' என்ற பகுதியில் தெளிவாகக் கூறியுள்ளார். அதிகாரி களைத் தேர்ந்தெடுத்து வேலைக்கு வைப்பது மட்டும் போதாது. அவர்கள் கடமைகளைச் சரிவரச் செய்கிறுர்களா என்று பார்த்துக்கொண் டிருக்க வேண்டும். அவ்வாறு பார்க்கத் தவறிவிட்டால், அதிகாரிகள் நெறி தவறி நடந் தால் சமுதாயத்தின் ஊழல்கள் பெருகிவிடும் என்பது திருவள்ளுவரின் கருத்து.

நாள்தோறும் நாடுக மன்னன் வினைசெய்வான்
கோடாமை கோடாது உலகு.

ஆகவே உலகத்தில்—சமுதாயத்தில்—ஊழல் இருக்கு மாஞல் அரசாங்க அதிகாரிகள் அதற்குப் பெரிய காரணம் என்று உணர வேண்டும். ஆட்சித் தலைவர்கள் அவர்களை மேற்பார்வை செய்வதன் வாயிலாகத் தவறு செய்யாமல் காக்க வேண்டும். அதிகாரிகள் முன்னதாக வந்து தங்களை வரவேற்க வேண்டும், தங்களுக்கு மாலையிட வேண்டும், தங்களைப் புகழ வேண்டும், தங்களுக்கு விருந்து ஏற்பாடு செய்ய வேண்டும், தங்களைச் சார்ந்தவர்களுக்கு வேண்டிய உதவி செய்ய வேண்டும் என்றெல்லாம் ஆட்சித் தலைவர் கள் எதிர்பார்ப்பார்களாஞல், அவர்களால் அரசாங்க அதிகாரிகளைத் திருத்தவும் முடியாது; சமுதாய ஊழல்களை ஒழிக்கவும் முடியாது. உப்பு இட்டவர்களை உள்ள அளவும் நினைப்பது மனம். ஆகையால் மாலை இட்டவர்களையும் விருந்து இட்டவர்களையும் கண்டிக்க முடியாமல் தயங்குவது இயற்கை. நாட்டுக்கு நல்லது செய்ய வேண்டும் என்ற நோக்கம் ஒன்றை மட்டும் போற்றி, விருந்து, புகழ்ச்சி,

வரவேற்பு, மாலே, பாராட்டு முதலியவற்றை எல்லாம் துறக்க வல்ல வீரர்களால்தான் மற்றவர்களேக் கடிந்து திருத்த முடியும். அவர்கள் நாட்டின் நன்மையைக் கருதி இந்தச் சிறு ஆசைகளேத் துறப்பது மட்டும் போதாது. அடுத்த முறையில் தேர்தலில் நின்று வெற்றி பெற்று மறுபடியும் பதவிக்கு வர வேண்டும் என்ற ஆசையையும் துறக்க வல்லவர்களாக இருத்தல் வேண்டும். அத்தகைய புது வகைத் துறவிகளே இன்றைய மக்களாட்சிக்கு வேண்டிய வர்கள். ஐந்து ஆண்டுப் பதவிக் காலத்தில் செயற்கரிய செய்து, லஞ்சம் முதலிய ஊழல்களேக் குறைத்து, நன்மை பல செய்ய வல்லவர்கள் அவர்களே.

20. மூட்டைப் பயணம்

போர்க்காலத்தில் பலவகை நெருக்கடிகள் ஏற்படுவது வழக்கம். போர் முடிந்து அமைதி ஏற்பட்ட பிறகு நெருக்கடிகள் தீர்ந்து வாழ்க்கைக்கு உரிய வசதிகள் பழையபடி அமைவது நல்லது.

போர்க் காலத்தில் தொழிற்சாலைகள் போருக்கு வேண்டியவற்றை ஆக்கித்தர வேண்டியிருப்பதால் மற்றப் பொருள்களின் உற்பத்தி குறையும். அதனால் 'பஸ்' வண்டிகள் முதலியன எண்ணிக்கையில் குறைவது இயற்கை. இருக்கும் சில பஸ்களிலேயே பலரும் பயணம் செய்ய வேண்டிய தேவை ஏற்படுகிறது. சில வண்டிகளில் பலர் செல்ல நேர்வதால் எல்லோரும் உட்கார்ந்து செல்ல இடம் கிடைப்பதில்லை. ரயில் முதலியவற்றிலும் அப்படியே ஏற்படுகிறது. அதனால், பயணத்தைக் குறைத்துக்கொள்ளுங்கள் என்று அரசாங்கம் வேண்டுகோள் விடுக்க நேர்கிறது. அத்தகைய மக்களுக்கு வேண்டுகோளைக் கொட்டை எழுத்துக்களில் அச்சிட்டு ஆங்காங்கே அறிவிப்புப் பலகைகளில் வெளியிட்டதைப் போர்க்காலத்தில் கண்டோம்.

போர் முடிந்தது. ஏறக்குறையப் பதினைந்து ஆண்டுகள் ஆகிவிட்டன. ஆனால், போரால் விளைந்த நெருக்கடிகள் குறைந்தனவா என்றால் இல்லை. அவற்றில் பல இன்னும் தீரவில்லை.

போர்க்காலத்தில் பம்பாய் சென்னை முதலிய நகரங்களில் பஸ் வண்டிகளில் உட்கார்ந்து செல்வோர் மட்டும் அல்லாமல் நெருக்கடியோடு நின்று செல்வோரும் இருந்தனர். போர் முடிந்த இரண்டு ஆண்டுகளில் பம்பாய் நகரத்தில் அந்த நெருக்கடி இல்லாமல் செய்துவிட்டனர். யாரும் நின்றுகொண்டு செல்லாமல் உட்கார்ந்து பயணம் செய்யுமாறு பஸ் வண்டிகளின் எண்ணிக்கையைப் பெருக்கிவிட்டனர்; அதனால் அங்கு நெருக்கடி தீர்ந்தது. சென்னை நகரத்தில் இன்னும் அவ்வாறு செய்யப்படவில்லை. செய்ய இன்னும் எத்தனை ஆண்டுகள் ஆகும் என்றும் தெரியவில்லை. செய்யும் நோக்கம் உண்டா என்பதும் புலப்படவில்லை.

போர்க்காலத்தில் வடநாடு தென்னாடு எங்கும் ரயில் வண்டிகளில் நெருக்கடி மிகுதியாக இருந்தது. போர் முடிந்த சில ஆண்டுகளுக்குப் பிறகு நெருக்கடி படிப்படியாகக் குறைந்துபயணவசதிகள்பெருகும்என்று எதிர்பார்த்தோம். எதிர்பார்த்தவாறு வடநாட்டில், பல மாநிலங்களில், ரயில் நெருக்கடி குறைந்துவிட்டது. தென்னாட்டில் ஒவ்வொரு திசையிலும் ரயில் நெருக்கடி பழையபடியே இருந்துவருகிறது. மூன்றும் வகுப்புப் பெட்டியில் மக்கள் மூட்டைகள் போல் அடைப்பட்டு நெருக்குண்டு பயணம் செய்கிறார்கள். மூட்டைகள்மேலே உயரத்தில் அல்லது கீழேஒதுக்கிடத்தில் ஒதுங்கிக் கிடக்கின்றன. ஆனால், மக்கள், உராய்ந்துகொண்டும் நெருக்கிக்கொண்டும் துன்புறுகிறார்கள். மூட்டைகள் உணர்ச்சியற்றுப் பேசாமல் கிடக்கின்றன. மக்கள் உறுமிச் சண்டையிட்டுக்கொண்டு பயணம் செய்கிறார்கள். மூன்றும் வகுப்புப் பெட்டியில் இரவெல்லாம் கால் நோக நின்று பயணம் செய்வது அன்றாடக் காட்சியாய் விட்டது. எப்படியோ போராடி ஒரு மூலையில் இடம் பெற்றவர்கள் அந்த இடத்தைப் பொன்னே போல் போற்றிக் காப்பாற்றும் தன்னலம் உடையவர்களாக வளர

நேர்கிறது. வழியெல்லாம் மூட்டைகளைவிடக் கொடுமையாக மக்கள் அடைப்பட்டுக் கிடப்பதால் சிறுநீர் கழிக்க எழுந்து செல்லவும் முடியாமல் வருந்துவது வழக்கமாகிவிட்டது. ரயில் பயணம் என்றால் இப்படித்தான் இருக்கும் என்று சிறுவர்கள் இயல்பாக எண்ணுமாறு ஆகிவிட்டது. இந்த இருபது இருபத்தைந்து ஆண்டுகளில் பிறந்து வளர்ந்த இளைஞர்களும் இதையே இயற்கை என்று எண்ணுமாறு ஆகிவிட்டது. வளர்ந்த பெரியோர்களும் இது இப்படித் தான் இருக்கும் என்று எண்ணப் பழகிவிட்டார்கள்.

ஆனால், வெளி நாடுகளில் பயணம் செய்து திரும்பு கின்றவர்கள் இதைக் கொடுமை என்று உணர்ந்து நோகின்றார்கள். தமிழ்நாட்டைச் சுற்றிப் பார்ப்பதற்காக வடக்கே யிருந்துவரும் வடநாட்டு மக்கள் — மூன்றும் வகுப்பில், இந்த நாட்டு ரயில்களில் பயணம் செய்யும் வடநாட்டு மக்கள் — இங்கு உள்ள கொடுமையை நன்றாக உணர்ந்து வருந்து கிறார்கள்.

"எங்கள் வடநாட்டில் சில திருவிழாக் காலங்களில் மட்டுமே ரயில் வண்டிகளில் இப்படிப்பட்ட நெருக்கடி இருக் கும். உங்கள் நாட்டில் எல்லாக் காலங்களிலும் இந்தப் பொல் லாத நெருக்கடி இருக்கிறதே" என்று வடநாட்டார் பலர் உணர்ந்து சொல்கிறார்கள்.

மக்கள் கிளர்ச்சி செய்தால் இந்த நிலைமை திருந்தலாம். பல துறைகளில் பல குறைகளுக்காகக் கிளர்ச்சி செய்து செய்து மக்களும் சலித்துவிட்டார்கள். பலவகைக் கிளர்ச்சி களைப் பார்த்துப் பார்த்து அரசாங்கமும் சலித்துவிட்டது. அரசியல் தலைவர்களும் அறிஞர்களும் இந்தக் கொடுமை யை எண்ணி உணர்ந்தால் சீர்திருத்தத்துக்கு வழிபிறக்கும். எண்ணுவதற்கோ உணர்வதற்கோ அவர்கள் வாழ்க்கையில் ஓய்வு இல்லை. அவர்களில் பலர், முதல்வகுப்பில் பயணம் செய்கிறவர்கள். மூன்றும் வகுப்பில்பயணம்செய்யும் நிலையில்

உள்ள சிலரும் ஏதேனும் பதவி கிடைத்ததும் முதல் வகுப்புக்கு உயர்ந்துவிடுகிறார்கள்; உயர்ந்ததும் மறந்துவிடுகிறார்கள். வேறு என்ன வழி? ஒவ்வோர் ஆண்டிலும் சில மாதங்களாவது முதல் வகுப்பும் இரண்டாம் வகுப்பும் இல்லாமல் ஆக்கி மூன்றாம் வகுப்புப் பெட்டிகளிலேயே எல்லாரும் பயணம் செய்யுமாறு அமைக்க வேண்டும். அப்போதுதான் மூன்றாம் வகுப்பில் மக்கள் படும் துன்பங்களையும் மற்றப் 'புளி ஏப்பக்காரர்' உணர முடியும்.

முதல் வகுப்பாலும் இரண்டாம் வகுப்பாலும் ரயில் துறைக்குக் கிடைக்கின்ற வருமானம் எவ்வளவு? அந்த வகுப்புகளுக்கு ஆகும் செலவு எவ்வளவு? மூன்றாம் வகுப்பால் கிடைக்கும் வருமானம் எவ்வளவு? ஆகும் செலவு எவ்வளவு? இப்படிக் கணக்கெடுத்துப் பார்த்தால் மக்களை மூட்டைகளாக்கி அடக்கும் முறை நீதியா என்பது புலப்படும். ஆள்வோரின் நெஞ்சில் இரக்கம் பிறக்காவிட்டாலும் கடமை உணர்ச்சியாவது ஏற்படும். எளியாரைக் கொள்ளையடித்து வலியார்க்கு வசதி செய்யும் கொடுமை நீடிக்காது.

போகட்டும், நாட்டுப்பற்றின் காரணமாக இந்தக் கொடுமையைத் தாங்குவோம் என்றால் அதுவும் கூடாது. நாட்டு மக்கள் நாகரிகமாக வளர்ந்து முன்னேறுவதற்கு இந்த மூட்டைப் பயணம் பெரிய முட்டுக்கட்டை ஆகும். நகரங்களில் சீர்கேடான சேரிகள் இருப்பதை ஒழிக்க வேண்டும் என்று அரசியல் தலைவர்கள் பேசத் தொடங்கிவிட்டார்கள். மக்களின் நாகரிக வளர்ச்சிக்கு அந்தச் சீர்கெட்ட சேரிகள் முட்டுக்கட்டையாக இருப்பது போலவே இந்த மூன்றாம் வகுப்பு மூட்டைப் பயணங்களும் தீங்காக இருக்கின்றன. இரும்புச் சாமான்களோடு பழகுகின்ற சிறுவர்களைவிட, கண்ணாடிச் சாமான்களோடு பழகுகின்ற சிறுவர்கள் நாகரிகம் பெற்று விளங்குவார்கள். சந்தைக்கு அருகே வாழ்கின்ற மக்களைவிடக் கலைவளம் உள்ள

தெருக்களில் வாழும் மக்கள் நயமாகப் பேச வல்லவர்களாக இருப்பார்கள். மூட்டைகளாய் அடைப்பட்டு உறுமியும் சீறியும் பயணம் செய்யும் மக்களைவிட வசதியோடு பயணம் செய்து பழகும் மக்கள் நல்ல சமுதாய அமைப்பிற்கு உதவி யானவர்களாக இருப்பார்கள். இந்த நன்மையைக் கருதி யாவது நாட்டுப்பற்று உடைய அறிஞர்கள் மூட்டைப் பயணங்களைக் குறைக்க முயல வேண்டும்.

21. முதல் காரணம்

'இன்னா செய்யாமை' என்ற அறத்தைத் திருவள்ளுவர் தெளிவாக விளக்கியுள்ளார். அன்புடைமை என்று பத்துக்குறள்கள் எழுதியவர் அவை போதா என்று எண்ணி, 'இன்னா செய்யாமை' என்றும் பத்துக் குறள்கள் எழுதியுள்ளார். அகிம்சையே அறங்களில் சிறந்தது என்று இந்த நாட்டுச் சான்றோர் வற்புறுத்தியுள்ளனர். ஓருயிர்க்கும் துன்பம் செய்யக் கூடாது என்று அறிவுறுத்திய அறவோரையே மகாவீரர் என்று இந்த நாடு போற்றியது. இந்தச் சான்றோர்பரம்பரையிலே வந்தவராய் நம் காலத்தில் வாழ்ந்த வீரர் காந்தியடிகள். தனிப்பட்ட மனிதரின் வாழ்க்கையில் மட்டும் அல்லாமல் சமுதாய வாழ்க்கையிலும் நாட்டு ஆட்சியிலும் உலக அரசியலிலும் இம்சை கூடாது என்று வற்புறுத்தியவர் காந்தியடிகள்.

ஆனாலும் இன்னா (இம்சை) இன்னும் பல துறைகளிலும் இருந்துவருகிறது. காட்டு விலங்குகளிடையே ஒன்றையொன்று அடித்தலும் கொல்லுதலும் இருப்பது போலவே, நாகரிக மனிதர்களின் வாழ்க்கையிலும் இம்சை இருந்துவருகிறது. இவ்வளவு நாகரிக வளர்ச்சிக்குப் பிறகும் இம்சை ஒழியவில்லையே என்று காணும்போது, சிலர் அதை இயற்கையானது என்றும் எண்ணிவிடுகிறார்கள்.

இம்சை செய்கின்றவர்களை உலகம் எந்நாளும் வெறுத்து வருகிறது. அவர்களைப் பொல்லாதவர்கள், போக்கிரிகள், பாவிகள் என்றெல்லாம் கூறிப் பழித்தும் வருகிறது. ஆனாலும் உலகம் திருந்தவில்லை. காரணம் என்ன? ஒரு துறையில் அகிம்சையைப் போற்றிவிட்டு இன்னொரு துறையில் இம்சையைப் போற்றுவதுதான் காரணம். உப்பில்லாப் பத்தியம் கடைப் பிடிப்பவன் குழம்பில் மட்டும் உப்பில்லாமல் உண்டு, மிளகுநீரில் உப்புச் சேர்த்துக்கொண்டால் அது பத்தியம் ஆகுமா? தெருவிலே அடியும் குத்தும் கொலையும் கூடா என்று தடுத்துவிட்டுப் போர்க்களத்தில் குத்தும் கொலையும் கொள்ளையும் செய்தவர்களை வீரர் என்று போற்றினார்கள். அவர்களுக்குச் சிறப்பெல்லாம் செய்தார்கள். அவர்களுக்கு மறுமையிலும் இன்பம் (வீரசுவர்க்கம்) உண்டு என்று நம்பினார்கள்; பாட்டுக்கள் பாடினார்கள்; காவியங்களில் எழுதினார்கள். இவ்வாறு ஓரிடத்தில் வேண்டா என்று வெறுத்த இம்சையையே மற்றோரிடத்தில் போற்றிப் பாராட்டினால் எப்படி முன்னேற முடியும்?

இவ்வகையில் இருந்துவந்த பெரிய மயக்கத்தைப் போக்க முனைந்தவர் காந்தியடிகள். அதனால்தான் அவர் நடத்திய சுதந்தரப் போராட்டத்திலும் இம்சைக்கு இடம் இல்லை என்றார். ஆங்கிலேயரின் இரத்தத்தைச் சிந்தி உரிமை பெறுவதை விட அடிமையாக வாழ்வதே மேல் என்றார்.

அவர் சொல்லிச் சொல்லி மறைந்துவிட்டார். நாம் என்ன செய்கிறோம்?

குடும்பத்தில் அன்பாகக் கேட்கின்றவர்க்கு இணங்குவதில்லை; வன்பாகக் கேட்கின்றவர்க்கு இணங்குகிறோம்.

தெருவில் முறையோடு கேட்கின்றவர்களைப் புறக்கணிக்கிறோம்; முறை தவறி முரட்டுத்தனம் காட்டுகின்றவர்களைக் கண்டு அஞ்சி விட்டுக்கொடுக்கிறோம்.

அமைப்புக்களில் பணிவோடு நடந்து உரிமை கேட்

கின்றவர்களை உதறுகிறோம்; குறுக்கே மறித்து வன்மை காட்டி வற்புறுத்துகின்றவர்களுக்கு இசைகின்றோம்.

நெறியோடு நடந்து இன்சொல்லால் கேட்கின்றவர்களை ஏதேனும் காரணம் சொல்லி ஒதுக்க முயல்கிறோம். வம்பர்களாய் நடந்து வன்பழி தூற்றுகின்றவர்களுக்கு உதவி செய்து தப்பித்துக்கொள்ள முயல்கிறோம்.

இவற்றால் விளைவது என்ன? அன்புநெறியில் — அகிம்சையில் — நம்பிக்கை உடையவர்களாய் நடப்பவர்களுக்கு இடம் கொடுக்காமல், வன்பு நெறியில் — இம்சையில் — நம்பிக்கை உடையவர்களை வாழ வைக்கிறோம். அன்புநெறியைக் கைவிடுகிறோம்; இம்சையைப் போற்றுகிறோம். வளரும் இளைஞர்கள் அன்புநெறி பயனற்றது என்று உணருமாறு செய்கிறோம்; இம்சையே வெற்றிக்கு வழி என்று அவர்கள் நம்புமாறு செய்கிறோம்.

மாணவர்கள் கூடி அன்பாகக் கேட்டுப் பார்க்கிறார்கள். ஒன்றும் நடப்பதில்லை. அவர்களே திரண்டு கல்விக்கூடத்தின் கதவுகளை அடைத்தும் உடைத்தும் ஆரவாரம்செய்து கல்லெறி முதலியவற்றைக் கையாளுகிறார்கள். அப்போது அவர்களுடைய கோரிக்கையைக் கேட்கப் பலர் முன்வருகிறார்கள். அதனால் இம்சையே பயனுள்ள முறை என்று அவர்கள் எண்ணிவிடுகிறார்கள்.

மக்கள் பணிவோடு வேண்டுகோள் விடுக்கிறார்கள்; அதிகாரிகள் புறக்கணிக்கின்றார்கள். மக்கள் கொடியவர்களாய்க் கொலையிலும் கொள்ளையிலும் இறங்குகிறார்கள். அதிகாரிகள் அவர்களுக்கு உரிமைவழங்க முன்வருகிறார்கள். அதனால் இம்சைவழி பயன் தருவது என்று இளைஞர்கள் மயங்குகிறார்கள்.

ஒரு கட்சி தன் கோரிக்கையை நாகரிகமான முறையில் எழுதியும் சொல்லியும் கேட்டுப் பார்க்கிறது; ஆட்சியாளர் அசட்டை செய்கிறார்கள். மற்றொரு கட்சி தூற்றியும்

அச்சுறுத்தியும் தொல்லை கொடுக்கிறது. ஆட்சியாளர் சில வகையில் விட்டுக்கொடுக்கிறார்கள். இதைப் பார்க்கும் இளைஞரின் நெஞ்சம் இம்சையே வெற்றிக்கு வழி என்று எண்ணத் தொடங்குகிறது.

ஒரு மாநிலம் தன் உரிமைக்காக அன்போடு முறை யிட்டுக் கேட்கிறது; அரசியல் தலைவர்கள் அதன் முறையீட் டைப் பொருட்படுத்தாமல் அதன் அடக்கத்தைப் பாராட்டி அப்பால் செல்கிறார்கள். மற்றொரு மாநிலம் கொலை கொள்ளை களைத் தயங்காமல் செய்து, உள்ளே நுழையவும் இடம் தரா மல் கொடுமைகளை மேற்கொள்கிறது. அரசியல் தலைவர் கள் எப்படியேனும் அமைதி உண்டாக்க வேண்டும் என்ற நோக்கத்தால் அந்த மாநிலத்தார் கேட்டதைக் கொடுத்து, அவர்கள் விரும்பியவாறு நடக்கிறார்கள். இதை நோக்கும் இளைஞர்கள், ஏட்டுக்கு அகிம்சை, வாழ்வுக்கு இம்சை என்று நம்பத் தொடங்குகிறார்கள்.

இந்த நிலையில் உலகம் எப்படித் திருந்தும்? அன்று போர்க்களத்தில் இம்சையை மேற்கொண்டவர்களை வாயாரப் புகழ்ந்து சிறப்பெல்லாம் செய்தார்கள். இன்று அவ்வாறு புகழ்ந்து பாராட்டாவிட்டாலும், அவர்கள் விரும் பியதைக் கொடுத்து வெற்றிபெறச் செய்கிறார்கள். எதைப் போற்றுகிறோமோ அது வாழும்; எதைப் புறக்கணிக்கிறோ மோ அது அழியும். அன்புநெறிக்கு இன்னும் புறக்கணிப்பு உள்ளது. குடும்பம், தெரு, பள்ளி, தொழிற்சாலை, ஆட்சி, அரசியல் எல்லா இடங்களிலும் அன்பைப் போற்றுவோர் புறக்கணிக்கப்படுகின்றனர். அதனால் இம்சை இன்னும் வாழ்ந்துவருகிறது. வெற்றியும் பெற்று வருகிறது. ஆகவே, உலகில் கொடுமைகள் ஒழியாமல் இருப்பதற்குக் கொடியவர்கள் இரண்டாம் காரணம்; நாமே முதல்காரணம் என்று உணர வேண்டும். அப்படி உணர்ந்து திருந்தினால் தான், உலகமெங்கும் அன்புநெறி வெல்ல முடியும்.

22. பிறப்பு ஒக்கும்

யந்திர நாகரிகம் பெருகிவிட்ட இக்காலத்தில் உலக நாடுகள் எல்லாம் கூட்டுறவு முறையில் வாழ முயல்வதைக் காண்கிறோம். மிகப் பழங்காலத்தில் சின்ன ஊர்களில் மனிதர் சேர்ந்து வாழத் தொடங்கிய போதும் இந்தக் கூட்டுறவு முறையே தேவைமாக இருந்தது. ஒவ்வொரு குடும்பமும் ஒவ்வொரு தொழில் செய்வதும், அப்படிப்பட்ட பல குடும்பங்கள் சேர்ந்து ஓர் ஊரில் ஒற்றுமையாய் வாழ்வதும் பழைய ஊர் அமைப்பு முறையாகும். அந்த ஊரில் பிறந்து வளர்ந்தவர்களுக்கு எதிர்காலத்தைப் பற்றிய கவலை இல்லாமல் இருந்தது. "நான் இந்தக் குடும்பத்தைச் சார்ந்தவன்; ஆகையால் எனக்கு உரிமையான தொழில் இது; என் குடும்பத் தொழிலைச் செய்து நான் எப்படியும் வாழ்க்கை நடத்துவேன்" என்று இளைஞர் ஒவ்வொருவரும் எண்ணினார்கள். அவ்வாறே வாழ்நாள் முழுவதும் தொழில் செய்து கூட்டுறவு முறையைப் போற்றினார்கள்.

அப்படி இயற்கையாக வளர்ந்த வளர்ச்சியில் ஒரு மாசு புகுந்தது. ஒருவன் தன் குடும்பத் தொழில் தவிர வேறு தொழில் கற்றுக்கொள்ள முடியாமல் போயிற்று. விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் குடும்பத் தொழிலையே கற்றுப் பிழைக்கவேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. ஆகவே விருப்பத்தோடு தொழிலைச் செய்வதுபோய், தலைவிதி என்று வெறுப்போடு தொழில் செய்யும் நிலைமை ஏற்பட்டது. அது மட்டும் அன்று. தொழில் அளவில் அமைந்த பிரிவு

அந்த அளவோடு நிற்காமல், உண்பது உறவுகொள்வது முதலியவற்றிற்கும் எட்டியது. பிறப்பை ஒட்டிய தொழில் பாகுபாடு, பிறப்பை ஒட்டிய சாதிப்பாகுபாடாக வளர்ந்தது. கிராமத்தின் கூட்டுறவு வாழ்க்கைக்காக உழவன் கொல்லன் குயவன் வணிகன் என அமைத்த தொழில் பிரிவுகள், உண்ணவும் உறவுகொள்ளவும் முடியாத சாதிப் பிரிவுகளாக ஏற்பட்டன.

ஒரு விருந்து நடக்கிறது என்று வைத்துக்கொள்வோம். சிலர் இலை பரப்புகின்றார்கள். சிலர் காய்கறிகள் பரிமாறுகின்றார்கள். சிலர் சோறு இடுகின்றார்கள், சிலர் நெய் வார்க்கிறார்கள், சிலர் தண்ணீர் தருகிறார்கள். கடைசியாகச் சிலர் இலை எடுக்கிறார்கள். வேறு சிலர் இடத்தைத் தூய்மை செய்கிறார்கள். இப்படிப் பலர் சேர்ந்து சில சில தொழில்களைப் பொறுப்பாக ஏற்றுச் செய்வதால்தான், விருந்து நன்றாக அமைதியாக நடைபெறுகிறது. ஆனால் சில நாட்களுக்குப் பிறகு இலை பரப்புவோர் ஒரு சாதி என்றும், இலை எடுப்பவர் வேறொரு சாதி என்றும், இருவகையாரும் உறவுகொண்டு பழகக் கூடாது என்றும் பிரித்துவைத்தால் அது கொடுமை அல்லவா? நெய் வார்ப்பவர் உயர்ந்த சாதி என்றும், நீர் வார்ப்பவர் தாழ்ந்த சாதி என்றும் வேறுபாடு கற்பித்தால் அது அநீதி அல்லவா? இந்த நாட்டில் ஊர்களின் கூட்டுறவுவாழ்க்கைக்காக ஏற்பட்ட தொழில்பாகுபாட்டை ஒரு காலத்தில் அப்படித்தான் சாதிப் பாகுபாடாகச்செய்துவிட்டார்கள். இந்தக்கொடுமை தான் இந்தநாட்டைப்பல நூற்றாண்டுகளாகப் பிறர் காலில் அடிமைப்படச் செய்தது. இந்த நாட்டு மக்கள் ஒற்றுமை இல்லாமல் சீர் குலைந்து, வந்தவர்க்கெல்லாம் அடிமைப் பட்ட காரணம் அதுவே ஆகும். இன்று ஒற்றுமை இல்லாமல் பிளவும் பகையும் பெருகிச் சமுதாயம் முன்னேறாமல் இருப்பதற்கும் காரணம் அதுவே ஆகும்.

எண் எழுத்து ஆகிய இரண்டும் மனிதர்க்குக் கண் போன்றவை என்று திருவள்ளுவர் கல்வியின் சிறப்பை இருபது நூற்றுண்டுகளுக்கு முன்னமே வற்புறுத்தினுர். அந்தக் கண் போன்ற கல்வி எல்லோர்க்கும் வேண்டும் என்ற உண்மையை நாடு மறந்துவிட்டது. அதுவும் ஒரு தொழில் போல் ஆகிச் சில குடும்பத்தார்க்குமட்டும் உரிய தாகி விட்டது. இன்னுர் தச்சுத் தொழில் செய்யலாம், இன் னுர் குயத்தொழில் செய்யலாம் என்று பிறந்த குடும்பத்தைப் பார்த்து விதிப்பது போல், இன்னுர் கல்வி பெறலாம் இன்னுர் பெறக் கூடாது என்று விதிக்கும் கொடுமை இந்த நாட்டில் புகுந்தது. இது உலகத்தில் வேறு எந்த நாட்டின் வரலாற்றிலும் காண முடியாத மாசு ஆகும். இதனுடைய விளைவுகளையும் இன்று வரையில் சமுதாயம் அனுபவித்துக் கொண்டுவருகிறது. இன்னும் எவ்வளவு காலம் இந்தத் தீமையின் விளைவுகளை அனுபவிக்க வேண்டுமோ?

தொடக்கத்தில் ஏற்பட்ட தொழில்பாகுபாடு அமைதி யான கூட்டுறவு வாழ்க்கைக்காக ஏற்பட்டது என்று கண் டோம். அதனுல் சமுதாயம் நன்மை பெற்றது. கிராமங் களில் நல்ல கூட்டுறவு முறை அமைந்தது. ஆனுல் திருவள் ளுவர் போல், தொழிலால்தான் வேற்றுமை பிறப்பால் வேற்றுமை இல்லை என்ற உண்மையைப் பலர் வலியுறுத்த வில்லை. அதுதான் அந்தக் காலத்தார் செய்த தவறு. அதற்கு மாருகத் தச்சனும் குயவனும் ஒருங்கே இருந்து உண்ணக் கூடாது, உழவனும் வணிகனும் பெண் கொடுத் தல்கொள்ளல் கூடாது என்றெல்லாம் கண்மூடி வேறுபாடு களை வற்புறுத்திக் கெடுத்தார்கள். திருவள்ளுவர் முத லான சான்றோர் எடுத்துரைத்த விழுமிய உண்மைகள் இந்த மக்களின் செவியில் சிறிதும் ஏறவில்லை.

வாழ்க்கைக்குஉதவியாக உள்ளபோது மக்கள் சில தவறு களையும் இயற்கை என்று நம்பி ஏற்றுக்கொள்கிருர்கள்.

அப்படித்தான் சாதி வேறுபாடுகள் வளர்ந்தபோதும் அவற்றை இயற்கை என நம்பி ஏற்றுக்கொண்டார்கள்.

காலம் மாறுகிறது. இடம் வேறுபடுகிறது. அவற்ருல் சில பழக்க வழக்கங்கள் மாறுகின்றன; சில மாருமல் இருக்கின்றன. எவை மாறுகின்றன எவை மாருமல் நிற்கின்றன என்று ஆராய்ந்தால் ஓர் உண்மை விளங்கும். வாழ்க்கைக்கு உதவியானவை நிற்கின்றன. பழங்காலத்தில் கோயில்களுக்குச் செல்வோர் நடந்து சென்ருர்கள், அல்லது, கட்டை வண்டியில் சென்ருர்கள். இன்று ரயிலில் செல்கின்ருர்கள். மாறுதலுக்குக் காரணம் என்ன? அவற்றை விட இவை வசதியாய் உள்ளதுதான் காரணம். அன்று பழமும் தேங்காயும் படைத்தார்கள். இன்றும் அவற்றையே படைக்கிருர்கள். மாறுதல் இல்லே. காரணம் என்ன? பழமும் தேங்காயும் இன்றும் வாழ்க்கைக்கு வேண்டியவைகளாகவே உள்ளன. இது கால வேறுபாட்டின் ஆராய்ச்சி. உடை வேறுபாட்டையும் ஆராய்வோம். கம்பளிச் சட்டைகளேயே மிகுதியாக அணியும் நாட்டிலிருந்து இங்கு வந்து தொழில்புரியும் ஐரோப்பியர் நம்மைப் போல் பருத்திச் சட்டைகளே மிகுதியாக அணிகின்றனர். காரணம், இவைகள் இந்த நாட்டின் தட்ப வெப்பத்திற்கு ஒட்டி வாழ்வதற்கு உதவியாக இருத்தலே ஆகும். உடைகளே மாற்றிக்கொள்ளுபவர்கள் முடிவெட்டும் முறையை மாற்றிக்கொள்வதில்லே. கிராப் என்னும் தங்கள் நாட்டு முறையையே இங்கும் வைத்துக்கொண் டிருக்கின்றனர். அவர்கள் மட்டும் அல்லாமல், நாமும் அந்த முறையையே போற்றிவருகின்ருேம். நமக்குப் புதுமையாக இருந்தும் அதை நாம் கைவிடவில்லே. காரணம், அது வாழ்க்கைக்கு உதவியாக இருப்பதுதான்.

ஆகவே வாழ்க்கைக்கு உதவியாக இருந்தால் மனிதன் எதையும் கைவிடுவதில்லே என்று அறிகிருேம்.

வாழ்க்கைக்கு உதவாத எதையும் நாளடைவில் கைவிட்டு விடுகின்றான். இந்த நாட்டில் ஏற்பட்ட சாதி வேறுபாடு, நெடுங்காலம் நிலைபெற்று இருந்ததற்குக் காரணம் என்ன? இன்று செல்வாக்கு இழந்து வருவதற்குக் காரணம் என்ன? இன்னும் சில பகுதிகளில் ஒட்டிக்கொண் டிருப்பதற்குக் காரணம் என்ன? எல்லாக் காரணமும் ஆராய்ந்தால் இவையெல்லாம் வாழ்க்கையின் தேவையை ஒட்டியே இருப்பதைக் காணலாம்.

பழங்காலத்தில் சாதி வேறுபாடு வேரூன்றிய போதும் அதனால் பல குடும்பங்களுக்கு நன்மை இருந்தது. மற்றவர்களோடு உறவு கொள்ளாமல் இருந்தவர்களுக்குச் சமுதாயத்தில் பெருமை ஏற்பட்டது. குறைந்த உழைப்பிலே நிறைந்த பயனைப் பெறும் வாய்ப்பு அமைந்தது. வாழ்க்கை வசதிகளும் மிகுதியாகக் கிடைத்தன. அந்தப் பெருமையும் வாய்ப்பும் வசதிகளும் பெற்றவர்கள் அவற்றை இழந்துவிட விரும்புவார்களா? தாம் மட்டும் அல்லாமல் தம் குடும்பங்களில் வழிவழியாகப் பிறப்பவர்களும் அந்தப் பெருமையும் வாய்ப்பும் வசதியும் பெற வேண்டும் என்று விரும்பினார்கள். ஆகவே சாதிவேறுபாடு கடவுளால் ஏற்படுத்தப்பட்டது என்றார்கள்; தொடர்ந்து சாதிவேறுபாடுகள் இருக்க வேண்டும் என்றார்கள். அதையே போற்றி எழுதினார்கள்; பேசினார்கள்.

சிலர் வசதிக்காகப் பலர் பலியான பிறகு, வந்தவர்களுக்கெல்லாம் நாடு அடிமைப்படத் தொடங்கியது. வாழ்க்கைவசதிகளை எல்லோரும் இழக்க வேண்டிய நெருக்கடி ஏற்பட்டது. தாழ்ந்த சாதியார்க்கு மட்டும் அல்லாமல் உயர்ந்த சாதியார்க்கும் பெருமையும் வாய்ப்பும் இல்லாமல் போகவேண்டிய நெருக்கடி வந்தது. சாதிகள் உண்டு என்னும் மதத்தார் அடிமைகள் ஆயினர். சாதிகள் இல்லை என்னும் மதத்தார் ஆள்வோர் ஆயினர். உண்டு

என்பவரின் கையைவிட இல்லை என்பவரின் கை வலுத்தது. அதற்குப் பிறகுதான் சாதிகளுக்குக் கட்டுப்பட் டிருந்தவர்கள் அந்தக் கட்டுப்பாட்டைப் பற்றிச் சிந்திக்கத் தொடங்கினர்கள். அந்த நிலையில் அறிவியல் (விஞ்ஞானம்) வேகமாக வளர்ந்து மனித இரத்தத்தில் எந்த வேறுபாடும் இல்லை என்ற உண்மையைத் தெளிவாக்கியது. சாதி வேறுபாடு வெறும் பொய் என்றும், மூடநம்பிக்கை என்றும், கொடுமை என்றும் மனிதன் உணரும்படி செய்தது.

இவ்வளவு ஏற்பட்ட பிறகும் சமுதாயத்தை விட்டுச் சாதிவேறுபாடு தொலைந்ததா? இன்னும் அடியோடு தொலையவில்லை. எங்கெந்தப் பகுதியில் வசதிகள் பெறுவதற்கு அது துணையாக இருக்கின்றதோ அந்தந்தப் பகுதியில் இன்னும் வாழ்கின்றது. சமையலறையிலும் உணவுக் கூடத்திலும் சாதிவேறுபாடு ஒரு காலத்தில் வேரூன்றி இருந்தது. இன்று அந்த இரண்டு இடங்களிலும் அது போய்விட்டது. பழங்காலத்தில் உயர்ந்த சாதியார் சில வசதிகளைக் கருதி அதைப் போற்றியது போலவே, இன்று பிற்பட்ட சாதியார் சில வசதிகளைக் கருதி அதைப் போற்றிவருகின்றூர்கள். கல்விநிலையங்களில் சிலருக்குச் சம்பளச் சலுகை உணவுவசதி முதலியன கிடைப்பதால் அங்கே சாதிவேறுபாடு இன்னும் வாழ்கிறது. சில அலுவலகங்களில் சிலருக்குச் சலுகை கிடைப்பதால் அங்கும் அது வாழ்கிறது. சிலர் நடத்தும் செய்தித்தாள் நிலையங்கள், வணிக அமைப்புக்கள், தொழிற்சாலைகள் முதலியவற்றில் தொழில் பெறுவதற்கும் சாதி உதவியாய் உள்ளது. "நானும் உங்கள் சாதியைச் சேர்ந்தவன்; ஆகையால் எனக்கு ஆதரவு வேண்டும்" என்று சொல்லி உள்ளே புகுவதற்கும் உயர்வு பெறுவதற்கும் சாதி துணை செய்கிறது. இவ்வாறு வாய்ப்பும் உயர்வும் வசதியும் பெறுவதற்குச் சாதிவேறுபாடு துணை செய்யுமானல், துணை

பெற்றவர்கள் அதைக் கைவிடுவார்களா? அதனால்தான் சமையலறையிலும் உணவுக் கூடத்திலும் வீட்டுத் திண்ணையிலும் இருந்த சாதிவேறுபாடு, அந்த இடங்கள் எல்லாம் பயன் இல்லை என்று விட்டுவிட்டு இன்று செல்வாக்கு மிகுந்த அரசியல் துறைகளையும் தேர்தல் அமைப்புகளையும் அலுவலகங்களையும் கைப்பற்றி வாழ முயல்கின்றது.

ஆகவே சாதிப் பேயின் ஒரு தலையை நறுக்கினால் வேறொரு தலை முளைப்பதைக் காண்கிறோம். அதற்கு உணவே இடாமல் பட்டினி போட்டுக் கொல்வது ஒன்று தான் வழியாக உள்ளது. அதாவது சாதியின் பெயரால் வாய்ப்பும் உயர்வும் வசதியும் பெறுவதற்கு வழி இல்லாத சமுதாயத்தை அமைக்க வேண்டும். இந்த நாட்டில் பிறந்த எல்லாருக்கும் எப்படியும் வாழ்க்கை உண்டு, உணவு உண்டு, தொழில் உண்டு என்ற நம்பிக்கை ஊட்டும் ஆட்சி அமைய வேண்டும்.

செல்வர் வறியவர் என்ற வேறுபாட்டை ஒழித்தால், சிலர்க்கு வசதிகள் மிகுதி சிலர்க்குக் குறைவு என்ற ஏற்றத் தாழ்வு நீங்கும். எல்லோரும் தொழில் செய்தாக வேண்டும் என்று வற்புறுத்துவதோடு எல்லாத் தொழிலுக்கும் ஏறக் குறைய வருவாய் ஒத்திருக்குமாறு செய்துவிட்டால், மக்களிடையே வாய்ப்பும் உயர்வும் பற்றிய போட்டிகளும் போராட்டங்களும் குறையும். சுருங்கச் சொன்னால் கிராமக் கூட்டுறவான வாழ்வில் ஒரு களையாகத் தோன்றி இன்று பெரிய முள் மரமாக—நச்சுமரமாக—வளர்ந்துள்ள சாதி வேறுபாட்டைப் பொருளாதார சமத்துவம் உள்ள கூட்டுறவு ஆட்சியால்தான் வெட்டி எறிய முடியும். "பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்" என்று எத்தனை ஓதினாலும் இந்தப் பொல்லாத சாதி வேறுபாடு ஒழியாது. வாழ்வு ஒக்கும் எல்லா மனிதர்க்கும் என்னும் ஆட்சி அமைந்தால்தான் அதை அடியோடு ஒழிக்க முடியும்.

23. எது இயற்கை

கடவுள் ஒருவரே. ஆகையால் சமய அடிப்படையும் ஒன்றாகவே இருக்கவேண்டும். அதுதான் இயற்கை. ஆனால் சமயங்கள் வேறுவேறாகக் காணப்படுகின்றன. ஒவ்வொரு சமயமும் ஒவ்வொரு வகையான தெய்வத்தைப் போற்று கிறது. அதனால் சமயப் பூசல்களும் போராட்டங்களும் உள்ளன. அந்தந்தச் சமயத்திற்கு உரிய தெய்வங்கள் வேறு வேறாக இருக்கக்கூடுமோ என்று எண்ணத்தக்க வகையில் அறியாமை உள்ளது. இந்த நிலை, மனிதருடைய அறியா மையாலும் மூடநம்பிக்கைகளாலும் செயற்கையாக ஏற் பட்டுள்ளது. அதனால் பெரும்பான்மையான மக்கள், சமயங் கள் வெவ்வேறாகவும் மாறுபட்டும் இருப்பதாக எண்ணு கிறார்கள்; தெய்வங்களும் வெவ்வேறாக இருப்பதாக எண்ணுகிறார்கள். செயற்கையான இந்த நிலை உண்மை போல் தோன்றுகிறது. தெளிவு பெற்ற அறிஞர்க்கோ "ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்" என்பதே இயற் கையான உண்மை நிறைந்த நெறியாகத் தோன்றுகிறது.

மனிதர்க்கு மனிதர் வேறுபாடு பார்க்கக் கூடாது என்றும், பிறப்பால் எந்த வேறுபாடும் இல்லை என்றும் சான்றோர்கள் உணர்த்திவருகிறார்கள். "பிறப்பு ஒக்கும் எல்லா உயிர்க்கும்" என்னும் உண்மையை அறிவியலும்

நன்கு தெளிவாக்கிவருகிறது. அதுதான் உண்மை; அது தான் இயற்கையுமாகும். ஆனால் நம் நாட்டிலுள்ள சமுதாயத்தைப் பார்க்கும்போது சாதிகள் தொன்று தொட்டு வருவன போல் — இயற்கையாகவே அமைந்து விட்டன போல் — தோன்றும். செயற்கையான் ஒரு நிலை இவ்வாறு இயற்கை போல் தோன்றுகிறது.

கிராமங்களில் நன்செயும் புன்செயுமாகப் பயிரிடும் நிலங்கள் பற்பல காணி உண்டு. நிலம் என்னும் அன்னை, நீரின் துணையால் மரம் செடி கொடிகளையும் பலவகைப் பயிர்களையும் வளர்த்துக் காப்பாற்றி, காய் கனி கிழங்கு களையும் நெல் முதலிய தானியங்களையும் மக்களுக்கு வழங் கிப் பசி தீர்க்க முடியும். இதுதான் இயற்கையான நிலை. ஆனால் கிராமங்கள் வயிற்றுக்குச் சோறு போடவில்லை என்றும், நகரமே காப்பாற்றும் என்றும் மக்கள் எண்ணு கிறார்கள். அவர்களுள் பலர் கிராமங்களை விட்டு நகரங் களுக்கு ஓடி வருகிறார்கள். நகரங்கள் ஓரளவு காப்பாற்றவும் முடிகிறது. இது செயற்கையான நிலை. வயிற்றுக்கு உரிய உணவுப் பொருள் ஒன்றும் விளையாத நகரமே தம்மைக் காப்பாற்றும் என்று பலரும் நம்புகிறார்கள். இதுதான் இயற்கை போல் தோன்றுகிறது.

புயல் வீசும் காலத்தில் நீர் மேல்நோக்கி எழலாம். தீ கீழ்நோக்கிச் சாயலாம். அந்த நிலைகளை இயற்கை என்று நம்பி ஏமாந்துவிடக் கூடாது.

ஓடும் ரயிலில் உட்கார்ந்திருக்கும்போது சன்னல் வழி யாகப் பார்த்தால் மரங்களும் கம்பங்களும் ஓடுவன போல் தோன்றும். ஆனால் அந்தக் காட்சியை உண்மை என்று நம்பிவிடக் கூடாது.

சமுதாயம் செம்மையாக அமையாதபோது அதில் உள்ள கோளாறுகள் இயற்கை போல் தோன்றும். ஓடும் ரயில் குழந்தைகளின் அறிவை மயக்குதல் போல், சமுதாயக்

கோளாறு கற்றவரின் அறிவையும் மயக்கிவிடும். சில ஆண்டுகள் வழக்கத்தில் இருந்த ஒன்றை இயற்கையானது என்று எண்ணி மயங்குவது கற்றவர்களிடமும் உள்ளது. வெறுங் கல்வியுடன் நில்லாமல் அறிவுத் தெளிவு பெற்றவர்கள் அவ்வாறு மயங்குதல் கூடாது.

ஒரு நாட்டு மக்கள் மற்றொரு நாட்டில் குடியேறி வாழ்வதும் ஒரு மொழியார் மற்றொரு மொழியாருக்கு இடையே இடம் பெற்று வாழ்வதும் இன்று இயற்கையானவை போல் தோன்றுகின்றன. சமுதாயக் கோளாறு கற்றவர்களையும் மயக்குகிறது. அதனால் இது செயற்கைநிலை என்பதை அவர்களும் உணர்வதில்லை.

ஒரு நாட்டில் பிறந்த மக்கள் அந்த நாட்டின் குடிகளாகவே அங்கேயே தங்கி வாழ்வதுதான் இயற்கை. ஒரு மொழி பேசும் மக்கள் ,அந்த மொழியார்க்கு இடையிலேயே தங்கி வாழ்வதுதான் இயற்கை. இந்த உண்மையை உணராமல் செயற்கை நிலையையே இயற்கை என்று மருள்வதால் பல குழப்பங்களும் போராட்டங்களும் ஏற்படுகின்றன. அஸ்ஸாமியருக்கும் வங்காளிகளுக்கும் இடையே நிகழும் பூசல்களும் கொடுமைகளும் எடுத்துக்காட்டாக உள்ளன. செயற்கையான ஒரு நிலையை எவ்வளவுதான் போற்றிப் பாராட்டினாலும், அது ஒரு நாள் தன் நஞ்சை நிச்சயம் கக்கியே தீரும்.

ஒரு நாட்டு மக்கள் வேறு நாட்டிற்குப் போக வேண்டியதில்லை. பிற மொழி பேசும் மக்களிடையே வாழ்ந்து சிறுபான்மையோராய் நின்று துன்பங்களுக்கு ஆளாக வேண்டியதே இல்லை. உழவும் பண்டமாற்றும் ஓங்கியிருந்த பழங்காலச் சமுதாயத்தில் அவரவர்கள் அந்தந்த நாட்டிலேயே வாழும் நிலைமையே பெரும்பாலும் இருந்தது. இன்றைய சமுதாயத்தில் எந்தத் தொழிலையாவது எங்கிருந்தாவது செய்து மிகுதியாகப் பணம் திரட்ட வேண்டும் என்ற பண

வேட்டைதான், பிறந்த ஊரை விட்டு மாநிலத்தை விட்டு வெளி இடங்களுக்குச் சென்று பிற மொழியார்க்கு இடையில் வாழ்வு நடத்தத் தூண்டுகிறது. மிகுதியாகச் சேர்க்கும் பணத்திற்கு மதிப்பும் இல்லை, பயனும் இல்லை என்ற நிலை ஏற்பட்டுவிட்டால் வெளிநாட்டிற்குச் சென்று பணம் திரட்ட வேண்டும் என்ற முயற்சி இருக்காது. தமிழர் தொழில் தேடி வடநாட்டுக்குச் செல்வதுமுதல் வடநாட்டார் வட்டி நாடிச் சென்னையில் குடியேறுவது வரையில் எல்லாம் பண வேட்டையின் காரணமாக ஏற்பட்டவைதான். ஓர் இடத்திலிருந்து சேர்த்துக் கொண்டுபோகும் பணத்திற்கு மதிப்பும் பயனும் இல்லை என்றால், பணம் சேர்க்கும் முயற்சியே போய்விடும். அப்போது எவரும் வெளி நாட்டிற்குச் செல்ல மாட்டார்கள்; சொந்த நாட்டில் வயிறு வளர்க்கத்தான் விரும்புவார்கள்.

ஒரு நாட்டார் மற்றொரு நாட்டில் குடியேறுவதும், ஒரு மொழியார் மற்ற மொழியார்க்கு இடையே சென்று வாழ்வதும் உலக வளர்ச்சியைக் காட்டுவன என்றும், உலக ஒற்றுமைக்கு அறிகுறிகள் என்றும் பேசுவோர் உள்ளனர். உலகம் வளர்ச்சி பெறவும் வேண்டும்; உலக ஒற்றுமையும் வேண்டும். ஆனால் அவற்றின் பொருட்டு இந்தச் செயற்கையான வாழ்க்கைமுறை வேண்டும் என்று கூறுவது பொருந்தாது. பிற நாட்டாரிடம் கொண்ட அன்பின் காரணமாகவோ, பிற மொழியாரிடம் உள்ள பாசத்தின் காரணமாகவோ இன்று எவரும் வெளி நாட்டில் வாழ்வதில்லை. பணம் திரட்டும் ஆசையாலேயே வெளி நாட்டிற்குச் செல்கிறார்கள். பணம் திரட்ட வழி இல்லை என்றால், பாலைவனத்தில் உள்ளவர்களும் தங்கள் சொந்த நாட்டை விட்டு வெளியே நகர ஒரு சிறிதும் விரும்ப மாட்டார்கள்.

ஒவ்வொரு பகுதியிலும் வெவ்வேறு மொழி பேசுவோர் கலந்து வாழ்ந்தால்தான் உலக ஒற்றுமை ஏற்படும் என்று

கருதுவது அறியாமை. என் குழந்தை பக்கத்து வீட்டிலும் பக்கத்து வீட்டுக் குழந்தை என் வீட்டிலும் மாறிக் கலந்து வாழ்ந்தால்தான் இரண்டு குடும்பங்களுக்குள்ளும் அன்பு வளர முடியும் என்று கட்டாயப்படுத்துவது போன்ற அறியாமை அது. அவரவர்களின் குழந்தை அவரவர்களின் வீட்டிலே வளரலாம். விளையாட்டு நேரத்தில் கலந்து பழகலாம். அன்பு வாழ்க்கைக்கு அது போதும். உலக ஒற்றுமைக்கும் அவ்வாறு வழிவகைகள் வகுத்துக்கொள்ளலாம். பெரிய விளையாட்டுக்கள், கலை விழாக்கள், இன்பச்சுற்றுப் பயணங்கள், அறிவு வளர்க்கும் ஆராய்ச்சிகள் முதலியவற்றிற்காக ஒரு நாட்டார் பிற நாட்டிற்குச் சென்று வந்துவிடலாம். ஒரு மொழியார் பிற மொழியாரோடு பழகிப் பயன்பெற்று விடைபெற்றுக்கொள்ளலாம். இத்தகையகலப்பும்பழக்கமும்மிகுதியாக ஏற்படுவதற்குப் போக்குவரவு வசதிகள் பெருந்துணை புரிகின்றன. அவற்றை நன்ருகப் பயன்படுத்திக்கொண்டு பல நாட்டாரும் பல மொழியாரும் பலமுறை கலந்து உறவாடலாம். அவ்வாறு உறவாடுவதற்குக் குறுக்கே நிற்கின்ற மொழித் தடையை மொழி பெயர்ப்பாளர்களின் உதவியால் வென்றுவிடலாம். பலமொழிகளைக் கற்கும் திறமை நூற்றில் ஒருவர் இருவர்க்கு இயல்பாக அமைந்துள்ளது. அவர்களை ஆராய்ந்து கண்டுபிடித்து அவர்களுக்குப்பலமொழிக் கல்வி அளித்து, மொழிபெயர்ப்பில் வல்லவர்களாக்கி உலகத் தொண்டர்களாகப் போற்றிப் பயன்படுத்திக் கொள்ளலாம். அவ்வாறு செய்யாமல் எல்லோரையும் வற்புறுத்திப் பல மொழிகள படிக்கச் செய்வது அறியாமை; செயற்கை. ஒரு மொழியாரைப் பிறமொழியார்க்கு இடையில் தாழச் செய்வது சமுதாயக் கோளாறு; செயற்கை. நெடுங்காலம் நெருங்கிப் பழக முடியாத வெவ்வேறு மொழி இனத்தாரை ஒரு மாநிலத்தில் ஓர் ஊரில் வாழுமாறு வற்புறுத்துவதும் அறியாமை; செயற்கை. அந்தச் செயற்கையிலே சரிந்து

விடும்போது, பூசலும் போராட்டமும் ஏற்படும் காலத்தில், அன்பு இல்லாதவர்கள், ஒற்றுமை இல்லாதவர்கள், நாட்டுப் பற்று இல்லாதவர்கள், பரந்த மனப்பான்மை இல்லாதவர்கள் என்று அவர்களைப் பழிப்பதும் அதைவிட அறியாமையாகும்.

மனிதன் இயற்கையோடு இயைந்து வாழாமல் செயற்கை வாழ்வு நடத்தி உடல்நலம் இழந்து நோய்க்கு ஆளாகின்றான். அங்கிலேயில் "அந்த நீர் ஆகாதது, இந்தக் காற்று ஆகாதது, அந்தக் காய் ஆகாதது, இந்தக் கனி ஆகாதது" என்று இயற்கைப் பொருள்களையே பழித்து ஒதுக்குகிறான்.

சமுதாய அமைப்பிலும், அரசியல் மனிதர் அத்தகைய தவறுகளையே செய்கிறார்கள். வறுமையைத் தொலைக்க முயலாமல் பண வேட்டையை ஒழிக்க முயலாமல் பல சமுதாய நோய்களை ஏற்படுத்திக்கொள்கிறார்கள். அவரவர்கள் பிறந்த நாட்டில் வாழாமல், பயின்ற தாய்மொழியைப் போற்றி அமையாமல், சிக்கல்களை உண்டாக்கிக் கொள்கிறார்கள். அந்தச் சிக்கல்களால் துன்புறும்போது நோயாளி காற்றையும் நீரையும் பழிப்பது போல் நாட்டையும் மொழியையும் பழிக்கிறார்கள். இயற்கையான வாழ்வுமுறை இன்னது என்று தெளியாமல் சிக்கல்களை ஏற்படுத்திக்கொண்டு பிறகு பழிப்பதில் பயன் இல்லை. எது இயற்கையான வாழ்க்கைமுறை என்ற தெளிவே இல்லாமல் அரசியலில் கண்மூடித்தன்மை இருக்கும்போது, அந்தக் கண்மூடித் தன்மையையே தெளிந்த நிலை என்று ஏமாந்து மயங்கும் அறியாமை உள்ளபோது, வேறு என்ன செய்வது? நோயுற்றுத் துன்புற வேண்டியதுதான். நோய் வந்த பிறகாவது நோயின் காரணத்தை எண்ணி உணர்ந்தால், எது இயற்கை என்று தெளிந்தால், எதிர்காலத்திலாவது நன்மை ஏற்படும்.

24. நடுநிலைமை

அரசியல் எவ்வழி அவ்வழி குடிகள். ஒரு நாட்டின் தலைவர் அல்லது ஓர் அமைப்பின் தலைவர் எப்படி இருக்கிறாரோ அதற்கு ஏற்றாற்போலவே அந்த நாட்டின் மக்கள் அல்லது அந்த அமைப்பைச் சார்ந்தவர்கள் இருப்பார்கள். தலைவர் நீதியையும் நேர்மையையும் வழுவாமல் போற்றி நடப்பவராக இருந்தால், மற்றவர்களும் நீதியையும் நேர்மையையும் போற்றி நடப்பார்கள். சிறிதும் வழுவாமல் நடப்பது தான் முக்கியம். நூற்றுக்குத் தொண்ணூற்றைந்து பங்கு நேர்மையாக நடந்து ஐந்து பங்கு வழுவினாலும் மற்றவர்கள் அந்த ஐந்து பங்கையே கருதிக்கொண்டு பெருந்தவறுகள் செய்ய முற்படுவார்கள். ஆகவே ஒரு நாட்டிலோ அமைப்பிலோ ஊழல் இடம் பெறாமல் இருக்க வேண்டுமானால் அதன் தலைவர் சிறிதளவும் நேர்மை வழுவாமல் நீதி பிறழாமல் நடக்க வல்லவராக இருக்க வேண்டும். அவர் தூய்மையான வெள்ளாடை போல் சிறிதும் மாசு இல்லாமல் நடந்தால்தான் மற்றவர்கள் ஒழுங்குமுறையை மதித்து நடப்பார்கள்.

கடுமையான ஆட்சியில் — மற்றவர்களை அச்சத்தால் அடக்கியாளும் ஆட்சியில் — தலைவர் எவ்வளவு குற்றம் உடையவராக வாழ்ந்தாலும் கவலை இல்லை. மக்கள் அந்தத்

தலைவரைப் பின்பற்றி நடப்பதில்லை. அவருக்கு அஞ்சி அடங்கி நடக்கின்றார்கள். உரிமை மிக்க ஆட்சியில் — குடியாட்சி முறையில் — அஞ்சி அடங்கி நடக்க வேண்டிய தேவை இல்லை. அந்த முறை, பார்த்துப் பின்பற்றி நடப்பதற்கு உதவுகிறது. ஆகையால் உரிமை ஆட்சியில் பொறுப்பேற்கும் தலைவர்கள் சிறிதும் வழுவாமல் நடுநிலைமையைப் போற்றி நேர்மையாக நடக்க வேண்டும்.

ஆனால் உரிமை ஆட்சியில் — குடியாட்சிமுறையில் — நடுநிலைமை பிறழ்வதற்கு இடம் அமைந்துள்ளது. அடிப்படையிலே அந்தக் குறை உள்ளது. அதுதான் தேர்தல் முறையில் அமைந்துள்ள குறை.

ஒரு பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்படும் தலைவர் தேர்தலில் வெற்றி பெறும் திறமை உடையவராக இருக்க வேண்டும். தேர்தலில் போட்டியிட்டு வாக்காளர்களின் வாக்குகளைப் பெரும்பான்மையாக அவர் பெற வேண்டும். அதற்காகப் பெரு முயற்சி செய்ய வேண்டும். வாக்காளர்களுக்குச் சில உதவிகளைச் செய்வதாக நம்பிக்கை ஊட்ட வேண்டும். அந்தத் தேர்தல்முயற்சியில் அவர் ஒருவர் மட்டும் ஈடுபட்டால் போதாது. அவருக்குப் பக்கத் துணையாகப் பலர் இருந்து பாடுபட வேண்டும். அவ்வாறு பக்கத் துணையாகப் பாடுபடுபவர்கள் தன்னலம் இல்லாதவர்கள் அல்லர். அவர்கள் முற்றத் துறந்த துறவிகள் அல்லர். ஆகவே தேர்தலில் வெற்றிபெற்று அவர் பதவியில் வந்து அமர்ந்தவுடன், பக்கத் துணையாக இருந்து பாடுபட்டவர்கள் அவரை நெருங்கிச் சில பல உதவிகளைக் கேட்கிறார்கள். தேர்தலால் பதவி பெற்றவர் அவர்களைப் புறக்கணிக்க முடியுமா?

"இப்படி என்னை உதவிகள் கேட்கக் கூடாது. நான் சட்டப்படியே எதையும் செய்வேன். நீங்கள் தேர்தலில் பாடுபட்டதற்காக நடுநிலைமையைக் கடந்து உதவி செய்ய

மாட்டேன். என்னிடம் உதவி கேட்காதீர்கள்" என்று மறுத்துவிட முடியுமா?

அப்படி மறுத்தால் அவர்கள் அவ்வரைப் பழிப்பார்கள். நன்றி கெட்டவர் என்று தூற்றுவார்கள். அடுத்த முறையில் அவர் தேர்தலுக்கு நிற்க முடியாமல் போய்விடும். தேர்தலுக்கு நிற்பதற்கு முன்னமே அவர்கள் சேர்ந்து இடையூறுகள் பல செய்து அவரைப் பதவியிலிருந்து தள்ளவும் கூடும். அவர் ஒருநாள் திக்கற்றவராய் வெளியேறவும் கூடும். அவருடைய கொள்கை நல்லதுதான். பக்கத்துணையாய்ப் பாடுபட்டவர்களுக்கு உதவிசெய்வதைவிட நாட்டையும் அமைப்பையும் மதித்துக் கடமையைச் செய்தல் சிறந்தது தான். நன்றியுணர்ச்சியைவிட நடுநிலை உணர்ச்சி உயர்ந்தது தான். ஆனாலும் அப்படி நடுநிலையைப் போற்றுகின்றவர் பதவிகளில் நீடிப்பதில்லை. அவருடைய பண்பை அறிந்தவர்கள், அவரைத் தேர்தலுக்கு நிற்க வைப்பதே இல்லை.

"இப்படிப்பட்டவனுக்காகத் தேர்தலில் உதவி செய்தால் நாளைக்குப் பதவி பெற்ற பின்பு நமக்கு எந்த உதவியும் கிடைக்காது. நடுநிலைமை நடுநிலைமை என்று பேசி நம்மைக் கைவிட்டுவிடுவான். ஆகையால் இவனை நிற்க வைக்கக் கூடாது. சட்டத்தை மீறியாவது நம் கூட்டத்திற்கு உதவி செய்கின்றவனைத்தான் நாம் ஆதரிக்க வேண்டும்" என்று முதலிலேயே உணர்ந்து தேர்தலுக்கு நிற்க வைக்காமலேயே தள்ளிவிடுவதும் உண்டு. பொதுவாக எந்த நாட்டிலும் நல்லவர்கள் பலர் தேர்தலில் நிற்காமல் ஒதுங்குவதற்கும், நிற்பவர்களிலும் பலர் வெற்றி பெறுததற்கும் இதுவே காரணம்.

ஆகையால் பதவி ஆசை உள்ளவர்கள் இன்று தேர்தல் கலையை நன்றாகக் கற்று நடக்க வேண்டியுள்ளது. தன்னலம் மிகுந்தவர்களைப் பக்கத் துணையாக அமைத்துக் கொண்டு தேர்தலில் பாடுபட வேண்டும். தேர்தலில்

வென்று பதவி பெற்ற பின்பு அவர்களுக்கு வேண்டிய உதவிகளையெல்லாம் செய்துகொண் டிருக்க வேண்டும். நடுநிலைமை, நீதி, ஒழுங்குமுறை, சட்டம் முதலியவை களைப் பற்றி வாயாரப் பேச வேண்டும். பொது மக்களை மயக்குவதற்கு என்றே அந்தப் பேச்சு முறையை ஒரு கலையாக வளர்த்துவிட வேண்டும். செயல்முறையில் வரும் போது, தேர்தலில் பாடுபட்டவர்களை மறக்காமல் எந்த எல்லைக்கும் போய் அவர்களுக்கு உதவி செய்ய வேண்டும். அப்படி நடந்தால்தான் அவர்கள் பதவிகளில் நீடித்து இருக்க முடியும் போல் தோன்றுகிறது.

அப்படித் தேர்தல் கலையைக் கற்றவர்கள் அவர்களைப் பொறுத்த வரையில் வாழ்க்கையில் முன்னேற்றம் பெறு கிறார்கள்; வளம் பெறுகிறார்கள். ஆனால் அவர்கள் இருக்கும் அமைப்பு வளம் பெறுகிறதா என்று பார்த்தால் அதுதான் இல்லை. ஊர்மன்றம், நகர்மன்றம் முதல் நாட்டின் ஆட்சிமன்றம் வரையில் எல்லா அமைப்புகளையும் பார்த்தால், எங்கெங்கே ஊழல் இருப்பதாகத் தோன்று கிறதோ அங்கெல்லாம் அதன் அடிப்படையில் மேற் சொன்ன கலை விளங்குவதைப் பார்க்கலாம். தேர்தல் முறையைக்கொண்டு அமைந்த ஆட்சிக் குழுவின்கீழ் உள்ள கல்விக்கூடத்திலும் இதைக் காணலாம்; நிதிநிலையத்திலும் காணலாம்; கூட்டுறவு அமைப்பினிலும் காணலாம்; பல்கலைக் கழகங்களில் நடுநிலைமை இல்லாத தேர்வாளர்கள் சிலர் உள்ளனர் என்றால் அங்கும் அடிப்படையில் அந்தக் காரணம் இருத்தலைக் காணலாம். கூட்டுறவு இயக்கத்தில் எந்த மூலையிலேனும் சுரண்டல்முறை குடி புகுந்து இருக்கிற தென்றால் அங்கும் அதுவே காரணமாய் இருப்பதைக் காணலாம். பொதுவாக எந்த அமைப்பில் எங்கே ஊழல் கண்டாலும் அந்த ஊழலுக்கு அடிப்படையில் மேற்சொன்ன குறை இருப்பதைக் காணலாம்.

தேர்தல் முறை, பலர்க்கும் பொதுவாக வரும் சில தொத்துநோய்களைப் போன்றது. காற்றின் தீமையாலோ நீரின் குற்றத்தாலோ பலர்க்கும் பொதுவாக வரும் காய்ச்சல் முதலியவைகளைப் போக்கிக்கொள்ள வேண்டு மானால் பலருடைய ஒத்துழைப்பும் வேண்டும். ஆனால் தனிப் பட்ட முறையில் ஒவ்வொருவருக்கு வருகின்ற வயிற்று நோய் முதலியவைகளை அவரவரே முயன்றால்தான் போக்கிக் கொள்ள முடியும். தலைமைப் பொறுப்பு உள்ளவர்கள் அவ்வாறு போக்கிக்கொள்ள வேண்டும். சில குறைகளைப் போக்கிக்கொண்டால் அவர்கள் இருக்கும் அமைப்புகளும் நாடும் ஊழல் இல்லாமல் செயல்பட முடியும்.

தேர்தல் முறை நடுநிலைமையைக் கைவிடச் செய்வது போலவே, புகழ் விரும்பும் தன்னலமும் நடுநிலைமை பிறழச் செய்கிறது. ஒருவருக்கு அறுபது வயது நிரம்பு கிறது என்று வைத்துக்கொள்வோம். அப்போது மணி விழாக் கொண்டாட்டம் நடைபெறுகிறது. அவர்மீது பலர்க் கும் அன்பும் ஆர்வமும் உண்டு. ஆனால் அந்தப் பலரும் முன்வந்து விழா நடத்துவதில்லை. விழா நடத்துகின்றவர் நாலைந்து பேர். மற்றவர்கள் அவர்கள் முயற்சியில் சேர்ந்து கொள்கிறார்கள். பொதுவாகப் பார்த்தால் அந்த நாலைந்து பேர் நல்லவர்களாக நடுநிலையாளராக இருப்பதில்லை. விதிவிலக்கு உண்டு. பொதுவாக அப்படி முன் வந்து நடத்துகின்றவர்கள் தன்னலம் மிகுந்தவர்களாக, நடு நிலைமை அற்றவர்களாக இருக்கின்றார்கள். அப்படிப் பட்டவர்கள் விழா நடத்தி முடித்த பின்பு அந்தத் தலைவரை அணுகி உதவி கேட்காமல் இருப்பதில்லை. அப்படிக் கேட் கும் உதவிகள் பெரும்பாலும் சட்டத்தை மீறி நடுநிலைமை பிறழ்ந்து செய்ய வேண்டிய உதவிகளாகவே இருக்கின்றன. அந்தத் தலைவர் நடுநிலைமை உடையவராக இருந்தாலும், அப்போது அவர்கள் நடத்திய மணிவிழாவை நினைக்கிறார்.

அவருடைய நெஞ்சம் நன்றியுணர்ச்சியால் நிரம்புகின்றது. மனச்சான்று நடுநிலைமையை வற்புறுத்துகிறது. நன்றியுணர்ச்சிக்கும் நடுநிலைமைக்கும் இடையே போராட்டம் நடக்கிறது. போராட்டத்தில் மனச்சான்று வென்ருல் நாட்டுக்கு நல்லது. அவரைச் சார்ந்தவர்களுக்கும் நல்லது. பெரும்பாலும் நெஞ்சமே வெற்றி பெறுகிறது. நன்றியுணர்ச்சி ஆட்கொள்கிறது. ஆகவே நீதிமுறை கடந்தும தமக்கு வேண்டியவர்களுக்கு உதவி செய்ய முற்படுகின்ருர். பெரிய பொறுப்பு உள்ளவர் இவ்வளவு மாறிஞல் போதும். அவர்க்கு அடுத்த நிலையில் உள்ளவர்கள் நடுநிலையிலிருந்து நெடுந்தூரம் விலகி ஊழல்களை வளர்த்துவிடுவார்கள். அப்பன் சிறு தவறு செய்தால், அவர்மக்கள் பெருந்தவறுகள் செய்யத் துணிந்துவிடுவார்கள்.

அப்படியே ஒருவரின் பிறந்த நாள் பற்றியோ, அல்லது வேறு வாழ்க்கைச் சிறப்புப் பற்றியோ மலர் ஒன்று வெளியிடுவதாஞல், அதற்காகச் சிலர் முனைந்து பாடுபட்டால் தான் முடியும். அந்த மலருக்காகக் கட்டுரை எழுதுபவர்களைத் தேட வேண்டும். வாழ்த்துக்களைத் திரட்ட வேண்டும். படங்களைத் தொகுக்க வேண்டும். அவரைப் புகழ்ந்து எழுதுமாறு கேட்க வேண்டும். செலவுக்காகப் பணம் திரட்ட வேண்டும். அவ்வகையில் எவ்வளவோ உழைப்பும் முயற்சியும் தேவையாகின்றன. ஒரு நாட்டின் முதலமைச்சர் போன்ற பெரிய பதவியில் உள்ளவர்களுக்காக மலர் வெளியிட வேண்டுமாஞல் வெளிநாட்டுத் தலைவர்களிடமிருந்தும் வாழ்த்துச் செய்திகளைக் கேட்டுப் பெற வேண்டும். முயற்சியும் உழைப்பும் பல மடங்கு மிகுதியாகும். அவ்வளவு உழைப்பு மேற்கொண்டவர்களிடத்தில் அந்தத் தலைவர் நடுநிலைமையைப் பேச முடியுமா? அவருடைய வாய் அவ்வாறு பேசினுலும், நெஞ்சம் அவர்களின் பக்கமாகச் சாயாமல் இருக்க முடியுமா? அவர்கள் உதவி கேட்கும்

போது நடுநிலைமையைச் சிறிது நெகிழ்த்தாவது உதவி செய்யாமல் இருக்க முடியுமா? அந்தச் சிறு நெகிழ்ச்சி, பொறுப்பில் உள்ளவர்களுக்கு நேர்ந்தால் போதும். நாட்டின் அமைப்புகளிலும் பல ஊழல்கள் ஏற்படுத்துவதற்குக் காரணம் ஆகிவிடும்.

நன்றியுணர்ச்சி ஒரு நல்ல பண்புதான். நடுநிலைமை அதைவிட உயர்ந்தது என்று உணர்ந்தவர்கள்தான் நாட்டுக்கு நன்மை செய்ய முடியும். நீதிக்காகத் தன் மகனைத் தேர்க்காலில் ஏற்றிய மனுநீதிச் சோழன் கதை இந்த உண்மையைத்தான் வற்புறுத்துகிறது. பொதுநலம் கருதித் தொண்டு செய்கின்றவர்கள் பொறுப்பாக இருந்து கடமையைச் செய்யும்போது எந்தப் பற்றும் உணர்ச்சியும் குறுக்கிடக் கூடாது என்பதுதான் அந்தக் கதையின் கருத்து. ஆகவே நன்றியுணர்ச்சி காரணமாகவும் நாட்டின் ஊழல்கள் வளர்வதற்கு இடம் தரக் கூடாது.

ஒன்று செய்யலாம்; வேண்டாத உதவியைப் பெற்றுக் கொண்ட காரணத்தால்தான் நெஞ்சத்தில் நன்றியுணர்ச்சி பொங்குகிறது. அப்படிப்பட்ட உதவியையே வேண்டா என்று மறுத்துவிடும் வலிமை இருந்தால் இடர்ப்பாடே இருக்காது. "மணிவிழாவும் வேண்டா; மலர் வெளியீடும் வேண்டா. இந்த நாட்டிற்குத் தொண்டு செய்யும் தொண்டர்களில் நானும் ஒருவன். என் தொண்டுக்குக் கூலியாகவோ கைம்மாருகவோ எனக்கு எந்தச் சிறப்பும் செய்ய வேண்டா" என்று ஒதுக்கும் மனப்பான்மை வேண்டும். "நீங்கள் நாலைந்து பேர் ஏன் இவ்வளவு ஊக்கமும் உழைப்பும் செலவிடுகின்றீர்கள்? என் புகழுக்காகச் செலவிடும் இந்த ஊக்கத்தையும் உழைப்பையும் நாட்டுக்காகப் பயன்படுத்துங்கள். அல்லது, இதைச் செய்யாமல் ஓய்வாக இருந்தால், அந்த ஓய்வின் பயனாக உங்கள் உடம்பில் ஊக்கம் மிகுதியாகும். அதனால் உங்கள் கடமையைச் செய்யும்போது

ஊக்கத்தோடு ஆற்றலோடு செய்வீர்கள். அது நாட்டிற்கு நல்லது. என் புகழ்க்காகச் செலவாகும் ஊக்கமும் உழைப்பும் ஒரு வகையில் நாட்டிற்கு இழப்புத்தான். ஆகையால் எனக்குப் பாராட்டு விழாவும் வேண்டா, சிறப்பு மலரும் வேண்டா" என்று மறுத்துவிடும் உறுதியும் வீரமும் வேண்டும். இத்தகைய வீரமும் உறுதியும் உள்ளவர்கள் எங்கெங்கே தலைமைப் பொறுப்பு ஏற்றுக் கடமை ஆற்றுகிறார்களோ அங்கங்கே ஊழல்கள் அகலும்; நடுநிலைமை விளங்கும்.

25. ஒழுக்கம் விழுப்பம் தரும்

அறிவியல் வளர்ச்சி எவ்வளவோ நன்மைகளைச் செய்துவருகிறது. போர்த்துறையில் படைக்கப்படும் புதிய புதிய கருவிகளால் உலகம் அழிந்துவிடுமோ என்று அஞ்ச வேண்டிய அச்சம் ஒரு பக்கம் இருக்கிறது.

இருந்தாலும் மற்றத் துறைகளில் அதன் வளர்ச்சி பற்பல நன்மைகளுக்குக் காரணமாக இருந்துவருகிறது.

அறிவியல் வளர்ச்சியால், வெளியுலகம் பொசுங்கிச் சாம்பலாகிவிடுமோ என்று அஞ்சுவது போலவே, மனத்தில் உள்ள நம்பிக்கைகள் எல்லாம் அழிந்துவிடுமோ என்று சிலர் அஞ்சுகிறார்கள். அவ்வாறு அஞ்சத் தேவை இல்லை.

அறிவியல் வளர்ச்சியால் மூடநம்பிக்கைகள் அழிந்து விடும் என்பது உண்மைதான்; ஆனால் நல்ல நம்பிக்கைகள் அழிய வேண்டியதில்லை; அழியப் போவதில்லை. கண்மூடி நம்பும் நம்பிக்கைகளுக்கு ஈடாக, கருத்துத் தெளிவால் ஏற்படும் நம்பிக்கைகள் உரம் பெறும்.

ஒழுக்கம் விழுப்பம் தரும் என்பது திருவள்ளுவர் முதலான சான்றோர்களின் நம்பிக்கை. இது உண்மையா என்று சிலர் — இளைஞர் — தயங்குகிறார்கள். அவர்கள் அவ்வாறு நம்பாமல் தயங்குவதற்குக் காரணமென்ன? அறிவியல் வளர்ச்சிதான் காரணம் என்று கூறிவிட முடியாது.

அறிவியல் வளர்ச்சி சிந்தனையைக் கிளறுகிறது; தக்ககாரண காரியப் பொருத்தத்தை ஆராய்கிறது; அவ்வளவுதானே தவிர, நல்ல நம்பிக்கைகளை அழிப்பதில்லை. நம்பிக்கைகளுக்குக் காரணம் தேடிக் கண்டால், அவை மேலும் உரமாகப் பதிந்து வாழ்க்கைக்கு உறுதி ஆகும். காரணம் உணராமல் கலங்கினால், அப்போது இடர்ப்பாடு ஏற்படும். ஆகவே, ஒழுக்கம் விழுப்பம் தரும் என்பது உண்மையா என்று ஆராயும் ஆராய்ச்சிக்கு வழிகாட்ட வேண்டும்; விழுப்பம் தரும் என்ற முடிவுக்கு ஏற்ற காரணங்களைத் தெளிய வேண்டும்.

ஒழுக்கம் விழுப்பம் தருமா என்று இளைஞர் சிலர் ஐயுறுவதற்கும் சிலர் நம்பாமல் மறுப்பதற்கும் தூண்டுதலாகச் சில தவறுகள் சமுதாயத்தில் காணப்படுகின்றன. பெரிய பதவியில் உள்ளவர்களில் சிலர் ஒழுக்கத்தைப் பற்றிக் கவலைப்படாதவர்களாக இருக்கிறார்கள்; ஒழுக்கத்தைப் பற்றிப் பேசுவோர் சிலர் ஒழுக்கம் இல்லாதவர்களாக இருக்கிறார்கள். ஒழுக்கம் இல்லாத சிலர் எப்படியோ செல்வம் சேர்த்துவிடுகிறார்கள்; பிறகு உலகம் அவர்களை மதித்துப் போற்றுகிறது.

ஒழுக்கம் உடையவர்கள் மூலையில் முடங்கிக் கிடக்க, ஒழுக்கம் அற்ற சிலரைச் சில செய்தித்தாள்களும் வார இதழ்களும் வானளாவப் புகழ்ந்து பாராட்டுகின்றன. அவற்றின் விளம்பரங்களைப் படித்து, அந்தப் புகழுரைகளை உண்மை என்று நம்பிவிடுகிறார்கள் பொதுமக்கள். இப்படிப்பட்ட சிலரைப் பார்த்தும் கேட்டும் இளைஞர்களின் மனத்தில் ஒரு திகைப்பு ஏற்படுகிறது. ஒழுக்கம் இல்லாமலே விழுப்பம் பெற முடிகிறதே என்று எண்ணிப் பார்க்கிறார்கள்; உடனே அவர்கள் உள்ளத்தில் நம்பிக்கை தளர்கிறது.

கணக்கு என்னும் துறை, அறிவியலின் ஒரு பகுதி. அதைப் பயன்படுத்தி ஆராய்ந்தால், இந்தக் கலக்கத்திற்கும்

தளர்வுக்கும் இடம் இல்லாமல் செய்யலாம். ஒழுக்கம் உடையவர்களில் நூற்றுக்கு எத்தனை பேர் நன்றாக வாழ்கிறார்கள், ஒழுக்கம் இல்லாதவர்களில் நூற்றுக்கு எத்தனை பேர் நன்றாக வாழ முடிகிறது, நூற்றுக்கு எத்தனைபேர் துன்பத்துக்கு ஆளாகி நைகிறார்கள் என்று ஆராய்ந்து பார்க்க வேண்டும். யாரோ ஒருவர் இருவர் குறுக்கு வழியால் வேறு காரணங்களால் முன்னுக்கு வருவதைக் கண்டு, அவர்களைப் போல் முன்னேற வேண்டும் என்று முயல்வதில் பயன் இல்லை. பெரும்பான்மையானவர்களின் உயர்வுக்கும் தாழ்வுக்கும் காரணம் என்ன என்று ஆராய்ந்து பார்த்தால், உண்மை தெளிவாகும். இன்றும், ஒழுக்கம் உள்ள குடும்பங்கள், இனங்கள், ஊர்கள் படிப்படியாக முன்னேறுவதைக் காணலாம். ஒழுக்கம் இல்லாத குடும்பங்களும் இனங்களும் எழுவது போல் எழுந்து வீழ்வதைப் பார்க்கலாம். சில தென்னை மரங்கள் சாய்ந்து வளைவதைப் பார்த்து, அதுவே அவற்றின் இயல்பான வளர்ச்சி என்று முடிவு செய்யக் கூடாது. சாய்ந்து வளைவது வேறு காரணத்தால் என்பதையும், நேரே உயர்ந்து வளர்வதே அவற்றின் பொதுத் தன்மை என்பதையும் உணர வேண்டும்.

26. தெரிந்து செய்யும் தவறு

இன்றைய நாகரிக உலகம், தெரிந்தும் பல தவறுகளைச் செய்துகொண்டு வருகிறது. வேறு வழியில்லை என்ற சோர்வுமனப்பான்மையோடு திரும்பத் திரும்பத் தவறுகளைச் செய்துகொண்டேவருகிறது. திருந்த வேண்டும் என்ற முயற்சி மேற்கொள்ளாமலே தவறுகளை இயல்பாகக் கொண்டு செய்துவருகிறது.

நகரங்கள் பெருகினுல் நெருக்கடி பெருகும்; நோய் பெருகும்; அமைதி குறையும்; பண்பு குறையும். இந்த உண்மையை அறியாத அறிஞரே இல்லை. ஆயினும் உலகமெல்லாம் நாள்தோறும் நகரங்கள் பெருகியபடியே இருக்கின்றன.

பெரிய யந்திரத்தொழிற்சாலைகள் பெருகினுல் பலருக்கு வேலையில்லாமல்போகிறது; செல்வம் சிலரிடத்தில் குவிகிறது; அதிகாரம் பரவலாக இருக்காமல் சிலர்க்கே உரியதாகிறது; வேலைகிறுத்தம் முதலிய தொல்லைகள் மிகுகின்றன. ஆயினும் குடும்பக் கைத்தொழில்களை நசுக்கி, சிறு தொழிற்சாலைகளை ஒடுக்கி, பெரிய தொழிற்சாலைகளையே வளர்த்துவருகிறோம்.

இருந்த இடத்திலிருந்தே பல இடத்துப் பேச்சையும் கேட்க முடியும்; பல இடத்துக் காட்சிகளையும் காண

முடியும். அறிவியல் முன்னேற்றத்தின் பயனாக வளர்ந்துள்ள வானொலியும், ஒலிக்காட்சியும் (டெலிவிஷன்) அவற்றிற்குப் பெருந்துணை செய்கின்றன. இந்த அறிவியல்கருவிகளைத் தக்கவாறு பயன்படுத்தினால் நகரத்தில் போக்குவரவு நெருக்கடிகளை எவ்வளவோ குறைத்துவிடலாம். வெளியே அடிக்கடி போகாமல் இருந்த இடத்திலேயே பெரிய காட்சிகளைக் கண்டும் கேட்டும் மகிழலாம். அமெரிக்கா எல்லா வசதிகளையும் நிரம்பப் பெற்ற நாடாக இருந்தும், அங்கும் நெருக்கடியால் நிகழும் மரணங்கள் தவிர்க்கப்பட வில்லை. விழாக்களில் மக்கள் லட்சக்கணக்காகக் கூடும் வழக்கம் இன்றும் அங்கு உள்ளது. ஒரு 'நன்றி விழா' நாளில் (*Thanks giving day*) மட்டும் நெருக்கடியால் ஐந்நூறு பேர் மாண்டதாகச் செய்திவந்தது. இந்தக் கொடுமையை எல்லோரும் நன்றாக அறிந்திருக்கிறார்கள். இருந்தும், மக்கள் பெருந்திரளாகக் கூடுவதற்குத் தயங்குவதும் இல்லை; அதை அரசாங்கம் தடுப்பதும் இல்லை.

இவ்வாறு பல துறைகளில் அறிந்தறிந்தும், நாகரிக உலகம் திருந்தும் வழி காணாமல் தவறுகளையே தொடர்ந்து செய்துவருகிறது. அத்தகைய தவறுகளுள் ஒன்று அரசியல் தேர்தலாகும்.

தேர்தல்களில் அல்லல் படுவோர் பலர். ஆக்கம் பெறுவோர் விரல் விட்டு எண்ணக்கூடிய சிலரே. பெரும்பான்மையான தொகுதிகளில் நல்லவர்களும் திறமையானவர்களும் நிற்க முடியவில்லை. நின்றாலும் தேர்தலில் வெற்றி பெற்று வரமுடிவதில்லை. செல்வம் உள்ளவர்களும் செல்வாக்கு உள்ளவர்களுமே தேர்தலில் நிற்கவும் முடிகிறது; வெற்றிபெற்று வரவும் முடிகிறது. எப்படியாவது தேர்தலில் வெற்றி பெற வேண்டுமே என்ற ஆசையால் பண்பாட்டையும் நேர்மையான கொள்கையையும் குறைத்துக்கொள்ள வேண்டியிருக்கிறது. ஆயினும், தேர்தல்

முறையைத் திருத்தி அமைக்கும் முயற்சியை யாரும் மேற்கொள்வதாகக் காணோம். அறிந்தறிந்தும் பழைய தவறுகளையே செய்து பழைய அல்லல்களையே படுகிறோம்.

தேர்தலில் மக்களால் விரும்பித் தேர்ந்தெடுக்கப்படுகின்றவர்களே வருகிறார்கள் என்று சொல்ல முடிவதில்லை. ஏதோ ஒரு காரணத்திற்காக மக்கள் ஓட்டுப் போடுகிறார்கள். விளம்பரமும் ஆரவாரமும் மக்களின் மனத்தை எப்படியோ மயக்குகின்றன. அந்த மயக்கத்திற்கு ஆளாகி மக்கள் யாரையோ தேர்ந்தெடுக்கிறார்கள். அதனால் மக்களுக்காக மக்கள் ஆளுகின்ற மக்கள் ஆட்சி என்று கூறுவதற்கு இடம் இல்லை. ஆயினும் வேறு வழி காணாமல் பழைய தவறுகளையே செய்துவருகிறோம்.

இன்றைய தேர்தல்முறையில் வெற்றி பெறவேண்டுமானால் ஒரு மூலையிலிருந்து அமைதியாகத் தொண்டு செய்பவர்களால் முடியாது. முழுநேரமும் அரசியலில் ஈடுபடுகின்ற ஒரு சிலர் மட்டுமே தேர்தலை ஆட்டிப்படைக்க முடியும். முழுநேர அரசியல்வாதியாக இருக்க வேண்டுமானால், ஒன்று பரம்பரைச் சொத்து உள்ளவனாக இருக்க வேண்டும்; அல்லது, ஒரு கட்சியை வளர்த்துப் பெரிதாக்கித் தனக்கு ஒரு படை சேர்த்துத் தீனி போட்டு வளர்த்து வர வேண்டும். ‘பொருள் இல்லார்க்கு இவ்வுலகம் இல்லை’ ஆகையால், அரசியலால் செலவாகும் பணத்தைவிட வந்து சேரும் வருவாய் மிகுதியாகுமாறு பார்த்துக்கொள்ள வேண்டும். ஆகவே எவ்வகையிலாவது பொருளீட்டிப் பெரிய குழு சேர்த்து முழு நேரமும் அரசியலில் ஈடுபட்டு உழைக்க வேண்டும். அறநெறியில் நம்பிக்கை வைத்து வாழ்வதற்கு ஒரு நெறி வகுத்துக்கொண்டவர்களால் இது முடியாது. ஆகையால் தேர்தலில் பலர் ஒதுங்கவேண்டி நேர்கிறது.

நல்லவர்கள் ஒரு சிலர் தலைமை தாங்க நேர்ந்த

போதிலும், அவர்களும் நல்லவர்களை ஆதரிக்க முடிய வில்லை. விரும்பத் தகாதவர்களையும் பொல்லாதவர்களையும் தவருன வழியில் பொருள் சேர்த்தவர்களையும் கட்சியின் நன்மைக்காகச் சேர்த்துக்கொண்டு நல்லவர்களைக் கைவிட வேண்டி வருகிறது.

எல்லாம் தவறு என்று தெரியும். தெரிந்தும் தவறு களையே செய்து துன்பப்படுவது இந்த நாகரிக உலகத்துக்கு இயல்பாகிவிட்டது. அடிப்படைக் காரணம் என்ன? மனி தன் மந்தைஉணர்ச்சிக்கு ஆளாகிவிட்டான். யந்திரங் களோடு பழகி யந்திரம் போல் இயங்கக் கற்றுக்கொண் டான். மனச் சான்ருேடு எண்ணிப் பார்த்து அஞ்சாமை யோடு நல்வழி நாடும் ஆற்றலை இழந்துவிட்டான். மந்தை யாகவும் யந்திரமாகவும் மாருமல் மனிதராகவே வாழ வல்ல காந்தியடிகள் முதலான சான்ருேர்கள் சிலர் தோன்றி அறி வுறுத்துவதால் இன்னும் முழுதும் கெடவில்லை. ஆனல் கெட்டவர்கள் திருந்தும் அளவுக்கு இன்னும் சான்ருேர் களின் செல்வாக்கு ஓங்கவில்லை.

27. வேறு வழி இல்லையா

தேர்தல் என்பது இருவகையானது. பதவிக்கு வருபவர் ஒரு முயற்சியும் செய்யாமல் அமைதியாக அடக்கத்தோடு இருக்க, அவருடைய பெயர் திருவுளச் சீட்டில் வர, அதனால் அவர் அந்தப் பதவிக்குத் தேர்ந்தெடுக்கப் படுவது உண்டு; இது ஒரு வகை முறை. பதவிக்கு வருபவர் அதற்காக எல்லா முயற்சியும் செய்ய, அவரைச் சார்ந்தவர்கள் ஒரு பெரிய கூட்டமாகச் சேர்ந்து கூட்டுமுயற்சி செய்து, போட்டியிடுபவரைத் தோல்வியுறச் செய்ய, அந்தப் பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்படுவதும் உண்டு. இது மற்றொரு வகை முறை.

முதல் வகையான தேர்தல் நம் நாட்டுக்கு நெடுங்காலமாகப் பழக்கமானது.

இரண்டாம் வகையானது நம் நாட்டுக்குப் புதியது. ஆங்கிலேயர் ஆட்சிக்குப் பிறகு இங்கே வளர்ந்து வேரூன்றியது இது.

இந்த இரண்டிலும் நன்மையும் உண்டு; தீமையும் உண்டு. ஆனால் இரண்டாம் வகையான தேர்தலால் தீமைகள் பல விளைகின்றன என்பதை நம் நாட்டுச் சான்றோர்கள் படிப்படியாக உணர்ந்துவருகிறார்கள்.

ஒன்றுபட்டு வாழக் கூடியவர்களைப் பகைத்துக்கொள்ளுதல், போட்டியாக நிற்பவர்களைத் திறமையாகப் பழிக்கக் கற்றுக்கொள்ளுதல், நெருக்கடி நேரும்போது எந்தப் போராட்டத்திற்கும் துணிதல், வெற்றி பெற வேண்டும் என்ற நோக்கத்திற்காக அறத்தின் வரம்பையும் மீறி எந்தத் தீமையும் செய்யவல்ல போக்கிரித் தன்மை ஆகிய இவை எல்லாம் இருந்தால்தான் இந்த வகையான தேர்தலில் நின்று வெற்றி பெற முடியும். அன்பின் பெருமை, சுற்றம் தழுவுதல், பகைவரிடத்தும் பண்பு பாராட்டல், வீண் வம்புக்குப் போகத் தயங்கும் சாது மனப்பான்மை, பொய் சொல்லக் கூடாது என்ற மனச்சான்று, பிறர் பழி கூறித் திரியக் கூடாது (புறங் கூறுமை) என்ற நல்லெண்ணம், பிறர்குற்றம் போல் தம் குற்றத்தையும் ஆய்ந்து பார்க்கும் மனப்பான்மை, குணம் நாடிக் குற்றமும் நாடிச் சீர்தூக்கும் நடுநிலைமை, பற்று இல்லாமல் கடமையைச் செய்யும் சமய ஒழுக்கம் முதலான நல்ல பண்புகள் ஒருவர்க்கு இருக்குமானால் அவர் தேர்தலில் நிற்பதை விட நிற்காமல் ஒதுங்குவதே நல்லது.

ஒருகால் அவர் எந்தத் தேர்தலிலாவது வெற்றி பெற்றால், அதற்குக் காரணம் அவருடைய நல்ல பண்புகள் அல்ல ; அவரோடு சேர்ந்து அவருக்காக உழைத்த கூட்டாளிகளிடம் (கட்சியாட்களிடம்) நல்ல பண்புகள் இல்லாமல், தேர்தலுக்கு வேண்டிய மற்றத் தன்மைகள் இருப்பதே காரணம் எனலாம். திருக்குறளையோ வேறு சிறந்த நூலையோ படித்திருந்தாலும், நூல் வேறு வாழ்க்கை வேறு என்று தள்ளிவிடக் கூடியவர்களுக்கே தேர்தலில் இடம் உண்டு. படித்த நூலின் உயர்ந்த கருத்துக்கள் உள்ளத்தில் ஊறிவிட்டிருந்தால், கற்றபடி (அதற்குத் தக) நிற்க வேண்டும் என்ற முயற்சி இருந்தால், அப்படிப்பட்டவர்கள் தேர்தலில் போட்டியிடுவது அறியாமையே !

இவற்றை இன்று பலர் உணர்கிறார்கள். தேர்தலில் நல்லவர்கள் வெற்றி பெற்று வர முடியவில்லையே, நல்லவர்கள் தேர்தலில் போட்டியிடாமல் ஒதுங்குகிறார்களே, தேர்தல்களால் நாட்டின் பண்பாடே சீர்குலைந்து போகிறதே, நெடுங்காலமாக நல்ல கூட்டுறவுமனப்பான்மையோடு ஒரு குடும்பம் போல் வாழ்ந்துவந்த கிராம மக்களும் பகையும் பூசலுமாய்ப் பிளந்து போரிடுகிறார்களே என்று பலவாறு எண்ணி நொந்து குறை கூறுகிறார்கள்.

அரசியலில் உள்ளவர்களும் இவற்றை உணர்கிறார்கள். ஆனால் தேர்தல்காலம் நெருங்கியவுடன், உணர்ந்த உண்மைகளை எல்லாம் மறந்து, களத்தில் குதித்துப் போராடுகிறார்கள். கேட்டால் ஒன்று சொல்கிறார்கள் : "என்ன செய்வது ? மக்களாட்சிமுறையில் தேர்தல் நடத்துவது தவிர வேறு வழி இல்லையே" என்ற ஒன்றையே விடையாகச் சொல்கிறார்கள்.

வேறு வழி இல்லையே என்று சொல்வது பொருந்தாது. வேறு வழியைக் காண்பதே முன்னேற விரும்புவோரின் கடமை. தேய்ந்த பாதையிலேயே நடக்கப் பெரும்பாலோர் விரும்புகிறார்கள். தேயாத புதுப் பாதையில் கல்லும் முள்ளும் இருக்குமே என்று அஞ்சிப் புது வழியைப் புறக்கணிக்கக் கூடாது. மனம் இருந்தால் வழி உண்டு ; ஆர்வம் இருந்தால் வழி காணமுடியும் என்பது பழமொழி.

புது வழி காண வேண்டும் என்ற ஆர்வம் இன்னும் பிறக்கவில்லை. பழைய வழியில் மேன்மேலும் இடர்கள் நேர்ந்து துன்பப் பட்டால்தான் மனிதன் புதுவழியை நாடுகிறான். அவ்வாறான நெருக்கடி ஏற்படும் வரையில் காத்திருக்கிறான். தேர்தலின் ஊழல்கள் பெருகப் பெருக நாடு பல குழப்பங்களுக்கு இரையாகி வருந்த, அந்த நிலையில் மிகப் பெரிய நெருக்கடி ஏற்பட்டுவிடுகிறது. மக்களாட்சி

உள்ள சில நாடுகளில் அப்படி ஏற்படும் நெருக்கடிதான் சர்வாதிகார ஆட்சி என்பது. அந்த நெருக்கடி ஏற்படுவதற்கு முன் அமைதியாக எண்ணிப் புது வழி வகுத்துக்கொள்ளத் தயங்குவது சமுதாயத்தின் இயல்பாகிவிட்டது. உடலில் சில சிறு குறை ஏற்படும்போதே, அதன் காரணத்தை உணர்ந்து திருத்திக்கொள்வது நல்லது. ஆனால் பெரும்பாலோர் அப்படிச் செய்வதில்லை. அது நோயாக முற்றிப் படுக்கையில் படுத்த பிறகே மருத்துவரைத் தேடி அவரிடம் அடைக்கலம் புகுகின்றனர். ஒரு நாடு சர்வாதிகாரி ஒருவனுடைய ஆட்சிக்கு அடங்கிவிடுவதும் அப்படிப்பட்டதுதான். அதை இயற்கையின் தண்டனை எனலாம்.

அந்த நோயும் மருத்துவமும் அரசியல் தேர்தல்களின் அளவில் நிற்கின்றனவா? அதுவும் இல்லை. நாட்டின் தொட்டில் போன்ற கல்விக்கூடங்களிலும் அந்தத் தேர்தல்களும், அவற்றின் சூழல்களும் புகுகின்றன. "வேறு வழி இல்லையே?" என்ற செம்மறியாட்டுக் காரணத்தையே அங்கும் சொல்ல வேண்டுமா? நாட்டின் பண்பாடு, தொட்டில் வளர்ச்சியின்போதே கெட வேண்டுமா?

இன்று கல்விக்கூடங்களில் ஆசிரியர்க்குள் தேர்தல்கள் உண்டு; மாணவர்க்குள்ளும் தேர்தல்கள் உண்டு.

இவை அல்லாமல், கல்விக்கூடங்களுக்கு வெளியே நடக்கும் கட்சித் தேர்தல்களில் ஆசிரியர்கள் கலந்துகொண்டு மற்றவர்களின் வெற்றிக்குப் பாடுபடுவதும் உண்டு; மாணவர்களும் அவ்வாறே கலந்து உழைப்பதும் உண்டு. அந்த வெளித் தேர்தல்களைப் பற்றி இங்கு ஆராயத் தேவை இல்லை. இயற்கையின் ஒறுத்தலுக்கு அஞ்சி அவை திருந்தும் காலம் வரும்.

கல்விக்கூடங்களின் அளவில் நடைபெறும் தேர்தல்களைப் பற்றி மட்டும் எண்ணிப் பார்ப்போம்:

ஆசிரியர்களில் வலியவர்கள் — மேற் குறிப்பிட்ட

திறமைகள் உடையவர்கள்—தேர்தலில் நிற்கிறார்கள். குழு அமைத்துக்கொள்கிறார்கள். போட்டியிடுவோரை எதிரிகளாக்குகிறார்கள். களம் அமைத்துப்போராடி வெற்றி பெற்றுச் சில பதவிகளைக் கைப்பற்றுகிறார்கள். தமக்கு ஓட்டு அளித்தவர்களை மறக்காமல், அவர்களுக்குத் தம்மால் இயன்ற பதவிகளும் உதவிகளும் தருகிறார்கள். ஓட்டு அளிக்காதவர்களை நினைவிற் கொண்டு, வாய்ப்புக் கிடைக்கும் போதெல்லாம் இடையூறு செய்கிறார்கள்; அல்லது, புறக்கணிக்கிறார்கள். நடுநிலைமையும் நேர்மையும் போற்றிக் கடமையைச் செய்யாமல், தமக்கு ஓட்டு அளித்தவர்கள், ஓட்டு அளிக்காதவர்கள் என்று பகுத்துணர்ந்து நாகரிகமான பகை பாராட்டுகிறார்கள்.

இந்தப் போக்கு எங்கே முடிகிறது என்றால் பாடப் புத்தகம் தேர்ந்தெடுத்து வைத்தல், தேர்வில் (பரீட்சையில்) ஒருவருக் கொருவர் உதவி செய்துகொள்ளல் முதலியவை வரையில் சென்று, எங்கும் நேர்மையைக் குலைத்துவிடுகிறது. அதனால் ஒரு சிலர் வாயால் நேர்மைப் பேச்சுப் பேசினாலும், சூழல்கள் அப்படியே இருந்துவருகின்றன. தேர்தலில் உழைத்து ஓட்டுச் சேர்த்துக் கொடுத்த ஓர் ஆசிரியர், ஆசிரியத் தொழிலை நன்றாகச் செய்யவில்லை என்று மேலதிகாரிகள் குறை கூறினால், இந்தக் குழு முன் வருகிறது. 'அவர் நன்றாகவே வேலை செய்கிறார்' என்று சொல்லி அவருக்குப் பக்கபலமாக நின்று அவரைக் காக்க முனைகிறது. தேர்தலில் உழைக்காத ஆசிரியர் ஒருவர் நன்றாகவே தொழில் செய்துவந்த போதிலும் அவரிடம் பல குறைகள் இருப்பதாகச் சொல்லித் தூற்றி அவருக்குத் தொல்லைகள் கொடுக்கிறது.

அதனால் ஆசிரியர்தொழிலுக்கு வந்த சில ஆண்டுகளில், இளைஞர்கள் என்ன கற்றுக்கொள்கிறார்கள்? கல்விக் கூடத்தில் உண்மையாக உழைப்பதில் பயன் இல்லை;

அதைவிட உண்மையைப் பற்றிக் கவலைகொள்ளாமல், தேர்தல் முதலியவற்றில் திறமையாக இருந்து வெளி மயக்கான செயல்களில் ஈடுபட்டு உழைப்பதே பயன் தரும் என்று கற்றுக்கொள்கிறார்கள்.

ஆசிரியர்களிடையிலேயே இப்படி அறம் ஒதுங்கித் தீமை வெல்லுமானால் மாணவர்கள் என்ன கற்றுக்கொள்ள முடியும்? நடுநிலைமை வெல்லாது, நேர்மை பயன்படாது, கட்சி கட்டி (குழு அமைத்து) அடாவடியாகவாழ்ந்தால்தான் வெற்றி பெற முடியும், உயர்ந்த நூல்கள் எல்லாம் உபதேசத்துக்கு மட்டுமே என்றெல்லாம் மாணவர்கள் எளிதில் கற்றுக்கொள்கிறார்கள்.

இனி, மாணவர்களின் தேர்தல்களைப் பற்றிக் கூற வேண்டியதில்லை. அவர்களும் வெளியே நடக்கும் தேர்தல்களைப் பின்பற்றுகிறார்கள்; குழு (கட்சி) சேர்க்கிறார்கள்; பகைக்கும் திறன், பழிக்கும் திறன், போராடும் திறன் முதலியவற்றை வளர்த்துக்கொள்கிறார்கள். நல்ல பெற்றோர்களின் நிழலில் வளரும் மாணவர்கள் ஒதுங்குகிறார்கள். துணிச்சல் இல்லாதவர்கள் ஒதுங்குகிறார்கள். மற்றவர்கள் முன்வருகிறார்கள். மேற்கூறிய திறமைகள் மிகுந்தவர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். குடும்பமாய்ச் சேர்ந்து வாழ வேண்டியவர்கள் மூன்று நான்கு குழுக்களாய்ப் பிரிந்து போராடுகிறார்கள். ஒரு மாணவன் ஏதோ ஒரு நன்மை பெற்றான் என்றால், முன்னே அவன் எந்தக் குழுவைச் சார்ந்தவன் என்று எண்ணிப் பார்க்கிறார்கள். தம் குழுவைச் சார்ந்தவன் என்றால், வானளாவப் போற்றுகிறார்கள்; இல்லை என்றால், தூற்றுகிறார்கள். ஒருவனுக்கு ஒரு துன்பம் நேர்ந்தது என்றாலும், முதலில் இரக்கம் தோன்றுவதில்லை. எந்தக்குழு என்ற எண்ணமே தோன்றுகிறது. தம் குழுவினன் என்றால் உதவுகிறார்கள்; இல்லை என்றால் புறக்கணிக்கிறார்கள். இவ்வாறு குழு வளர்த்து

வல்லமை பெறும் திறமை உள்ள மாணவர்க்குத் தனி மதிப்பு ஏற்படுகிறது. வாழத் தெரிந்த ஆசிரியர் சிலர் அத்தகைய மாணவர்க்குத் தனிச் சலுகைகள் கொடுப்பதும் உண்டு. எங்கே நேர்மை?

இந்த உலகத்தில் தனி ஒருவனாக நின்றுவது நேர்மைக்காகப் போராடு என்றும், உண்மையை அஞ்சாமல் எடுத்துச் சொல் என்றும் புத்தகங்கள் சொல்கின்றன. ஆனால் அவற்றைக் கற்கும் மாணவர்கள் அப்படி ஆகிறார்களா? மேற்கூறிய வம்பான திறமை உடையவர்களை எதிர்க்க முடியாமல் ஆசிரியர்களே சலுகை காட்டும்போது, நாம் சிலர் என்ன செய்துவிட முடியும் என்று அவர்களோடு ஒத்துப் போகிறார்கள். அதனாலேயே, மாணவர்களின் ஆர்ப்பாட்டம் வேலைநிறுத்தம் முதலியவை பெருகுகின்றன. இந்த அடிப்படைக் காரணத்தை உணராமல், சிலர் மாணவர்களுக்கு உபதேசங்கள் மட்டும் செய்துவிட்டு ஒதுங்குகிறார்கள். தேர்தலின் கொடுமைகளே இப்படி வடிவு கொள்கின்றன என்பதை அவர்கள் உணர்வதில்லை.

இந்தத் தேர்தல்கள் தவிர, வேறுவழி இல்லையா?

குழுச் சேர்த்து வலுப்படுத்திக்கொண்டு ஒட்டுப்பெறும் ஐரோப்பியத் தேர்தல் முறையை விட்டு, திருவுளச் சீட்டு முறைப்படி எதிர்பாராமல் ஒருவரைத் தேர்ந்தெடுக்கும் இந்த நாட்டின் பழைய தேர்தல் முறையைக் கையாளக் கூடாதா?

திருவுளச் சீட்டு முறைப்படி தேர்தல் நடத்துவது என்றால், அரசியலில் கட்சியாளர் ஒப்புக்கொள்வதில்லை. திறமை இல்லாதவர்களும் படிப்பு முதலிய தகுதி இல்லாதவர்களும் திருவுளச் சீட்டில் வந்து பதவிபெற்றால் நாட்டை ஆள்வது எப்படி என்று அரசியலார் தயங்குகிறார்கள். மக்களில் பலவேறு நிலையினர் இருப்பதால், தக்கவர்களை மட்டுமே தேர்ந்தெடுக்க வழி இல்லாமற் போகிறதே என்று

அவர்கள் தயங்குகிறார்கள். (ஓட்டு முறையால் மட்டும் தக்கவர்களே வருகிறார்களா என்பதை அவர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும்!)

ஆனால் கல்விக்கூடங்களில், ஆசிரியர்கள் எல்லோரும் ஒரே நிலையில் உள்ளவர்கள் தானே? அவர்களில் யாரேனும் வரலாமே. மாணவர்களும் ஒரே நிலையில் உள்ளவர்கள் தானே? அவர்களிலும் யாரேனும் பதவிக்கு வரலாமே. ஆகையால் எல்லாருக்கும் பொதுவான திருவுளச் சீட்டுத் தேர்தலையே ஆசிரியர்களின் தேர்தல்களிலும் கையாள லாம்; மாணவர்களின் தேர்தல்களிலும் கையாளலாம். எல்லோருடைய பெயர்களையும் எழுதி ஒரு பெட்டியில் இட்டுக் குலுக்கி, அவற்றிலிருந்து ஏதேனும் ஒன்றை எடுத்து, முதல் பதவிக்கு உரிய பெயராகத் தேர்ந் தெடுப்பது; மற்றொன்றை எடுத்து, அடுத்த பதவிக்குத் தேர்ந்தெடுப்பது; மேலும் சில எடுத்து, அடுத்த சில பதவிகளுக்குத் தேர்ந்தெடுப்பது; இவ்வாறே சீட்டு எடுத்து முடிவு செய்யும் முறையைக் கையாளலாம்.

ஆசிரியர்களுக்கும், அவர்களை விடச் சிறப்பாக மாண வர்களுக்கும் இதனால் விளையக் கூடிய நன்மைகள் பல உண்டு.

முதலாவது, குழுச் சேர்த்துக் கட்சியாக வலுப்படுத்திக் கொள்ளும் உழைப்புத் தேவையில்லாமற் போகும். இதனால், கல்விக்கூடங்களில் வீண் முயற்சியில் ஊக்கம் செலவாகாது. ஆசிரியர்கள் கற்பிப்பதை முதல் கடமையாகக் கொள்வர்.

இரண்டாவது: பதவியாசை ஒழியும்; கடமையுணர்ச்சி தலையெடுக்கும்.

மூன்றாவது: பகையும் பூசலும் குறையும்; அன்பும் ஒற்றுமையும் வளரும்.

நான்காவது: வெளியுலகத்தில் வேறு துறைகளில் அறநெறிக்கு மதிப்புக் குன்றினாலும், கல்விக்கூடத்திலாவது

அதற்கு மதிப்பு நிற்கும். பிறர் பழி கூறித் தூற்றல், பொய் சொல்லிப்போராடல், நடுநிலைமை இல்லாமல் வம்புக்கு மார் தட்டி நிற்றல் முதலான தீமைகள் ஒழியும். திருக்குறள் முதலான நூல்கள் படிப்பதற்கு மட்டும் அல்லாமல் வாழ்வதற்கும் உதவியானவை என்ற நம்பிக்கை வளரும்.

ஐந்தாவது : பணிவு அடக்கம் இன்சொல் முதலியவை கோழைகளின் இயல்புகள் என்று இப்போது எண்ணப் படும் நிலை மாறும் ; அவை நல்லவர்களின் பண்புகள் என்று கருதும் நிலை வரும். துணிச்சல் போக்கிரித் தன்மை முரட்டுத் தன்மை முதலியவை வெளி யுலகத்தில் இருந்தாலும் கல்விக்கூடத்துள் புகாமல் காக்கலாம்.

ஆறுவது : எல்லாவற்றையும் விடச் சிறந்தது. யான், எனது என்னும் செருக்கு, வெளி யுலகத்தில் தலை விரித்து ஆடுகிறது. அந்தச் செருக்கு உடையவர்களே கிராமப் பஞ்சாயத்து முதலான எல்லா அமைப்புகளிலும் புகுந்து ஆட்டி வைக்கிறார்கள். “நான் நிற்கிறேன். எனக்கு ஓட்டுப் போட வேண்டும்” என்கிறார்கள். “அவன் எனக்கு ஓட்டுப் போடவில்லை. ஆகையால் அவன் என் எதிரி” என்கிறார்கள். “நான் வெல்ல வேண்டும். அதற்கு ஆட்களைச் சேர்ப்பேன்” என்று திட்டமிடுகிறார்கள். “நான் வெற்றிபெற முடியும்; எனக்குத் தலைமைப் பதவி கிடைக்கும்” என்று நம்பிக்கையோடு செயலாற்றுகிறார்கள். “யான் எனது என்னும் செருக்கு” என்று திருவள்ளுவர் பழித்த இந்தச் செருக்கே இன்று பஞ்சாயத்துத் தலைவர் முதலான எல்லாப் பதவிகளின் தேர்தல்களிலும் அடிப்படையாக உள்ளது. அதனால் எவ்வளவோ நல்ல அமைப்புக்கள் எல்லாம் பாழ் ஆகின்றன. ஆக்க வேலைகளுக்கெல்லாம் முட்டுக் கட்டைகள் ஏற்படுகின்றன.

நாடெங்கும் வளர்ந்துள்ள இந்தச் செருக்கு, கல்விக் கூடத்துள் வளராமல் தடுப்பது பெரிய நன்மை ஆகும்.

திருவுளச் சீட்டுக் குலுக்கி எடுக்கும் முறையில், எவ்வளவு பெரிய செல்வமும் செல்வாக்கும் உடையவனாக இருந்தாலும் என்ன செய்ய முடியும்? ஆள் திரட்டி வலிமை சேர்ப்பவன் இந்தத் தேர்தல் முறையில் என்ன செய்ய முடியும்? பெட்டியில் உள்ள பல சீட்டுக்களில் ஒன்றாகவே அவனுடைய பெயர்ச் சீட்டும் இருக்கும். எவ்வளவு பணம் செலவு செய்தாலும், எவ்வளவு விளம்பரங்கள் செய்து ஏமாற்றினாலும், எத்தனை ஆட்களைச் சேர்த்துக் கட்சி திரட்டினாலும், அந்தச் சீட்டு வரும்படியாக மாய வித்தை செய்ய முடியாது. ஆகவே அவன் மனம் அடங்கிக் கிடக்கும். "என் முயற்சியைக் கடந்து நிற்கிறதே! நான் எதுவும் செய்ய வழி இல்லாமல் இருக்கிறதே! நான் எப்படி வர முடியும்?" என்று அவன் கலங்குவான்; திகைப்பான். கடைசியில், "யாராவது வந்து போகட்டும். என் தொழிலை நான் செய்வேன்" என்ற முடிவுக்கு வந்து அடங்குவான். ஆணவம் பிடித்தவர்களுக்கு இப்படிப்பட்ட அடக்கமும் அமைதியும் வந்தால்தான் நாடு நலமுறும். இந்த நல்ல நிலை நாட்டின் பலவகை அமைப்புக்களிலும் ஏற்படுவது மிகப்பெரிய நன்மையாகும்.

28. உலகம் பொல்லாதது

உலகம் பொல்லாதது என்ற வெறுப்பு, பழங்காலத்திலும் இருந்தது; இக் காலத்திலும் இருந்துவருகிறது. இந்த வெறுப்பின் காரணமாகப் பழங்காலத்தில் சிலர் உலக வாழ்க்கையில் பற்றுக் கொள்ளாமல் துறவிகளாய் ஒதுங்கினர்கள். அவ்வாறு துறவு பூண முடியாதவர்கள், 'அவர்களைப்போல் துறவிகளாக முடியவில்லையே' என்று ஏங்கினர்கள். அந்த நிலையின் பயனுகத் துறவறத்திற்கு ஒரு மதிப்பு ஏற்பட்டது. இல்லறத்தாரும் துறவிகளை வழிகாட்டிகளாகப் போற்றினர்கள். ஆனல், பொல்லாத உலகத்தை நல்ல உலகமாக மாற்ற வேண்டும் என்ற முயற்சி ஏற்படவில்லை. மரணத்திற்குப் பின் பெறத் தகுந்த நன்மையில் கண்ணுங் கருத்துமாய் இருந்து, அதற்கு உரிய முயற்சிகளில் பெரிதும் ஈடுபட்டார்கள். முத்தி பெறுவதற்கு உரிய ஆர்வம் அவர்களிடையே மிகுதியாக இருந்தது. அதனல், அறநெறியைப் போற்றி ஒழுகினர்கள். அப்படி அறநெறியைப் போற்றியதால், தனி மனிதர் பலர் நல்லவர்களாகத் திருந்தி வாழ்ந்தார்கள். அது சமுதாயத்திற்கு ஓரளவு நன்மை ஆயிற்று.

'உலகம் பொல்லாதது' என்று இக்காலத்தில் வெறுக்கிறவர்கள் துறவிகளாக ஆவது மிகக் குறைவு. உலகம் பொல்லாததாய் இருப்பதற்கு உரிய காரணங்கள் என்ன

என்று ஆராய்ந்து, அந்தக் குறைகளை நீக்கி, உலகத்தைத் திருத்தி அமைக்க வேண்டும் என்ற முயற்சி இப்போது எங்கும் உள்ளது. உலகத்தில் பல நாடுகளில் ஏற்பட்டு வரும் மாறுதல்களையும் முன்னேற்றங்களையும் பார்த்து, அவற்றைப் போல் செய்ய வேண்டும் என்ற ஆர்வம் மிகுதியாக உள்ளது. சமுதாயம் நன்றாக அமைந்துவிட்டால் வாழ்க்கை நன்றாக இருக்கும் என்ற நம்பிக்கை வளர்ந்து வருகிறது. அதனால், உலக வாழ்க்கை பொல்லாதது என்று அஞ்சி வெறுத்துத் துறவிகளாக ஆகின்றவர்கள் இக்காலத்தில் மிக மிகச் சிலரே.

அதற்கு மாறாக மற்றொன்று கூறலாம். துறவிகளும் இக்காலத்தில் மலைகளிலும் காடுகளிலும் சென்று ஒதுங்குவதில்லை. நகரங்களிலும் கிராமங்களிலும் நல்ல கட்டடங்களை அமைத்துக்கொண்டு மக்களுக்கு நடுவே வாழ்ந்து, தொண்டு செய்துவருகிறார்கள். கல்விக்கூடங்கள் நடத்தியும், மருத்துவச்சாலைகள் நடத்தியும், மக்களின் அறியாமையையும் நோயையும் போக்குவதைப் பெரிய கடமையாகக் கருதுகிறார்கள். இது வரவேற்கத் தகுந்த ஒரு மாறுதல் ஆகும்.

ஆனாலும் இந்தப் பொல்லாத உலகத்தை நல்ல உலகமாகத் திருத்துவதற்கு அரசியல்தான் சரியான கருவி என்று பலரும் கருதுகிறார்கள். இளைஞர்கள் அரசியல் ஒன்றையே இதற்கு உரிய வழி என்று நம்புகிறார்கள். அதனாலேயே இந்தக் காலத்தில் மற்றத் துறைகளைவிட அரசியலில் எல்லோர்க்கும் தணியாத ஆர்வம் இருந்து வருகிறது. ஆனால் அந்த அரசியல் துறையில்தான் இன்னும் கொடுமைகள் பல நிகழ்ந்துவருகின்றன.

சில திங்களுக்கு முன் ஆப்பிரிக்கா கண்டத்தில் ஒரு நாட்டில் மக்களால் விரும்பப்பட்ட தலைவர் ஒருவர் சித்திரவதை செய்து கொல்லப்பட்டார். அந்தக் கொடுமைக்கு

அவர் இரையாகாமல் காப்பாற்றப்பட வேண்டும் என்று பல நாடுகள் விரும்பின. ஏறக்குறைய உலகம் விரும்பிற்று என்றே சொல்லலாம். உலக நாடுகளின் அமைப்பும் அந்த ஒரு மனிதரைக் காப்பாற்ற வேண்டும் என்று விரும்பியது. ஆனாலும் தடுக்க முடியவில்லை. அவர் சித்திரவதைக்கு இரையானார். கொடுமை செய்து கொல்லப்பட்டார்.

இருபதாம் நூற்றாண்டில், உலகம் முழுவதும் ஒரு குடும்பம் போல் நெருங்கி வாழும் வாய்ப்பு ஏற்பட்டுள்ள நிலையில், ஒரு நாட்டு மக்களின் தலைவனுக்கு இந்தக் கதி நேர்ந்தது. செய்தித் தாளில் இதைப் படித்த ஒவ்வொருவர் நெஞ்சும் கொதித்தது ; வருந்தியது.

காட்டிலே ஒரு பசுவையோ மானையோ சில நரிகள் கூடிக் கொன்று தின்னுமானால், அதை இயற்கை என்று விடலாம். அதே கொடுமை நாட்டில் மனிதரிடையே நிகழுமானால் அதை என்ன என்று சொல்வது ? காடுகளில், கொல்லப் படும் நல்ல விலங்குகளும் கொல்லும் பொல்லாத விலங்குகளும் கலந்து வாழ்கின்றன. ஆகையால் அங்கே கொடுமைகள் நடப்பது இயற்கை. அந்த விலங்குகளின் இயல்பை மாற்ற முடியாது. புலியும் நரியும் இயல்பாகவே பொல்லாதவை. பசுவும் மானும் இயல்பாகவே நல்லவை. அவற்றின் இயல்பை யாராலும் மாற்ற முடியாது. உருவத்தால் வேறுபட்டு இருப்பது போலவே, பண்பாலும் அந்த விலங்குகள் வேறுபட் டிருக்கின்றன. அப்படிப்பட்ட வேறுபாடு மக்களுக்கு அமைந்திருந்தால் நன்மையாக இருந்திருக்கும். மனிதருள் யார் கொடியவர், யார் நல்லவர் என்று உருவத்தைக் கண்டு பகுத்தறிய முடியாது. நிறம், முக அமைப்பு முதலியவை சிறிது சிறிது வேறுபட் டிருந்தாலும் அவற்றால் பண்பு வேறுபடுவதில்லை. பசுவின் வயிற்றில் புலி பிறப்பதில்லை. புலியின் வயிற்றில் மான் பிறப்பதில்லை. ஆனால் நல்லவர்களுக்குக் கொடிய மக்கள் பிறக்கிறார்கள்.

கொடியவர்களின் வயிற்றில் நல்லவர்களும் பிறக்கிருர்கள். மனிதப் பண்பு மாறக்கூடியதாக, திருந்தக் கூடியதாக இருக்கிறது. அதனால் காட்டிலே விலங்குகளின் கொடுமையைக் கண்டு இயற்கை என்று ஆறுதல் அடைவது போல், நாட்டிலே மனிதர்களின் கொடுமையைக் கண்டு இதுவும் இயற்கை என்று அமைதி பெற முடியவில்லை. அந்த நிலைமை திருந்ாதா, திருந்தும் நாள் எந்த நாளோ என்று ஏக்கம்தான் ஏற்படுகிறது.

லுமும்பா சித்திரவதை செய்யப்பட்ட செய்தி வந்த நாளில் உலகத்து மக்கள் பெரும்பாலோரின் உள்ளம் வேதனைப்பட்டது. ஆனல் "உலகம் பொல்லாதது. இது இப்படித்தான் இருக்கும்" என்று சிலர் அமைதியும் பெற்றிருக்கக் கூடும். அவர்கள் காட்டிற்கும் நாட்டிற்கும் வேறுபாடு காணுத மனப்பான்மை உடையவர்கள் என்று கூறலாம்.

"காடு திருந்தாது, நாடு திருந்தும்" என நம்பிக்கை உடையவர்கள் அவ்வாறு அமைதி பெற்றிருக்க முடியாது. உலகம் ஒரு குடும்பமாய் நெருங்கிவரும் இந்த இருபதாம் நூற்ருண்டிலும் இப்படிப்பட்ட கொடுமை நடந்ததே என்று வேதனைப்பட்டதுதான் பொருத்தமானது.

'உலகம் பொல்லாதது, இது இப்படித்தான் இருக்கும்' என்று கருதுவது உண்மையானல், 'மனிதர் பொல்லாதவர்கள், அவர்களைத் திருத்த முடியாது' என்று கூற வேண்டும். ஆனல் அது உண்மை அன்று. மனிதர்களிடம் நல்ல பண்பு உள்ளது. சிலரிடத்தில் அது மிகுதியாக உள்ளது. சிலரிடத்தில் அது குறைவாக உள்ளது. தன்னலமற்ற சிலர் பண்பாட்டிற்கே இருப்பிடமாய் விளங்கி, புத்தர் என்றும், யேசு என்றும், முனிவர் என்றும், அறவோர் என்றும், டால்ஸ்டாய் என்றும், காந்தி என்றும் பெரு வாழ்வு வாழ்ந்து காட்டுகிருர்கள்.

அவர்களின் சொல்லால் பலர் திருந்தி வாழ்கிருர்கள். திருந்த முடியாதவர்களும் அந்தச் சான்ருேர்களுக்குத் தலை வணங்குகிருர்கள். நல்ல பண்பு எல்லோரிடமும் இருப்பதனுல்தான் இவ்வாறு சான்ருேர்களையும் அவர்களின் சொற்களையும் மதித்துப் போற்ற முடிகிறது. இந்த நிலையில் மனிதர் சிலரைப் பார்த்து அவர்களைப் பொல்லாதவர்கள் என்று ஒதுக்கிவிடுவது பொருந்துமா? அல்லது, மக்கள் சிலர் செய்யும் கொடுமைகளைப் பார்த்து உலகம் பொல்லாதது என்று வெறுப்பதுதான் பொருந்துமா?

வெறுக்கத் தகுந்தது வாழ்க்கை அன்று; மனிதப் பண்பும் அன்று. மனிதன் ஏற்படுத்திய சில அமைப்புக்கள் தான் பொல்லாதவையாக வளர்ந்துவிடுகின்றன. கல்வி முறையிலே சில ஊழல் கண்டால், அந்த முறையை வெறுக்க வேண்டுமே அல்லாமல், கற்கும் குழந்தைகளையோ கல்விக்கூடங்களையோ வெறுப்பதில் பயன் இல்லை. அதுபோல வே மனித வாழ்வில் சில கொடுமைகளைக் கண்டால் அந்தக் கொடுமைகளுக்குக் காரணங்கள் என்ன என்று கண்டு அவற்றைத்தான் வெறுக்க வேண்டும். மனிதப்பண்பு ஒன்றே. மனிதர் ஓரினமே. "எல்லோரும் ஓர் குலம்; எல்லோரும் ஓர் நிறை!" "ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்." ஆனுல் மனிதரிடையே வேறுபாடுகளையும், அவற்ருல் பகையுணர்ச்சிகளையும், அவற்ருல் கொடுஞ் செயல்களையும் வளர்த்துவருகின்ற சில அமைப்புக்கள் பொல்லாதவை. அந்த அமைப்புக்கள் மனிதனை மனிதனிடமிருந்து பிரித்து, மனிதனை மனிதனுக்கு எதிராகத் தூண்டிவிட்டு, மனிதனுல் மனிதனுக்குக் கொடுமை நிகழுமாறு செய்கின்றன. சாதி வேறுபாடுகள், சமய வேறுபாடுகள், நாட்டுப்பற்ருல் வளர்ந்த உணர்ச்சிவேறுபாடுகள், ஒரு நாட்டிலேயே அரசியல் கட்சிகளால் விளையும் வேறுபாடுகள் இவைகளே, மனிதனைக் கொடியவனுய் மாற்றுகின்றன. கொடுமை

செய்யத் தூண்டுகின்றன. உலகம் பொல்லாதது என்று சொல்லும் நிலையை ஏற்படுத்துகின்றன.

ஆகவே, நாட்டிலே உள்ள கொடுமை, காட்டிலே விலங்குகளிடையே உள்ள கொடுமை போன்றது அன்று. காட்டிலே இயற்கையாகவே விலங்குகளிடையே வேறுபாடுகள் உள்ளன. அந்த இயற்கைவேறுபாடுகளால் சில விலங்குகள் கொடுமை செய்கின்றன. சில அந்தக் கொடுமைக்கு இரையாகின்றன. அப்படிப்பட்ட காட்டுக் கொடுமை நாட்டில் இல்லை, நாட்டில் மனிதரிடையே உள்ள வேறுபாடுகள் இயற்கையானவை அன்று; செயற்கையாக ஏற்படுத்தப்பட்டவை. அரசியல் கட்சிகள் முதலிய வேறுபாட்டு அமைப்புக்களே மனிதர்க்கு எதிராக மனிதரை ஏவிக் கொடுமைபுரியச் செய்கின்றன.

ஒரு காட்டில் வேறு எந்த விலங்கும் இல்லாமல் எல்லாம் மான்களாகவே இருந்து, அந்த மான்கள் ஒன்றோடு ஒன்று போராடி, ஒன்றை ஒன்று குத்தி, ஒன்றை ஒன்று கொன்று தின்று வாழுமானால் — அப்படி ஒரு காடு இருக்குமானால் — அந்தக் காடுதான் இந்த நாட்டுக்கு ஒப்பாகச் சொல்லத் தகுந்தது. இந்த உண்மையை உணர்ந்தால் உலகம் பொல்லாதது என்று வெறுக்கத் தோன்றாது. உள்ள குறைகளைக் கண்டு, இயன்ற அளவு படிப்படியாகத் திருத்தும் வகையில் தொண்டு செய்யவே தோன்றும்.

29. உய்யும் வழி

இன்பச் சூழ்நிலையில் இன்பமே உணர்ந்து இன்ப வாழ்க்கை நடத்த வேண்டும் என்று விரும்பி அந்த இளவரசனை வளர்த்தனர் அரச குடும்பத்தினர். இனிய காதல் வாழ்க்கை நடத்தி இன்புற வேண்டும் என்று இளவரசனுக்கு ஒரு கட்டழகியை மணம் செய்வித்து மகிழ்ந்தனர். இளவரசனும் இன்பமே உலகம் என்று இனிது வாழ்ந்து வந்தான். ஆயினும் துன்பக் காட்சிகள் சில அந்த இளவரசனின் கண்களுக்கு எட்டின ; நெஞ்சில் பாய்ந்தன ; சிந்தனையைத் தூண்டின. 'நாம் இதுவரையில் உணர்ந்தது உண்மை உலகம் அன்று; உலகத்தில் துன்பமும் உள்ளது. இன்பம் துன்பத்தோடு கலந்தே உள்ளது. இந்தத் துன்பம் நம்மையும் தாக்குதல் கூடும். நம் காதலியையும் தாக்குதல் கூடும். அப்போது என்ன செய்வோம்? இந்தத் துன்பத்தை அடியோடு அகற்றி வாழ வழி இல்லையா" என்று இளவரசனின் உள்ளம் நைந்து உருகியது; வாழ்க்கையை வெறுத்தது ; கட்டழகியான காதலியையும் அருமைக் குழந்தையையும் பிரிந்து நள்ளிரவில் நாட்டை விட்டுக் காட்டுக்கு ஓடச் செய்தது.

துன்பம் அறியாமல் மைந்தனை வளர்க்க வேண்டும் என்று அரச குடும்பத்தினர் எண்ணிய எண்ணம் வீண்

ஆயிற்று; இன்பம் அத்தனையையும் வெறுத்து ஓடும் மனநிலையே அவர்களின் மைந்தனுக்கு வாய்த்தது. ஆனால், இந்த ஒரு குடும்பத்தின் முயற்சி உலகத் துன்பத்திற்கே மருந்து தேடும் பெரு முயற்சி ஆயிற்று. ஒரு சிறு நாட்டு இளவரசன் உலகப் பேரறிஞர் ஆனார். இன்பக் காதலன் கௌதமன், துன்பம் துடைக்கும் புத்தர் ஆனார். ஆணையே பெரிது என்று ஆளப் பிறந்த செல்வர், அன்பே பெரிது என்று அதன் ஆற்றலை விளக்கும் துறவி ஆனார்.

இந்த நிகழ்ச்சி நடந்து இருபத்தைந்து நூற்றாண்டுகள் ஆயின. உலகம் அவருடைய பெருமையைப் போற்றக் கற்றுக்கொண்டது; ஆனால் அவர் காட்டிய நெறியில் நிற்கக் கற்றுக்கொள்ளவில்லை. அவருடைய பல்லுக்கும் ஒரு பெரிய கோயில் கட்டி வழிபாடு செய்யக்கற்றுக்கொண்டது; ஆனால் அவருடைய சொல்லின் உண்மையை உணர்ந்து நடக்கக் கற்றுக்கொள்ளவில்லை.

அன்புக்குக் குறுக்கே நிற்கும் யான் எனது என்னும் தன்னலத்தையும் அதை ஒட்டி வளர்ந்த சாதிவேறுபாடுகளையும் சடங்கு ஆரவாரங்களையும் அகற்றித் தூயவாழ்க்கை வாழுமாறு கற்றுக் கொடுத்த சான்றோர் அவர். ஆனால் தன்னலம் இன்னும் புதிய புதிய வடிவில் மக்களிடையில் வளர்ந்துவருகின்றது. தன்னலத்தைத் தூண்டும் பணத்திற்கும் புகழுக்கும் உள்ள ஆற்றல் இன்னும் சாயவில்லை. சாதி வேறுபாடுகள் இன்னும் தொலையவில்லை. நிறவேறுபாடுகள் முதலியவைகளும் இன்னும் நிலவுகின்றன. உலகம் இன்னும் சடங்குகளைப் போற்றி ஆரவாரம் செய்துவருகின்றது.

அறம் ஒன்றே வல்லமையானது, அதற்கே வணங்கி வாழ வேண்டும் என்று உணர்த்திய வீரர் அவர். அவர் காட்டிய நேரிய வழியைப் போற்றும் அளவுக்கு மக்களின் மனத்தில் உரம் இல்லை. மக்களின் இந்த மனப்பான்மையைப்

பயன்படுத்திக்கொண்ட தந்திரக்காரர், அற்புதங்களைக் காட்டிச் சமயத்தை வளர்க்கத் தொடங்கினர். அறநெறி என்னும் நேரிய வழியை மறந்து, அற்புத நெறியாகிய குறுக்கு வழியில் சென்று மக்கள் மயங்கினர். இந்த மயக்கம் இன்னும் தீரவில்லை. இன்றும் சமயங்கள் எல்லாம் அற்புதங்களின் அடிப்படையிலேயே வளர்க்கப்படுகின்றன. அறிவியல் உண்மைகள் போல, வாழ்வின் சட்டங்கள் நேரிய முறையில் விளக்கப்படவில்லை. மாங்கொட்டை நட்டு நீர் வார்த்தால் செடி ஆகும், அதை வளர்த்து மரமாக்கினால் பயன் விளையும் என்று சொல்வோருக்கு மதிப்பு இல்லை. இதோ மாங்கொட்டை, இதோ மாம்பழம். இவ்வாறு ஆக்குவதற்கு உரிய தந்திர மந்திரங்கள் என்னிடம் உள்ளன என்று சொல்லும் செப்படிவித்தைக்காரர்க்கே மதிப்பு உள்ளது. புத்தர்பெருமான் அறிவுறுத்திய உண்மைகளைப் பேசுவோர்க்கு இன்னும் மதிப்பு இல்லை. அவர் வாழ்க்கையை ஒட்டிப் புனைந்த அற்புதங்களைப் பேசுவோர்க்கே இன்றும் மதிப்பு உள்ளது.

இருபத்தைந்து நூற்றாண்டுகள் ஆன பிறகும் உலகம் இவ்வாறு உள்ளது. புத்தரின் அறநெறியைப் போற்றக் கற்றுக்கொள்ளவில்லை. ஆனால் அவரை, அவருடைய உருவத்தை, அவருடைய பல் முதலியவற்றை மட்டும் போற்றக் கற்றுக்கொண்டிருக்கின்றது. அதனால்தான் இன்னும் உய்யும் வழி காண இயலாமல் துன்பத்தைப் பெருக்கிக் கொண்டிருக்கின்றது.

30. மக்களாட்சி

மக்களாட்சி (குடியரசு) சிறந்தது. வலியோன் ஆட்சி (சர்வாதிகாரம்) அவ்வளவு சிறப்பு உடையது அன்று. மக்களாட்சியில் உரிமை பரவலாக நிற்கும்; பலரும் உரிமை உள்ளவராக இருப்பர். வலியோன் ஆட்சியில் உரிமை ஒருவனை நோக்கிக் குவிந்திருக்கும். அவனைச் சார்ந்த சிலருக்கு மட்டும் அதற்கடுத்த நிலையில் உரிமை இருக்கும். இந்த இருவகை ஆட்சியும் இந்த நூற்றாண்டில் ஓங்கி நிற்கின்றன.

பழங்காலத்தில் முடியாட்சி இருந்தது. முடியுடைய மன்னன் நல்லவனாக விளங்கியபோது, அது ஏறக்குறைய மக்களாட்சிபோலவே விளங்கியது. மன்னன் சான்றோனாக இல்லாமல் அதிகார ஆணவம் மிகுந்தவனாக இருந்த பொழுது, அவனுடைய ஆட்சி இக்காலத்து வலியோன் ஆட்சி போலவே இருந்தது. மன்னர் மரபில் நல்லவர்களே பிறப்பார்கள் என்றுசொல்ல முடியாது. நல்லவன் வயிற்றில் கொடியவனும், கொடியவன் வயிற்றில் நல்லவனும் பிறப்பது இயற்கையாகையால் ஒவ்வோர் அரச குடும்பத்திலும் இரு வகையானவர்களும் பிறந்தார்கள். ஒவ்வொரு நாட்டிலும் முடியாட்சி இரு வகையாக மாறிமாறி வந்தது.

இந்த நூற்றாண்டிலும் மக்களாட்சி உள்ள நாட்டில் வலியோன் ஆட்சி ஏற்படுதலும், வலியோன் ஆட்சி உள்ள நாட்டில் அது மாறி மக்களாட்சி ஏற்படுதலும் காண்கிறோம். இதற்குக் காரணம் பிறப்பால் அமையும் மரபு அன்று. ஒருவகை ஆட்சியின் ஊழல் மற்றொருவகை ஆட்சிக்கு இடம் தருகிறது. ஒன்று கெடுவதால் மற்றொன்று ஏற்படுகிறது.

மக்களாட்சியிலும் சில நன்மைகள் உண்டு. வலியோன் ஆட்சியிலும் சில நன்மைகள் உண்டு. மக்களாட்சியில் திறமையானவர்கள் தலைவர்களாக வராதபோது நாட்டில் முன்னேற்றம் எதுவும் ஏற்படாமல் எங்கும் தேக்கம் காணப்படும்; ஊழல்கள் மலிந்துவிடும். தேங்கும் நீரில் அழுக்கு மிகுதல் இயற்கையே. அந்தத் தேக்கத்தையும் ஊழலையும் பயன்படுத்திக்கொண்டு வலியோன் ஒருவன் தோன்றி அச்சுறுத்தி அதிகாரத்தைக் கைப்பற்றும்போது, வலியோன் ஆட்சி ஏற்படுகிறது; வலியோன் நல்ல நோக்கங்கள் உடையவனாக இருந்தால் நாடு வேகமாக முன்னேறும்; அவனும் நெடுங்காலம் ஆள்வான்; வலியோன் தன்னலம் மிகுந்தவனாக இருந்தால் அவனுக்குப் பகை பெருகும். அவனைக்கொன்று ஒழித்து மற்றொருவன் ஆளத்தொடங்குவான்.

முடியாட்சி செங்கோலாகவும் கொடுங்கோலாகவும் மாறுவது போலவே, வலியோன் ஆட்சி நன்மையாகவும் தீமையாகவும் அமையலாம். நன்மையே அமையும் என்று உறுதியாக எதிர்பார்க்க முடியவில்லை. அதனால்தான் உலகத்து அறிஞர்கள் பலரும் பொதுவாக வலியோன் ஆட்சியைப் போற்றுவதில்லை. காலங்கடந்தது என்றும், காட்டுமிராண்டி நாகரிகத்தைச் சேர்ந்தது என்றும், வளரும் உலகத்திற்கு வேண்டாதது என்றும் அதை ஒதுக்குகிறார்கள். ஆட்சியைக் கைப்பற்றும் வலியோன் தன்னலம் இல்லாத உயர்ந்த நோக்கங்கள் உடையவனாகவே இருப்பான்

என்று கூற முடியவில்லை. ஆகவே வலியோன் ஆட்சி உலகத்தைக் காப்பாற்றும் என்று நம்புவதற்கு இடமில்லை.

இந்த நம்பிக்கையற்ற தன்மை மக்களாட்சியில் இல்லை. மக்களாட்சி கொடுமையுடையதாக மாறுவதில்லை. மக்களாட்சியில் ஆட்சித் தலைவன் கொடியவனாக மாறிப் பிறரை அடக்கி ஆள்வானானால் அப்போது மக்களாட்சி என்ற பெயரே மறைந்துபோய்விடும்; அது வலியோன் ஆட்சி என்றே கூறப்படும். ஆகவே அந்தக் கொடுமை மக்களாட்சியின் கொடுமை அன்று. மக்கள் ஆளாததால் ஏற்படும் கொடுமை ஆகும்.

மக்களாட்சியில் ஒருகுறை உண்டு. அதில் நன்மைக்கும் வேகம் இல்லை; தீமைக்கும் வேகம் இல்லை. நல்லதன் சார்பிலும் ஓடாது; தீமையின் வழியிலும் பாயாது. மெல்ல நகர்ந்துகொண் டிருக்கும்; நகராமலும் நின்றுவிடும்; அதுதான் குறை.

நாட்டை ஆளும் ஆட்சி இருக்கட்டும். ஒரு குடும்பத்தின் நடைமுறையை வைத்துக்கொண்டு ஆராய்ந்தாலும் இந்த உண்மைகள் விளங்கும். மனைவி மக்கள் எல்லோரும் உரிமை பெற்று வாழும் குடும்பத்தில் நன்மை தீமைகளை வேகமாகக் காண முடியாது. ஆனால் பெரிய கேடு ஒன்றும் நிகழாது. குடும்பம் மெல்ல நகர்ந்துகொண் டிருக்கும். ஒருவன் தலைவனாய் (அல்லது ஒருத்தி தலைவியாய்) மற்றவர்களை அடக்கி ஆளும் குடும்பத்தில் நன்மையோ தீமையோ வேகம் கொள்ளும். அந்தக் குடும்பம் விரைவில் முன்னேறுவதும் உண்டு; சிதைந்து கெடுவதும் உண்டு.

உரிமைநிலவும் குடும்பத்தில் ஆள்வோர்க்குப்பொறுப்பு மிகுதி. மற்றவர்களைச் சொல்லித் திருத்த முடியுமே தவிர, அடித்துத் திருத்த முடியாது. சொல்லும் இன்சொல்லாக இருக்கலாமே அன்றி வன்சொல்லாக இருத்தல் ஆகாது. உரிமை இருப்பதால் குடும்பத்தார் ஒவ்வொருவரும்

ஒவ்வொரு வகையாக எண்ணிக் கருத்து வேறுபாடு கொள்வர். வேறுபட்ட கருத்து உடையவர்களை அன்பால் பிணைத்துக்கொண்டு போவது பெருமுயற்சி ஆகிவிடும். முயற்சி வெற்றி பெருதபோது சோர்வும் ஏற்படும். குடும்பம் ஒன்றுபட்டுத்தோன்றுவதைவிட, பிளவும் பூசலும் மிகுந்ததுபோல் தோன்றும். ஆகையால் இது என்ன குடும்பம் என்று பிறர் பழிப்பதற்கும் இடமாகும். அறிவு வளராத சிறுவர்கள் உரிமை உடையவர்களாய், கட்டுப்பாடு குறைந்தவர்களாய் நடப்பார்கள். அறிவு வளர்ந்த இளைஞர்கள் அந்தச் சிறுவர்களை அடக்கியாள வேண்டும் என்று விரும்புவார்கள். குடும்பத் தலைவரோ அவர்களுடைய விருப்பத்திற்கு இடம் தர முடியாமல் வருந்துவார். அதனுல், வளர்ந்த இளைஞர்கள் குடும்பத் தலைவரை வெறுப்பார்கள்; 'திறமையற்றவர்' என்றும் பழிப்பார்கள். வளராத சிறுவர்களோ, வளர்ந்த அந்த இளைஞர்கள் தம் உரிமையில் குறுக்கிடுவதாக அவர்களையும் பழிப்பார்கள்; அவர்களை அடியோடு தடுக்காத குடும்பத் தலைவரையும் வெறுப்பார்கள். குடும்பத்தில் உரிமையை வாழவைக்கும் பொறுப்பு ஏற்றுக்கொண்ட அந்தத் தலைவரின் பாடுதான் துன்பமாக இருக்கும். அவர் பொறுமை மிகுந்தவராகவும், குறிக்கோளில் உறுதியுடையவராகவும் இருந்தால்தான் சலிக்காமல் தொண்டு செய்ய முடியும். இல்லையானுல் இரண்டில் ஒன்று நடக்கும். ஒன்று, அவர் சலிப்புற்றுச் சோர்ந்து கைவிடும் நிலையில், வளர்ந்த இளைஞர்களில் ஒருவன் (அல்லது ஒருத்தி) அதிகாரத்தைக் கைப்பற்றி அவரையும் அடக்கிக் குடும்பத்தையும் அடக்கி ஆள நேரும். அல்லது, வளர்ந்தவர்களும் வளராதவர்களும் கொடுக்கும் தொல்லைகளைப் பொறுக்காமல் சினம் கொண்டு அவரே வலியோராய் (சர்வாதிகாரியாய்) யாருக்கும் உரிமை கொடுக்காமல் அடக்கி ஆளத் தொடங்குவார்.

ஆனுலும், நாட்டிற்கு மக்களாட்சி நல்லது என்று

கூறுவது போலவே, குடும்பத்திற்கும் எல்லோருக்கும் உரிமை தரும் வாழ்வே நல்லது என்று அறிஞர்கள் அறிவுறுத்துகிறார்கள். ஏன்? உரிமை நிலவும் குடும்பங்களில் அச்சம் குறைவு; அன்பிற்கு இடம் உண்டு. அதனால் குடும்பத்தில் பிறக்கும் பிள்ளைகள் திருடராகவும் முரடராகவும் மாறுவதில்லை. சிறுவராய் இருக்கும்போது திருந்தாத பிள்ளைகளும் வளர்ந்த பிறகு உணர்ந்து திருந்துவதற்கு இடம் உண்டு. அடக்குமுறை வாழும் குடும்பத்தில் எல்லோரும் அடங்கி நடப்பது போல், ஒழுங்காக வாழ்வது போல், தோன்றினாலும், அன்பு இல்லாத காரணத்தால், வாய்ப்புக் கிடைக்கும்போது ஒருவரை ஏய்க்கவோ கெடுக்கவோ தயங்குவதில்லை. இந்த உண்மை நாட்டின் ஆட்சிக்கும் பொருந்துவதாகும். மக்களாட்சியில் அச்சம் குறைவு; அன்பாலும் அறிவாலும் திருந்த முடியும். வலியோன் ஆட்சியில் திருந்தாமலே அடங்கி வாழ்வதால், வாய்ப்புக் கிடைக்கும்போது கொள்ளைக் கூட்டமும் கொலைக்குழுவும் தலையெடுக்க முடியும். ஆகையால்தான் வேகமான முன்னேற்றத்திற்கு இடம் தந்த போதிலும் அறிஞர்கள் வலியோன் ஆட்சியைப் போற்றுவதில்லை. மக்களாட்சி உள்ளத்தின் அன்பையும் கடமை உணர்ச்சியையும் அடிப்படையாகக் கொண்டது. வலியோன் ஆட்சி, உடம்பை வாட்டி வாழ்வைக் கெடுக்கும் கருவிகளின் வலிமையை அடிப்படையாகக் கொண்டது. அத்தகைய வலிமை உடையவன் தான் குடும்பத்திலும் பலரை அடக்கி ஆள முடியும்; நாட்டிலும் பலரை அடக்கி ஆள முடியும். அவன் பலரோடும் நெருங்கிப் பழகவேண்டிய தேவை இல்லையாகையால் பெரிய குடும்பத்தை ஆள முடியும்; பெரிய நாட்டையும் கட்டிக் காக்க முடியும். ஆனால் மக்களாட்சித் தலைவர்கள் பிறருக்கு அன்பை ஈந்து அன்பைப் பெற வேண்டியவர்கள்; ஆகையால் அவர்கள் மக்களோடு கலந்து பழக வேண்டுவது

கட்டாயம் ஆகின்றது. இந்த அன்புமுறை பெரிய குடும்பத்திலோ பெரிய நாட்டிலோ செழிப்பதில்லை. அதிகார முறைதான் அங்கெல்லாம் வெல்லும். சின்ன குடும்பம், சின்ன அமைப்பு,சிறியநாடு ஆகியவற்றில்தான் அன்புமுறை இயல்பாக விளங்க முடிகிறது; மனச்சான்று பண்பட முடிகிறது.

ஆகையால் உலகத்தில் மக்களாட்சி முறை செழித்து விளங்க வேண்டுமானல், பெரிய நாடு, பெரிய நகரம், பெரிய அமைப்பு ஆகியவை நல்லவை அல்ல. தேர்தல்களிலும் பெரிய தொகுதிகள் இந்த முறைக்கு உதவாதவை. சிறு சிறு கிராம ஆட்சிகளே மக்களாட்சிக்கு அடிப்படையானவை. எந்த அமைப்பும் அந்த அடிப்படையை ஒட்டியே நடைபெற வேண்டும். நகரங்களைப் பெருகவிடக் கூடாது. மத்திய அரசாங்கத்தில் அதிகாரங்கள் குவியுமாறு செய்தல் கூடாது. நகரங்கள் பெருகவும் அதிகாரங்கள் ஓரிடத்தில் குவியவும் வழி வகுத்து விட்டு, மக்களாட்சி வாழ வேண்டும் என்று விரும்பினுல், கொள் விதைத்துவிட்டு எள் எதிர்பார்ப்பது போல் ஆகும். இந்த உண்மையை உலக அரசியல் அறிஞர்கள் பலர் உணரவில்லை. காந்தியடிகள் எவ்வாறே உணர்ந்துகொண்டார். சிறு கிராமங்களைப் பற்றியே எண்ணி எண்ணித் திட்டங்கள் வகுத்தார். கிராமங்களின் வாழ்வுக்கும் வளத்துக்கும் இடையூருன யந்திரங்களைப் போற்றவில்லை. அறிவியலால் வளர்ந்த யந்திரங்களில் கிராம மக்களின் வாழ்வுக்குத் தீமை செய்யாதவற்றை மட்டுமே போற்றி மற்றவற்றை எதிர்த்தும் போராடினுர். கல்விமுறை முதலியவற்றைக் கிராம ஆட்சியின் அடிப்படை கொண்டு நோக்கிச் சீர்திருத்தங்கள் வகுத்தார். அறிஞர்கள் இன்று அவற்றை உணரத் தயங்கலாம். ஆனல் எதிர்காலத்தில் மக்களாட்சி மாறி மாறிக் குலைந்து வலியோன்ஆட்சி (சர்வாதிகாரம்) ஏற்பட்டு வருந்தும் காலத்தில், அவற்றின் உண்மையை உணரத்

தொடங்குவார்கள். மக்களாட்சியை நல்ல அடிப்படையோடு அமைக்காமல், பெயரளவில் மக்களாட்சி என்று சொல்லி, சர்வாதிகார முறை வளர்வதற்கு ஏற்ற போக்கில் செல்வதால்தான் பல நாடுகளில் அமைதி குலைகிறது ; உலகத்தில் பொதுவாக அன்புவாழ்க்கை குறைகிறது ; உலக அரசியலில் காட்டு நாகரிகம் இருப்பதற்குக் காரணம் அதுவே என்பதையும் உணர்வார்கள்.

அரசாங்கம், படை, அறிவியல் கருவிகள் முதலிய எல்லாம் மனித வாழ்வுக்காக ஏற்பட்டவை. ஆனால் அவை மனித வாழ்வுக்கே இடையூறு ஆகுமானால் அவற்றை ஒதுக்கவும் துறக்கவும் தெளிவும் துணிவும் வேண்டும். அவற்றைத் திருத்தி அமைக்கும் திறனும் வேண்டும். காந்தியடிகளுக்கு அந்தத் தெளிவும் துணிவும் திறனும் இருந்தன. மற்ற அறிஞர்கள் தேய்ந்த பாதையிலேயே நடந்து மயங்குவது போல் அவர் மயங்கவில்லை. அதனால்தான் அவரால் புது வழி காண முடிந்தது. வலியோன் ஆட்சியில் மனச்சான்று பண்படாது என்றும், அதனால் மனித வாழ்வு சிறந்து விளங்காது என்றும், யந்திரம் போல் ஆகிவிடும் என்றும் நன்றாக உணர்ந்தார் அவர். ஆகவே மக்களாட்சியைப் போற்றினர். அந்த ஆட்சி முறை மங்காமல் விளங்க வேண்டுமானால் மனிதனும் யந்திரம் ஆகிவிடாமல் மனச்சான்று உடையவனாய் வாழ வேண்டும் என்று கருதினர். சிறு கிராமங்களின் ஆட்சியும், மக்கள் அன்பாகப் பழகுவதற்கு உரிய தொழில் முறையும் இருந்தால்தான் மக்களாட்சி சிதையாமல் இருக்கும் என்பது அவருடைய நம்பிக்கை. இவ்வகையில் அவர் பெற்றிருந்த தெளிவு, அறிஞர் பலர்க்கும் வாய்க்குமானால் அது உலகத்திற்கே பெரிய நன்மை ஆகும்.

31. நல்ல ஆட்சிக்கு அடிப்படை

நான்குபேர் கூடி ஓர் இடத்தில் நின்று ஒரு பொருளைப் பார்க்கும் பொழுது அமைதியாக நின்று பார்க்க முடிகிறது. ஆனால் நாற்பது பேர் கூடிவிட்டால் அவ்வாறு அமைதி யாகப் பார்க்க முடிவதில்லை. ஏதாவது ஓர் ஒழுங்கு முறை யைக் கையாண்டு பார்க்க முயன்றால்தான் பயன் விளைகிறது. நானூறுபேர் கூடிவிட்டால் கண்டிப்பான கட்டுத்திட்டம் இருந்தால்தான் அமைதியாகப் பார்த்துவர முடிகிறது. நாலாயிரம்பேர் கூடிவிட்டாலோ அமைதியைக் காப்பது அரிதாகிவிடுகிறது. நாற்பதாயிரம் பேர் உள்ள கூட்ட மானால் ஒரு சிறிது நேரத்திற்குப் பிறகு அமைதி குலைந்து விடுகிறது. நாலு லட்சம் உள்ள கூட்டமானால் சிலர் உயிரைத் துறத்தலும் சிலர் மூர்ச்சையுறுதலும் முதலான துன்பங்கள் ஏற்பட்டுவிடுகின்றன.

எல்லோரும் மனிதரே. ஆனாலும் நான்குபேர் உள்ள போதும் நாற்பதுபேர் உள்ளபோதும் அமைதியாக இருப்பது போல், மிகப் பெருந் திரளாகக் கூடும்போது அமைதியாக இருப்பதில்லை, குழப்பம் மட்டும் அல்லாமல் பலருக்குத் துன்பமும் விளைந்துவிடுகிறது. குழப்பத் திற்கும் துன்பத்திற்கும் காரணம் மனிதப் பண்பில் உள்ள மாசு என்பதா? அவ்வாறானால் இன்னின்னார் செய்த

குற்றம் இப்படி இப்படி விளைந்தது என்று சுட்டிக்காட்ட முடிகின்றதா ?

பெருங் கூட்டத்தில் குறித்த இடத்தில் நிற்காமல் ஒரு பகுதியார் திரளாக நெருங்கி முன்னே வருகிறார்கள். அவர்களைப் பார்த்து, "நீங்கள் செய்வது தவறு" என்று சொன்னால், அவர்கள் வருந்துவார்கள். "நாங்கள் வேண்டுமென்றா இப்படி வருகிறோம்? எங்களுக்குப் பின் உள்ளவர்கள் எங்களைப் பிடித்துத் தள்ளினால் நாங்கள் எப்படி ஓர் இடத்தில் நிற்க முடியும்? எங்களை அவர்கள் நெருக்கித் தள்ளுவது உங்கள் கண்ணுக்குத் தெரியவில்லையா?" என்று கூறுவார்கள். பின்னே நெருங்கி வருகின்றவர்களைக் கேட்டால், அவர்களும் அப்படியே தமக்குப் பின்னால் பலர் நெருக்கித் தள்ளுவதைப்பற்றிக் குறைகூறி வருந்துவார்கள். அங்கு வந்த ஒவ்வொருவரும் நல்ல எண்ணத்தோடுதான் கூட்டத்திற்கு வந்தார்கள்; ஓர் இடத்தில் நின்றார்கள். சிறிது பரபரப்பு ஏற்பட்ட உடனே யாரோ சிலர் முந்தி நெருக்கித் தள்ள, அந்த முயற்சி கூட்டம் முழுதும் பரவி விடுகிறது. ஆகவே நல்லெண்ணத்தோடு வந்து நின்ற போதிலும், நெருக்கடி ஏற்பட்டபோது அந்த நல்லெண்ணத்தைக் காக்க முடியாமல் கலங்குகிறார்கள்; தம்மையும் மீறி நெருக்கித் தள்ளுகிறார்கள்.

தனித்தனியே நல்ல நோக்கத்தோடும் பண்போடும் உள்ள மனிதர், பெருங் கூட்டமாகத் திரளும்போது ஒரு சிறு கருவிபோல் ஆகிவிடுகிறார்கள். வெள்ளமாகத் திரளும் போது நீர்த் துளிகளுக்கு ஆற்றல் ஏற்படுவது போல், கூட்டத்தில் நெருக்கடி ஏற்படும்பொழுது அமைதியான மனித சக்திக்கு அழிக்கும் ஆற்றல் ஏற்பட்டுவிடுகிறது.

ஆகையால் சிறு கூட்டத்திற்குக் கட்டுப்பாடு தேவை இல்லாமல் இருந்தாலும் பெருங் கூட்டத்திற்கு மிகமிகத் தேவை ஆகின்றது. அணை எதற்குத் தேவை? திரளாத

மழைத் துளிகளுக்கு அணை தேவை இல்லை. திரண்டு வரும் வெள்ளத்திற்குத்தான் அணை தேவை.

ஆட்சிமுறை சிறுசிறு அளவில் அமைந்திருந்த பழங் காலத்தில் அவ்வளவு கட்டுப்பாடு தேவை இல்லை. பெரிய பரப்பான அளவில் அரசாங்கம் அமைந்து ஆட்சி நடக் கின்ற இந்தக் காலத்தில்தான் கட்டுப்பாடு மிகமிகத் தேவை யாக உள்ளது. அரசியல்சக்தியும் வெள்ளம் போல் திரண்டு எழுந்து ஆக்கவேலையோ அழிவுவேலையோ ஆற்ற லுடன் நடத்தும் நிலைமை இன்று உள்ளது. அதனல் கட்டுப்பாடு கட்டாயம் வேண்டிய ஒன்ருக ஆகிவிட்டது. அந்தக் கட்டுப்பாடு மக்களுக்கு இயல்பாக அமையும்போது நாட்டில் குடியாட்சி நடைபெறுகிறது. அது இயல்பாக அமையாமல் அதிகாரத்தால் வற்புறுத்தப்படும்பொழுது தடி ஆட்சி (சர்வாதிகாரம்) நடைபெறுகிறது. இந்த இரண்டில் ஒன்றுதான் இருக்க முடியும். நாற்பதாயிரம் பேர், இருந்த இடத்தைவிட்டு நகராமல் கட்டுப்பட்டு ஒரு வேடிக்கை பார்க்க முடியும். அல்லது, அந்த நாற்பதாயிரம் பேர் துப்பாக்கிக் குண்டுகளுக்கு அஞ்சி அசையாமல் அமைதியாக அடங்கியிருக்க முடியும். இரண்டில் ஒன்று தான் நடக்க முடியும். அரசியலிலும் உரிமையான குடி யாட்சி, அல்லது, உரிமையற்ற தடியாட்சி இரண்டில் ஒன்று தான் இனிமேல் இருக்க முடியும்.

ஆனல் எது நல்லது? அச்சத்தால் அடங்கிக்கிடப்பது நெடுங்காலம் நிற்கக் கூடியது அன்று. கடமை உணர்ச்சி யால் கட்டுப்பட்டுக் கிடப்பது நெடுங்காலம் நிற்க வல்லது. அந்த நல்லுணர்ச்சியோ, சிறு கூட்டமாக உள்ளபோதுதான் நன்ருக விளங்குகிறது; பெரிய அளவில் கூடும் கூட்டத்தில் நல்லுணர்ச்சி இருந்தாலும் பயன்படுவதில்லை. ஆகையால் மிகப் பெரிய அள்வில் பரப்பாக அரசாங்கத்தை அமைத்து ஆட்சி நடத்துவதைவிட அந்தந்த ஊரார் தம்மைத் தாமே

ஆண்டுகொள்ளக் கூடியவகையில் ஆட்சிமுறை அமைவது நல்லது. அந்த முறை அமைத்தால்தான் குடியரசு என்பது உண்மையாகவே மக்களாட்சியாக விளங்க முடியும்.

நாலு லட்சம்பேர் கூடும் கூட்டத்தில் ஏற்படும் நெருக்கடி குழப்பம் துன்பம் எல்லாம் கண்ணுக்குத் தெரிகின்றன. ஆனல் கோடிக்கணக்கான மக்களைச் சேர்த்து ஆளும் ஆட்சியில் ஏற்படும் நெருக்கடியும் குழப்பமும் துன்பமும் கண்ணுக்குத் தெரிவதில்லை. அதனால்தான் பெரிய அரசாங்க அமைப்பு எவ்வளவு தீமையானது என்பதை உலகம் இன்னும் உணரவில்லை. கண்ணுக்குத் தெரியும் தேளையும் பாம்பையும் விட, கண்ணுக்குத்தெரியாத நோய்க் கிருமிகளுக்காக மருத்துவர்கள் அஞ்சுகிறார்கள். ஆனல் அந்த உண்மை குழந்தைக்குத் தெரிவதில்லை. இன்றைய உலகம் குழந்தை நிலையில்தான் உள்ளது. உலக அமைதிக்கு வல்லரசுகள் அமைவது எவ்வளவு இடையூறு என்பதை நம் காலத்தவர் இன்னும் நன்றாக உணரவில்லை.

காந்தியடிகள் உணர்ந்தார்; வினோபா உணர்கிறார். இந்தியாவுக்கு விடுதலை வாங்கித்தருவதில் இருந்த ஆர்வத்தைவிட — கிராமங்களில் மக்களாட்சி — உண்மையான பஞ்சாயத்து ஆட்சி — ஏற்பட வேண்டும் என்பதில் காந்தியடிகளுக்கு ஆர்வம் மிகுதியாக இருந்தது. ஒரு கிராமம் வெளி ஆட்சியின் நெருக்கடிக்கு இரையாகாமல் அமைதியாக வாழ வேண்டுமானல் அந்தக் கிராமத்தார் வெளியாரின் உதவியை எதிர்பாராமல் தம்முடைய உழைப்பை நம்பியே வாழவேண்டும் என்று வினோபா வற்புறுத்துகிறார். அவருடைய பூதான முயற்சி முதலியவை அதையே அடிப்படையாகக் கொண்டவை.

அரசியல் துறையில் அதிகார நெருக்கடி எவ்வளவு பொல்லாதது என்பதை இன்றைய அறிஞர்களும் உணரவில்லை. ஆனல் மற்றத் துறைகளில் நெருக்கடியின்

தீமையை உணர்ந்து செயலாற்றுகிறார்கள். கல்வித் துறையில் மாணவர் தொகை குறைந்தால்தான் கல்விக் கூடங்களில் அமைதியும் பயனும் இருக்க முடியும் என்று நம்புகிறார்கள். அதனால் வரவர வகுப்புக்களில் மாணவர்தொகையைக் குறைத்து வருகின்றார்கள். பெரிய மாநாடுகள் நடத்துகின்றவர்களும் பெருங் கூட்டத்தில் பயன் காண முடியாது என்று அதைச் சிறிது நேரத்தில் நடத்தி முடித்துவிடுகிறார்கள். பிறகு பயனுக்காகப் பல வகையான உட்குழுக்களும் கிளைக் கூட்டங்களும் நடத்தி அவற்றில் கூட்டத்தின் தொகையைக் குறைக்கிறார்கள். இன்னும் பல துறையிலும் அவ்வாறே மனிதப் பண்பைக் காப்பதற்காக நெருக்கடியைக் குறைத்துவருகிறார்கள். ஆனால் எல்லாவற்றிற்கும் அடிப்படையான அரசியல்துறையில் நெருக்கடியையே வளர்த்துவருகிறார்கள். தேர்தல் என்றால் லட்சக்கணக்கான வாக்காளர்களைக் கொண்ட தொகுதிகளை அமைக்கிறார்கள். பல நூறு கிராமங்களை ஒரு நகரத்தில் உள்ள சில அதிகாரிகள் ஆளும்படியாகச் செய்கிறார்கள். அவற்றின் விளைவாக மனிதப் பண்பு மாய்ந்துபோகிறது. ஆட்சியில் நெருக்கமும் குழப்பமும்தான் மிஞ்சுகின்றன. யாரை யார் நெருக்குவது என்று அறியாமல் எல்லோரும் எல்லோரையும் நெருக்கிவருகிறார்கள். பொருளாதாரத் துறையில் யாரை யார் உறிஞ்சுவது சுரண்டுவது என்று அறியாமலே எல்லோரும் உறிஞ்சுவதிலும் சுரண்டுவதிலும் உள்ளனர். யாரை யார் அடக்குவது என்று அறியாமலே ஏமாந்தவர்களை அடக்குவதிலும் ஏய்ப்பவர்க்கு அடங்குவதிலும் எல்லோரும் மயங்கி ஈடுபடுகிறார்கள்.

அறிந்து செய்பவன் மனிதன். அறியாமல் செய்வது யந்திரம். மனிதப் பண்பு உள்ள வரையில்தான் மனிதன் நல்லெண்ணத்தோடு அறிந்து கடமையைச் செய்ய முடியும். நெருக்கடியின் காரணமாக மனிதப் பண்பு மாயும் போது

சமுதாயமே யந்திரமாக மாறுகிறது. செய்வது அறியாமல் உழலுகிறது. அப்படிப்பட்ட யந்திர சமுதாயத்தில் மக்களாட்சி வேர் கொள்வதைவிட, சர்வாதிகார ஆட்சிதான் எளிதாகத் தலையெடுக்க முடியும். ஆகையால் இந்தியாவின் விடுதலைக்குப் பாடுபட்ட காந்தியடிகள் உலகத்தின் எதிர்காலத்தை நன்றாக உணர்ந்து, மக்களாட்சிக்கு உரிய சீரான வழிவகைகளை எடுத்துரைத்தார். குழந்தை நிலையில் உள்ள இன்றைய சமுதாயம் அவரைமட்டும் போற்றிப் புகழ்கிறது; அவருடைய நெறியைப் போற்றி வாழ அறியவில்லை. அதனால்தான் எவ்வளவோ முன்னேற்றங்கள் ஏற்பட்டும் உலகம் எல்லாம் குழப்பங்களும் துன்பங்களும் தீராமல் இருக்கக் காண்கிறோம். குழந்தைகள் துன்புற்று மெலிந்த பிறகு உணர்ந்து வருந்துவதைவிட, வளரும்போதே வளமாக உண்டு பயன்பெறுவது நல்லது. ஆகையால், மனிதப் பண்பு மாயாத வகையில் மக்களாட்சி நிலவ வேண்டுமானால், கிராமங்கள் தம்மைத் தாமே ஆண்டுகொள்ளக் கூடியவாறு ஆட்சிமுறைகளை வகுக்க வேண்டும். ஆட்சிநெருக்கடியால் விளையும் சர்வாதிகாரத்திற்கு இடம் தராமல் நாட்டைக் காப்பதற்கும் அதுவே வழி ஆகும்.

32. குடியாட்சி நிலைக்குமா

உலகில் ஆட்சி என்பது தோன்றிய நாள் முதல் முடியாட்சி என்பது இருந்துவந்திருக்கிறது. அத்தகைய முடியாட்சியின் காலம் ஏறக்குறைய முடிவாகிவிட்டது. இந்த நூற்றாண்டில் பல நாடுகளில் குடியாட்சி தழைத்துவிட்டது. அவற்றுள் சில நாடுகளில் குடியாட்சியில் தடுமாற்றமும் நேர்ந்துள்ளது. எதிர்பார்த்த அல்லது எதிர்பாராத சில காரணங்களால், குடியாட்சி இருந்த நாட்டில் வலியோன் ஒருவன் தோன்றி ஆட்சிமுறையைக் கைப்பற்றிக்கொண்டு நாட்டைத் தன்கீழ்க் கொண்டுவருவதும் காண்கிறோம். அதுவே வலியோன் ஆட்சி அல்லது சர்வாதிகார ஆட்சி என்று கூறப்படும். இவ்வாறு மன்னன் ஒருவன் ஆண்ட முடியாட்சி மாறிக் குடியாட்சி தோன்ற, அதுவும் மாறி வலியோன் ஆட்சி ஏற்படக் காண்கிறோம்.

இந்த மாறுதலைக் கண்ட சிலர், குடியாட்சி இயற்கையானது அன்று என்றும், வலிமையோடு ஒருவன் ஆளும் ஆட்சியே இயற்கையானது என்றும், மன்னன் இல்லாத காரணத்தால் வலியோன் ஒருவன் ஆட்சியைக் கைப்பற்றுவது இயற்கை என்றும கூறுகிறார்கள். அவர்களில் சிலர், சோர்ந்த மனநிலையோடு முன்காலம் போல் மன்னன் ஆட்சியே இருக்கக் கூடாதா என்று ஏங்குகிறார்கள்.

அந்த ஏக்கம் பயனற்றது. உலகம் பின்னேக்கிச் செல்லாது. மன்னன் ஆட்சி மீண்டும் அமையாது. மன்னனே வலியோனைப் படைத்துணை கொண்டு ஆட்சியைக் கைப்பற்றினால் அவன் மட்டும் மன்னனாக விளங்கலாம். ஆனால் அவன் ஆட்சி வலியோன் ஆட்சியாக இருக்குமே அல்லாமல் முடியாட்சியாக இருக்காது. அவனுடைய குடும்பத்தில் பிறந்த மக்கள் அந்தப் பதவியைப் பெற முடியாது. ஆகவே, மீண்டும் மன்னன் ஆட்சி அமைய வேண்டும் என்று எதிர்பார்ப்பது அறியாமை. அது பழங்கதை போல் நிற்கும்.

எதிர்காலத்தில் ஒவ்வொரு நாட்டிலும் குடியாட்சி, அல்லது, வலியோனாட்சி, இரண்டில் ஒன்றுதான் இருக்க முடியும். வலியோனாட்சியில் சில கொடுமைகளைக் கண்டு அஞ்சி வெறுத்து, வலியோனாட்சியே கூடாது என்று சிலர் கூறிவருகிறார்கள். அதனாலும் பயன் இல்லை; 'வேண்டா, வேண்டா' என்று வெறுத்துக்கொண்டு இருப்பதால் அது போய்விடாது. 'தலைவலி வேண்டா. காய்ச்சல் வேண்டா' என்று வாயளவில் சொல்லிக்கொண்டிருப்பதால் அந்த நோய்கள் போய்விடுவதில்லை. நோய்களுக்குக் காரணமான தீமைகள் உடலில் சேராதபடி வருமுன் காக்கத் தெரிய வேண்டும். அதுதான் பயனுள்ள வழி. அரசியலிலும் சில குறைகள் வளராதபடி வருமுன் காத்தல் வேண்டும். அவ்வாறு காத்துவந்தால்தான் ஒரு நாட்டில் வலியோனாட்சி ஏற்படாமல் குடியாட்சியே மாறாமல் நிற்குமாறு செய்ய முடியும்.

இந்தியாவில் முதலமைச்சர் நேருவுக்குப் பிறகு ஆட்சி எப்படி ஆகுமோ, என்ன மாறுதல் வருமோ என்று சிலர் கலங்குகிறார்கள். அடுத்த மாதத்தில் இந்த உடம்புக்கு என்னநோய் வருமோஎன்று கலங்குவதைப்போன்றதுஇது.

கலங்குவதை விட்டுக் கடமைகளைச் செய்தல் தனி வாழ்விலும் நல்லது; அரசியலிலும் நல்லது. இந்தியாவில்

வலியோனாட்சி வராமல் தடுப்பதற்கு உரிய வழிகள் என்ன என்று ஆராய்ந்து அரசியல் கடமைகளில் ஈடுபட வேண்டும்.

'நம்மால் என்ன செய்ய முடியும்' என்ற சோர்வு மனப்பான்மை ஒரு நாட்டு மக்களிடையே வளர்ந்தால், அந்த நாட்டில் வலியோனாட்சி ஏற்படுவது எளிது. 'இந்த அரசியலில் நம் ஊரைப் பொறுத்த அளவில் என்னால் இன்னது செய்ய முடியும்' என்ற தன்னம்பிக்கை ஒவ்வொருவருக்கும் இருந்தால் வலியோனாட்சி வராமல் தடுக்க முடியும். அதற்குத் தேர்தல்முறையே மாறி அமைய வேண்டும். சிறு சிறு தொகுதிகளாகத் தேர்தல் புது முறையில் நடைபெற வேண்டும்.

தனி ஒரு மனிதரை — அவர் எவ்வளவு சிறப்பும் ஆற்றலும் உள்ளவரானாலும் அவரை — கண்மூடிப் போற்றிப் பின்பற்றும் மனப்பான்மை மக்களுக்கு இருத்தல் கூடாது. கண்மூடி வீரவழிபாடு இருந்தால் யாரேனும் ஒருவன் மற்றவர்களை அடக்கி வலியோனாய் விளங்குவது எளிதாகிவிடும். "பெரியோரை வியத்தலும் இலமே. சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே" என்று சான்றோரின் நெறியைப் போற்றி எல்லோரையும் ஏறக்குறைய ஒரு நிகராக மதிக்கும் மனப்பான்மை விளங்கினால் அந்த நாட்டில் வலியோனாட்சி வராமல் தடுக்க முடியும். அந்த நாட்டில் கூலியாட்களை மாற்றுவது போல் அரசியல்தலைவர்களை எளிதில் மாற்றிக் கொள்ளும் முற்போக்கு மக்களுக்கு அமைந்திருக்கும்.

ஆட்சி அதிகாரம் பெரிய நகரங்களில் குவிந்திராமல், கிராமங்கள் தோறும் பரவலாக அமைந்திருந்தால் வலியோனாட்சி ஏற்படாமல் தடுக்க முடியும். சிற்றூர்களுக்கு அதிகாரம் இல்லாமல் பெரிய நகரங்களில் மட்டும் அதிகாரம் குவிந்திருக்குமானால் வலியோனாட்சி மிக எளிதாக அமைவதற்கு இடம் உண்டு.

பகைவரின் படையெடுப்பைக் கருதியோ, உள்நாட்டுக் குழப்பத்தைக் கருதியோ, ஒவ்வொரு நாடும் பெரும் படை வைத்திருக்கின்றது. திருடனை அடிப்பதற்கு என்று வைத் திருக்கும் தடி, வீட்டுக்காரர் அடிபடுவதற்கு உதவுவதும் உண்டு. குடியாட்சியைக் காப்பாற்றுவதற்கென்று வைத் துள்ள பெரிய சேனை, அந்தக் குடியாட்சியைக் கவிழ்த்து வலியோன் ஒருவன் ஆட்சியைக் கைப்பற்றுவதற்கும் உதவு கிறது. பல நாடுகளில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்களைச் சிறையில் அடைத்துவிட்டுப் படைத் தலை வர்கள் படையின் துணையால் வலியோனாட்சியை ஏற் படுத்தக் காண்கிறோம். ஆகையால் ஒரு நாட்டில் பெரும் படை இருப்பதே வலியோனாட்சிக்கு வழிவகுப்பதாக உள் ளது. ஒரு வகையில் வலியோனாட்சியின் செவிலித்தாய் இந்தப் பெரும்படைதான் (இராணுவம்தான்) என்று சொல்ல வேண்டும்.

ஆனால் இன்று இதைக் கூறினால், படை இல்லாமல் எப்படிக் குடியாட்சி இருக்க முடியும் என்று பலரும் கேட் பார்கள். அரசியல் அறிஞர்கள் பலர் இன்னும் ஒப்புக் கொள்ளாத ஒன்று இது. படை இல்லாமல் ஆட்சி நடத்த முடியும் என்றும், அவ்வாறுதான் நடத்த வேண்டும் என் றும் டால்ஸ்டாய் காந்தியடிகள் முதலானவர் எடுத்துரைத் தார்கள். அவர்களை வெறுங் கனவு காண்கின்றவர்கள் என்று அறிஞர் பலர் ஒதுக்கிவிடுகின்றனர். அவர்களின் கொள்கை வெறுங் கனவு அன்று என்பதை உலகம் உணரும் காலம் வரும். துன்பப்பட்டுப் பட்டுத்தான் உலகம் முன்னேறுகிறது. உண்மையை உணர்ந்து உலகம் முன்னேறுவதில்லை. ஆகவே, படையற்ற ஆட்சிமுறையை உலகம் போற்றுவதற்குமுன், பலமுறை பலவகைப்பட்ட போர்களையும் பூசல்களையும் கண்டு, துன்பப்பட்டுத்தான் ஆக வேண்டும் போலும்.

குடியாட்சிநாடுகளில் மேற்சொன்ன காரணங்களால் வலியோனாட்சி இடையிடையே ஏற்படுவதும், மீண்டும் மீண்டும் குடியாட்சி அமைவதும் இன்னும் சில காலம் இயல்பாக இருக்கும். படமுடியாத அளவிற்குத் துன்பங்கள் பட்ட பிறகு அறிஞர்கள் கூடிச் சிந்தனை செய்வார்கள். அப்போது தான் போன வழியிலேயே போகும் செம்மறியாட்டுத் தன்மையை விட்டுப் புது வழியைப் பற்றி எண்ணிப் பார்ப்பார்கள். குடியாட்சியைப் பெற்றுவிட்டோமே தவிர, குடியாட்சிக்கு உரிய மனப்பான்மை பெறவில்லை என்பதை அப்போது உணர்வார்கள். தாய்மனம் பெருமலே குழந்தைகளைப் பெற்றுத் தாயாகிவிடுகிருள் ஒருத்தி. அதனுல் அவளும் துன்பப்படுகிருள். குழந்தைகளும் துன்பப்படுகின்றனர். இன்று சில குடியாட்சிநாடுகளில் அரசியல் நிலைமை இப்படித்தான் உள்ளது. அதனுல்தான் எத்தனையோ தடுமாற்றமும் கலக்கமும் நேர்கின்றன.

33. குடியாட்சி வாழ வழி

குடியாட்சி முறை வெற்றி பெற முடியவில்லை என்பது பலர் கருத்து. குடியாட்சியில் முன்னேற்றங்கள் விரைவில் ஏற்படுவதில்லை. ஆமையைவிட மெல்லவே நகர்கின்ற முறையாக அது உள்ளது. ஆனால் மக்களாட்சியைவிட அடக்குமுறை ஆட்சியாகிய சர்வாதிகாரமே மேலானது என்று சிலர் அவசரப்பட்டுக் கருதுகிறார்கள். சில நாடுகளில் மக்களாட்சி தோற்று வலியோனாட்சி தலையெடுப்பதையும் அவர்கள் எடுத்துக் காட்டுகிறார்கள்.

ஆனால் உண்மை அது அன்று. மன்னன் ஆட்சியைவிட்டு மக்களாட்சி ஏற்பட்டது, உலக முன்னேற்றத்தின் ஒரு பெரிய படியாகும். ஆனால் மக்களாட்சி ஏற்பட்ட போது அதனோடு சேர்ந்து கட்சி அமைப்பு என்னும் மாசும் உடன் வந்தது. கட்சி அரசியல் மக்களாட்சிக்கு மிகமிகத் தேவையானது போல் மயக்குகிறது. அவ்வாறு மயக்கி மெல்ல மெல்ல மக்களாட்சியில் பல குறைகளை ஏற்படுத்தி அதை நலியச் செய்கிறது. திடீரென்று ஒரு நாள் மக்களாட்சியைத் தாழ்த்திவிட்டு வலியோனாட்சியை நிலை நிறுத்துவதும் அந்தக் கட்சி அரசியல்தான். ஆகவே மக்களாட்சி ஏற்பட்ட போது தூய மருந்தாக ஏற்படவில்லை. நஞ்சோடு கலந்த மருந்தாகவே அது வந்துள்ளது.

கட்சி அரசியலில் மக்களாட்சிக்கு உரிய வித்துக்கள் இருப்பதைவிட வலியோனாட்சிக்கு உரிய வித்துக்கள் மிகுதியாக உள்ளன. மக்களாட்சியில் உரிமை பரவலாக இருக்க வேண்டும். ஆனால் கட்சி அமைப்பு உரிமையைக் கட்டுப்படுத்துகிறது. நூறாயிரக் கணக்கான மக்களுக்கு ஒரு சிலர் கட்சித் தலைவர்களாக அமைகிறார்கள். அந்த ஒரு சிலர் சொல்வதையும் விளம்பரப் படுத்துவதையுமே கட்சியைச் சார்ந்த மக்கள் எல்லோரும் நம்ப வேண்டும். கட்சித் தலைவர்கள் சிலர்க்குள்ளும் யாரேனும் ஒருவர்க்கே முழு அதிகாரம் உண்டு. செல்வாக்கு எல்லாம் அவரிடமே சென்று குவியும். அவர் சொல்வதையே மற்றவர்கள் கேட்டு நடக்க வேண்டும். அவருடைய விருப்பம்போல நடக்காதவர்க்குக் கட்சியில் சிறப்பிடம் இல்லை. விருப்பத்திற்கு மாறாக நடப்பவர்களுக்குக் கட்சியில் இடமே இல்லை. கட்சியின் சார்பாகச் சட்ட மன்றத்திற்கோ, பாராளுமன்றத்திற்கோ தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் அந்த மன்றத்தில் பேசும்போது தம் மனச்சான்றின்படி பேசமுடியாது. தம் பகுத்தறிவின்படி தீர்மானங்களில் வாக்களிக்கவும் முடியாது. கட்சித் தலைவருடைய கட்டளைக்குக் கட்டுப்பட்டு அவர் சொல்வதையே சொல்ல வேண்டும். அவர் விரும்பியபடியே வாக்களிக்க வேண்டும். இல்லையானால் கட்சிக் கட்டுப்பாடு என்ற ஒன்று எதிர் நிற்கும்; அச்சுறுத்தும்; கட்சியை விட்டு விலக்கிவிடும். அதனால் பலருடைய விருப்பம் நிறைவேறுகிறது என்று சொல்வதைவிட, ஒரு சிலருடைய விருப்பம் நிறைவேறுகிறது என்று சொல்லலாம். மன்னன் ஆட்சிமுறையில் இருந்தது போலவே ஒருவர் இருவருடைய விருப்பம் நிறைவேறுகிறது என்று சொல்லலாம்.

சர்வாதிகாரிக்குப் பெரிய படையின் பலம் உள்ளது. மன்னனுக்கும் அதுதான் இருந்தது. கட்சித் தலைவருக்கு ஆள்பலம் உள்ளது. நெருக்கடி நேரும்போது அந்த ஆள்

பலத்தையே கொண்டு ஆட்சியைக் கைப்பற்றிப் படை வலிமையைப் பற்றுகிறார். அவ்வாறு நடைபெறும்போது தான் கட்சித் தலைவர் சர்வாதிகாரியாக மாறுகிறார்.

செல்வம் ஓரிடத்தில் குவிவது பெரிய தீமை. உரிமை பரவலாக அமைய வேண்டிய மக்களாட்சிக்கு அவ்வாறு குவிகின்ற முறை இடையூறாகும். செல்வம் குவிவது தீமை ஆவது போலவே, புகழ், செல்வாக்கு, அதிகாரம் என்பவை ஒரு சிலரிடத்தில் குவிவதும் தீமையே ஆகும். மன்னன் ஆட்சிக்காலத்தில் செல்வம் சிலரிடத்தில் குவிய வழி இருந்தது. புகழ் எல்லாம் மன்னனை நோக்கியே குவிந்தது. செல்வாக்கு மன்னனைச் சார்ந்தவரிடத்தில் குவிந்தது. அதிகாரம் அவனிடத்திலே குவிந்தது. கட்சி அமைப்பில், செல்வம் குவிவதற்கு இடம் இல்லை என்றாலும் புகழும் செல்வாக்கும் அதிகாரமும் கட்சித்தலைவரிடத்தில் குவிவதற்கு வாய்ப்பு உள்ளது. ஆகவே கட்சித் தலைவர்கள் முடிசூடா மன்னர்களாகின்றார்கள். முடி சூடினாலும் சூடாவிட்டாலும் அவ்வாறு குவியும் முறை மக்களாட்சிக்கு இடையூறே ஆகும்.

கட்சியைச் சார்ந்த ஒரு சிலரிடத்தில் புகழ் குவியும் போது மக்களாட்சி அமைதியாய்க் கிடக்கிறது. செல்வாக்குக் குவியும்போதும் அவ்வாறே அமைதியாய்க் கிடக்கிறது. ஆனால் அதிகாரம் குவியும்போது மட்டும் அமைதியாகக் கிடப்பதில்லை. பரவலான உரிமைக்கு அது இடையூறு ஆகையால், சிறு கிளர்ச்சி தோன்றுகிறது. அந்த நேரத்தில் கட்சித் தலைவர்கள் தம் அதிகாரத்தை வன்மையாக்கிக் கொள்கின்றார்கள். அப்போது கட்சித் தலைவர்களுக்குள் ஒருவருக்கு மற்றவர் விட்டுக் கொடுத்தால் அமைதி ஏற்படுகிறது. அந்த அமைதியில் மக்களாட்சி என்னும் போர்வையில் வலியோனாட்சி நடைபெறுகிறது. அவ்வாறு கட்சித் தலைவர்கள் விட்டுக்கொடுக்காமல் அவர்களுக்கு

இடையே போட்டி நிலவுமானால், மக்களாட்சி என்ற போர்வை அகற்றப்படும். வலிமை மிகுந்த ஒருவர் மற்றவர்களை அடக்கி ஒடுக்கித் தாம் மட்டும் முன்வந்து சர்வாதிகாரியாக நிற்பார். அல்லது, அந்த அதிகாரப் போட்டியின்போது, அவர்களின் குழப்பத்திற்கு இடையே படைத் தலைவர் குறுக்கே புகுந்து எதிர்பாராமல் ஆட்சியைக் கைப்பற்றுவதும் உண்டு.

மக்களாட்சியின் பொறுமையே, புகழும் செல்வாக்கும் குவிவதற்கு இடம் தருகின்றது. அவற்றிற்கு இடம் கொடுத்த காரணத்தால் அதிகாரம் குவிவதற்கும் வாய்ப்பு ஏற்படுகிறது. அப்போது அதை ஏற்கும் மக்களாட்சி, பிறகு அதனாலேயே அழிந்துவிடுகின்றது.

ஆகவே மக்களாட்சி உண்மையாக வாழவேண்டுமானால் எந்தக் குவியல் முறைக்கும் இடம் தரக் கூடாது. குவியல் முறையை வளர்க்கும் கட்சி அமைக்க இடம் தரக் கூடாது.

கட்சியின் பேரால் தேர்தலுக்கு நின்று ஆட்சியைக் கைப்பற்ற வேண்டியுள்ளது. தேர்தலில் கட்சி வெற்றி பெற வேண்டுமானால் பெரிய அளவில் விளம்பரமும் பிரசாரமும் தேவைப்படுகின்றன. அவற்றிற்காகப் பணம் மிகுதியாகத் தேவைப்படுகிறது. ஆகவே பணம் மிகுதியாகச் செலவழிக்க வல்லவர்களைக் கட்சி தேடிப் பிடிக்க வேண்டியுள்ளது. வேறு வகையாகக் கூறினால், கட்சி, செல்வர்களின் தயவை நாட வேண்டியுள்ளது. செல்வர்களின் விருப்பம் போல் விட்டுக் கொடுக்க வேண்டியுள்ளது. எல்லாச் செல்வரும் கட்சிக்கு வருவதில்லை. கட்சியைப் பயன்படுத்த விரும்பும் செல்வர்கள் மட்டுமே வருகின்றார்கள். கையில் உள்ள செல்வத்தைக் கட்சித் தேர்தலுக்காகச் செலவழிக்கப் பலருக்கு மனம் வருவதில்லை. தேர்தலில் வெற்றிபெற்ற பிறகு செலவான பணத்தைவேறு வகையில் திரட்டிக் கொள்ளலாம் என்ற நம்பிக்கை உடையவர்கள்

சிலர் மட்டுமே எளிதில் வருவார்கள். ஒரு பங்கு போட்டுப் பல பங்கு பெறும் திறமை உள்ளவர்கள் மட்டுமே விரைந்து வருவார்கள். ஆகவே கட்சி தனக்காகச் சிலரைப் பயன் படுத்த, அந்தச் சிலர் கட்சியைத் தமக்காகப் பயன்படுத்திக் கொள்ளும் நிலைமையைத் தேர்தலில் காண்கின்றோம். செல்வம் இல்லாதவர்கள் நெடுங்காலம் தொண்டர்களாக இருந்தாலும் தேர்தலில் இடம் பெறாத நிலைமையும் காண் கின்றோம்.

ஆகவே மக்களாட்சி முறை செம்மையாக விளங்க வேண்டுமானால், வலியோனாட்சி தலையெடுக்காமல் காக்க வேண்டுமானால், அதற்கு இடம் வகுக்கின்ற கட்சி அரசி யலையும், அதை ஒட்டிய விளம்பரத் தேர்தல் முறையையும் போக்க வேண்டும்.

யார் போக்குவது? எப்படிப் போக்குவது? எந்தக் கட்சி யார் முன்வந்து தம் கட்சியைக் கலைக்கத் துணிவார்கள்? "அந்தக் கட்சி அவ்வாறு இருக்கும் போது, இந்தக் கட்சி இவ்வாறு இருக்கும்போது, நாங்கள் மட்டும் எங்கள் கட்சி யை ஏன் கலைக்க வேண்டும்?" இவ்வாறு ஒவ்வொரு கட்சி யாரும் கேட்டுத் தயங்குவார்கள். ஒரு வியாபாரியைப் பார்த்து, "பொருள்களின் விலையை ஏற்ற வேண்டா" என்று கூறினால், என்ன செய்வார்? "அவர் ஏற்றும் போது, இவர் ஏற்றும்போது, நான் மட்டும் எப்படி விலை ஏற்றாமல் இருக்க முடியும்?" என்றுதான் கேட்பார். அவ ரைத் தடுக்கும் வழி என்ன? நாட்டில் விளைந்த பொருள்கள் வியாபாரியிடம் செல்லாமல் தடுப்பது ஒன்றுதான் வழி. பொருள்களை உண்டாக்குவோர் வாங்கிநுகர்வோர் ஆகிய இருதிறத்தாரும் நேரே உறவாடினால் போதும். அது ஒன்று தான் வழி. வியாபாரியின் தன்னலத்திற்கு இடம் இல்லாமற் போகும். அது போலவே மக்களாட்சியில், வாக்களிக்கும் மக்களும் வாக்குப் பெறும் தொண்டர்களும் நேரே உற

வாடும் வழி அமைக்க வேண்டும். கட்சி விளம்பரம் அவர்களுக்கிடையே தரகு வேலே செய்யாமல் காக்க வேண்டும்.

தேர்தலுக்கு மிகப் பெரிய தொகுதிகளாக அமைத்துள்ளார்கள். இந்தப் பெரிய தொகுதிகள் இருப்பதால்தான் விளம்பரம் தேவையாய் உள்ளது; கட்சியின் தரகு தேவையாகிறது. சிறிய தொகுதிகள் அமைத்துத் தேர்தல் நடத்தினல் கட்சியின் தரகு வேலேக்குத் தேவை இல்லாமல் போகும். அடிப்படையில் ஒவ்வொரு தொகுதியாக நேர்த் தேர்தல் நடைபெற வேண்டும். அந்தத் தெருவில் வாழ்கின்றவர்களேயே அந்தத் தெரு மக்கள் தேர்ந்தெடுக்க வேண்டும். (இன்று சென்னேயில் உள்ளவரை நெல்லே மாவட்டத்தார் தேர்ந்தெடுத்தல் போல உறவில்லாத முறையில் நடக்கும் தரகுத் தேர்தல் ஒழிய வேண்டும்.) அந்தச் சிறு தேர்தலில் வென்றவர்கள் கூடி ஊர் மன்றமாக அமைய வேண்டும். ஊர் மன்றத்து உறுப்பினர்கள் தமக்குள் ஒருவரையோ இருவரையே தேர்ந்து வட்ட மன்றத்திற்கு அனுப்ப வேண்டும். அங்கிருந்து அவர்கள் கூடி இருவரையோ மூவரையோ மாவட்ட மன்றத்திற்குத் தேர்ந்தனுப்ப வேண்டும். மாவட்ட மன்றங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டவர்களே சட்டமன்றத்திற்கும்பாராளுமன்றத்திற்கும் உறுப்பினர்களாக அமைய வேண்டும். அவ்வாறு அமைந்தால்தான் கட்சி விளம்பரத்திற்கும் செல்வர் தேர்தலுக்கும் இடம் இல்லாமல் போகும். இவ்வாறு ஆனல் ஊர்மன்றத் தேர்தல் தவிர மற்றவற்றில் நேர்த் தேர்தல் இல்லாத காரணத்தால் விளம்பரத்திற்கும் பிரசாரத்திற்கும் தேவை இல்லாமல் போகும். அவற்றைச் செய்யும் கட்சிகள் வேலே இல்லாமல் மறையலாம்.

கட்சி அமைத்து வாழ்ந்தவர்கள் பிறகு என்ன செய்வார்கள்? அவர்கள் எங்கே போவது? அப்போது அவர்களால் இடையூறு ஏற்படும். வேலே இல்லாத அவர்கள்

குழுவாய் வளர முற்படுவார்கள். ஆகவே அவர்கள் எல்லோருக்கும் நம்பிக்கையான தொழில் கிடைக்க வேண்டும். கட்சித் தொண்டு ஒரு தொழிலாக இருக்கக் கூடாது. நிலையான தொழில் உள்ளவர்க்கு மட்டுமே ஊர்மன்றத்தின் தேர்தலில் நிற்க உரிமை இருக்க வேண்டும். கட்சித் தொண்டுதான் தொழில் என்ற நிலையில் உள்ளவர்க்குத் தேர்தலில் நிற்க உரிமை இருக்கக் கூடாது. ஒரு முறை அரசியல் வாழ்வில் இறங்கிவிட்டால் வாழ்நாள் முழுவதும் அது தவிர வேறு வழி இல்லை என்ற நிலைமை இன்று இருக்கிறது. அதனாலேயே பலர் வாழ்நாள் முழுதும் கட்சி அரசியலில் காலம் கழிக்க நேர்கிறது. அதை மாற்ற வேண்டும். ஒரு தொகுதியில் நின்று தேர்தலில் வெற்றி பெற்றவர், அந்தப் பதவிக்காலம் முடியும் வரையில், அவர் செய்துவந்த தொழிலிலிருந்து விடுமுறை பெற வேண்டும். ஒரு தொழிற்சாலையிலிருந்து தொழிலாளி ஒருவர் ஒரு மன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார் என்றால், பதவிக்காலம் முடிந்த பிறகு அந்தத் தொழிற்சாலை மீண்டும் அவரைத் தொழிலாளியாகச் சேர்த்துக்கொள்ள வேண்டும். அது அரசாங்கத்தின் வற்புறுத்தலாகவும் இருக்க வேண்டும். அவ்வாறு இருந்தால்தான் அரசியல் ஒரு தொழிலாக அமையாமல் தடுக்க முடியும்; அரசியலில் புகுந்தவர்கள் கட்சி கட்டி வளர்க்காமலும் தடுக்க முடியும்.

ஆகவே மக்களாட்சி நெறியோடு அமைந்து வெற்றி பெற வேண்டுமானால், அதற்கு நச்சுப் புழுவாக உள்ள கட்சி அரசியலையும் விளம்பரத் தேர்தலையும் வெறுக்கும் மனப்பான்மை மக்களிடையே வளர வேண்டும். கட்சி சொல்கிறது என்று விளம்பரத்தைக் கேட்டு நம்பி யாரோ ஒருவர்க்கு எவரோ வாக்களிக்கும் தரகு முறை மாறி, ஊருக்குள் வாழ்கின்றவர்களுக்கு அவரோடு நேரே பழகி அவரைச் சுற்றியுள்ளவர்கள் வாக்களிக்கும்படியான உண்மையான

தேர்தல்முறையும் சிறு தொகுதிகளின் அமைப்பும் ஏற்பட வேண்டும். அதுவே குடியாட்சி வாழுமாறு செய்யும் வழி ஆகும்.

34. நன்மக்கள்

பூங்குன்றனர் என்ற சான்றோர் ஒருவர், 'பெரியோரை வியத்தலும் இலமே, சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே' என்று பாடி, பெருமை சிறுமை காணுத ஒரு வகைப் பொதுமையை அறிவுறுத்தியுள்ளார். எல்லா உயிர்களையும் இயக்கி நடத்தும் இறைவனுடைய பொது முறையை உணர்ந்தமையால் அந்தத் தெளிவு அவர்க்கு அமைந்தது.

ஆருயிர் முறைவழிப் படூஉம் என்பது
திறவோர் காட்சியின் தெளிந்தனம் ஆதலின்
பெரியோரை வியத்தலும் இலமே
சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே (புறநானூறு)

என்ற அடிகளில் அந்தப் பொதுமை உணர்வுக்கு உரிய காரணத்தை விளக்கியுள்ளார். இறைவன் ஆட்சி போல் மக்களின் ஆட்சியும் எல்லோருக்கும் பொதுவாக நடத்தல் உண்டு. அத்தகைய மக்கள் ஆட்சியே நல்ல குடி ஆட்சி ஆகும். அந்தக் குடி ஆட்சியில் சிலர்க்கு அளவு கடந்த பெருமையும் வேறு சிலர்க்கு அளவு கடந்த சிறுமையும் இருக்க இடம் இல்லை. தனி ஒருவருடைய பெரும் புகழுக்கோ பெரும் பழிக்கோ இடம்தராத வகையில் சமுதாயம்

அமைந்தால்தான் எல்லோரும் தம் தம் ஆற்றலை மறந்து ஆட்சி முறையைப் போற்றுதல் முடியும். யான் எனது என்னும் செருக்கு, கடவுள் உணர்வுக்குத் தடையாவது போலவே புகழ் பழி என்பவை சமுதாய முன்னேற்றத் திற்குத் தடையாகும்.

கடவுளின் ஆட்சி அறத்தை அடிப்படையாகக் கொண் டது. மக்கள் ஆட்சி சட்டங்களை அடிப்படையாகக் கொண் டது. பழங்காலத்து முடியாட்சியில் ஒறுக்கும் ஆற்றல் உள்ள அரசன் முறை செய்து காப்பவனாக இருந்தான். முறை என்று கூறப்படும் சட்டங்களை அரசனே வகுத்தான். ஆகவே அரசன் தெய்வம் போல் — தெய்வமாக — போற்றி மதிக்கப்பட்டான். அரசனை வழிபட்டால் — வணங்கிக் கீழ்ப் படிந்தால் — குடிமக்களின் வாழ்க்கை நன்கு நடைபெறு வதாக இருந்தது. அரசனும் தன் பொறுப்பு உணர்ந்து குடிமக்களைக் காப்பதை ஒரு கடமையாகப் போற்றி ஆட்சி புரிந்தான். இன்று குடிமக்கள் அரசனைப் போற்றியது போல் சட்டத்தையே போற்ற வேண்டும். மக்கள் ஆட்சியில் சட்டத்திற்கு இருக்கத்தக்க பெருமையும் மதிப்பும் எந்தத் தனி ஆளுக்கும் இருத்தல் கூடாது.

பெருமைக்கும் மதிப்புக்கும் உரிய அரசன் தீயவனாய், கொடுங்கோலனாய் மாறுவதும் உண்டு. அப்போது குடி மக்கள் புரட்சி செய்து அவனைத் திருத்துதலோ விலக்கு தலோ நடைபெறும். சட்டம் தீமைக்குத் துணையாய் நின்றா லும் இந்தப் புரட்சி மக்களிடையே ஏற்படுவது உண்டு. மதித்துப் போற்றப்பட்ட சட்டம் அப்போது திருத்தி அமைக் கப்படும். சட்டம் என்பது என்ன? பலர் பல கால அரசியல் அனுபவத்தின் பயனாக உணர்ந்து அமைத்த விதிகளே சட்டம் எனக் கூறப்படுவன. அனுபவத்தில் மாறுதல் ஏற் பட்டுச் சட்டம் தீமை செய்யக் கண்டால் அதை மாற்றுதல் மக்களின் கடமை ஆகும்.

அவ்வாறு மாற்றி அமைக்கும் போதும் சட்டத்தைப் பற்றிய மதிப்பு மக்களின் மனத்தில் குறையக் கூடாது. ஏன் எனில் சட்டம் தனித்தனி மனிதரைவிடப் பெரியது; எல்லோருடைய நன்மைக்கும் அடிப்படை. ஆகையால் அது எல்லோரும் வணங்கத்தக்கது.

ஒருவன் ஒழுக்கம் தவறினுல் அது அவனுக்கு மட்டும் தீங்கு ஆகும். ஒருவன் மற்ருெருவனுக்குத் துன்பம் விளைத்தால் அது இருவருக்கும் தீமை ஆகும். ஆனுல் ஒருவன் சட்டத்தை மீறினுல் அல்லது மறுத்தால் அல்லது புறக்கணித்தால், அது எல்லோருக்கும் தீமை ஆகும். தனி மனிதரின் ஒழுக்கக்கேடு அவர் குடிக்கும் குவளையின் அசுத்தம் போன்றது. அது அவர்க்கு மட்டுமே தீங்கு ஆகும். தனி மனிதர் பிறர்க்குச் செய்யும் கேடு, அவர் தோட்டத்துக் கிணற்றின் அசுத்தம் போன்றதாகும். தமக்கு மட்டும் அல்லாமல் வேறு சிலர்க்கும் அது தீமை செய்வதாகும். ஆனுல் எல்லோர்க்கும் பொதுவாகச் சட்டத்தைப் புறக்கணிப்பது, ஓடும் வாய்க்கால் நீரை அசுத்தம் செய்வது போன்றது. அதன் தீமை எல்லோரையும் தாக்க வல்லதாகும்.

பொதுவாகச் சட்டத்திற்கு இத்தகைய மதிப்பும் பெருமையும் இல்லையானுல் எந்தப் பொது அமைப்பும் சீராக நடைபெற முடியாது. நாட்டின் ஆட்சிக்கு மட்டும் அல்லாமல் நகர்மன்றம், தெருச்சங்கம், கல்விக் கழகம், குடும்பம் முதலிய எந்த அமைப்புக்கும் இந்த உண்மை பொருந்துவதாகும். எந்தக் குடும்பத்தில் எல்லோரும் பொது விதிகளுக்குக் கட்டுப்படுகிருர்களோ அந்தக் குடும்பம் நன்ருக முன்னேறும். அவ்வாறே எந்தப் பொது நிலையத்திலும் பொது விதிகளுக்குத் தலை வணங்குகின்றவர்கள் பலர் இருப்பார்களானுல் அந்த அமைப்பு நல்ல வளர்ச்சிபெறும். இல்லையானுல் குடும்பம் முதல் நாடு வரையில் ஏமாற்றம், வஞ்சகம், குழப்பம், அழிவு என்பன நிலவுமே அல்லாமல்

ஆக்கம், ஒற்றுமை, ஊக்கம், உயர்வு என்பன விளங்குவது இல்லை.

சட்டத்திற்குத் தலை வணங்குவது என்றால் சட்டப் புத்தகத்தைப் பூசை செய்தல் அன்று. சட்டத்திற்கு அறிகுறியாகப் படம் வரைந்து வணங்குவது அன்று. சட்டத்திற்கு மாறுபடாத வகையில் தம்முடைய முயற்சிகளை அமைத்துக்கொள்வதும், சட்டத்திற்கு மாறுபடும் இடங்களில் தம் முயற்சிகளைக் கைவிடுதலுமே சட்டத்தைப் போற்றி வணங்கும் முறை ஆகும். சட்டத்தினிடம் இத்தகைய மதிப்புக்கொண்ட ஒருவர் எந்த நிலையிலும் தம் கடமையைத் தவறாமல் செய்வார். பிறருடைய வற்புறுத்தலும் ஒறுத்தலும் இல்லாமலே தம் கடமைகளை ஒழுங்காகச் செய்வார். நேரம் தவறாமல் அலுவலகத்திற்குச் செல்வார். உழைப்பதற்கு உரிய நேரத்தில் வீண்பொழுது போக்க மாட்டார். மேலிடத்தார் காணும்போது உழைப்பது, காணாதபோது ஓய்வது என்று இருக்க மாட்டார். தண்டனை இல்லை என்று வாழைத் தோலையோ, காகிதத் துண்டுகளையோ நடுத்தெருவில் எறிய மாட்டார். போலிசார் இருந்தாலும் இல்லையானாலும் 'க்யூ' ஒழுங்கில் நிற்கத் தவற மாட்டார். இத்தகைய பண்பட்ட மனப்பான்மை உடையவர் — வற்புறுத்தல் இல்லாமலே சட்டத்திற்கு வணங்கும் இயல்பு உடையவர் — பலர் வாழும் நாடே குடியாட்சி முறைக்கு ஏற்ற நாடாகும்.

மேற்கு நாடுகளில் ஆள் இல்லாமலே செய்தித்தாள்கள் நூற்றுக் கணக்கில் விற்பனை ஆகின்றன. குறித்த இடத்தில் செய்தித் தாள்கள் அடுக்கிக் கிடக்க, வேண்டுவோர் உரிய காசை வைத்துவிட்டுச் செய்தித் தாள்களை எடுத்துச் செல்கின்றனர். சில சிற்றுண்டி விடுதிகளிலும் இது போன்ற முறை நிலவுகின்றது. அங்கெல்லாம் ஒருவரை ஒருவர் நம்புவதைவிட எல்லோரும் பொது

விதிகளுக்குக் கட்டுப்படுவது மிகுதி என்று கூறலாம். அந்த நாட்டு மக்கள் பலர், ஆள் இல்லாதபோதும் திருடாதவர்கள் என்று சொல்லத்தக்க நல்ல நிலையில் உள்ளனர்.

ஆள் இல்லாத போதும் திருடாதவர்கள் தலையான மக்கள்—உத்தமர்—எனலாம். ஆள் காணாதபோது திருடுகின்றவர்கள்-காணும்போது திருடாதவர்கள்-அத்தகைய தலைமைச் சிறப்பு உடையவர்கள் அல்லர். அவர்களே லஞ்சம் வாங்குபவர்கள், மேற்பார்வை இல்லாதபோது தொழில் செய்யாதவர்கள், போலிச் சரக்குகளைச் சேர்த்து வாணிகம் செய்து பொருள் ஈட்டுபவர்கள், மாதிரிக்கு நல்ல சரக்காக முன்னே அனுப்பிப் பின்னே ஏய்ப்பவர்கள் முதலானோர் ஆவர். இத்தகைய மக்கள் பலர் வாழும் நாடு குடியாட்சி முறைக்கு ஏற்றது அன்று.

இவர்கள் வாய்ப்பு உள்ளபோது எல்லாம் சட்டத்தைப் புறக்கணித்து வாழ விரும்புகிறார்கள்; சட்டத்தைப் புறக்கணிக்கின்றவர்கள் பொதுநன்மையைப் புறக்கணிக்கின்றவர்கள். சட்டம் எப்படியாவது போகட்டும், நாம் வாழ வேண்டும் என்ற தன்னலத்தால்தான் அவ்வாறு செய்கிறார்கள். இது குறுகிய நோக்கம். பொதுச் சட்டத்தை மதித்துப் போற்றினால்தான் எல்லோரும் வளமாக வாழ முடியும் என்ற தெளிவு உடையவர்கள் அவ்வாறு எண்ணவே மாட்டார்கள். 'யான் தோற்றாலும் அழிந்தாலும் சட்டம் வெல்வதாக' என்பதே அந்தச் சான்றோர்களின் கொள்கை. அத்தகைய நன்மக்கள் பலர் பெருகினால்தான், ஒரு நாடு மதிப்புடன் திகழ முடியும்.